**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு: 11-12-2017 Issued: 11-12-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
## (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
## (FIFTEENTH ASSEMBLY)

**புதன்கிழமை, ஜூலை 5, 2017—தொகுதி 29—எண் 2**

**Wednesday the 5th July 2017—Volume 29—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 5–7–2017

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 565-626

**2. தகவல் கோரல்—**

(அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது 627-628, 629-631

திரு. துரைமுருகன் 627

முனைவர் க. பொன்முடி 627-628

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 630-631

(ஆ) திருவிடைமருதூர் தொகுதி, அணைக்கரை ஊராட்சி, முதலை கடித்ததால் உயிரிழந்தவருக்கு நிவாரண உதவி மற்றும் முதலைப் பண்ணை அமைக்கக் கோருதல் 628-629

முனைவர் கோ.வி. செழியன் 628-629

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 629

(இ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் வட்டம், அரசு உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளி மாணவன் அரவிந்தன் உயிரிழப்பு 631-633

திரு. தா. உதயசூரியன் 631-632

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 632-633

(ஈ) மதுரை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 28 வார்டுகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் ஆணையூர் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல் 633-637

*திரு. பி. மூர்த்தி 633-634

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 634-637

பக்கங்கள்

**2. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 637-638

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 637

* திரு. ஜெ. அன்பழகன் 638

**3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—

(அ) புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்குதல், எர்ணாவூரில் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடுகள் கட்டுதல், பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு மாநில அரசின் மானியம், நகரமைப்பு வல்லுநர்களுக்கான பணித் தொகுப்பு மற்றும் பணி விதிகள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 638-640

(ஆ) புற்றுநோய்க்கான நவீன லீனியர் ஆக்சிலேட்டர் கருவிகள், தாய்–சேய் நலனுக்கான மேன்மைமிகு மையங்கள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், அவசர கால நிலைப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துதல், நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்குதல், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவுதல், மருந்துக் கிடங்குகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் கருவிகள் நிறுவுதல், சுகாதார செவிலியர்களுக்குக் கைக் கணினி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 641-643



பக்கங்கள்

**3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—தொடர்ச்சி

(இ) மண்பாண்ட தொழிலாளர்களுக்கான மழைக் கால பராமரிப்புத் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை 643-644

(ஈ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், மதுரை சட்டக் கல்லூரிக்குக் கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 644-645

**4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை மற்றும் சட்டத் துறை ஆகியவை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி**— 645-649

*மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் 645-646

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் 646

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 646

*மாண்புமிகு திரு. க. பாஸ்கரன் 647

*திரு. துரைமுருகன் 647-649

**5. கவன ஈர்ப்பு**—

நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை முழுமையாக விநியோகித்தல் 649-667

திரு. டி. செங்குட்டுவன் 649, 655-661

*மாண்புமிகு திரு. இரா காமராஜ் 650-655, 662-667

| | பக்கங்கள் |
|---|---|
| **5. கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி | |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 657, 659, 661 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 660 |
| *திரு. துரைமுருகன் | 666 |
| **6. அறிக்கைகள் அளித்தல்**— | |
| பொதுக் கணக்குக் குழு | 667 |
| **7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை | 668-828 |
| மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு | 668, 688-689, 698-699, 705-708, 710-713, 716-718, 720,725 787-788, 790,794-825, 827 |
| திரு. க. அன்பழகன் | 677,689-697, 708-725, 735-737, 826-827 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 697-698, 707, 730-733 |
| *திரு. துரைமுருகன் | 699-700, 702, 730, 733-734 |
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ | 700-701, 727-729 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை —தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 703, 704 |
| திரு. கரி. இராமசாமி | 704-706 |
| மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 718-719 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 725-726 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 729-730 |
| *திரு. வி. பன்னீர்செல்வம் | 731-733, 738-752 |
| திரு. ஏ. இரத்தினசபாபதி | 753-766 |
| திரு. அர. சக்கரபாணி | 686,767 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 767,773, 794 |
| *திரு. ஆர். கணேஷ் | 674, 768-775 |
| *திரு. வே.பொ. சிவசுப்பிரமணி | 775-781 |
| திரு. கே.வி. சேகரன் | 675, 782-794, 827 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 829 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, ஆனி 21, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 ஜூலை 5, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்*
*உழந்தும் உழவே தலை.”*

சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகில் மக்கள் பல தொழில்களைச் செய்தாலும் அவையனைத்தும் உழவுத் தொழிலையே நம்பி உள்ளன. எனவே, முதன்மையானத் தொழிலாக விளங்குவது உழவுத் தொழிலே.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**131—**

### அணையைச் சீரமைத்தல்

***9337—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2017 ஜூலை 5

(அ) பழநி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சியிலுள்ள பரப்பலாறு அணையைச் சீரமைத்து மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பழநி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் பரப்பலாறு அணையைச் சீரமைப்பது பற்றி கேள்வியைக் கொடுத்திருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

பழநி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சியிலுள்ள வனப் பகுதிக்குள் அமைந்திருக்கும் பரப்பலாறு அணையைச் சீரமைத்து மேம்படுத்தும் பணிக்காக பொதுப் பணித் துறை விண்ணப்பித்து, முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், வனத் துறை உரிய அனுமதியினை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப் பகுதியின் சிறப்புகளில் ஒன்றாக இருக்கிற பேரிஜம் ஏரியின் கீழ்ப்பகுதியில் 2.5 கிலோ மீட்டர் தொலைவில் பரப்பலாறு என்னும் இடம் அமைந்துள்ளது. தற்பொழுது இந்தப் பகுதி வனத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பகுதி. மன்னவனூர் ஊராட்சிப் பகுதியில் வாழ்கிற பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, 60 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்திருக்கிறார்கள். குறிப்பாக, மணல் பைகளால் இந்த நீர்த்தேக்கம் அன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. தற்போது அங்கு விவசாயிகள் செல்வதற்கு வனத் துறை அனுமதி வழங்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தபோதிலும், 2014—ல் அப்போதைய மாவட்ட ஆட்சியர், திரு. வெங்கடாச்சலம்



2017 ஜூலை 5]

அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு, சர்வே செய்து, வருவாய்த் துறைக்குச் சொந்தமான 16 ஏக்கர் நிலத்தை வனத் துறைக்கு வழங்க முடிவு செய்தார்கள். மேற்கண்ட நிலத்தை இவ்வரசு ஆய்வு செய்து, வனத் துறைக்கு வருவாய்த் துறையால் வழங்கப்படவிருந்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு, மேற்படி பரப்பலாறு அணை அமைந்திருக்கக்கூடிய இடத்தில் 36 மீட்டர் நீளமும், 6 மீட்டர் உயரமும் கொண்ட பரப்பலாறு அணை அமைய முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை மன்னவனூர் மக்களின் சார்பில் உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கொடைக்கானல் பகுதியிலுள்ள மேல்மலை என்று சொல்லப்படுகிற மன்னவனூர் ஊராட்சிப் பகுதி மக்களுக்குக் குடிநீர் மற்றும் விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய பரப்பலாறு நீர்த்தேக்கப் பகுதி முழுவதும் கொடைக்கானல் வனக் கோட்டம், பேரிஜம் வனச் சரகம், ஆந்தில் டவுன் காப்புக் காடு பகுதிக்குட்பட்டதாகும். அந்தப் பகுதியில் இப்போது இருக்கிற வறட்சியின் காரணமாக, கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை. எங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் அந்த இடம் வருவதனால், வனத் துறை அதிகாரிகளுடன் நானே நேரடியாகச் சென்று, கடந்த 20 நாட்களுக்கு முன்பு ஆய்வு செய்தேன். அப்போது மன்னவனூர் கிராம மக்கள் குடிநீர் வேண்டி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், கொடைக்கானல் வருவாய்க் கோட்டாட்சியர், பொதுப் பணித் துறை செயலாளர், பழநி மற்றும் மன்னவனூர் வனச் சரக அலுவலர் ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அங்கே ஆலோசனையைக் கொடுத்துவிட்டு வந்தோம். அந்த ஆலோசனைப்படி, வனத் துறையின் மூலமாக பழநி, பொதுப் பணித் துறை செயற்பொறியாளருக்கு அந்த ஆணையைப் பெற்று உத்தரவு வழங்குவதற்கு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசாங்கத்திடம் அந்தக் கருத்துருவைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியில் கடுமையான குடிநீர் பிரச்சினை இருப்பதால், அரசு

[2017 ஜூலை 5

முனைப்பான வேகத்தில் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறது. பொதுப் பணித் துறையைத் தனது பொறுப்பில் வைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களிடம் இதுகுறித்து எடுத்துச் சொல்லி, விரைவாக நடவடிக்கை எடுத்து, பரப்பலாறு அணையைச் சீர்படுத்துகின்ற பணியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல கடந்த 30–6–2017 அன்று இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிற மருத்துவர் வினய், இந்திய ஆட்சிப் பணி அவர்களும், மாவட்ட வன அலுவலர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். பணிகள் துவங்குவதற்கான முயற்சிகள் துவங்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றுதான். அந்த அணை அமைகிறபட்சத்தில் மன்னவனூர், கும்பூர் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும், குறிப்பாக 4,000 ஏக்கர் பாசனத்திற்கும் அது பயன்படும். அதில் வரக்கூடிய உபரி நீர், கும்பூர் வழியாக மஞ்சம்பட்டியைத் தாண்டி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையைச் சென்றடையும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாவட்ட வன அலுவலர் அவர்கள் அங்கே மக்களைச் சந்தித்து பேசுகிறபோது, வனத் துறையின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கு அணையை அமைத்துக் கொடுப்பதற்கு வாக்குறுதி தந்திருக்கிறார். அந்த அணையை அமைக்கிறபோது மதகுகளோடுகூடிய ஓர் அணையாக அமைக்க இந்த அரசு முன்வந்தால் அது எதிர்காலத்திற்குப் பயன்படும் என்பதை அந்தப் பகுதி மக்களின் சார்பில் இந்த அரசிடம் பணிவோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தற்போது, கடுமையான வறட்சி நிலவுகிறது என்று மாண்புமிகு அமைச்சர்



2017 ஜூலை 5]

அவர்களே சொன்னார்கள். மலைப் பகுதியைப் பொறுத்தளவில் தரைப் பகுதியைப்போல் அல்ல. அங்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க இயலாது. வனத்திற்குள் இருக்கின்ற சிற்றோடைகள், பெரிய ஓடைகளில் தடுப்பணைகள் அமைத்து அதன் வாயிலாகக் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைக்குப் பயன்படுத்துகின்ற வகையில் முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டால்தான், அது மக்களுக்குப் பயன்படும். எனவே, இதனை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள். பேசிக்கொண்டே போகிறீர்களே? போதும்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். It is very important. பூண்டி ஊராட்சிக்குட்பட்ட போளூர், கிளாவரை பகுதிவாழ் மக்களுக்கும்,விவசாயிகளுக்கும்,வெள்ளையன்தூவலுக்கு மேலுள்ள குளவச்சியாற்றில் ஒரு தடுப்பணையை அமைத்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மற்ற உறுப்பினர்களுக்கும் நான் வாய்ப்புத் தர வேண்டும்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** அவர்களுடைய வாழ்வாதாரத்தை இந்த அரசு காப்பாற்ற முன்வர வேண்டுமென்றும் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மன்னவனூர் ஊராட்சிக்குட்பட்ட பரப்பலாறு அணையைச் சீரமைத்துத் தருவதற்குரிய நடவடிக்கையை வனத் துறையின் மூலமாக இந்த அரசு மத்திய அரசுக்கு குறிப்பேடுகளை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அங்குள்ள மக்களின் குடிநீர் பிரச்சினையை பேரவையில் குறிப்பிடுவதற்கு முன்பாகவே 20, 25 நாட்களுக்கு முன்பாக நானே அங்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்திருக்கிறேன் என்பதை முதலிலே சொல்லியிருக்கிறேன். தங்களுடைய கவனத்தை

[2017 ஜூலை 5

ஈர்ப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் வரை, தண்ணீர் வருகிறது என்று சொல்கிறார். தண்ணீர் வந்தால் நல்லதுதான். ஆனாலும்கூட, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டும். அனுமதியைப் பெற்றவுடனே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மதகுகள் உள்ளிட்ட மற்ற கருத்துருகளெல்லாம் பொதுப் பணித் துறையின் மூலமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பொதுப் பணித் துறையைத் தனது பொறுப்பில் வைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவான நடவடிக்கைகளை எடுத்து, அந்த மக்களின் பாதுகாப்புக்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்திலுள்ள விசூர் கிராமத்திலுள்ள காப்புக் காடுகள் பகுதியிலே ஒரு தடுப்பணை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். காரணம், அந்தப் பகுதியில் ஒரு தடுப்பணையைக் கட்டுகின்றபட்சத்தில் அங்கே நிலத்தடி நீர் உயரும். அந்தப் பகுதியில் கடந்த முறை, வெள்ளக் காலங்களில், வெள்ளம் வந்து, 2 பேரை அடித்துச் சென்றுவிட்டது. அந்த வகையில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துகின்ற விதத்திலும் உபயோகமாக இருக்கும். அடுத்ததாக, காப்புக் காடு பகுதி 3,000 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு அருகிலே நெய்வேலி நிலக்கரி சுரங்கம் இருப்பதாலும், அங்கு 40 ராட்சத போர்களை அமைத்து, குடிநீர்த் தேவைக்காக அதிகளவு நீரை சென்னைக்கு கொண்டு செல்வதாலும் அங்கு நிலத்தடி நீர் குறைந்துகொண்டே இருக்கிறது.

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சபா. ராசேந்திரன்:** நிலத்தடி நீரை உயர்த்துகின்ற வகையில், அந்தக் காப்புக் காட்டுப் பகுதியில் 4 அல்லது 5 இடங்களில் பண்ணைக் குட்டைகளை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மன்னவனூரைப் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் கடலூரைப்பற்றி கேட்கிறார்கள். எனவே, அதுசம்பந்தமாக உறுப்பினர் அவர்கள் குறிப்புகள் கொடுத்தால், நிதியாதாரத்தைப் பொறுத்து, ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்கு தொடர்புடைய கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்க வேண்டும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கின்றபோது சுருக்கமாகக் கேட்டால்தான் எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர முடியும்.

வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**132—**

### நூலகக் கட்டடம்

***6243—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், பொன்பரப்பி கிராமத்திலுள்ள கிளை நூலகத்தைத் தரம் உயர்த்தி, புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், பொன்பரப்பி கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் 1,721 சதுர அடி காலி மனை நில உரிமை மாற்றம் செய்து பெறப்பட்டுள்ளது. மேற்படி, காலிமனையில் நூலக நிதியிலிருந்து விரைவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற சொல்லே தன் வாழ்நாளில் இல்லையென்று தமிழர்களின் தேவைகளை அறிந்து, வாரி வழங்கி வாழ்ந்த தாயே. *(மேசையைத் தட்டும் ஒலி)* எமதர்மன் அப்பலோவில் உங்கள் உயிரைக் கேட்டவுடன் இல்லையென்று சொல்லத் தெரியாமல் தந்து விட்டாயோ தாயே. நீங்கள் இருக்கும் இடம் நோக்கி வணங்குகிறேன். இல்லையென்ற சொல்லே இல்லாத இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் கேட்ட கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற 15 ஆம் தேதி கல்விக் கண் திறந்த காமராஜருடைய பிறந்த நாள். காமராஜருடைய வாழ்க்கை வரலாறை பள்ளிப் பாட புத்தகத்திலே பாடமாக வைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இந்த நல்ல நேரத்திலே நான் வைக்கிறேன். மேலும், 100 சதவிகிதம் தேர்ச்சி பெறுகின்ற கிராமப்புற அரசு பள்ளிகளுக்கு காமராஜருடைய பெயரிலே வருடா, வருடம் ஒரு விருது வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கிறேன். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், வசவாளர்களுக்கு மத்தியிலே தனது புகழ் வார்த்தைகளால் காமராஜருக்கு புகழ் நெசவு செய்தவர் புரட்சித் தலைவர். காமராஜர் என்னுடைய தலைவர் என்று சொன்னவர் புரட்சித்





தலைவர். எனவே, புரட்சித் தலைவர் அவர்களின் பெயரிலேயே இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய புரட்சித் தலைவர் அவர்களின் இயக்கம், ஆட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில், இந்த அரசு காமராஜருடைய புகழுக்கு மேலும் புகழ் சேர்க்குமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும் நம்முடைய உள்ளங்களிலே நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தேசியத் தலைவர்கள் அனைவருடைய பெயரிலே பல்வேறு நலத் திட்டங்களை, பல்வேறு விருதுகளை அறிவித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, கல்வித் துறைக்காக பல்வேறு திட்டங்களைத் தந்து, எல்லோருடைய நெஞ்சங்களிலும் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாபெரும் தலைவராக இருக்கின்ற கர்ம வீரர் காமராஜருடைய நற்காரியங்களை, சாதனைகளை மனதிலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துகளை, மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி, என்னென்ன முடிவுகளை நாங்கள் மேற்கொள்ளப்போகிறோம் என்பதை விரைவில் அறிவிக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலையில் புதிய நூலகக் கட்டடம் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2017 ஜூலை 5

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதியை வழங்கினால், உடனடியாக அங்கு புதிய நூலகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாநகராட்சி, 60–வது வார்டு, எஸ்.ஆர். நகர்ப் பகுதியில் வாசகர்கள் அதிகமாக பயன்படுத்திவரும் பகுதிநேர நூலகத்தை முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நூலகத்தில் பயிலுகின்றவர்களின் எண்ணிக்கை மற்றும் நூலகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை மனதில்கொண்டு, பகுதிநேர நூலகமாக இருப்பதை, முழுநேர நூலகமாக மாற்றுவதற்குத் தகுதியிருப்பின், அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கின்ற வரி வருவாயில் 10 சதவிகிதம் நூலகப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் மூன்றாம் நிலை நூலகர் பணி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும். விரைந்து கேளுங்கள்.



2017 ஜூலை 5]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிடுகிறேன். மூன்றாம் நிலை கிளை நூலகர் பணி 70–க்குமேல் காலியாக உள்ளது. உள்ளாட்சித் துறையின் சார்பாக வரவேண்டிய வரிவசூல் தொகையை இவர்கள் பெற்றால்தான் இந்த நூலகங்களை முழுமையாகப் பராமரிக்கக்கூடிய கிளை நூலகர்கள் பணி நியமனம் மற்றும் கிளை நூலகங்கள் பராமரிப்பு செய்யமுடியும் என்பதால் உள்ளாட்சித் துறையின் சார்பில் வரவேண்டிய வரி வசூலை விரைவாக வசூலிப்பதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிவுறுத்தி வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறையின் மூலமாக நூலகத்திற்காக வசூலிக்கப்படுகிற தொகை முழுமையாக நூலகத்திற்குப் பயன்படுத்தி, அதன்மூலமாக கிளை நூலகங்களை பராமரிப்புச் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரோடும், மாண்புமிகு முதலமைச்சரோடும் கலந்து அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்துத் தரப்பு குழந்தைகளும் எந்தச் சூழ்நிலையிலும் கல்வி பயிலாமல் இருந்துவிடக் கூடாது என்று அனைத்து உதவிகளும் செய்து, அவர்களுடைய எதிர்காலத்தை உறுதி செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், அம்மாவின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழகத்தை வழிநடத்தும் அம்மாவின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன்

[2017 ஜூலை 5

எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனவை நனவாக்கும் வகையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழகத்தில் கல்வியில் புரட்சி செய்துகொண்டிருக்கின்ற அண்ணன் சாதனைச் செம்மல் K.A.S. அவர்களையும் வணங்குகிறேன். அந்தியூர் சட்டமன்றத் தொகுதி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சீக்கிரம் கேளுங்கள். நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும். சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, தவிட்டுப்பாளையம் உயர் நிலைப் பள்ளியை இடமாற்றம் செய்ய கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிதிப் பற்றாக்குறையால் முழுமைபெறாமலும், கழிப்பிட வசதிக்கு நிதியில்லாமலும் அந்தப் பள்ளி இன்னும் இடமாற்றம் செய்யமுடியாமல் இருக்கின்றது. எனவே அந்தக் குழந்தைகள் நலன் கருதி உடனடியாக அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டே அந்தப் பள்ளியை இடமாற்றம் செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம். ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்களுடைய கோரிக்கையை பொறுத்தவரையில், அதை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை இந்த அரசால் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடி மாநகராட்சி, 3–வது வார்டு Housing Board காலனியில் ஏற்கெனவே செயல்பட்டு



2017 ஜூலை 5]

வந்த நூலகம், கட்டடம் இடிந்துபோகும் நிலையில் இருந்ததால், கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக செயல்படாமல் இருக்கிறது. அந்த நூலகத்திலிருந்த புத்தகங்கள் எல்லாம் ஓர் அறையில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, அந்த நூலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டி செயல்பட வைப்பதற்கு மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகக் கட்டடம், இடிந்து போகின்ற நிலையில் இருந்த காரணத்தின் அடிப்படையில் புத்தகங்கள் அனைத்தும் மாற்றப்பட்டிருக்கிறது என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப உடனடியாக அந்தக் கட்டடம் புதுப்பித்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, பூம்புகார் தொகுதி, கோமல் ஊராட்சியிலே செயல்படும் கிளை நூலகத்தைத் தரம் உயர்த்திப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசை இந்த அரசுக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், மாவட்ட அளவிலே இருக்கின்ற நூலகங்கள் அனைத்திலும்

Civil Service என்று சொல்லப்படுகிற I.A.S., I.P.S. போன்ற தேர்வுகளுக்குப் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்த அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. 32 மாவட்டத் தலைநகரங்களில் பயிற்சி அளிக்க இருக்கிறது. ஆகவே அதற்கான நிதியை நாங்கள் திரட்ட வேண்டியிருக்கிறது. அறிஞர் அண்ணா நூலகத்திற்கு இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தஞ்சாவூரில் இருக்கிற தமிழ் பல்கலைக்கழகத்திற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குவதற்கான பணிகளுக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அறிவிப்பும் செய்திருக்கிறார்கள். அதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

அதேபோல, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய, மாவட்ட நூலகங்கள், கிளை நூலகங்கள், பகுதிநேர நூலகங்கள் போன்ற பல்வேறு நூலகங்களுக்கு பல ஆண்டுகளாக நூல்கள் வாங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன. இந்த நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை உடனடியாக இந்த ஆண்டே வாங்குவதற்கு விரைவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? நூல் தேர்வுக் குழுவினை சீரமைத்து உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இந்த ஆண்டே நூல்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்ட அளவில் பல்வேறு இடங்களில் உள்ள நூலகங்களில் நூல்கள் பற்றாக்குறை இருக்கிறது என்றும், பகுதி நேர, முழுநேர நூலகங்களில் நூல்கள் இல்லையென்றும் தெரிவித்து இருக்கிறார். அதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு குழுவை அமைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் மூலமாக, எந்தெந்த நூல்களை வாங்கலாம் என்று முடிவு செய்ய இருக்கிறோம். பல நூல்களைப் பார்க்கின்றபோது, நூலகங்களுக்கு ஏற்ற நூல்களாக இல்லாத காரணத்தின் அடிப்படையில், எல்லா நூல்களையும் அங்கே கொண்டுவந்து விடக்கூடாது என்ற முறையில், எதைத் தேர்வு செய்வது என்பதற்காக ஒரு குழு அமைக்கப்படவிருக்கிறது. அந்தக் குழுவின் மூலமாக, எந்தெந்த நூலகங்களில் நூல்களின் பற்றாக்குறை இருக்கிறதோ அதை நிறைவு செய்வதற்கு இந்த ஆண்டே அரசு முடிவுகள் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சற்றுமுன் கேட்ட கேள்வியையேதான் நானும் கேட்க விரும்புகிறேன். மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வருகிற வருவாயில், எத்தனை சதவிகிதப் பணம் நூலகங்களுக்குக் கொடுக்க வேண்டும்? அது சட்டமா? இல்லை மரபா? அப்படி இருக்கின்றபட்சத்தில், நான் நூலகங்களை ஆய்வு செய்கின்ற பகுதிகளிலெல்லாம், அங்கு சென்று பார்க்கின்றபோது, உள்ளாட்சிமூலம் வருகின்ற வருவாய் அந்த நூலகங்களுக்குக் கிடைப்பதில்லை என்ற தகவல்தான் கிடைக்கிறது. அதை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, உள்ளாட்சியின் அந்த வருவாய் நூலகங்களுக்குக் கிடைத்தாலே, பல நூலகங்களுக்கு அதிகமான வாய்ப்பு ஏற்பட்டு, நூல்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் கேள்வி கேட்கின்றபோது, உள்ளாட்சித் துறையின்மூலம் நூலகங்களுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது என்று கேட்டார்கள். இதற்கு முன்னர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேட்டபோது அதைப் பற்றிதான் பதில் சொன்னேன். இதுகுறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடனும் கலந்து பேசிதான் முடிவு செய்ய வேண்டியுள்ளது.*

*நூலகங்களுக்கு வரவேண்டிய வருவாய் உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற காரணத்தால், அந்தத் துறையிலிருந்து நிதியைத் தரும்போதுதான், அந்த நிதியை வைத்துக்கொண்டு நூலகங்களை நடத்த வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, இதை பரிசீலித்து, உடனடியாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடனும் கலந்துபேசி, நூலகங்களுக்கு அந்த நிதியை எப்படி நேரடியாகக் கொண்டுவர முடியும் என்பது குறித்து இந்த அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் துணைக் கேள்வி கேட்க வாய்ப்புத் தர முடியுமா?*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் அளவில் நிதியொதுக்கி பல்வேறு பணிகள் நடைபெற அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த நூலகத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு பல பேர் விருப்பப்படுகிறார்கள். உறுப்பினர் சேர்க்கைக்கு அரசு ஆவன செய்யுமா? அதேபோன்று, ஆயுள் member-களாக சேர்ப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா? புரவலர்களை நியமித்து, பல்வேறு பல்கலைக்கழகங்களையும் புரவலர்களாக நியமித்தால், அதன்மூலமாக வருகின்ற வருமானத்தில், பல வளர்ச்சித் திட்டங்களைச் செய்யலாம் என்ற வகையில், அதை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகத்தின் ஆயுள் சந்தாதாரர்களாக, உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. அதிலே எந்தத் தடையும் இல்லை. புரவலர்களை உருவாக்கி, அதன்மூலமாக வருகின்ற வருவாயை ஏற்று, அதன் மூலமாக அரசுக்குத் தேவையான நிதியைத் திரட்ட முடியும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலிக்கும். உங்களின் எண்ணக் கனவுகளை இந்த அரசு நிறைவேற்றும்.*

*மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரையிலும், எதற்குமே தங்குதடையில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் சேர்க்கையிலே எந்தத் தடையும் இல்லை; ஆயுள் சந்தாதாரராகச் சேர்ப்பதற்கும் எந்தத் தடையும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**133—**

**சார்பு நீதிமன்றம்**

***13364—திரு. என்.ஜி. பார்த்திபன்:**

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2017 ஜூலை 5

சோளிங்கரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சோளிங்கரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

**திரு. என்.ஜி. பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதிலே நீக்கமற இடம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. டி.டி.வி. தினகரன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சோளிங்கரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பெறப்படவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். சோளிங்கரில் இருக்கின்ற நீதிமன்றம், சுமார் 125 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்ற ஓர் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக இருக்கிறது. சோளிங்கர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அன்றைக்கு ஒருங்கிணைந்த சென்னை மாகாணமாக, தமிழ்நாடு மற்றும் ஆந்திரா இரண்டும் ஒன்றாக இருந்தபோது, ஒருங்கிணைந்த வேலூர், சித்தூர், திருவள்ளூர் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கி ஒரே உரிமையியல் நீதிமன்றமாக அந்த சோளிங்கர் உரிமையியல் நீதிமன்றம் இருந்தது என்பதை இந்தச் சட்டப் பேரவையில் நான் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். சோளிங்கர் உரிமையியல்



2017 ஜூலை 5]

நீதிமன்றத்தின் jurisdiction இதற்கு முன்பாக ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் இருந்தது. ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்திலிருந்து தற்போது சோளிங்கரின் jurisdiction அரக்கோணம் சார்பு நீதிமன்றத்திற்குப் பிரித்து கொடுக்கப்பட்டு, அரக்கோணம் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரக்கோணம் சார்பு நீதிமன்றத்திலும் சரி, இதற்குமுன்பாக இருந்த ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்திலும் தாக்கலான வழக்குகளைப் பொறுத்தவரையில் சோளிங்கர் நீதிமன்றத்திலேதான் அதிகபட்சமாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் புள்ளியியல் விவரங்களோடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்பதை மாற்றி, சோளிங்கருக்கு ஒரு சார்பு நீதிமன்றத்தை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்றால், கோரிக்கை வைக்கின்ற இடத்தில், அமையவிருக்கின்ற நீதிமன்றத்தின் வழக்குகள் எண்ணிக்கை முதலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். புதியதாகத் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையையும் கருத்தில்கொண்டுதான் உயர் நீதிமன்றம் அந்த இடத்திலே நீதிமன்றம் உருவாக்கலாம் என்பதை அரசுக்கு பரிந்துரை செய்யும். அப்படி பரிந்துரை செய்யும்பட்சத்தில்தான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். ஏனென்றால் உயர் நீதிமன்றம்தான் புதிய நீதிமன்றங்களை உருவாக்கும் பணிகளைச் செய்கிறது. அப்படி உயர் நீதிமன்றம் சோளிங்கரில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தைக் கூறி, அதனை அரசுக்கு பரிந்துரை செய்யும்பட்சத்தில், கண்டிப்பாக சோளிங்கரில் நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கின்ற அனைத்து பரிந்துரைகளையும் ஏற்று

[2017 ஜூலை 5

புதிய நீதிமன்றங்களை உருவாக்கி இருக்கிறது. நீங்கள் சார்ந்திருக்கிற வேலூர் மாவட்டத்தில்கூட, கடந்த ஓராண்டுக் காலத்தில் 3 புதிய நீதிமன்றங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடங்கி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை பெறும்பட்சத்தில், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

**திரு. என்.ஜி. பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வேலூர் மாவட்ட நீதிமன்றத்தின் மூலமாக வழக்குகளின் புள்ளியியல் விவரங்கள் எல்லாம் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு பரிசீலிக்கும் என்று ஒரு நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைய தமிழகம், எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். ஆற்காடு நகரத்தில் பழைய கட்டடத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு 1.36 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்து, இதுவரை கட்டடம் கட்டப்படவில்லை. பெருகிவரும் வழக்குகளைக் கணக்கில்கொண்டு, குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் தனித்தனியாக இயங்க உயர் நீதிமன்றம் குறிப்பு வழங்கி இருக்கக்கூடிய நிலையில், புதிய கட்டடம் கட்ட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நீதிமன்றம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த மாவட்ட நீதிபதி மூலமாக பொதுப் பணித் துறையின்மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு, அரசுக்கு கருத்துரு வந்தால், கண்டிப்பாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.

முற்பகல் 10–30

**திரு. ஆர். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் அம்மாவின் ஆட்சியை சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் தாலுகா அலுவலகம் 1974 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. வ.உ. சிதம்பரனார் அவர்கள் ஒட்டப்பிடாரத்தில் பிறந்து அங்கே வழக்கறிஞராகப் பணியாற்றியுள்ளார்கள். வ.உ.சி. அவர்கள் பணியாற்றிய நீதிமன்றம் தற்போது இல்லை. வழக்குகளுக்காக நீதிமன்றம் செல்ல வேண்டுமென்றால் பொதுமக்களும், வியாபாரிகளும், வழக்கறிஞர்களும், 4, 5 பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு நீதிமன்றம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீதிமன்றங்கள் இல்லாத இடங்களில், 51 வட்டங்களில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று ஆணையிட்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நீதிமன்றம் அமைத்துத்தர முன்வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு,

[2017 ஜூலை 5

தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள் இல்லாத வட்டங்களில், சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று உத்தரவிட்டு, 51 சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், அவருடைய ஒட்டப்பிடாரம் தாலுகாவில் முன்னுரிமை கொடுத்து, நீதிமன்றம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் 1997 ஆம் வருடம், செய்யூர் தனி நீதிமன்றம் அமைக்க சென்னை உயர் நீதிமன்றத்தின் வாயிலாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, செய்யூரில் நீதிமன்றம் அமைக்க வாடகைக் கட்டடம் பார்க்கப்பட்டு, 3 கட்டட உரிமையாளர்களிடமிருந்து ஒப்பந்தம் பெறப்பட்டு, 1994 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில், தமிழக அரசிடம் நீதிமன்றம் அமைப்பதற்காக Budget–ல் நிதி ஒதுக்கக் கோரி, பல்வேறு பரிந்துரைகள் கோரிக்கைகளாக வைக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, செய்யூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்க, இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டு, இன்றுவரை நீதிமன்றம் அமையவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அது என் கவனத்திற்கு வரவில்லை. அது என்னவென்று ஆராய்ந்து கண்டிப்பாக அதன் மேல் நடவடிக்கை எடுக்க இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.



2017 ஜூலை 5]

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் கீழ்வேளூரைத் தலைமையிடமாகக் கொண்டு, உரிமையியல் நீதிமன்றத்துடன்கூடிய குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், உயர் நீதிமன்றத்திடமிருந்து பரிந்துரை பெறப்பட்டால், கண்டிப்பாக அதன்மீதான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் என்று மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தாலும், மதுரை (கிழக்கு) தொகுதியைப் பொறுத்தளவில், மதுரை (வடக்கு) தாலுகா, மதுரை (கிழக்கு) தாலுகா ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதி. ஏறத்தாழ 30 கி.மீ. தூரத்திற்கு மேலாக மேலூருக்குச் சென்று கிராமப் பகுதி மக்கள் நீதிமன்றத்தை நாட வேண்டியிருக்கிறது. எனவே, எங்கள் தொகுதியில் உள்ள ஊர்மெச்சிகுளத்தில் உரிமையியல் நீதிமன்றத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன் தொகுதியில் நீதிமன்றம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எந்தப் பகுதியில், எந்த இடத்தில், எந்த நகரத்தில், அதை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னால்தான், அரசின் சார்பாக உயர் நீதிமன்றத்தில் கேட்கப்பட்டு, பரிந்துரை

[2017 ஜூலை 5

பெறப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அந்த விவரங்களை மனுவாகக் கொடுத்துவிடுங்கள்.

வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**134—**

**மாசினைத் தடுத்தல்**

***6386—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலையநல்லூர் தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் ஆலையிலிருந்து வெளியாகும் கழிவுநீர் கோமுகி ஆற்றில் கலப்பதால் ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், கலையநல்லூர் பகுதியில் 75 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ள தரணி சர்க்கரை ஆலை, நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கழிவுகளை வெளியேற்றுகிறது. அந்த கழிவு நீரானது, சுத்திகரிப்பு நிலையின் முதல்நிலையான aeration மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, அந்த ஆலையைச் சுற்றி 50 ஏக்கர் நிலப் பரப்பளவில் உள்ள மரங்கள் மற்றும் கரும்பு வளர்ப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றது. அந்தக் கழிவுநீர் ஏதும் வெளியேற்றப்படுவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.



2017 ஜூலை 5]

முற்பகல் 10–35

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதி, பல்லகசேரி ஊராட்சி, கலையநல்லூரில் அமைந்துள்ள தரணி சர்க்கரை ஆலையால், நாளொன்றுக்கு 3,500 டன் கரும்பு சுமார் 5.00 இலட்சம் லிட்டர் தண்ணீரைக் கொண்டு அரைக்கப்படுகின்றது. இதன்மூலம் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் கழிவுநீர் வெளியேறுகிறது. மேலும், இதில் அமைந்துள்ள distillery plant மூலம் சுமார் 6,400 கிலோ லிட்டர் spirit தயாரிக்கப்படுகிறது. இதன்மூலம் சுமார் ஒரு இலட்சம் லிட்டர் கழிவுநீர் வெளியேறுகிறது. ஆக, இரண்டு பகுதிகளிலிருந்தும் வெளியேறும் கழிவுநீர், அருகில் செல்லும் மணிமுத்தா மற்றும் கோமுகி ஆற்றில் கலக்கின்றது. இதனால் ஆற்று நீர் மாசுபடுகின்றது. கோமுகி ஆற்றிலிருந்துதான் விருகாவூர், சித்தலூர், பானையங்கால், வடபூண்டி, முடியனூர்குப்பம், கொங்கணாவளையம் போன்ற கிராமங்களுக்குக் குடிநீர் செல்கின்றது. கோமுகி ஆற்றில் கழிவுநீர் கலப்பதால் மேற்கண்ட கிராமப் பொதுமக்கள் மாசுப்பட்ட குடிநீரைப் பயன்படுத்துவதால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். விவசாயப் பயிர்கள் சேதமடைந்து, ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், தரணி சர்க்கரை ஆலைமூலம் ஏழை விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை 2013–2014 ஆம் ஆண்டு 16.8 கோடி ரூபாய்; 2014–2015 ஆம் ஆண்டு 15.8 கோடி ரூபாய்; 2015–2016 ஆம் ஆண்டு 26 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்விக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. க. கார்த்திகேயன்:** ஆக மொத்தம், 75.82 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ளது. பழைய காலங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன், எந்த சப்ஜெக்ட்டிலிருந்து எந்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறீர்கள்?*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்டதுதான்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், அதைப் பற்றி நீங்கள் தொழில் துறையில் கேளுங்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையானது ஒரு மாதத்திற்கு 10,500 டன் வெள்ளை சர்க்கரை, 4,500 டன்* molasses, *3,700 டன்* filter cake, *31,300 டன் சக்கை ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது. இந்த ஆலையிலிருந்து எரிசாராயம்மூலம் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரானது* zero percent discharge *செய்யப்பட்டு, மறு சுழற்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அதேபோல, மற்ற ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அனைத்தும் சுத்திகரிப்புச் செய்யப்படுகின்றது. ஆலைக்கும், கோமுகி ஆற்றுக்கும் இடையில் 1½ கிலோ மீட்டர் தூரமுள்ளது. அதில் எந்தக் கழிவுநீரும் கலக்கவில்லை என்கின்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கழிவுநீர் கலப்பதாகச் சொன்னால், அதை கண்டிப்பாக நாங்கள் நேரில் ஆய்வு செய்து, அந்த ஆலையின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் எழுப்பிய கேள்விக்கு சம்பந்தமாகக் கேளுங்கள்.*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் அந்த ஆலை சம்பந்தப்பட்ட விஷயம்தான்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

**திரு. க. கார்த்திகேயன்:** *விவசாயிகளுக்குப் பணம் தராமல், அது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நிறைய முறை போராட்டம் எல்லாம் நடத்தி கொண்டிருக்கிறார்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் இல்லாமல் ஆலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீரில் மூன்றில் ஒரு பங்கு மட்டும்தான் சுத்திகரிக்கப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்தின் அளவு மிகவும் சிறியதாக இருக்கின்ற காரணத்தினால், ஆலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீரில், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே சுத்திகரிக்கப்படுகிறது. மீதமுள்ள கழிவுநீர் நேரடியாக ஆற்றில்தான் கலக்கப்படுகிறது. இது பலமுறை செய்தித்தாள்களில் எல்லாம் வந்திருக்கிறது. பொதுமக்கள் நிறைய போராட்டங்களை எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். அந்த* photo– *வை வேண்டுமானால் உங்களிடம் காண்பிக்கிறேன். . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு இரண்டு முறை ஆய்வகம்மூலம் அந்த நீரினுடைய மாதிரி எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்படுகின்றது. அதுமாதிரி எதுவும் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தால், அந்த ஆலையின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபொழுது. . .*

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபொழுது, நீங்கள் எதிர்க்கட்சியாக அங்கேயிருந்து எவ்வளவு வேகமாகச் செயல்பட்டீர்கள் என்பதை நான் பார்த்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** இரண்டு தினங்களுக்கு முன்பு, நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து எவ்வளவு வேகமாகப் பேசினீர்கள் என்பதை நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். இப்போது எவ்வளவு அமைதியாக இந்த அவையை நடத்தி கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான்தான் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேனே!

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று நீங்கள் கொடுத்த நீரா பானத்தை சாப்பிட்டவுடன் கொஞ்சம் வேகம் அதிகமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் மீண்டும் நீரா பானம் கேட்கிறார்கள். கண்டிப்பாக வழங்கப்படும்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** முக்கியமாக, நான் சொல்ல வந்த கருத்து நேற்றைக்குப் பத்திரிகையிலே வந்த செய்தி; தொலைக்காட்சியிலே வந்த செய்தி; இன்றைக்கும் பத்திரிகையிலே வந்திருக்கும் செய்தி. சிட்லபாக்கம் பகுதியில் குறிப்பாக, குப்பைக் கிடங்கு இரண்டு நாட்களாக எரிந்துகொண்டிருக்கின்றது. சுற்றுச்சூழல் மிகவும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேட்கிறீர்கள். அதைப் பற்றி நீங்கள் உள்ளாட்சித் துறையிடம்கேளுங்கள்,உட்காருங்கள்.(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள், மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேட்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.



2017 ஜூலை 5]

முற்பகல் 10–40

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பம்மல், நாகல்கேணி, பல்லாவரம் ஆகிய பகுதிகளிலுள்ள 200–க்கும் மேற்பட்ட தோல் நிறுவனங்களிலிருந்து வெளியேறும்இரசாயனக்கழிவுநீர்மொத்தமும்சுத்திகரிக்கப்படாமல் இரவோடு இரவாக அடையாறு ஆற்றில் விடப்படுகிறது. இதனால் துர்நாற்றம் வீசுகிறது. அனகாபுத்தூர், பொழிச்சலூர், கவுல்பஜார், தரப்பாக்கம், கெருகம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய ஆற்றங்கரையோரக் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஆழ்துளைக் கிணறுகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன. இரசாயனக் கழிவுநீர் நிலத்தில் ஊறி, குடிநீரைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இரசாயனக் கழிவுநீர் ஆற்றில் கலக்கப்படாமல் தடுப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கழிவுநீரை அடையாறு ஆற்றில் விடுகின்ற அந்த ஆலைகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீர் ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. 3 மாதங்களுக்கு முன்பாக நானே நேரடியாகச் சென்று ஆய்வு செய்தேன். அதிலே உற்பத்தியாகின்ற கழிவுநீர் 80 சதவிகிதம் மறுசுழற்சிமூலம் திரும்பவும் அந்த தொழிற்சாலைக்கே எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த ஆலையில் புதிதாக zero percent discharge செய்வதற்கான சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைக்கும் பணி நிறைவு பெற்றவுடனே கழிவுநீர் முழுமையாக வெளியேற்றப்படாமல் தடுக்கப்படும். 15 சதவிகிதம் கழிவுநீரானது 1.5 கிலோ மீட்டர் pipe line மூலமாக

அடையாறு ஆற்றில் கொண்டு விடப்படுகிறது. அங்கே, zero percent discharge சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு கழிவுநீர் முழுமையாகச் சுத்திகரிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழில் மிகுந்த மாவட்டமாகும். இங்குள்ள நீர்நிலைகளும், மலைகளும் மற்றும் கடலும்தான் முக்கியமான இடங்களாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** சுற்றுலாத் தலங்கள் நிறைந்த பகுதியாகும். சுற்றுலாத் தலங்கள்தான் எங்களுடைய எதிர்கால வளர்ச்சிக்கு வித்திடும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த சூழ்நிலையில், அங்கேயிருக்கின்ற சூழியலைப் பாதிக்கின்ற வகையிலும், நீர்நிலைகளைப் பாதிக்கின்ற வகையிலும் மற்றும் கடலைப் பாதிக்கின்ற வகையிலும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் மிகப் பெரிய அளவில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றன. மழைநீர் ஓடைகள் எல்லாம் கழிவுநீர் ஓடைகளாக மாற்றப்பட்டு, குளங்கள் மற்றும் ஆறுகளில் சாக்கடைக் கழிவுநீர் கலப்பதால் இயற்கை எழில் கெட்டு சுற்றுலாவிற்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக பிளாஸ்டிக்கை தடை செய்ய வேண்டும். முடிந்தால் தமிழ்நாடு முழுவதுமே பிளாஸ்டிக்கை தடை செய்தால் மிகப் பெரிய உதவியாக அமையும். கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் கழிவுநீரை மழைநீர் ஓடையில் விடுவதற்கு அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டு, விதிகள் வகுக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு இன்னும் வரவில்லை. அதையும் உடனடியாகச் செய்து தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆகியோரிடம் இதுகுறித்து நேற்று 12 மணியளவில் நான் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பிளாஸ்டிக்கு ஒரு மாற்று வழி கண்டறியப்பட வேண்டுமென்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து விரிவாகப் பேசி, பிளாஸ்டிக்கை தடை செய்வதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களிடம் தெரிவித்திருக்கிறேன். கூடியவிரைவில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**135—**

## நெல் கொள்முதல் நிலையம்

***3130—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் நகரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[2017 ஜூலை 5

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே நெல் விளைச்சல் பகுதியான புதுப்பாளையம் கிராமத்தில், கொள்முதல் பருவம் 2015–2016 ஆம் ஆண்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டு, அதன்வாயிலாக 1,577 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் பின் நெல் வரத்து இல்லாத காரணத்தால், மேற்படி கொள்முதல் நிலையம் மூடப்பட்டுள்ளது. குறிப்பாக, செங்கம் பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக் கோரிக்கை ஏதும் வரப்பெறாததால் செங்கம் நகரில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த புதுப்பாளையம் கிராமம் எனது செங்கம் தொகுதியிலிருந்து கடைக்கோடியில் சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்திலும், ஊத்தங்கரை தொகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கின்றது. தற்போது, விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை, தனியார் வியாபாரிகள் நேரடியாகச் சென்று விளை நிலத்திலேயே லாரியை வைத்து எடைபோட்டு வாங்கிக் கொள்கிறார்கள். இதனால், விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு உரிய விலையும் கிடைக்காமல், பணத்தை பெறுவதற்கும் சிரமப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நெல் விளைகின்ற காலத்தில் அங்கே நெல் கொள்முதல் நிலையத்தினை கட்டாயம் அமைக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் வரத்து இல்லாத காரணத்தினால்தான் அங்கு நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அங்கு நெல் விளைச்சல் இருக்குமானால், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறுமானால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினைத் திறக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவேரி டெல்டா பகுதியைச் சார்ந்தவர். தமிழகத்தில் காவேரி டெல்டா பகுதிக்கு அடுத்து இரைவைப் பாசனம் மூலமாக நெல்லை விளைவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்ற மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டம் உள்ளது. தண்டராம்பட்டு, தானிப்பாடி ஆகியவை செங்கம் தொகுதியை உள்ளடக்கிய பகுதிகள். இப்பகுதிகளில் நெல் மற்றும் கரும்பு பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்காத காரணத்தினால் விவசாயிகளிடத்தில் வியாபாரிகள் நேரடியாகச் சென்று குறைந்த விலையில் எடை போட்டு வாங்கிச் செல்வதாலும், விவசாயிகளுக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வு இல்லாததாலும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் கேட்டபடி அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்.

**திரு. மு.பெ. கிரி:** நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு விவசாயிகள் நெல்லை எடுத்துவர இயலவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையம் சம்பந்தமான விவரம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம்

[2017 ஜூலை 5

ஏதும் வைத்துள்ளார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய 40 ஆண்டுகால நெல் கொள்முதல் வரலாற்றிலே ஒரே ஆண்டில், 2011 ஆம் ஆண்டு 24 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்த அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மூலம் 149 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் அங்கு சிரமப்படுகின்றனர் என்று சொன்னார்கள். கடந்த காலங்களில், அதாவது 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏகபோக நெல் கொள்முதல் திட்டம், இணைக் கொள்முதல் திட்டம், லெவி கொள்முதல் திட்டம் ஆகிய திட்டங்கள்தான் அமலில் இருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளின் நலனைக் கருதி 1–10–2002 அன்று மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தைக் கொண்டு வந்ததன் அடிப்படையில்தான், விவசாயிகள் இன்றைக்கு பாதிப்பு இல்லாமல் தங்களது நெல்லை உரிய விலைக்கு விற்கிறார்கள். எனவே, அம்மா அவர்களுடைய ஆட்சி விவசாயிகளைப் பாதுகாக்கின்ற ஆட்சி. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி விவசாயிகளுடைய நலன்களைச் செம்மையாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் நெல் விளைச்சல் இருக்கின்றது என்று சொல்கிறார்களோ உடனடியாக அந்தப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**136—**

## ஜவுளிப் பூங்கா

***2688—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கோரியுள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன் வருவார்களாயின், இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பள்ளியாடி

[2017 ஜூலை 5

கிராமத்தில் சுமார் 1500–க்கும் மேற்பட்டவர்கள் கைத்தறி, நெசவுத் தொழில் செய்பவர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தினை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சுமார் 20000 பேர் இந்தப் பணிகளைச் செய்து பிழைக்கிறார்கள். வேறு வழிகள் இல்லை. இந்தப் பணியை செய்துதான் அவர்கள் பிழைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கின்றது. எனவே, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

முற்பகல் 10–50

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் சுருக்கமாகப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் விரிவாகப் பேசாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** 50 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இப்பொழுது இயக்கத்தில் உள்ளன. முன்பு 90 இருந்தன. பள்ளியாடி, திங்கள்நகர், குளச்சல், வடசேரி, உண்ணாமலைக்கடை, தேங்காப்பட்டணம், பூட்டேற்றி, கருங்கல் ஆகிய இடங்களில் கைத்தறி ஜவுளித் தொழிலை நம்பித்தான் இருக்கிறார்கள். ஆகவே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Subject பேசாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, தொழில்முனைவோர்கள் முன்வந்தால் ஜவுளிப் பூங்கா அமைக்கலாம் என்று சொல்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதில் எவ்விதமான வரைமுறைகள் இருக்கின்றன, யார் மூலமாக செய்வது என்பதைத் தாங்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன கேட்கிறது? Subject பேசுவதா?



2017 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைப்பது தொடர்பாக 30–9–2011 மற்றும் 1–11–2011 ஆகிய தேதிகளில் அப்போதைய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களுக்கு வருகைத் தந்த 14 ஆர்வமுடைய தொழில்முனைவோர்களிடம் அனைவரும் ஒரு குழுவாகச் செயல்பட்டு, உரிய பிரேரணையை அரசிற்கு சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்குழுவின் தலைவராகச் செயல்பட்ட கன்னியாகுமரி மாவட்ட மீன் வள வர்த்தக அமைப்பின் தலைவர் திரு. ஷாஜஹான் அவர்களுக்கு 5–7–2012, 24–9–2012, 19–2–2013 மற்றும் 19–7–2013 ஆகிய தேதிகளில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பின்வரிசையில் சச்சரவு நடப்பதுபோல் இருக்கிறது. அமைதியாக இருங்கள். சச்சரவு நடப்பதுபோல் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதை என்னவென்று பாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** கடிதங்கள் வாயிலாகவும், நேரடியாகவும் கேட்டுக்கொண்டதன் பிறகும் தொழில்முனைவோர் பிரேரணை சமர்ப்பிக்காத காரணத்தினால், பள்ளியாடி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க இயலவில்லை என்பதையும், தொழில்முனைவோர் முன்வருவார்களாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுருக்கமாக தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், இந்த அரசு ready, நீங்கள் ready-யா என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள். Subject பேசக் கூடாது. கேள்வி என்ன கேட்க வேண்டுமோ, கேளுங்கள். நீங்கள் பேசுங்கள். நேரமாகிறது. மற்றவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நாங்கள் ready, நீங்கள் ready-யா என்று கேட்டார்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் வழிமுறைகள் சொன்னால் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2017 ஜூலை 5*

*நெசவாளர்களுக்கு* pension *ரூ.1,000/– கொடுத்தீர்கள். அதை ரூ.2,500/– ஆக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரூ.15 கோடிக்கு மேல் நெசவாளர்களுக்கு வழங்க வேண்டிய* rebate *பணத்தை வழங்காத காரணத்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை வழங்க முன்வருவீர்களா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான மற்றொரு கேள்வி. பள்ளியாடி அருகில், கஞ்சிக்குழி பகுதியில் கைத்தறி நெசவு சம்பந்தமான ஓர் ஆலை கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு வழி செய்வீர்களா என்பதைத் தாங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தள்ளுபடி தொகை வழங்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அன்பரசன் அவர்கள் இங்கே பேசுகிறபோதுகூட அதைத் தெரிவித்தார்கள். இந்த தள்ளுபடி சுமை என்பது கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற ஒன்று. இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு, அவர்களுடைய நலன் கருதி தாராளமாக வழங்கி வந்துகொண்டிருக்கிறது. இருப்பினும், தொகை நிலுவையில் இருக்கிறது என்பது உண்மை. மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆய்வு செய்தபொழுது, நிலுவைத் தொகையில் 100 கோடி ரூபாயை இந்த ஆண்டு வழங்க முன்வந்திருக்கிறார்கள் என்கிற நற்செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*



*2017 ஜூலை 5]*

**137—**

## வட்ட மருத்துவமனை

***9474—திரு. கோ. லோகநாதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழ்வைத்தினான்குப்பம் தொகுதி, கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் வட்ட மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைகளின்படி விதிமுறைகளை பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினால், சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

**திரு. கோ. லோகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தாயை வணங்குகிறேன். தமிழ்த் தாயை வணங்குகிறேன். புதியதோர் பொற்காலம் படைத்திட்ட போயஸ் தோட்டத்து புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாங்கள் வணங்கும் தெய்வம். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடி போற்றி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய வழியிலே, சிறப்பான வகையிலே, அம்மாவினுடைய கனவை நிறைவேற்றுகின்ற வகையிலே, சிறப்பான முறையிலே ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். . . (குறுக்கீடுகள்)*

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அமைதியாக இருங்கள். இரண்டு பக்கமும்தான். அமைதியாக இருங்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** எனது கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி, கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் குடியாத்தம் வட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 6 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள். . .

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** 6 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** கேள்விதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** இவற்றில், கீழ்வைத்தினான்குப்பம் தொகுதி, கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி ஒன்றியம், கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்ற, தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்படுகின்ற வட்டங்களுக்கு, உடனடியாக அங்கேயிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுகின்ற கொள்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இப்போது கடைப்பிடித்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், கீழ்வைத்தினான்குப்பத்தில் ஏற்கெனவே ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதில் வடுகந்தாங்கல் ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவர் குறிப்பிடுகின்ற கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவைப்படுகின்ற வசதிகளை முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மாவினுடைய அரசு எனது கோரிக்கையைச் செயல்படுத்தி கொடுக்கும் எனத் தெரிவித்ததற்கு நன்றி. கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி 2011–ல் உருவாக்கப்பட்ட புதிய தொகுதியாகும். இந்தத் தொகுதி 73 கிராம ஊராட்சிகளைக் கொண்ட மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற தொகுதியாக இருக்கின்றது. இவற்றில் 29 ஊராட்சிகள் காட்பாடி வட்டத்திலும், 44 கிராம ஊராட்சிகள் குடியாத்தம் வட்டத்திலும் வருகின்ற காரணத்தினாலே கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேட்டு, முடியுங்கள்.

**திரு. கோ. லோகநாதன்:** கீழ்வைத்தினான்குப்பத்தில் மீண்டும் மறு பரிசீலனை செய்து, மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையைத் தரம் உயர்த்தி தர கருணையோடு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வடுகந்தாங்கல் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. தனியாக ஒரு மருந்தகம் மற்றும் Operation

Theatre அந்த மருத்துவமனையிலே இல்லை. இந்த இரண்டு வசதிகளையும் நிறைவேற்றித் தரும்படி கேட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்டு அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடுகந்தாங்கல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் மருந்தகம் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம் போன்ற வசதிகளை கேட்டிருக்கின்றார். வருங்காலத்தில் ஆய்வுசெய்து, நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அங்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. V.T. கலைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எளியோருக்கு ஏணியாக எந்நாளும் உழைத்து, ஏறெடுக்கும் பார்வையிலே, எதிரிகளைத் தகர்த்து, அச்சம் என்ற சொல்லை அகராதியிலிருந்து விரட்டி, செந்தமிழர் உள்ளமெல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்துள்ள (மேசையைத் தட்டும ஒலி) செயல்களின் புயல் வடிவம், சேவைகளின் புது வடிவம், (மேசையைத் தட்டும் ஒலி) புடம்போட்ட தங்கமாக, தமிழினம் புகழ் பாடும், தன்னிகரில்லாத் தங்கத் தலைவி அம்மா அவர்களின் தலைசிறந்த நல்லாட்சியை வழி நடத்தி வரும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட கருவேப்பிலங்குறிச்சி ஊராட்சியில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஒரு மருத்துவமனையாக, 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது அது இயங்கிவரும் இடம் போதுமானதாக இல்லை. ஊராட்சியில் நிறைய இடம் இருக்கின்றது. எனவே, அங்கே ஒரு புதிய கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கை வருங்காலத்திலே துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அரசு மருத்துவமனையானது இதுநாள்வரை புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வந்தது. தற்போது புதுக்கோட்டை தலைமை மருத்துவமனை புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிகிறேன். புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையை மிகவும் பிற்படுத்தப்பட்ட 2 இலட்சம் ஏழை மக்கள் பயன்படுத்துகின்றனர். தேவையான கட்டட வசதி, இட வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் நிரம்பியுள்ள ஆலங்குடி அரசு மருத்துவமனை புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை

[2017 ஜூலை 5

மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அறந்தாங்கி புதுக்கோட்டைக்கு அடுத்த பெரிய நகரம். ஆகையினாலே உங்கள் தொகுதிக்கும் ஆசை. என்னுடைய தொகுதிக்கும் ஆசை, இருந்தாலும், விதிகளின்படி அறந்தாங்கி தலைமை மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு உரிய பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள எனது சொந்தக் கிராமமான மேல்வங்கமருத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா? அதற்குத் தேவையான உதவிகளை அந்தக் கிராமத்தில் இருப்பவர்கள் செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள். விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் எங்களுடைய கழக சட்டமன்ற உறுப்பினர்தான். எனது சொந்தக் கிராமம் என்பதற்காகத்தான் கேட்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வந்து செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மற்றொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைவெளி 8 கிலோ மீட்டர் தூரம் மற்றும் 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. மேற்சொன்ன விதிமுறைகளை பூர்த்தி செய்கின்றபட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தில் உறுப்பினர் சொல்கின்ற கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய நீதியரசராக வாழ்ந்து, தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த மனித தெய்வம் ஏழையெளிய மக்களுக்கெல்லாம் பொன்னேட்டிலே எழுதி பதிய வைத்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு சாதி சமத்துவம் கண்ட சாமி அவதாரம் அம்மா அவர்கள், எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்த இடத்தைப் போற்றி வணங்குகிறேன். அடிமட்டத் தொண்டர்களையெல்லாம் அழைத்துப் பேசி ஒற்றுமைப்படுத்தி, கட்டுப்படுத்தி கிராமப்புறங்களுக்குச் சென்று குறைகளைக் கேட்டறிந்து, நல்லுதவிகள் செய்து, செய்திகளாகக் கொண்டு வந்து பதிவு செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டு இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசை நல்லரசாக நடத்திக்கொண்டிருக்கும் அன்பு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. டி.எ. ஏழுமலை:** இன்றைக்கு பூந்தமல்லி தொகுதியில் மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனை மிகவும் சிறியதாக இருக்கிறது. பேட்டையில் 5 ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது. மருத்துவமனையை உடனடியாக அங்கு மாற்றித் தர வேண்டுமென்றும், விரிவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று அறிவித்த அறிவிப்புகளில் எல்லா பிள்ளைகளையும் ஒரேமாதிரி பார்த்துவிட்டு, ** என்று நான் வருத்தத்தோடு இருக்கிறேன். நேற்று சொன்ன செய்திகளைக் கேட்டேன். அம்மா அவர்கள் வரும் வழியிலே convoy–களை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 ஜூலை 5

பார்த்தோம் என்று சொன்னார். ஆனால், convoy–களை கண்டவர் என்னைவிட அதிகமானவர் யாரும் இருக்க முடியாது. நான் 5,000 தடவைகளுக்குமேல் நின்றிருக்கிறேன். வருகிறார் என்று சொன்னால் கிட்டத்தட்ட 9 மணிக்கே வீட்டிலிருந்து புறப்பட்டு விடுவேன். காண காத்து நின்றதை கணக்கிலே எண்ண முடியாது. அதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தில் நான் முதல்வனாக இருப்பேன்; ஆமாம், அம்மாவை பார்த்ததில்லை என்று சொல்லிக் கொண்டு, ** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் என்னையும் அம்மாவின் பிள்ளைகளில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். 234 தொகுதிகளையும் அறிவித்துவிட்டு **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இந்த மாதிரியெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை இந்த ஆண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுத்து, தங்கள் மனம் குளிர்கின்ற அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்பிலே 15 மருத்துவமனைகள், 27 மருத்துவமனைகள், 17 மருத்துவமனைகள் என்று குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பட்டியலிலே பெயர் குறிப்பிடாத சட்டமன்றத் தொகுதியினுடைய மருத்துவமனைகளும் வருகின்றன என்பதை நேற்றே நான் குறிப்பிட்டேன். மேலும், இன்னும் 700 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் விரைவிலே அறிவிக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவமனை, ஒன்றேகால் நூற்றாண்டுக் கால பழமை வாய்ந்த மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு E.C.G. இயந்திரம் அமைப்பதற்கும், அதற்கான கட்டடம் கட்டுவதற்கும், கழிப்பறை ஒன்று அமைப்பதற்கும், 25 இலட்சம் ரூபாயை கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தந்திருக்கிறேன். மேலும் அங்குள்ள காசநோய் மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும், கூடுதல் படுக்கைகள் கொண்ட அறைகளைக் கட்டுவதற்கும் அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு பகுதியில், ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு மிகச் சிறப்பாக இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகள் அங்கு வந்து மருத்துவச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசின் சார்பாக 30 இலட்சம் ரூபாய்தான் மருந்திற்காக ஒதுக்கப்படுகிறது. அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருந்துக்கான ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, இவ்வளவுதான் இலக்கு என்று அரசு நிர்ணயம் செய்வதில்லை. நோயாளிகள் எண்ணிக்கைக்கேற்ப, எவ்வளவு தேவைப்படுகிறதோ தேவைப்படுகின்ற அளவிற்கு, மருந்திற்கான நிதி ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கையையும் அரசு உடனடியாகக் கவனத்தில்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.

**டாக்டர் கா. கதிர்காமு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலேயே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக அளவில் அமைத்து, மருத்துவப் பணியாளர்களை அதிக அளவில் நியமித்து, மருத்துவர்களையும் நியமித்து, செவிலியர்களையும் நியமித்து, மருத்துவப் புரட்சி செய்து வரும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை பாராட்டுகின்றேன்.

எனது தொகுதியில், ஜெயமங்கலம் பகுதியில், கிட்டத்தட்ட 10 கிராமங்களுக்குமேல் மருத்துவ வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், ஜெயமங்கலம் பகுதியில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவார்களேயானால் எங்களது பகுதி மக்கள் மிகவும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல்வராக இருந்த தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிகப்படியான திட்டங்கள் நேற்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்களும் நன்றி தெரிவித்தார்கள். உறுப்பினர் அவர்கள் கோருகின்ற புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து விதிமுறைகளின்படி ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**138—**

### அரசு விழா

***4817—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களுக்கு அரசு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற புகழுக்கு உரியவர் மட்டுமல்ல. அலைகடலுக்கு அப்பால் அயல்நாட்டிலேயிருந்து மக்களைச் சந்திக்க இயலாத நிலையிலும்கூட, களத்திற்கே வராமல் களம் கண்டு மகத்தான வெற்றிகண்ட மக்கள் திலகம், மன்னாதி மன்னன், பொன்மனச் செம்மல், நூற்றாண்டு விழா நாயகன், கழக நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2017 ஜூலை 5

தமிழக அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல், சட்டமன்றப் பொதுத் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களிலும் யாரும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத சரித்திரத்தைப் படைத்து, தன்னந்தனியாக, தனி ஒருவராக, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற கொள்கை முழக்கத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைச் சந்தித்து, வெற்றி மகுடம் சூடி, மகத்திலே பிறந்து, சிம்மமாக வாழ்ந்து, ஜெகத்தினை ஆண்டு, இன்றும் மக்கள் மனதிலே குடியிருந்த கோயிலாக வாழ்ந்து கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் எளிய தொண்டனாக எளிமை, இனிமை, கடமை உணர்வோடு பணியாற்றுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடருக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள் வைத்த கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்ற நேரத்திலே, தன்னுடைய உடல்நிலையினையும் பொருட்படுத்தாது, அவர் மருத்துவமனைக்குச் செல்வதற்குச் சில தினங்களுக்கு முன்பாக நெல்லை மாவட்டம், நெற்கட்டும்செவலிலே பூலித்தேவன் விழாவினை சிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை அனுப்பி அங்கே அரசு விழாவாகச் சிறப்பித்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையேச் சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.

**திரு. அ. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.



2017 ஜூலை 5]

மாமன்னர் பூலித்தேவன் ஒரு மாபெரும் தலைவர். தென்பாண்டி நாட்டில், நெல்லைச் சீமையில் தோன்றி, தன்னிகரற்று தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழ் மறவர். நெற்கட்டும்செவலை தலைமையிடமாகக் கொண்டு செங்கோலோச்சிய பாளையக்காரர் அவர். தன் பாளையத்திற்கு மட்டுமின்றி, மேற்கு பாளையத்தாருக்கெல்லாம் தலைமையேற்று மாற்றாரை நடுநடுங்கச் செய்த மாபெரும் போர் வீரர். இந்திய விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து 'வெள்ளையனே வெளியேறு' என முதன்முதலாக முழக்கமிட்ட விடுதலைப் போராளி, மாமன்னர் பூலித்தேவனே ஆவார். இவரது வீர வரலாறு இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட ஒன்றாகும். அரை நூற்றாண்டுக்கும் மேலாக தென்னகத்தைக் கலக்கிய மாமன்னர் பூலித்தேவனின் சாதனைகளைப்பற்றி இன்னமும் சரித்திர ஆசிரியர்கள் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த தமிழ் மறவர் மாமன்னர் பூலித்தேவன் அவர்களின் வரலாறுகளை நினைவுபடுத்தும் வகையில், அவருக்கு ஆண்டுதோறும் நெற்கட்டும்செவல் கிராமத்தில் அரசு விழா நடத்திட வேண்டுமென்று தென் தமிழகத்து மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் வேண்டுகோள் வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு தேர்தலின்போது எங்கள் சட்டமன்றத் தொகுதிக்கு வாக்குகள் சேகரிக்கச் சென்றபோது, அந்த நெற்கட்டும்செவல் கிராமம் மட்டுமின்றி சுற்றியிருக்கின்ற அனைத்து கிராமங்களிலும் கறுப்புக் கொடி ஏற்றி, தேர்தலைப் புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. காரணம் கடந்த 7, 8 வருடங்களாகப் பூலித்தேவன் அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்படாமல் இருந்தது. அந்தக் கோரிக்கையை வைத்து அவர்கள் தேர்தலைப் புறக்கணிக்க இருந்தார்கள். நாங்கள் வாக்குகள் சேகரிக்கச் சென்றபோது அவர்களுடன் சமரசம் ஏற்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையும் தமிழகத்தின் முதலமைச்சராக அமருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு அமர்ந்தவுடன் உங்கள் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்ததன் அடிப்படையில், எங்களை வாக்குகள் சேகரிக்க அனுமதித்தார்கள். அனுமதித்ததோடு மட்டுமல்லாமல் அப்பகுதியிலுள்ள வாக்காளர்கள் பெருவாரியான வாக்குகள் அளித்து வெற்றி பெறச் செய்தார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொண்டு சென்றேன். அவர்களும் கனிவோடு

[2017 ஜூலை 5

அந்த மனுவினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கடந்த வருடம் பூலித்தேவன் அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்த அனுமதி அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் மாமன்னன் பூலித்தேவன் அவர்களுக்கு வருடந்தோறும் அவருடைய வரலாற்றினை நினைவுபடுத்தும்விதமாக அரசு விழாவாக நடத்தி, அந்த விழாவிலே பல்வேறு நலத் திட்டங்களையும் வழங்க வேண்டுமென்று எனது தொகுதி மக்களின் சார்பாக வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று, மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் ஆசி பெற, மாண்புமிகு அம்மா அவர்கள் குடியிருந்த கோயிலாக இன்றைக்கும் நாங்கள் வணங்கிக் கொண்டிருக்கின்ற போயஸ் கார்டனுக்கு அவரை அழைத்துச் சென்று கோரிக்கையை அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், இரண்டு அமைச்சர்களை அனுப்பி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பூலித்தேவன் அவர்களுக்கு அரசு விழா நடத்தினார்கள். ஆண்டுதோறும் தொடர்ந்து அரசு விழாவாக நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று முறையான அறிவிப்பு வருவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள். சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. அ. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நற்செய்திக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், எனது சார்பாகவும், எனது தொகுதி



2017 ஜூலை 5]

மக்கள் சார்பாகவும், தென் தமிழக மக்கள் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

*முற்பகல் 11–15*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியிலே சுதந்திரப் போராட்ட வீரர்களான கப்பலோட்டியத் தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை மற்றும் ஒண்டிவீரனுக்கு நினைவு மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 4 வழிச் சாலையில் அமைந்துள்ள ஒண்டிவீரனுடைய நினைவு மண்டபத்திற்கு மக்களைக் கவர்ந்து ஈர்க்கும் வகையிலே இரவும், பகலும் தெரிகிறமாதிரி விளம்பரப் பலகை, காலியாக இருக்கக்கூடிய இடத்திலே பூங்கா அமைக்கப்பட வேண்டுமென்றும், வ.உ.சி. நினைவு மண்டபம் செழுமையோடு இருப்பதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள் தெரிவித்த நெற்கட்டும்செவலில்தான் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனுக்கு மணிமண்டபம் கட்டி ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்த வேண்டுமென்று, சென்ற ஆண்டிலே சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களை அனுப்பி அந்த விழாவை அரசு விழாவாக அறிவித்து சிறப்பு சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாளையங்கோட்டையிலே நினைவுச் சின்னம் அமைந்திருக்கின்ற இடத்திலே அறிவிப்புப் பலகைகளை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு

[2017 ஜூலை 5

அதை கனிவோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மிகச் சிறப்பாக அரசு விழாக்களை எடுத்து வருவதன் அடிப்படையில் மாமதுரையில் மிகச் சிறப்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நடத்திக் காட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும் இணைந்து அந்த விழாவை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார்கள். அதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நல்விழாவில் மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரிட்டும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கருத்திலே, பரிசீலனையில் இருந்த லோயர் கேம்பிலிருந்து மதுரை வரை பைப்மூலம் தண்ணீர் கொண்டுவரப்படும் என்ற அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தலைவர்களுக்கும், சுதந்திரப் போராட்டத் தலைவர்களுக்கும் இந்த அரசும், செய்தி மற்றும் விளம்பரத் துறையும் விழா எடுக்கிறது. பசுமலை பாரதி என்று அழைக்கப்படுகிற சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற கவிஞர் சோமசுந்தர பாரதியாரின் வரலாறு மறைக்கப்பட்டு, மறுக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது. அதுகுறித்து அரசு ஆய்வு செய்து அரசின் சார்பில் விழா எடுக்க அரசு முன் வருமா, அந்தக் குடும்பத்தின் பாரம்பரியத்தவர் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல செய்திகளை அறிந்து கவிஞர் சோமசுந்தர பாரதி என்ற பசுமலை பாரதிக்கு அரசு விழா எடுக்க முன் வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உலகத் தமிழர்கள் எல்லாம் மகிழும்வண்ணம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு முதலிலே நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல அவருடைய தொகுதி, பசுமலையிலே சோமசுந்தர பாரதிக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட வேண்டும், அவருடைய விழாவை அரசு விழாவாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். துறையின் மூலமாக ஆய்வு செய்து, நிச்சயமாக அவருடைய வரலாற்றை அறிந்து அதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் கோபால் நாயக்கருக்கு விருப்பாச்சியிலே மணிமண்டபம் 2006–2011–லே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கட்டப்பட்டது. அவருடைய பிறந்த நாளை அரசு விழாவாக நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? மேலும், அவருடைய உருவம் பொறித்த தபால் தலையை வெளியிடுவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியிலே விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களுக்கு சிலையுடன்கூடிய மணிமண்டபத்திற்கு, ரூபாய் 69 இலட்சம் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நிதியை ஒதுக்கீடு செய்து, தன்னுடைய திருக்கரங்களால் 20–2–2013 அன்று திறந்து வைத்தார்கள் என்ற

[2017 ஜூலை 5

செய்தியை மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் நானும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சருமான, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களுடைய மணிமண்டபத்தை ஆய்வு செய்தோம். தாங்கள் வைத்த கோரிக்கையை அப்பகுதி மக்களும் வைத்திருக்கின்றார்கள். நிச்சயமாக அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நபிகள் நாயகத்தைப் பற்றி மிகப் பெரிய காவியம் இயற்றிய சீறாப்புராணம் புகழ் உமறுப் புலவர் அவர்களுக்கு எட்டயபுரத்தில் அரசு சார்பில் மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அவருடைய புகழை மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில், அவருக்கு அரசு சார்பில் விழா நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனவே, இந்த அரசு அதைச் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

அதேபோன்று, பல்வேறு தலைவர்களுக்கு நாம் மணிமண்டபங்கள் அமைத்திருக்கின்றோம். அந்த மணிமண்டபங்களிலே ஏதாவது பணிகள் நடைபெறுவதற்கான ஆணையை இந்த அரசாங்கம் எளிய முறையில் செய்து தர வேண்டும். ஏனென்று சொன்னால், நாங்கள்கூட ஒரு நிகழ்ச்சியை காயிதேமில்லத் மணிமண்டபத்தில் நடத்த வேண்டும் என்று அனுமதி கேட்டபோது, பல்வேறு காரணங்களினால் அனுமதி மறுக்கப்பட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே, மணிமண்டபங்களை வெறுமனே வைத்திருக்காமல், ஏதாவது நல்ல பணிகள் அங்கே



2017 ஜூலை 5]

நடைபெறுவதற்கு அரசு வழிவகைகளைக் காண வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** காயிதே மில்லத் மணிமண்டபம் அமைந்திருக்கிற இடம் எங்கே இருக்கிறது என்றால், பின்பக்கமாக அமைந்திருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் அடையாளப்படுத்தக்கூடிய வகையில், பெயர் பலகைகளை அங்கு வைத்தால் நன்மை பயக்கும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தங்கள் வாயிலாகக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, என்னுடைய தூத்துக்குடி மாவட்டத்தில், எட்டயபுரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதியாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கு நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்தி, பாரதியாருக்கு மணிமண்டபம் அமைத்ததோடு, அங்கு உமறுப் புலவருக்கும் அரசின் சார்பாக மணிமண்டபம் அமைக்கப்பட்டு, ஆண்டுதோறும் விழா நடத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசு விழாவாக நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, காயிதே மில்லத் மணிமண்டபம் பூட்டப்பட்டு பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லை. சென்னையில் கண்ணியமிகு காயிதேமில்லத் மணிமண்டபத்தில் ஒரு நூலகர் மற்றும் காப்பாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், பொதுமக்கள் பார்வைக்காக நாள்தோறும் திறந்து வைக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின்மூலம் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

[2017 ஜூலை 5

வருகின்றன. 2014 ஆம் ஆண்டு முதல் 2017 வரை கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் மணிமண்டபத்தில் ஹஜ் பயணம் குறித்த அறிமுகக் கூட்டம், ரம்ஜான் தொழுகை குறித்த நிகழ்ச்சி, ஹஜ் பயணம் குறித்த பயிற்சி முகாம், ஹிஜ்ரி கமிட்டி காலண்டர் வெளியீட்டு நிகழ்ச்சி, பெருநாள் தொழுகை மற்றும் சிறப்புத் தொழுகை போன்ற 13 நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சபூதங்களுக்கு அழிவு வந்தாலும், அழிவில்லாத நிலைக்குச் சொந்தக்காரராம் என் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை வணங்குகிறேன். வரலாறை நாம் மறந்தால், வரலாறு நம்மை மறந்துவிடும். ஒட்டுமொத்தமாக வெள்ளையர்களுக்கு எதிராக பிரெஞ்சு கலவரத்திற்கும், அமெரிக்க கலவரத்திற்கும் முன்பாக, தமிழகத்திலே, இந்தியாவிலே சுதந்திர வேட்கைக்கு முதல் வித்திட்டவர் காத்தப்ப பூலித்தேவன் என்பதுதான் உண்மையான வரலாறு. ஆகவே, கடந்த முறை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் நான் சார்ந்துள்ள முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாக அரசு விழாவாக அறிவிக்க வேண்டும் என்று வைத்த கோரிக்கையை ஏற்று, உடனடியாக இரண்டு அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினரையும் அந்த விழாவில் கலந்துகொள்ளச் செய்வதற்கான வாய்ப்பை வழங்கினார்கள். என்றைக்கு முதல் முறையாக மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அரசு சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கிறார்களோ, அந்த நிலையே அது அரசு விழாவாக அறிவிக்கப்பட்டதற்கு சமம்தான். இனிவரும் காலங்களில் பூலித்தேவனுடைய வரலாற்றையும், மருதுபாண்டியர்களுடைய வரலாற்றையும் வரக்கூடிய சந்ததிகள் இளைய தலைமுறைகள் மறவாத வண்ணம் எடுத்துச் செல்வதற்கு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசின், எளிமையான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு செயல்பட வேண்டும்; செயல்பட வேண்டும் என்று முக்குலத்தோர்



2017 ஜூலை 5]

புலிப்படையின் சார்பாக என் சிரம் தாழ்த்தி, வேண்டி, வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்களின் கோரிக்கைக்கு, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்களுக்கு அளித்த பதிலில் தெளிவாகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்துகொண்டாலே அது அரசு விழாதான். நிச்சயமாக, விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு முறையான அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியை நடத்திக்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை எல்லாம் செயல்வடிவமாய் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலையில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டு ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் விழா நடைபெற்று வருகிறது. அதேபோல் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் குமரன் பிறந்த ஊரான சென்னிமலையில் கொடி காத்த குமரன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டி ஆண்டுதோறும் அரசு விழா எடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை

[2017 ஜூலை 5

அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் சென்ற ஆண்டும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தின் பொற்கால முதல்வராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். துறைரீதியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. தலைவர்கள், வரலாற்றுத் தலைவர்கள், நாட்டிற்கு உழைத்த நல்லவர்கள் என அனைவரையும் பாராட்டி, போராடிய தலைவர்களுக்கு மணிமண்டபங்கள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் அமைப்பதிலே அம்மா அரசுக்கு நிகராக இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த அரசும் இல்லை. அவர்களுக்கு அரசு விழாக்களை நடத்தி பெருமைப்படுத்துகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நேரத்திலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுச்சிமிக்க தமிழகத்திலே ஏற்றமிக்க மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை வாரி வழங்கிய அன்புத் தாய், ஆராதனைக்குரிய இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் இந்த நல்லரசை தலைமையேற்று வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். வாய்ப்பு வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் தங்களையும் வணங்குகிறேன். சேலம் மாநகராட்சியின் சார்பிலே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருவுருவச் சிலையினை நிறுவுவதற்காக ஒரு தனித் தீர்மானம்



2017 ஜூலை 5]

நிறைவேற்றப்பட்டு அது செயல்படாமல் இன்றையதினம் இருக்கின்றது. இப்பொழுது சேலம் மாநகராட்சிக்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் புதிய கட்டடத்தின் எதிரிலே சாலையின் முகப்பில், இதய தெய்வம் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருவுருவச் சிலையை அறிவிக்க வேண்டுமென்றும், அது செய்தித் துறையின் சார்பாக நடைபெற வேண்டுமென்றும் தங்கள் வாயிலாக துறை அமைச்சர் அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை மதுரையிலே துவக்கி தொடர் நிகழ்வாக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அந்த விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சேலத்திலே சிலை வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் மாநகராட்சியிடம் உரிய அனுமதியைப் பெற்று அந்த இடத்தைப் பெற்று தருகின்ற நேரத்தில் அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்கள் எழுப்பிய ஓர் அருமையான கேள்வியையொட்டி என்னுடைய கேள்வி. நாவலர் சோமசுந்தர பாரதியைப் பற்றி கேள்வி எழுப்பினார்கள். மறைக்கப்பட்ட ஒரு தன்மான தமிழறிஞர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள். 1938–ல் முதல் இந்தி

[2017 ஜூலை 5

எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபொழுது அவர்தான் முதல் தளநாயகர். அதுமட்டுமல்ல தொல்காப்பியத்தைக் குறித்தும், சங்க இலக்கியங்களைக் குறித்தும் 30–க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். பெரிய ஆராய்ச்சி அறிஞர். நாவலர் என்ற பட்டம் பெற்றவர். அவருக்கு சமஸ்கிருதம், தமிழ் எல்லா மொழிகளும் தெரியும். ஆனால், தமிழிலே அதிகமான ஆர்வம் கொண்டவர். 'தீ பரவட்டும்–பெரியபுராணம் எரிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா' என்று அண்ணாவுக்கும், அவருக்கும் ஒரு debate நடந்தபொழுது தலைவர் சொன்னார், 'இருபெரும் தலைவர்கள் பேசுவார்கள்' என்று. அண்ணா உடனே மறுத்து, 'இல்லை, என் தலைவருக்கும், அவருடைய மாணாக்கருக்கும்தான்' என்று சொன்னார். அண்ணா, அவர்களை அவர் தலைவராக ஏற்றுக் கொண்டவர். அவ்வளவு பெரிய மூதறிஞர். தன்மானத் தமிழர். 'தன்மானத் தமிழர்' என்று நான் அடைமொழி தருகிறேனே அதற்குத்தான் வலுவூட்டி அவர் சொன்னார். எனவே, அவருக்கு சிலை அமைப்பது மட்டுமல்ல, விழா கொண்டாடுவது மட்டுமல்ல, அவர் எழுதிய நூல்கள் இன்றைக்கு மறைக்கப்பட்டுவிட்டன. அந்த நூல்கள் எல்லாம் ஆராய்ச்சியிலே இருக்கப்பட வேண்டிய ஒன்று. யார் யாரோ எழுதிய நூல்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே, அரசு, அவற்றை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதை நான் மெத்த பணிவன்போடு இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கையை, இந்த அரசு ஏற்று, அனைத்து நூலகங்களிலும் அது பிரசுரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2017 ஜூலை 5]

## 2. தகவல் கோரல்

### (அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்று கேட்டால் எப்படி? யாராவது ஒருவரை மட்டும் எழுந்து கேட்கச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** முனைவர் பொன்முடியை மட்டும் கேட்க அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக இன்று சென்னையிலே மாபெரும் உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான கரும்பு தொகை 2,000 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, இதுகுறித்து அறிவிப்பு எதுவும் கொடுத்திருக்கிறீர்களா?

**முனைவர் க. பொன்முடி:** அதைப் பற்றிதான் பேசுகிறேன். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததுதான். அவசர முக்கியத்துவம் வாய்ந்ததுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருந்தாலும், என்னிடம் அனுமதி எதுவும் கேட்கவில்லை.

**முனைவர் க. பொன்முடி:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா?

**முனைவர் க. பொன்முடி:** அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொல்லிவிடுகிறேன், அவ்வளவுதான். கோரிக்கையை சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாக இரண்டு வரிகளில் சொல்லுங்கள்.

**முனைவர் க. பொன்முடி:** சுருக்கமாகச் சொல்கிறேன். கரும்பு டன்னுக்கு 2,850 ரூபாய் என்று அறிவித்திருந்தாலும், 2,425 ரூபாய்தான் வழங்கப்படுகின்றது. அவர்கள் 4 ஆயிரம் ரூபாய் டன்னுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். தேர்தல் வாக்குறுதியிலே 3,500 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். இந்த 2,850 ரூபாயை குறைந்தபட்சம் 3,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆக, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தினை அழைத்துப் பேசி, கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கையை நீங்கள் பணிவுடன் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, அணைக்கரை ஊராட்சி, முதலை கடித்ததால் உயிரிழந்தவருக்கு நிவாரண உதவி மற்றும் முதலைப் பண்ணை அமைக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, சுருக்கமாக அதைச் சொல்லுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் ஒன்றியத்தில் அணைக்கரை ஊராட்சியில் கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் 200–க்கும் மேற்பட்ட முதலைகள் இருக்கின்றன. 3 ஆம் தேதி காலை ஏழு மணிக்கு செல்லதுரை என்பவர் குளிக்கச் சென்ற நேரத்தில் முதலை கடித்து, நீர் பகுதிக்கு இழுத்து சென்றுவிட்டது. ஒரு மணி நேரம் தேடி, மீன் பிடிக்கும் வலைமூலம் அவருடைய சடலம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு



2017 ஜூலை 5] [முனைவர் கோவி. செழியன்]

அவரை இழந்து வாடுகின்ற அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அல்லது வனத் துறைமூலம் 10 இலட்சம் ரூபாய் தற்காலிக நிதியாகவும், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலையும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான அங்கு முதலைப் பண்ணை அமையுங்கள் அல்லது அங்கு இருக்கக்கூடிய 200–க்கும் மேற்பட்ட முதலைகளை முட்டுக்காடு முதலைப் பண்ணைக்குக் கொண்டு சென்று, விவசாயப் பெருங்குடி மக்களை பாதுகாத்துத் தாருங்கள் என்ற கோரிக்கையை வைத்து, அவையின் கவனத்தை ஈர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா, வனத் துறை செய்யுமா என்று கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் சரகம், 15, விநாயகர் தெரு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னையன் என்பவரின் மகன், திரு. செல்லதுரை என்பவர் 3–7–2017 அன்று அணைக்கரை பாலம், கொள்ளிடம் ஆறு தென்கரையில் நீர்த்தேக்கப் பகுதிக்குச் சென்றபோது, நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள முதலை தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து நான் மிகவும் துயரம் அடைந்ததோடு, மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் உடனடியாக வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நேற்று 4–7–2017 அன்று மாலை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜூலை 5

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னிந்திய கரும்பு கூட்டுறவுச் சங்கங்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அது தெரிந்த விஷயம். தற்சமயம் 3, 4 பருவங்களாக சர்க்கரையினுடைய விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இப்பொழுது 2015–2016 மற்றும் 2016–2017–ல்தான் விலை கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். சர்க்கரையின் உற்பத்தி விலையும் கூடிக்கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளாகத்தான் சர்க்கரை விலை கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. இதுவெல்லாம் அரசினுடைய கவனத்தில் இருக்கின்றது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலே பொதுவாக பரிந்துரை விலை FRP–ஐ முழுவதுமாகக் கொடுத்துவிட்டார்கள். Private Sugar Factories மற்றும் Co-operative Sugar Factories மத்திய அரசினுடைய maximum FRP rate அதாவது பரிந்துரை விலை மற்றும் ஆதாய விலையை வழங்கிவிட்டன. மாநில அரசினுடைய பரிந்துரை விலை, SAP மட்டும்தான் பாக்கியிருக்கிறது. SAP–ஐ பொறுத்தவரையில் Co-operative Mill–ல் 235 கோடி ரூபாய்தான் பாக்கியிருக்கிறது. அதற்கு நிதித் துறையில் கேட்டிருக்கிறோம். நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மேலும், தனியார் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலும், கிட்டத்தட்ட ரூ.1,267 கோடி SAP–விலை பாக்கி இருக்கிறது. இதற்காக, பல்வேறு meeting தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். நாங்கள் அவர்களை வலியுறுத்தியிருக்கிறோம். 2014–2015 மற்றும் 2013–2014–க்கு வேண்டாம்; 2015–2016 மற்றும் 2016–2017–க்குண்டான SAP–விலையை, மாநில அரசினுடைய பரிந்துரை விலையைக் கொடுத்தே ஆக வேண்டுமென்று அவர்களிடம் ஒரு நிர்ப்பந்தத்தை வைத்திருக்கிறோம். அவர்களுக்கு மிகப் பெரிய அழுத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள்கூட அந்த Dharani Sugar Factory-ஐப்பற்றிக் குறிப்பிட்டார். இதையெல்லாம் சேர்த்துத்தான் நாங்கள் கொடுக்க வேண்டும். என்ன கேட்டிருக்கிறோமோ நிச்சயமாக அவர்களை வலியுறுத்தி வாங்குவதற்கும், இல்லையென்றால், அரசின் மூலமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும்கூட தயாராக இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். டன்னுக்கு 3,500 ரூபாய் அல்லது 4,000 ரூபாய் என்பது எப்போதுமே கொடுக்க



2017 ஜூலை 5] [திரு. எம்.சி. சம்பத்]

முடியாது. அதையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருத்தில் கொள்ள வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை இந்த நல்ல நேரத்திலே வைத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமருகிறேன்.

### (இ) சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் வட்டம், அரசு உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளி மாணவன் அரவிந்தன் உயிரிழப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 24–6–2017 அன்று என்னுடைய சங்கராபுரம் தொகுதியில் கோமுகி அணையிலுள்ள அரசினர் உண்டு உறைவிட மலைவாழ் மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்ற 6 ஆம் வகுப்பு மாணவர்கள் குளிப்பதற்கு விடுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், பக்கத்திலே இருக்கின்ற கோமுகி அணையில் குளிக்கச் சென்றபோது, அரவிந்தன், சூரியா உள்ளிட்ட மற்ற மாணவர்கள் சேர்ந்து குளிக்கின்றபோது, அரவிந்தன் என்ற மாணவன் அந்த ஆற்றிலேயே இறந்துவிட்டான். தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனைச் செய்து, நானே உடன் இருந்து உடலை அடக்கம் செய்தோம். அந்த விடுதிக் காப்பாளர்மீது, துறையின் வாயிலாக 3 மாதங்களுக்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் அதே பள்ளி விடுதியில் அவர் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். இந்தக் கவனக் குறைவும் ஒரு காரணம். அந்தப் பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்றனர். 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மேல்நிலைப் பள்ளி. ஆகவே, குளிப்பதற்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால் அந்த மாணவர்கள் பக்கத்தில் இருக்கின்ற கோமுகி ஆற்றில்தான் குளிக்கச் செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆக, அப்படி இருக்கின்றபோது இந்த மாணவன் இறந்திருக்கின்றான். ஆகவே, இதைக் கருத்திலே கொண்டு, நேற்றைக்கு முதல் நாள் நான் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், அந்த விடுதிக் காப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தேன்.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** அதன் அடிப்படையில், மறைந்த மாணவன் அரவிந்தனின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை நேற்று தெரிந்துகொண்டேன். ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியை அந்தக் குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்களின் சார்பிலும், அந்தக் குடும்பத்தாரின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி போதாது. முழுக்க முழுக்க மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழ்கின்ற, அந்த கல்வராயன் மலையிலிருந்துதான் அந்தப் பள்ளியில் படிக்கின்ற 90 சதவிகித மாணவ–மாணவிகள் வருகிறார்கள். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு, குறைந்தது 5 இலட்சம் ரூபாய் நிதியாவது அந்தக் குடும்பத்தாருக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கோமுகி அணை, அரசு மலைவாழ், உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பு படித்து வந்த, நாராயணம்பட்டி கிணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சௌந்தர்ராஜன் என்பவரது மகன் அரவிந்தன் என்பவர் 24–6–2017 அன்று கச்சிராப்பாளையம், கோமுகி ஆற்றின் கால்வாயில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாகத் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்ததோடு, அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டதுடன், செல்வன் அரவிந்தன் குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதுதொடர்பாக அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் விடுதிக் காப்பாளர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அந்த விடுதியில் அடிப்படை வசதிகளில் ஏதேனும் குறைபாடுகள்



2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

உள்ளனவா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளவும், அவ்வாறு ஏதேனும் குறைபாடு இருப்பின் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஈ) மதுரை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 28 வார்டுகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் ஆணையூர் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், கொஞ்சம் இருங்கள்.

*முற்பகல் 11–40*

***திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த மதுரை மாநகராட்சியோடு, 2011 ஆம் ஆண்டு, புதிதாக 28 வார்டுகள் இணைக்கப்பட்டு 6 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளன. என்னுடைய மதுரை கிழக்குத் தொகுதியிலே 11 வார்டுகள். ஆணையூர் பகுதி, கண்ணனேந்தல், திருப்பாலை, நாகனாகுளம், உத்தன்குடி, வண்டியூர் ஆகிய பகுதிகளிலே 11 வார்டுகள் ஏறத்தாழ 3 இலட்சம் மக்களுக்கு மேலாக அங்கே இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதியின் இரண்டு வார்டுகளும், மதுரை வடக்குத் தொகுதியின் இரண்டு வார்டுகளும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஏ.கே. போஸ் அவர்களின் தொகுதியின் 13 வார்டுகளும் சேர்த்து, 28 வார்டுகளுக்கும் பாதாளச் சாக்கடை அமைத்துத் தருவதற்கு முன்னாள் முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இன்னும் அந்தப் பணிகள் துவங்கப்படாமல் இருக்கின்றன. எனவே அந்தப் பணியைத் துவக்குவதோடு, மாநகராட்சிப் பகுதி 2, 3, 4, வார்டுகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் என்ன?

[2017 ஜூலை 5

**திரு. பி. மூர்த்தி:** ஒன்றே ஒன்றுதான். அதுகுறித்தும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்ன சப்ஜெக்ட் குறித்து கொடுத்திருக்கிறீர்களோ அதுபற்றி மட்டும் கேட்டு, முடியுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** ஆணையூர் பகுதியிலே 2, 3, 4 வார்டுகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக 2010–லே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தில் முறையாக pipe line அமைக்காததால் repair ஏற்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டது. 6 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் உடனடியாகக் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். மாண்புமிகு அமைச்சர் கேட்கவில்லை. நான் கேட்கிறேன். கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுரை மாநகராட்சியில் மொத்தம் 100 வார்டுகள் அமைந்துள்ளன. இம்மாநகராட்சியின் மக்கள் தொகை சுமார் 15 இலட்சம் ஆகும். இம்மாநகராட்சிக்குட்பட்ட 72 வார்டுகளில் ஏற்கெனவே பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டு தற்போது செயலாக்கத்திலுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் 11 மாநகராட்சி வார்டுகள் அமைந்துள்ளன. இந்த 11 வார்டுகள் மற்றும் மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளையும் சேர்த்து மொத்தம் 28 வார்டுகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை



2017 ஜூலை 5] [திரு. எஸ்.பி. வேலுமணி]

தயாரிக்கப்பட்டு ரூ.698 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு உரிய நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். கண்டிப்பாக, படிப்படியாக பாதாளச் சாக்கடைத் திட்டம் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலெல்லாம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டுமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவு. நிதியாதாரத்தைப் பொறுத்து படிப்படியாக, ஒவ்வொரு திட்டமாக எடுத்துக்கொள்ளப்படும். தற்போது பேசுகின்றபோதுகூட, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 'நன்றி சொல்லுங்கள், நன்றி சொல்லுங்கள்' என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். ஏனென்றால் நூற்றாண்டு விழாவின்போது மிகப் பெரிய அறிவிப்பை சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கேட்டவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். தற்போது மாநகராட்சியின் பகுதியாக அமைந்துள்ள ஆணையூர் நகராட்சியாக இருந்தபோது, வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் திட்டத்தினைச் செயல்படுத்த, கடந்த தி.மு.க. ஆட்சியில் பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டன. பணிகள் முடிக்கப்பட்டு, திட்டத்தின் சோதனை ஓட்டத்தின்போது, ஒப்பந்ததாரர்களால் பதிக்கப்பட்ட HDPE குழாய்களில் தொடர் கசிவு மற்றும் வெடிப்பு ஏற்பட்ட காரணத்தினால் திட்டத்தினைச் செயலாக்கத்திற்குக் கொண்டுவருவதில் தடங்கல் ஏற்பட்டது. உடைப்பு ஏற்பட்ட குழாய்களை மாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்களுக்கு பலமுறை அறிவுறுத்தப்பட்டும், சீரமைப்புப் பணிகளை ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ள முன்வராததால், 2014 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின் சீரமைப்புப் பணிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ரூ.8 கோடியே 97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன. தற்போது குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் ஜனவரி 2018–க்குள் இத்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும். மேலும், இத்திட்டம் நிறைவேறும்போது, மதுரை மாநகராட்சிக்குட்பட்ட ஆணையூர் பகுதியிலுள்ள 45,000 மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர்

வழங்கப்படும். இது தவிர மதுரை மாநகராட்சியின் குடிநீர் வழங்கல் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு தற்போது காவேரி குடிநீர் திட்டத்திலிருந்து 9 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 250 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றிலிருந்து லாரிகள்மூலம் குடிநீர் எடுக்கப்பட்டு, மதுரை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் நாளொன்றுக்கு, கடும் வறட்சியிலும்கூட, 20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. விரிவாக்கப்பட்ட பகுதியின் மக்கள் தொகை மட்டும் 4.5 இலட்சம் ஆகும். நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 50 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வறட்சியிலும் 250 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 5 லாரிகள், 10,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 30 லாரிகள், 6,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 65 டிராக்டர்கள்மூலம் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

பெரியார் அணை பகுதிகளிலெல்லாம் மழை பெய்திருக்கிறது. அதனால் தற்போது சற்று கூடுதலாகத் தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், முன்னாள் மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் அனைத்து சங்கங்களின் உறுப்பினர்களும் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவிற்கு வந்தனர். இதற்கு முன்புதான் சொன்னேன். வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கக்கூடிய அற்புதமான திட்டம். இத்திட்டத்திற்கு 400 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டுள்ளது. அது மாற்றியமைக்கப்பட்டு, பெரியாறிலிருந்து குழாய்மூலம் வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு அற்புதமான திட்டமாகும். 60 வருடங்களுக்கு தண்ணீர் பிரச்சினையே இருக்காது. அதற்குத்தான் உங்களை நன்றி சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். மதுரை மாநகராட்சிக்கு மட்டுமல்ல, மதுரையைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளுக்கும் நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். நீங்கள் நன்றி மட்டும்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

## (உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்ன விவரம் என்று நீங்கள் இரண்டே வரியில் சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் விவாதம் கிடையாது. நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சியில் 6 மாதக் காலமாக குப்பையை அள்ளாமல் சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. பல நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இதுசம்பந்தமாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். துறையிடமிருந்து தகவல் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், ஒரே வரியில் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள்

சொல்லிவிட்டீர்கள். தகவல் வரட்டும். மாண்புமிகு அமைச்சரிடம் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுசம்பந்தமாக விடை வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, திரு. பிரின்ஸ், நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகம் எங்கும் 3–வது நாளாக சினிமா தியேட்டர்கள் மூடப்பட்டுள்ளன. கேளிக்கை வரிகள் உயர்த்தியது குறித்தும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு நேற்றே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நேற்றே, நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்டு சென்றுவிட்டீர்கள். அதற்குப் பிறகு, அவையில் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் சொல்வது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள்.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்குதல், எர்ணாவூரில் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடுகள் கட்டுதல், பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு மாநில அரசின் மானியம், நகரமைப்பு வல்லுநர்களுக்கான பணித் தொகுப்பு மற்றும் பணி விதிகள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி, மாநிலம் முழுவதற்கும் உயர்தர உள்கட்டமைப்பை வழங்குவது, போதுமான வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை 2023–க்குள் குடிசைகளற்ற மாநிலமாக உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்





கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு அரசு ஒரு புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்கும். வீடு கட்டும் செலவினத்தைக் குறைத்தல், பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டு வசதியினைக் கிடைக்கச் செய்தல், வாங்கத்தக்க விலையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தல், அனைவருக்கும் அடிப்படை வசதிகளான மின்சாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளுடன்கூடிய வீடு வழங்குதலை உறுதி செய்தல், நகர்ப்புற மக்களின் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலையினைக் கருத்தில்கொண்டு, நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நீடித்த நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்க்கை முறையினை நகர்ப்புறங்களில் உறுதி செய்தல், நிலையான நகரமயமாக்குதலை ஊக்குவித்தல், சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் பொருத்தமான திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல், பெருந்திட்டங்கள் (Master Plan) மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (Development Control Rules) திருத்தங்கள் கொண்டுவருதல், ஒற்றைச் சாளர முறையை உருவாக்குதல், மனை வரைபடம் ஒப்புதல் மற்றும் கட்டட அனுமதி பெற காலக்கெடு நிர்ணயித்தல், மூத்த குடிமக்கள் மற்றும் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு வீடுகள் கட்டுதல் மற்றும் அதற்குரிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், இடரற்ற வாடகை வீடு வழங்கும் முறையினை உருவாக்குதல் போன்றவை இக்கொள்கையின் சிறப்பம்சங்களாகும்.

2. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்ட நிதி (PMAY), சிறப்பு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் (Transferable Development Rights) மூலம் திரட்டப்படும் நிதி, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி (Gap Fund) ஆகியவற்றைப் பயன்படுத்தி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம், எர்ணாவூரில் 676 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 வீடுகள் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2017 ஜூலை 5

3. பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதித் (PMAY-Urban) திட்டத்தில் பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் (Beneficiary Led Construction) வகைப்பாட்டின்கீழ், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1,86,308 தனி வீடுகள் 5 ஆயிரத்து 589 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நடப்பாண்டில் பயனாளிகள் பங்களிப்புடன் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் (Affordable Housing in Partnership Component) வகைப்பாட்டின்கீழ், ஒரு குடியிருப்பு 10 இலட்சம் ரூபாய் வீதம் 14,828 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1,482 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட இரண்டு வகைப்பாட்டின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் மானியமாக 2007 கோடியே 53 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

முற்பகல் 11–50

4. திட்டமிட்ட மற்றும் நீடித்த நிலையான நகர் வளர்ச்சி ஏற்படுத்திட நிலப் பயன்பாடு குறித்து திட்டமிடுதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களை வகுத்தல், பாதுகாப்பு அம்சங்களுடன் வசிக்குமிடங்கள் ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, போக்குவரத்து போன்ற தேவைகளை அறிந்து சிறப்பான தீர்வுகளைப் பரிந்துரைக்க, தகுதி பெற்ற தனிச் சிறப்புடைய நகரமைப்பு வல்லுநர்களைப் பணியில் ஈடுபடுத்துவது அவசியமாகிறது. நகரமைப்பு வல்லுநர்கள், மண்டல மற்றும் உள்ளூர் விதிமுறைகளை அறிந்து, மண்டலங்களுக்கு இடையேயான நகர வளர்ச்சி குறித்த அம்சங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக மாநில அளவில் நகரமைப்பு வல்லுநர்களுக்கான ஒரு பணித் தொகுப்பினை உருவாக்கி, அதற்கென தனியாக பணிவிதிகள் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணித் தொகுப்பிலுள்ள நகரமைப்பு வல்லுநர்கள், நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுப் பணி அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஆணையாளர் பணிநிலை கட்டுப்பாட்டு தகவாளராக இருப்பார்.



2017 ஜூலை 5]

**(ஆ) புற்றுநோய்க்கான நவீன லீனியர் ஆக்சிலேட்டர் கருவிகள், தாய்–சேய் நலனுக்கான மேன்மைமிகு மையங்கள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், அவசர கால நிலைப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துதல், நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்குதல், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவுதல், மருந்துக் கிடங்குகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் கருவிகள் நிறுவுதல், சுகாதார செவிலியர்களுக்குக் கைக் கணினி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை அடையார் புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் செலவில் புற்றுநோய்க்கான உயர் சிகிச்சை மையமாக அறிவித்தார்கள். இதற்கான கட்டடப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இது மட்டுமன்றி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டு, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை; இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை; அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் ஆகிய நான்கு மருத்துவமனைகளில் 64 கோடி ரூபாய் செலவில் புற்று நோயாளிகளுக்கு நவீன சிகிச்சை அளிக்கும் பொருட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நவீன லீனியர் ஆக்சிலேட்டர் கருவி நிறுவப்படும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2017 ஜூலை 5

2. தாய்–சேய் நலனைப் பேணிக் காக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள். அந்த வகையில், மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மேன்மைமிகு மையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தாய் மற்றும் சேய் இறப்பு பெரிய அளவில் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு சேவை, தேசிய நலவாழ்வுக் குழும நிதி மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பூர், இராமநாதபுரம், பெரம்பலூர், செய்யாறு, உளுந்தூர்பேட்டை, இராஜபாளையம், திருத்தணி, ஆத்தூர் மற்றும் காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 57 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, 10 தாலுகா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசர கால நிலைப்படுத்தும் மையம் ஏற்படுத்தப்படும். 5 தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து முதலுதவி வசதிகளைக் கொண்ட நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்கப்படும்.

4. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தற்போது 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 18 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி பராமரித்து வருகிறது. நடப்பாண்டில், காஞ்சிபுரம், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 45 கோடி ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொள்முதல் செய்து மருந்துக் கிடங்குகளில் சேமித்து வைத்து விநியோகம் செய்து வருகிறது. போதிய இடவசதி இல்லாத, கடலூர், புதுக்கோட்டை, திருவாரூர், வேலூர், விருதுநகர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி,



2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இராமநாதபுரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், திருப்பூர், சேலம், விழுப்புரம் மற்றும் நீலகிரி ஆகிய 22 மாவட்டங்களில் உள்ள மருந்துக் கிடங்குகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அரசு மருத்துவமனைகளில் நடப்பாண்டில் 7 சி.டி. ஸ்கேன் கருவிகள் மணப்பாறை, மேட்டூர் அணை, மன்னார்குடி, பெண்ணாகரம், ஓசூர், பரமக்குடி மற்றும் குளித்தலை ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

7. தாய்–சேய் நலப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தி வரும் 9,994 சுகாதார செவிலியர்களுக்காக 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கைக் கணினிகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) மண்பாண்ட தொழிலாளர்களுக்கான மழைக் கால பராமரிப்புத் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மழைக் காலங்களில் மண்பாண்டங்கள் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ‘மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 4,000 ரூபாய் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகை 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2017 ஜூலை 5

கால பராமரிப்பு உதவித் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் 4,000 ரூபாய், இனி 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், இத்தொழிலில் ஈடுபட்டு வரும் 12,236 குடும்பங்கள் பயன்பெறுவர். அரசுக்கு இதனால் ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

## (ஈ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், மதுரை சட்டக் கல்லூரிக்குக் கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்வி மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட இருக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இப்பல்கலைக்கழகத்திற்குக் குளிர்சாதன வசதி, மின்னணு மேடைகள், கணினி ஒலி வீச்சிகள், கண்காணிப்புக் கேமராக்கள் ஆகியவற்றுடன் 1,040 மாணவர்கள் அமரக்கூடிய வகையில் 20 விரிவுரை அறைகள், இயக்குநர் அறை, அலுவலக அறைகள், ஆசிரியர் அறைகள், கௌரவ ஆசிரியர் அறைகள், கருத்தரங்கக் கூடம், மாதிரி நீதிமன்றக் கூடம், ஆவண அறைகள் மற்றும் மாணவியருக்கான பொது ஓய்வறை ஆகியவற்றை உள்ளடக்கி, தரை மற்றும் இரண்டு தளங்களைக் கொண்ட கூடுதல் கட்டடம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வருகின்ற மாணவர்களுக்குக் கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பல்வேறு விழாக்கள் மற்றும் பட்டமளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தற்போதைய கலையரங்கில் போதுமான இடவசதி இல்லாததைக் கருத்தில்கொண்டு, புதிய கலையரங்கம் ஒன்று முதல் தளத்திலும், நூலகக் கட்டடத்தில் உள்ள இடநெருக்கடியைக் கருத்தில்கொண்டு, புதிய நூலகக்



2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கட்டடத்தை தரை தளத்திலும் உள்ளடக்கிய புதிய கட்டடம் 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை மற்றும் சட்டத் துறை ஆகியவை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பின்னர் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்த்தெழுந்த புரட்சியாய், அதிர்வு தந்த உணர்ச்சியாய், தமிழர்தம் நலன் காத்து, உயிர்பேசும் மொழியாக, உணர்வலையின் விழியாக...

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** அறிவு சுடரின் ஒளியாக, அமுதசுவையின் துளியாக, தமிழக மக்களோடு இரண்டறக் கலந்துவிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவை இதயத்தில் ஏந்தி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்மூலம் பல்வேறு அறிவிப்புகளை பேரவையில் அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களைச் செயல்வடிவம் ஆக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன்

எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையை ஒரு மகத்தான சேவைத் துறையாக மாற்றிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே நேற்று அறிவிக்கப்பட்ட Trauma Care Policy, State Cancer Care Policy, Heart Care Policy ஆகியவற்றை உடனடியாகச் செயல்படுத்துகின்றவண்ணம், இன்றைக்கு புற்றுநோய்க்காக இந்தியாவிலேயே ஒரு முதன்மைத் திட்டமாக 6 இடங்களிலே Linear Accelerator கருவி, அதேபோன்று 57 கோடி ரூபாய் செலவில் விபத்துக்காய சிகிச்சை மையங்கள், MRI, CT Scan நிறுவுதல், VHN–கிராம சுகாதார செவிலியர்களுக்கு கையடக்க Tab உள்ளிட்ட திட்டங்களை அறிவித்த, அம்மா அவர்களின் வழியிலே ஆற்றலோடு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பிலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே சிறந்த சட்டக் கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். அதைத் தொடர்ந்து, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைச் சிறப்பாக நடத்திக் கொண்டுவரும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டக் கல்லூரியினுடைய மேம்பாட்டிற்காக, உள்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக அறிவித்துள்ள அறிவிப்புகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழின மக்கள் வாழ்வில் இமயம்போல் திட்டங்கள் தந்து, மக்களின் இதய கோயிலில் இருக்கும் ஒரே தெய்வம் எங்கள் அம்மா என்னும் அன்பு தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மண் வாசனை மணத்தோடு மக்கள் மனதில் இன்று மகிழ்ச்சி பொங்கும் அறிவிப்புகளை வெளியிட்டு தொழிலாளர்களின் தலைவிதியை மாற்றிய தரணிபோற்றும் தலைவருக்கு என் நன்றி.

*நண்பகல் 12–00*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் உலகில் அறிவிப்புகள் வெளியிடுவது இயற்கை. ஆனால் சொல்லிய அறிவிப்பைச் செய்து முடிப்பதில் அம்மாவுக்கு நிகர் அம்மாவே. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகை 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையை ரூ.5,000/– ஆக உயர்த்திடும் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பைப் பேரவை விதி 110–ன்கீழ் வெளியிட்டமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், துறையின் சார்பாகவும், ஒட்டுமொத்த மண்பாண்டத் தொழிலாளர்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்களும் நன்றி சொல்கின்றீர்களா?

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்புகளைப் படித்தார்கள். அதன் உள்ளே போக நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு சிறு சந்தேகம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேரவை விதி 110–ன்கீழான அறிக்கையைப் பற்றி பேசப் போகின்றீர்களா?

[2017 ஜூலை 5

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. அதன் உள்ளே நான் போக விரும்பவில்லை. ஒரு சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்க விரும்புகின்றேன். நேற்றையதினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளையெல்லாம் செய்தார். ஆனால், இன்றைக்கு காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவிப்புகளைச் செய்கின்றார். அந்த அறிவிப்புகள் வரவேற்கக்கூடிய ஒன்றுதான். மாண்புமிகு அமைச்சர்கள் மானியக் கோரிக்கைகளில் பதில் சொல்லி, சில அறிவிப்புகளைச் செய்தபின், மறுநாளோ அல்லது அதற்கு அடுத்த நாளோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளைச் செய்கின்றார். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எல்லா அதிகாரமும் உண்டு, இல்லையென்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இத்துடன் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் தவறாகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சருக்கு எல்லா அதிகாரமும் இருக்கின்றது என்பதை நீங்களே ஒப்புக்கொண்டுவிட்டீர்கள். அவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்களுக்குச் செய்யப் போவதை பேரவை விதி 110–ன்கீழ் சொல்லியிருக்கின்றார். அதற்கு நீங்கள் நன்றி சொல்கின்றீர்களா? நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள், இதில் விமர்சனங்களுக்கு இடம் இல்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிவிப்புகளைச் செய்வதற்கு அதிகாரம் இருக்கின்றது என்பதைச் சொல்கின்றேன். அதேநேரத்தில், as a member of the Assembly, நான் என்னுடைய suggestion–ஐச் சொல்கின்றேன். இனிமேல் அமைச்சர்கள் மானியக் கோரிக்கையில் பதில் சொல்வார்கள், ஆனால் அறிவிப்புகளை முதலமைச்சர்தான் வெளியிடுவார் என்ற ஒரு கருத்தை ஏற்படுத்தினால் தவறான முன்மாதிரி ஆகிவிடும்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது தவறில்லை.

**திரு. துரைமுருகன்:** ஏனென்றால் ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

## 5. கவன ஈர்ப்பு

### நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை முழுமையாக விநியோகித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. அர. சக்கரபாணி, முனைவர் க. பொன்முடி, திரு. இ. பெரியசாமி, திரு. கே.என். நேரு, திரு. ப. ரங்கநாதன், திரு. கு. பிச்சாண்டி, திரு. தா.மோ. அன்பரசன், திரு. டி. செங்குட்டுவன், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் திரு. செ. ராஜேஷ் குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை முழுமையாக விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, பிறகு பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீங்கள் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 ஜூலை 5

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவையான அளவு நியாய விலைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நியாயமான விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் பொதுமக்களை உணவு பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பதுடன், ஏழை, எளிய மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவுகிறது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை ஆகிய அத்தியாவசியப் பொருட்களும், துவரம் பருப்பு, பாமாயில் ஆகிய சிறப்பு அத்தியாவசியப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**அரிசி**

தமிழகத்தில் 1–11–2016 முதல் 2013 ஆம் ஆண்டைய தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமலபடுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட அளவின் அடிப்படையில் அரிசி வழங்கப்படுவதுடன் ஏற்கெனவே குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவை குறைக்காமலும், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணமாக ஒரு குடும்பத்தில் 3 நபர்கள் இருந்தால் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு 5 கிலோ வீதம் 15 கிலோ அரிசி வழங்கப்பட வேண்டும். ஆனால், மாநில அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் அளவான 20 கிலோ அரிசி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதுபோன்றே ஒரு



2017 ஜூலை 5] [திரு. இரா. காமராஜ்]

குடும்பத்தில் 5 நபர்கள் இருப்பின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி 25 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

மார்ச் 2017 ஆம் மாதத்தில் 3,53,600 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3,12,025 மெட்ரிக் டன் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 88 சதவிகிதமாகும். ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 3,43,313 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3,06,153 மெட்ரிக் டன் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 89 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 3,33,928 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3,08,742 மெட்ரிக் டன் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 92 சதவிகிதமாகும்.

**சர்க்கரை**

தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் மாதாந்திரத் தேவை சுமார் 35,500 மெட்ரிக் டன் ஆகும். மாநிலத்தின் பொது விநியோகத் திட்ட சர்க்கரை தேவையில் 10,835 மெட்ரிக் டன் சர்க்கரையை மத்திய அரசு லெவி ஒதுக்கீடாக செய்து வந்தது. 1–6–2013 முதல் சர்க்கரை ஆலைகளுக்கான லெவி கட்டுப்பாடுகளை மத்திய அரசு நீக்கியதன் விளைவாக, மத்திய அரசின் லெவி சர்க்கரை ஒதுக்கீடு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட சர்க்கரையினை கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 எனத் தொடர்ந்து விற்பனை செய்து வரும் மாநிலங்களுக்கு மத்திய அரசு பொது விநியோகத் திட்ட சர்க்கரை ஒதுக்கீடுகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.18.50 மானியமாக வழங்கி வருகிறது. அதன்படி, மத்திய அரசால் 10,820 மெட்ரிக் டன் சர்க்கரைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.18.50 மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரை பெற்று வரும் குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவைப்படும் சர்க்கரை முழுவதையும் வெளிச்சந்தை விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடம் கொள்முதல் செய்து வருகிறது. வெளிச்சந்தையில் கூடுதல் விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தாலும், குடும்ப அட்டைதாரர்களுக்கு சில்லறை விற்பனை விலையில் மாற்றம் ஏதும் செய்யாமல் தமிழக அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 என்ற

[திரு. இரா. காமராஜ்] [2017 ஜூலை 5

விலையிலேயே சர்க்கரையை விநியோகம் செய்து வருகிறது. இவ்வாறு சர்க்கரையை வெளிச்சந்தை விலையில் கொள்முதல் செய்து ஏற்கெனவே நடப்பில் உள்ள மானிய விலையில் விற்பனை செய்வதால் ஏற்படும் கூடுதல் வித்தியாசத் தொகையினை அரசு மானியமாக வழங்கி வருகிறது.

மார்ச் 2017 ஆம் மாதத்தில் 34,321 மெட்ரிக் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31,810 மெட்ரிக் டன் சர்க்கரை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 93 சதவிகிதமாகும். ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 33,821 மெட்ரிக் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 30,141 மெட்ரிக் டன் சர்க்கரை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 89 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 33,593 மெட்ரிக் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31,392 மெட்ரிக் டன் சர்க்கரை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 93 சதவிகிதமாகும்.

## கோதுமை

நியாய விலைக் கடைகளில் இருப்பில் உள்ள கோதுமை அளவிற்கு ஏற்றவாறு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விலையில்லா அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அரிசியின் மொத்த அளவில், தங்களின் விருப்பத்திற்கேற்றவாறு ஒரு பகுதியளவு அரிசிக்கு ஈடாக கோதுமையினை விலையில்லாமல் பெற்றுக் கொள்ள அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்கள் கோதுமையினை பெறுவதற்கான விருப்ப உச்சவரம்பு சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களை பொறுத்தவரை 10 கிலோ என்றும், இதர பகுதிகளை பொறுத்தவரை 5 கிலோ என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி (NFSA) மாதம் ஒன்றுக்கு 13,485 மெட்ரிக் டன் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது.

மார்ச் 2017 ஆம் மாதத்தில் 16,634 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 15,809 மெட்ரிக் டன் கோதுமை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 95 சதவிகிதமாகும். ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 16,428 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13,290 மெட்ரிக் டன் கோதுமை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 81 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 16,334 மெட்ரிக் டன் கோதுமை



2017 ஜூலை 5] [திரு. இரா. காமராஜ்]

ஒதுக்கீடு செய்யப்பட்டு, 14,008 மெட்ரிக் டன் கோதுமை நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 86 சதவிகிதமாகும்.

## மண்ணெண்ணெய்

மத்திய அரசின் கொள்கையின்படி, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விளக்கெரிக்கவும், சமையல் செய்வதற்கும் மட்டுமே மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 59,750 கிலோ லிட்டர் ஆகும். விடுவிக்கப்பட்டுள்ள எரிவாயு இணைப்பு எண்ணிக்கையின் அடிப்படையில், இம்மாநிலத்திற்கு மார்ச் 2010 அன்று 59,780 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மாத ஒதுக்கீடாக வழங்கி வந்த மத்திய அரசு படிப்படியாக குறைத்து, ஏப்ரல் 2017 மாதம் முதல் 17,940 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மாத ஒதுக்கீடாக வழங்கி வருகிறது. இந்த ஒதுக்கீடானது தற்போதைய வழங்கல் அளவின்படி 100 சதவிகித தேவையான 59,750 கிலோ லிட்டரில் 30 சதவிகிதமாகும். தமிழகத்திலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான அளவில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின், மண்ணெண்ணெயின் முழுத் தேவையினை ஒதுக்கீடு செய்ய மத்திய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

1–8–2011 முதல் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைகளுக்கு ஒரு லிட்டருக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரையிலான சில்லறை விற்பனை விலையில் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மார்ச் 2017 ஆம் மாதத்தில் 27,611 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 24,596 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 89 சதவிகிதமாகும். ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 20,955 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 17,940 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 86 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 19,549 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 18,351 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 94 சதவிகிதமாகும்.

**பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்**

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை மானிய விலையில் நியாய விலைக் கடைகளில் பெற விரும்பும் குடும்ப அட்டைதாரர்களுக்கு டிசம்பர் 2016 வரை விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் மார்ச் 2017 முதல் ஆகஸ்ட் 2017 வரை நீட்டிக்கப்பட்டு துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துவரம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் கிடைக்கும் வகையில் தேவையான அளவு ஒதுக்கீடு செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தங்குதடையின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 19,121 மெட்ரிக் டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 12,676 மெட்ரிக் டன் துவரம் பருப்பு நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 66 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 19,031 மெட்ரிக் டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 16,194 மெட்ரிக் டன் துவரம் பருப்பு நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 85 சதவிகிதமாகும்.

ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் 16,220 கிலோ லிட்டர் பாமாயில் எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13,597 கிலோ லிட்டர் நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 84 சதவிகிதமாகும். மே 2017 ஆம் மாதத்தில் 16,403 கிலோ லிட்டர் பாமாயில் எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 11,572 கிலோ லிட்டர் நுகர்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 71 சதவிகிதமாகும்.

மேற்கூறியவாறு மாதந்தோறும் குடும்ப அட்டைகளின் தேவைக்கேற்ப அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, உரிய நேரத்தில் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு, குடும்ப அட்டைதாரர்கள் அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் சிரமமின்றி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரங்கள் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு, தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்குதடையின்றி





வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழகத்தின் பொது விநியோகத் திட்டம் சீரான முறையில் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். அந்த அறிக்கையில் ஒன்றிரண்டு பகுதிகளைத் தவிர, மீதி பகுதிகள் எனக்கு திருப்தி அளிக்காத காரணத்தால், கீழ்க்கண்ட விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–05

பொது விநியோகத் திட்டம் என்பது தமிழகத்திலே ஏழை, அடித்தட்டு மக்கள், விளிம்பின் நிலையில் உள்ள மக்கள் ஆகியோர் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், மாதம் முழுவதும் அந்தப் பொருட்கள் அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. ஆகவே கடந்த காலத்தில் இந்த பொது விநியோகத் திட்டம் என்னுடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டது என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்களால் பாராட்டப்பட்ட சம்பவம் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, இந்த ஆட்சி அமைந்த பிறகு அதன் பிறகு இடையில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டது. இடையில் தொய்வு ஏற்பட்ட அந்த ஐந்தாறு மாதங்களுக்கு பிறகு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர், மரியாதைக்குரிய செயல் தலைவர், தளபதியார் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக அது கொஞ்சம் சரிசெய்யப்பட்டு, அந்தப் பொருட்களெல்லாம் இன்றைக்கு ஓரளவிற்கு வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், இன்றைக்கு அந்தப் பொருட்களெல்லாம் முழுமையான அளவில் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அந்தப் பொருட்கள் நியாய விலைக் கடைகளில் முழுமையான அளவில் கிடைக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தோமேயானால், அவை முழுமையாகக் கிடைக்கவில்லை.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்த அளவில் உளுத்தம் பருப்பு இன்று வரையில் அறவே கிடைக்கவில்லை. எங்களுடைய செயல் தலைவர் அவர்களின் போராட்டத்திற்கு பிறகு, துவரம் பருப்பு கடைகளுக்கு வந்தது. ஆனால், அதுவும் எந்த அளவிற்கு வருகிறது என்றால், 66 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் மட்டுமே உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசுங்கள். நீங்கள் mention செய்வதை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்த அளவில்தான் துவரம் பருப்பும் கிடைக்கிறது. நியாய விலைக் கடைகளில் பாமாயிலும் 77 சதவிகிதம் அளவில்தான் கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் உணவு அமைச்சர் அவர்களே உங்களை சுருக்கமாகச் சொல்லச் சொல்கிறார்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் 30 சதவிகிதம் அளவிற்குத்தான் கிடைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே அவருடைய விவர அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மண்ணெண்ணெய் 30 சதவிகிதம், கோதுமை 5 கிலோ வழங்கப்படுவதாகச் சொல்கிறீர்கள். ஆனால் அந்த 5 கிலோ கோதுமை முழுமையாகக் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு என்ன காரணம் என்றால், அரசு, நெல் கொள்முதல் நிலையத்திலிருந்து நெல்லை வாங்கி அதனை இரயில் மூலமாக பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கிறது. அனுப்பிவைத்த பிறகு, அரசாங்கத்திற்குச் சொந்தமான அரைவை மில்கள் மற்றும் தனியார் மில்கள் மூலமாக அரைக்கப்பட்டு, godown-ல் stock வைக்கப்பட்டு, அதிலிருந்து அந்தக் கடைகளுக்கு அனுப்பிவைக்கிறீர்கள்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இருங்கள். நீங்கள் விரிவாக மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள். உங்களுக்குப் புரியவில்லையென்று நினைக்கிறேன். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவனத்தை ஈர்த்து பேசுகிறேன். அதற்கு என்ன காரணம் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கவனத்தை இவ்வளவு எல்லாம் ஈர்க்கக் கூடாது. சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது இருக்கட்டும். நியாய விலைக் கடைகளில் VSP என்ற பெயரால், கட்டுபாடற்ற பொருட்கள் என்ற முறையில் நீங்கள் நுகர்வோரைக் கட்டாயப்படுத்தி அவர்கள் கட்டாயம் வாங்கியே தீர வேண்டும் என்று சொல்கிறீர்கள். VSP என்ற பெயரால் வாங்கப்பட்டு, நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்களின் விலைதான். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்களோ அதை மட்டும் குறிப்பிட்டு, சுருக்கமாகச் சொல்லி, கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தயவு செய்து ஐந்து நிமிடங்கள் என்னைப் பேச விடுங்களேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இன்னும் ஐந்து நிமிடங்கள் கேட்கிறீர்கள். திரு. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான அளவில் உணவுப் பொருட்கள் வழங்கப்படாதது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. செங்குட்டுவன், சுருக்கமாகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஐந்து நிமிடங்கள் எல்லாம் தர முடியாது. (குறுக்கீடுகள்) இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. செங்குட்டுவன்:** இப்படியெல்லாம் செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) எங்களை நீங்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வாறெல்லாம் பேசினீர்களானால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசுவதற்கு நான் அழைத்துவிடுவேன். 15 நிமிடங்களா பேச முடியும்? (குறுக்கீடு) நீங்கள் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு.டி.செங்குட்டுவன்:** பொருட்கள் கிடைக்கவில்லையென்பதைத் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 பக்கங்களில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதற்குமேல் நீங்கள் நேரம் எடுத்துக்கொண்டால் நான் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, இந்த வகையில், உளுத்தம் பருப்பு முழுமையாகக் கிடைக்கவில்லை. துவரம் பருப்பு 66 சதவிகிதம்தான் கிடைக்கிறது. பாமாயில் 71 சதவிகிதம்தான் கிடைக்கிறது. மண்ணெண்ணெய் 30 சதவிகிதம்தான் கிடைக்கிறது. கோதுமை 5 கிலோ என்று சொல்கிறீர்கள். அது ஒரு கிலோ, இரண்டு கிலோ அளவில்தான் கிடைக்கிறது. அது மட்டுமில்லாமல், நியாய விலைக் கடைகளில், VSP என்ற பெயரால் பொருட்களைக் கொடுக்கிறீர்கள். அவை என்னவென்று கேட்டீர்களானால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சரி, போதும் உட்காருங்கள்.



2017 ஜூலை 5]

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைதா. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், போதும் உட்காருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம். மைதா நியாய விலைக் கடைகளில் 46 ரூபாய்; வெளி மார்க்கெட்டில் 25 முதல் 34 ரூபாய். தேங்காய் எண்ணெய், கங்கா பிராண்டு, நியாய விலைக் கடைகளில் 15 ரூபாய்; வெளி மார்க்கெட்டில் 10 ரூபாய். சேமியா 100 கிராம், நியாய விலைக் கடைகளில் 15 ரூபாய்; வெளி மார்க்கெட்டில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை நீங்கள் விட்டால் பேசிக்கொண்டே இருப்பீர்கள், திரு. பிரின்ஸ் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், போதும். என்ன இது?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, பாலூர் அங்காடி ARS/A1. . .(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. செங்குட்டுவன், சரி முடியுங்கள். நீங்கள் முதலில் கோபப்படாமல் பேசிப் பழகுங்கள். அவையின் மரபுகள், வழிமுறைகளையெல்லாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எவ்வளவு நேரம் பேசலாம், என்ன பேசலாம் என்ற மரபுகளையெல்லாம் முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சுருக்கமாக உரையை முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே வெளி மார்க்கெட்டுக்கும், நியாய விலைக் கடைக்கும் ஏராளமான வித்தியாசங்கள். வெளி மார்க்கெட்டில் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றன. ஆனால், நியாய விலைக் கடைகளில் பொருட்கள் அதிக விலையில் கிடைக்கின்றன. அது மட்டும் கிடையாது. இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கிடைக்கக்கூடிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதுதான் மரபா?

**திரு. டி. செங்குட்டுவன்:** பேச விடுங்கள். என்ன தலைமுழுகிப் போச்சு, இப்பொழுது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான் மரபா?

**திரு. டி. செங்குட்டுவன்:** பேச விடுங்கள், ஏன் கட் பண்ணுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பிரின்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் கட்டுப்பாட்டில் அவர்கள் இருப்பதுபோல் தெரியவில்லை. நீங்கள் இப்படி செய்வது நன்றாக இல்லை.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? 15 நிமிடங்களாக பேசுவீர்களா? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது சுருக்கமாகக் கேள்விகளைக் கேட்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உங்களுடைய வேண்டுகோளை ஏற்காமல் தொடர்ந்து பேசி கொண்டேயிருக்கிறார். அருள்கூர்ந்து அவரை முடித்துக்கொள்ளச் சொல்ல வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எவ்வளவு நேரம் பேச வேண்டும்? நீங்கள், மரபுகளை பின்பற்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் மரபுகளை பின்பற்றி பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தியோடு சேர்த்து உங்களிடம் ஒரு வேண்டுகோள். ரேஷன் கடைகளைப் பிரிப்பது சம்பந்தமாக ஏற்கெனவே G.O. இருக்கிறது. அந்த G.O.-ன்படி, தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்க வேண்டும்; 2 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மானியத்திலே பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்துக்கு நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதி, பாலூர் கிராமத்திலுள்ள அமுதம் சிறப்பங்காடி ARS/DA 034 கடையில் ஜூன் மாதம் 150–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், எந்த உணவுப் பொருட்களும் வழங்கப்படவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. அதேபோல, செல்லங்கோணம் ARS 28 CA 005 TY கடையிலே 1,100 கார்டுகள் இருக்கின்றன. அதிலே, 850 கார்டுகளுக்கு வழங்கப்படவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம், என்னுடைய தொகுதிக்குட்பட்ட சேனம்விளை அரசு மருத்துவமனை மற்றும் கருங்கல் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய உள்நோயாளிகளுக்கு கடந்த 10 நாட்களாக மதிய உணவிற்கான அரிசி வழங்கவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. பொதுவாக, எங்களுடைய மாவட்டத்தில் உள்ள பல கடைகளிலே ரேஷன் பொருட்கள் சரியாக வழங்கப்படவில்லை; ரேஷன் கார்டுகள் வழங்கப்படவில்லை என்ற பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஓர் ஆண்டுக்கு 5,500 கோடி ரூபாயை உணவுக்கு மானியமாக வழங்கி, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பைத் தருகிற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை முதலில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்த மாநிலங்களில்கூட, 5,500 கோடி ரூபாய் ஆண்டுக்கு மானியமாக வழங்கப்படவில்லை என்பதனையும், அது தமிழகத்திலே மட்டும்தான் வழங்கப்படுகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 34,841 அங்காடிகள்மூலம் 3,13,000–லிருந்து 3,20,000 டன் வரை அரிசி ஒவ்வொரு மாதமும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. அதேபோல, துவரம் பருப்பு ஒவ்வொரு மாதமும் 19,000 மெட்ரிக் டன் வழங்கப்பட்டு வருகிறது. பாமாயிலைப் பொறுத்தவரை, ஒரு மாதத்திற்கு 1 கோடியே 50 இலட்சம், ஒரு லிட்டர் பாக்கெட்டுகள்–pouches வழங்கப்படுகின்றன. கோதுமையைப் பொறுத்தவரை, ஒரு மாதத்திற்கு 13,485 மெட்ரிக் டன் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. சர்க்கரை 35,500 மெட்ரிக் டன் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய் 17,940 கிலோ லிட்டர் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. இவையெல்லாம் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒதுக்கீடு என்பது, ஒவ்வொரு மாதமும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய ஆணையர் அவர்களால் செய்யப்படுகிறது. எதனடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று சொன்னால், முதல் மாதம் நுகர்வு–consumption, அடுத்த மாதத்தினுடைய movement அடிப்படையில் Commissioner ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு செய்கிறார். அதனை, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருடைய மேற்பார்வையில் மாவட்ட வழங்கல் அலுவலர்கள் உப ஒதுக்கீடு செய்கின்றனர். எனவே, அந்தக் கடைக்குக் குறைவாக வருகிறது; இந்தப் பொருள்



2017 ஜூலை 5] [திரு. இரா. காமராஜ்]

குறைவாக வருகிறது என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. அரிசி முழுவதும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12–15

பாமாயிலைப் பொறுத்தவரையில், ஒரு லிட்டர் ரூ.25/–க்கு வழங்கப்படுகிறது. துவரம் பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. ஒரு கார்டுக்கு ஒரு கிலோ என்ற முறையில் 30 ரூபாய் விலை கொடுத்து வாங்குகிறவர்கள் முழுமையாக வாங்கிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு கார்டுக்கு, ஒரு லிட்டர் பாமாயில் வழங்கப்பட வேண்டுமென்பதையும் உறுதி செய்து கொண்டிருக்கிறோம். எந்த இடத்திலும், எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டமும், விலையில்லாமல் அரிசி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான் என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் இந்த இரண்டு திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தையும் மற்றும் விலையில்லாமல் அரிசி வழங்கும் திட்டத்தையும் சேர்த்து செயல்படுத்துகிற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான் என்பதனை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது உணவுத் துறை கடந்த காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதிலை முதலில் கேளுங்கள். அதற்குப்பிறகு பேசுவோம்.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பேசினால் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பிடிக்காது. ஏன் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியை வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையின்கீழ் உணவுத் துறை செம்மையாகச் செயலாற்றி கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பிற்கினிய உறுப்பினர் உளுத்தம் பருப்பு கிடைக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். கடந்த காலத்தில் 13,481 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 7,000 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் வாங்கப்பட்டது. இந்த இரண்டு பொருட்களையும் 1 கோடியே 80 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ என்ற அடிப்படையில் வழங்க முடியவில்லை. அதில், பல பிரச்சினைகள் ஏற்பட்டன. சில கார்டுகளுக்கு உளுத்தம் பருப்பு மட்டும் வழங்கப்பட்டது. சில கார்டுகளுக்கு துவரம் பருப்பு மட்டும் வழங்கக்கூடிய நிலை இருந்தது. அதை மாற்றிதான் அதே அளவுக்கு ஒரு கார்டுக்கு ஒரு கிலோ என்ற அளவை உறுதி செய்கின்ற வகையில் 19,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு வாங்கப்பட்டு, கடந்த இரண்டு மாதக் காலமாக துவரம் பருப்பு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண்ணெண்ணெய் பற்றி தெரிவித்தீர்கள். 57,000 கிலோ லிட்டர் அளவுக்கு கொடுத்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் அளவை மத்திய அரசு 11 முறை படிப்படியாகக் குறைத்து இன்றைக்கு 17,940 கிலோ லிட்டர்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் குறைக்கப்பட்டது என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) நீங்கள்தான் குறைத்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) கோதுமையைப் பொறுத்தவரையில் மாதம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்டுப் பேச முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** கோதுமையைப் பொறுத்தவரையில் மாதம் 13,455 மெட்ரிக் டன் வழங்கப்பட்டு வருகிறது. நகர்ப்புறங்களில் குடும்ப அட்டைதாரர்கள் தேவை என்று கேட்டால் மட்டும்தான் 10 கிலோ கோதுமை வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் 5 கிலோ கோதுமை வழங்கப்பட்டு வருகிறது. இவையும் விலையில்லாமல்தான் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரேஷன் கடைகளில் கட்டாயப்படுத்தி சில பொருட்கள் விற்கப்படுகின்றன என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருந்தார். கட்டாயப்படுத்தி யாரிடமும் பொருட்கள் விற்கப்படுவதில்லை. விலையில் வேறுபாடு இருப்பதாகத் தெரிவித்திருந்தார். எத்தனையோ brand-கள் இருக்கின்றன. எது குறித்து தெரிவித்தார் என்பது தெரியவில்லை. எங்கேயாவது கட்டாயப்படுத்தி பொருட்கள் விற்கப்படுகின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோல எந்த இடத்திலும் நடக்கவில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கடையில் பொருட்கள் கிடைக்கவில்லை என்று கூறியிருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முடியட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச, பேச நீங்கள் குறுக்கிட முடியாது, நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முடியட்டும். அதன்பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** கிள்ளியூர் தொகுதி, பாலூர் அமுதம் நியாய விலை அங்காடியில் 924 குடும்ப அட்டைகள் உள்ளன. உறுப்பினர் குறிப்பிட்ட 180 குடும்ப அட்டைதாரர்கள் ஜூன் மாதம் 29 ஆம் தேதி வரை அங்காடிக்கு வந்து தங்களுக்குரிய பொருட்களை வாங்கவில்லை. ஜூன் 30 ஆம் தேதி வருகிறார்கள். 30 ஆம் தேதி மாதத்தின் கடைசி நாள். அன்று வேலை நாள்.

[திரு. இரா. காமராஜ்] [2017 ஜூலை 5

ஆனால் அன்றைக்கு பொருட்கள் விநியோகிக்கப்படமாட்டாது. எனவே அடுத்த நாள் அவர்களை வரச் சொல்லி 139 குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுக்குரிய பொருட்கள் ஜூலை 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் கொடுக்கப்பட்டுவிட்டன. நீங்கள் சொன்ன 180 குடும்ப அட்டைகளில் 139 குடும்ப அட்டைகளுக்குப் பொருட்கள் கொடுத்தாகிவிட்டன. மற்றவர்கள் பொருள் வாங்க வரவில்லை. இது ஜூன் மாதத்திற்குரிய பொருட்கள். உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஜூலை மாதத்திற்குரிய பொருட்களும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) என்னங்க, புதிதாக வேறு ஏதேனும் subject-க்கு போகிறீர்களா? (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் வேறு என்ன கேட்கப்போகிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*__திரு. துரைமுருகன்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தருவார்கள், கேள்வி கேட்பார்கள், அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. பல பொருட்கள் ரேஷன் கடைகளில் கிடைக்கவில்லை என்று இவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாம் கிடைக்கின்றது என்கிறார்கள். ஆகையால், உண்மை நிலை என்ன என்பதை அறிவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், எல்லா கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் சேர்ந்து, 10 கடைகளுக்குச் சென்று பார்க்கலாம். அவர் சொல்வது சரியாக இருந்தால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அவர் வரத் தயாரா? (மேசையைத் தட்டும் ஒலி) உளுத்தம் பருப்பு கிடைக்கவில்லை என்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொன்ன தகவலுக்கு நன்றி. தயவுசெய்து அமருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்) பேசுங்கள்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். அதில், தவறுகள் இருந்தால் நடவடிக்கை எடுக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தவறுகள் முழுமையாகக் களையப்பட்டிருக்கின்றன. அங்கொன்றும், இங்கொன்றும் ஏதாவது பிரச்சினை என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்கிற உத்தரவாதத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் நான் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால், தமிழக மக்களுடைய ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதனுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அன்பிற்கினிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எங்களை செம்மையாக வழி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்களுக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் ஒவ்வொரு நாளும் சரியாகச் சென்று கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள். பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 11 முதல் 15 வரையிலான 5 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

[*2017 ஜூலை 5*

## 7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் இதய தெய்வமாக வீற்றிருக்கின்ற எங்களுடைய வழித் துணை தெய்வம், காவல் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி, அவர் மலர் பாதம் தொட்டு வணங்குகிறேன். தமிழகத்தில் எல்லோருக்கும் தாயாக, வழிகாட்டும் தெய்வமாக இருந்து, கண்கண்ட தெய்வமாக விளங்கிய அம்மா அவர்களைப் பிரிந்து, இன்று தாய் இல்லாத பிள்ளைகளாக நாங்கள் தவித்துக்கொண்டிருக்கின்றோம். நாங்கள் நித்தம் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர் பாதம் தொட்டு வணங்குகிறேன். எங்களை வாழவைத்த தெய்வம், வாழவைத்துக் கொண்டிருக்கும் கண்கண்ட தெய்வம், தமிழக மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் தெய்வம், அனைத்துத் தமிழ் மக்களையும் காத்து வருகின்ற காவல் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர் பாதங்களுக்கு என் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.130,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், இருக்கையில் இல்லை.





வெட்டுத் தீர்மானம் எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 813, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2284, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2313, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3981, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4023, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4813, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5339, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5418, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5739, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5982, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6137, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6149, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6479, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6640, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6669, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1193, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1812, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4145, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

**திரு. ச. பாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ச. பாண்டி] [2017 ஜூலை 5

“வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4357, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

***திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5538, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 701, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை (Genetically Modified) தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1403, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.



2017 ஜூலை 5]

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “போளூர் தொகுதியில் காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களைப் பாதுகாக்க குளிரூட்டப்பட்ட அரசு தானியக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1431, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1587, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1855, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2041, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் நகராட்சி, வலம்புரிவிளை உரக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2140, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

**திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரினை மையமாகக் கொண்டு வேளாண் விளைபொருட்களை பாதுகாக்க குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2193, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் மாம்பழங்களை கூழாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2542, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் இயற்கை வேளாண்மைக்கு தனி பிரிவு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2621, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பயிர் பாதுகாப்புத் திட்டத் தொகையை விரைவாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2641, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளுக்கு மக்காசோள வீரிய விதையைக் குறைந்த விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2685, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி, மேல் செங்கம் மத்திய மாநில பண்ணைப் பகுதியில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் நம்மாழ்வார் இயற்கை விவசாய ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2914, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் நலன் கருதி அனைத்து ஊராட்சிகளிலும் உலர்களம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2945, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், பந்தலூரில் வேளாண் விற்பனை அங்காடி மற்றும் உழவர் சந்தையும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2962, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "குளித்தலை இனுங்கூர் விதைப் பண்ணையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2996, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் டிராக்டர் போன்ற இயந்திரங்களை 50% மானியத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3092, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை 50 சதவிகித மானியத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3173, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, வடகாடு கிராமத்தில் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3479, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பாரம்பரிய நெல் இரகங்களை வேளாண்மைத் துறை



மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3600, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3602, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3721, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதி, செஞ்சியில் தரச்சான்று பெற்ற அரசு விதைப் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3899, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோட்டூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய பகுதிகளின் உதவி வேளாண்மை அலுவலருக்கு ஈப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4041, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4634, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட மலைவாழ் மக்களின் வருவாயைப் பெருக்கும் வகையில் நறுமணம் மற்றும் மூலிகைப் பயிர்களைப் பயிரிட சிறப்புத் திட்டங்கள் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4719, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.



**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் காய்கறி குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4758, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு மானிய விலையில் உழவு இயந்திரங்கள் (டிராக்டர்) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4850, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சொட்டு நீர்ப் பாசனத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4907, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4952, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5009, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளுக்குத் தரமான நெல் விதைகள் வழங்க அரசு விதைப் பண்ணைகளை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5134, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தொகுதி, கோவிலூரில் உள்ள விதைப் பண்ணையை தரம்





உயர்த்தி உயர் ரக விதை உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5183, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தென்னை விவசாயிகளுக்கு தென்னை நல வாரியம் மற்றும் மத்திய அரசிடமிருந்து உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5330, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு உழவர் அட்டை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5485, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் பயிரிடப்படும் கன்வல்லி கிழங்கு விதைகளை அரசே கொள்முதல் செய்யும் வகையில் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5783, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியில் வேளாண்மைக் கிடங்குகள் மற்றும் வேளாண்மை விற்பனை நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5807, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறை சார்பாக நீர்ப் பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5836, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு பவர் டில்லர், சொட்டு நீர்ப் பாசன உபகரணங்கள் ஆகியவற்றை சீனியாரிட்டி அடிப்படையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5890, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய காப்பீட்டுத் தொகையை விரைவாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5902, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகை செலுத்திய விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6020, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விவசாயத் தொழிலை மேம்படுத்தும் வகையில் கதிர் அறுக்கும் இயந்திரத்தை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு அரசு தொழிற்பயிற்சிப் பள்ளிமூலம் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.130,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுத்திருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பினை@

@ 831 முதல் 1039 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



இந்த மாமன்றத்தில் நான் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம், அதனால்
உழந்தும் உழவே தலை"

என்பது வள்ளுவரின் வாக்கு. அதாவது மக்கள் எத்தனை தொழில் செய்தாலும், அவையெல்லாம் உழவுத் தொழிலுக்கு பிற்பட்டதேயாகும். ஆகவே, உழவுத் தொழிலே எல்லாத் தொழில்களிலும் தலைச்சிறந்த தொழிலாகும்.

பிற்பகல் 12–30

இந்த மாமன்றத்தில் 234 உறுப்பினர்கள் இருக்கிறோம். அநேகமாக 200 உறுப்பினர்கள் விவசாயத்தைச் சார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். உங்களுக்கும் சேர்த்துதான் நான் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச இருக்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரியார், அண்ணா, கலைஞர், தளபதி ஆகியோருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். "மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு". தொண்டு செய்து பழுத்த பழம், தூய தாடி மார்பில் விழும், மண்டைச் சுரப்பை உலகம் தொழும், அவர் மனக் குகையில் சிறுத்தை எழும், அவர்தான் பெரியார். அந்தப் பகுத்தறிவுப் பகலவனையும் வணங்குகிறேன்.

இந்த மாமன்றத்தில், சென்னை மாகாணம் என்பதை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்து, சுய மரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து,

முப்பத்தி முக்கோடி தேவர்களும், 44 ரிஷிமார்கள், சிம்பர், சிறுடர், வித்தகர், அஷ்டதிக்கு பாலகர், அய்யர் அழைக்காமல், அரசாணி கட்டாமல், அப்படிப்பட்ட மணவிழாவைச் சட்டம் செல்லாது என்றிருந்த நிலையை பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமாக்கிய இந்த மாமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ், ஆங்கில மொழிகளை ஆட்சி மொழியாக்கிய; ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு; எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என அறிவுறுத்தி, நம் அனைவரின் நெஞ்சிலும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாமன்றத்தில் 1957–ல் கால் பதித்து, குளித்தலை முதல் 2016 திருவாரூர் வரை போட்டியிட்ட அத்தனைத் தேர்தல்களிலும் வெற்றி! வெற்றி! வெற்றியை மட்டுமே பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) குளித்தலையில் வென்று இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று ஆற்றிய முதல் கன்னிப் பேச்சு நங்கவரம் விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிதான். “கையேர் வாரம், மாட்டேர் வாரம்” போராட்டக் களத்தின் கொடுமையினை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்து, அன்றைய பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. கிருஷ்ண ராவ் அவர்கள், “Dear Mr. Karunanidhi, today your speech is excellent” என ஆங்கிலத்தில் சீட்டெழுதித் தந்து, பாராட்டிய அந்த உரை இந்த மாமன்றத்தில் வரலாற்றின் பதிவுரை, உலகில் வாழும் (மேசையைத் தட்டும் ஒலி) பத்து கோடி தமிழர்களின் இதயங்களில் வீற்றிருக்கும், ஐந்து முறை முதல்வராக இருந்து பல்வேறு திட்டங்கள், குறிப்பாக, கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம்; கண்ணொளி வழங்கும் திட்டம்; கைம்பெண் மறுமணம் திட்டம்; மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்வுத் திட்டம் போன்ற திட்டங்கள், பல்வேறு சமூக நலத் தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கு சட்ட வடிவம் கொடுத்தவர். “எனது உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புக்களே” என்ற அந்த மந்திரச் சொல், (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான இதயங்களை ஈர்த்து, சமுதாய, சமூக நீதிக் காத்த எங்கள் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்ற பழமொழிக்கேற்ப, தலைவர் கலைஞர் அவர்களிடம் பத்திரிகையாளர் ஒருவர், ‘தாங்கள் இதுவரை சேர்த்து



வைத்திருக்கிற அரிய பொக்கிஷங்களில் எந்த ஒன்றை, உங்கள் மகன் தளபதி அவர்களுக்குத் தருவீர்கள்’ என்று கேட்டபொழுது, அதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள், ‘நான் எனது அரிய பொக்கிஷமாகக் கருதும் பொருள்களில் ஒன்றான “உழைப்பை” அவருக்குத் தருவேன்’ என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களின்மூலம் பெற்ற அந்த உழைப்பை, தோளிலே சுமந்து, இளமைக் காலம் தொட்டு, ஏன் இன்று வரை, இந்த நிமிடம் வரையில், 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் சுமார் 11,000 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் சுற்றுப் பயணம் செய்து, “நமக்கு நாமே திட்டம்”மூலம் தமது கருத்துகளை மக்களிடம் எடுத்து வைத்து, 23 உறுப்பினர்களாக இருந்த இந்த மாமன்றத்தில் 89 உறுப்பினர்களாக, ஏன் தோழமைக் கட்சி உறுப்பினர்களையும் சேர்த்து 98 உறுப்பினர்களாக உயர்த்திய, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சதவிகிதம் வாக்கு வித்தியாசத்தில், ஆட்சிக் கட்டிலில் அமரும் வாய்ப்பை இழந்த போதிலும், விடா முயற்சியுடன் பலம் வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்து, நாங்கள் எல்லோரும் உங்கள் தலைமையில் தொண்டாற்றி வருவது அந்தத் தொடர் உழைப்பினால் மட்டும்தானே! எங்கள் தங்கத் தலைவரே! சிங்கத் தமிழரே! எங்கள் தளபதியே! உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தப் பேரவையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். வருங்காலத்தில் தலைவராகுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஆசையே இல்லை.

**திரு. க. அன்பழகன்:** 1940 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். நான் பிறந்த சாக்கோட்டையில், தந்தை பெரியார் தலைமையில் திராவிடக் கழக மாநாடு நடத்திய என்னுடைய பெற்றோர்கள் எங்கள் அய்யா கணபதி, அம்மா ஏகாம்பாளின் சுய மரியாதைக் குடும்பத்தில் பிறந்த என்னை, இரண்டாவது முறையாகக் கும்பகோணம் தொகுதி வேட்பாளராக நிறுத்தி, எனக்கு வெற்றி வாய்ப்பைத் தந்த எங்கள் தளபதியையும், என்னை வழி நடத்திச் சென்ற மாண்பிற்கினிய அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்களையும் வணங்கி, மகிழ்கிறேன். என் வெற்றிக்காக உழைத்த

மாவட்டச் செயலாளர் அண்ணன் கல்யாணசுந்தரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சே. ராமலிங்கம், திரு. சு.ப. தமிழழகன், திரு. டி. கணேசன், திரு. இரா. அசோக்குமார் மற்றும் கழகத் தோழர்கள், தோழமைக் கட்சி நண்பர்கள் அனைவருக்கும், கும்பகோணம் தொகுதியில் இரண்டாவது முறையாக வாக்களித்த நல் உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தொகுதியினுடைய பிரச்சினை அதிகமாக இருந்தாலும் ஒரு செய்தியை மட்டும் சொல்லி, மற்றதை உங்களிடம் தருகிறேன். நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக் கொண்டிருக்கிறார். நீங்களே கேட்க மாட்டேன் என்று சொன்னால் எப்படி? (குறுக்கீடு) கவனம் செலுத்துங்கள்.

**திரு. க. அன்பழகன்:** ஏன் உலகின் பல பகுதிகளிலிருந்தும், தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அங்கு பின்னால் ஒரு மாநாடே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். கவனம் செலுத்துங்கள்.

**திரு. க. அன்பழகன்:** சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும், ஒவ்வொரு நாளும் கும்பகோணம் நகரத்திற்கு ஏறத்தாழ 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். கும்பகோணம் நகரம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமகம் திருவிழா கொண்டாடப்படும் உலகப்புகழ் வாய்ந்த ஒரு ஆன்மிக நகரமாகும். அண்மையில் மத்திய அரசு 'AMRUT' என்ற திட்டத்தின்கீழ் அகில இந்திய அளவில் கோயில் நகரமாக கும்பகோணம் நகரைத் தேர்ந்தெடுத்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் கூடும், வர்த்தகப் பணிகள் பல நிகழும் எங்கள் கும்பகோணம் திருநகரை மாநகராட்சியாக உயர்த்திட வேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மானியக் கோரிக்கைக்குச் செல்வதற்கு முன்னால், மாண்பிற்கினிய வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்பிற்கினிய உணவுத் துறை அமைச்சர், மாண்பிற்கினிய கைத்தறித் துறை அமைச்சர் ஆகியோர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மேலும், நம்முடைய மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்று சொல்லியிருக்கிறார். அவருக்கும் சேர்த்து நான் இங்கே பேசவிருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மிகவும் நல்லவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஏனென்று கேட்டீர்களென்றால், கடந்த ஆட்சியில் ஊரில் உள்ள காய்கறிகளை எல்லாம் மாலையாக உடம்பில் போட்டுக் கொண்டு எங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை, நான் தொலைக்காட்சியில் பார்த்தேன். அப்படிப்பட்ட ஆவேசம் உள்ளவர்கள் இன்றைக்குக் காலையிலிருந்து பார்க்கிறேன், துணைக் கேள்விகளை அள்ளி அள்ளி விடுகிறீர்கள். ஆனால், நான் நேற்று கேட்டேன், எனக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டீர்கள். இருந்தாலும் நாளைக்கு நான் கேட்டால் கொடுங்கள். உங்களை வணங்குகிறேன். கூடுமானவரையில் பேசுவதற்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் வழங்க வேண்டும். இவர்கள் யாரும் குறுக்கிடாமல் இருக்க வேண்டும். குறிப்பாக, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடிய எங்கள் தஞ்சை மாவட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்களும் குறுக்கீடு இல்லாத வகையிலே பேசுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** முடிந்த வரையில் பார்க்கிறேன். காவேரி நீர் கிடைக்காததால் நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சாது மட்டுமல்ல, இந்த அரசிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினராகிய நான் எனது கருத்துகளை வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில் ஏற்பட்ட புரட்சிகரமான வேளாண்மைத் துறை முன்னேற்றத்தை சுருக்கமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். 1967–க்கு முன்பு தமிழகத்தில் உணவுக்கே பஞ்சம். அரிசிக்கு ரேஷன். 8 அவுன்ஸ் 7 அவுன்ஸ் ஆகி, அதுவும் 6 அவுன்ஸ் ஆன பிறகு, 'திங்கள் இரவு சாப்பிடாதீர்,

வியாழன் இரவு விரதமிருப்பீர்', திருமணம் உள்ளிட்ட குடும்ப நிகழ்ச்சிகளில் 50 பேருக்கு மேல் உணவு பறிமாறக் கூடாது என்பனவாக இருந்த பல்வேறு கட்டுப்பாடுகளினால் தமிழக மக்கள் அல்லல்பட்டு வந்தனர். 1967–ல் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே தி.மு.க. ஆட்சி மலர்ந்த பிறகு, கள்ளக் கடத்தலைத் தடுத்து, பணக்காரர்கள் பதுக்கி வைத்திருந்த அரிசி மூட்டைகளைக் கைப்பற்றி, விவசாயிகளுக்குச் சலுகைத் தந்து, நெல் உற்பத்தியையும், நெல் கொள்முதலையும் அதிகரித்து, அரிசி தாராளமாகக் கிடைக்கச் செய்தது நம் அண்ணாவின் ஆட்சி. அப்போது நடைமுறையில் இருந்த கட்டுப்பாடுகளை எல்லாம் அடியோடு நீக்கியது. அரிசி தாராளமாகக் கிடைத்தது. அரிசிப் பஞ்சம் காணாமல் போனது. அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கடுமையான வறட்சி நிலவியது. வறட்சியைப் போக்குவதற்கு உடனடியாக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு 12,124 ஆயில் என்ஜின்கள் பொருத்தப்பட்டன. 1966–ல் சாகுபடியிலிருந்த விளை நிலங்கள் 152 இலட்சம் ஏக்கர் மட்டும்தான். ஆனால், கலைஞர் ஆட்சியில் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளால், 1974–ல் சாகுபடியான விளை நிலங்கள் 191 இலட்சம் ஏக்கர் என அதிகரித்தது. வறட்சி மிகுந்த பகுதியான புதுக்கோட்டையில் அண்ணா விவசாயப் பண்ணை அமைக்கப்பட்டது. விவசாய உற்பத்திக்கு வழிகாட்டிய கோவையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் கலைஞர் அரசினால் தொடங்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கி பட்டா வழங்கியது கலைஞர் ஆட்சி.

இந்தியாவிலேயே முதல் முறையாக நெல்லுக்கும், கரும்புக்கும் ஊக்கம் தரும் திட்டத்தைக் கொண்டு வந்தது கலைஞர் ஆட்சி. நாட்டிலேயே முதல் முறையாக விவசாயப் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, 20 இலட்சத்து 441 பம்புசெட்டுகள் பயனடைந்து தமிழக விவசாயத்தைத் தாங்கிப் பிடித்து காப்பாற்றி வருகிறது. அரிசி உற்பத்தியில் ஒரு ஹெக்டருக்கு 3,579 கிலோ என சாதனைப் புரிந்து இந்திய மாநிலங்களில் தமிழகம் முதலிடம் பெற்றதும் கலைஞர் ஆட்சியில்தான். எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திறன் ஒரு ஹெக்டருக்கு 1,650 கிலோ என சாதனைப் புரிந்து தமிழகம் இந்தியாவிலே முதலிடம் வகித்ததும் கலைஞர் ஆட்சியில்தான்.





பிற்பகல் 12–40

கரும்பு உற்பத்தியில் உற்பத்தித் திறன் ஹெக்டேர் ஒன்றுக்கு 134.16 மெட்ரிக் டன் என சாதனைப் புரிந்து தமிழகம் இந்தியாவில் முதலிடம் பெற்றதும் கலைஞர் ஆட்சியில்தான். அதேபோல, மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் தமிழகம் உலகிலேயே முதலிடம் என பெருமைபெற்று சாதனைப் படைத்ததும் கலைஞர் ஆட்சியில்தான். தமிழ்நாட்டினுடைய இந்தச் சாதனைகளையெல்லாம் 15–2–2000 தேதியிட்ட 'Business Line' என்ற ஆங்கிலப் பத்திரிகையும், பிற பத்திரிகைகளும் வெளியிட்டு அன்றைய கலைஞர் ஆட்சியை பாராட்டிப் போற்றின.

உழவர் சந்தைத் திட்டம் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டு விவசாயிகளும், பொதுமக்களும் பயனடைந்த உன்னதமான திட்டமாகும். இன்று அதன் நிலை என்ன என்பதை இந்த அரசின் கவனத்திற்கே நான் விட்டுவிடுகிறேன். 2006–ல் ஐந்தாவது முறையாக கலைஞர் முதல்வராகப் பதவியேற்று, மேடையிலேயே 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு 22,40,739 விவசாயிகள் பயனடைந்தனர். (குறுக்கீடு) கடன் தள்ளுபடி செய்யப்பட்டு கடனாளிகள் ஒருவர்கூட இல்லை என்பது மகத்தான சாதனையல்லவா? விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் பயிர்க் கடன் வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டதும் கலைஞர் ஆட்சியில்தான். தலைவர் கலைஞர் ஆட்சியில் விவசாயிகளுக்கு தள வரி, தளமேல் வரி, தண்ணீர் தீர்வை ஆகியவை இரத்து செய்யப்பட்டன. நில வரி என்பது விவசாயிகளுக்கு நில உடைமைச்சான்றாக பயன்படும் வகையில், புஞ்சை நிலங்களுக்கு ஏக்கருக்கு 2 ரூபாய் என்றும், நஞ்சை நிலங்களுக்கு 5 ரூபாய் என்றும் வெகுவாகக் குறைக்கப்பட்டது.

வெள்ளக் காலங்களில் கிடைக்கும் கூடுதல் நீரை வறட்சிப் பகுதிகளுக்குத் திருப்பிவிடுவதற்காக இந்தியாவில் முன்னோடித் திட்டங்களான, மாநிலத்தில் பாயும் ஆறுகளை இணைக்கும் புரட்சிகரமான காவேரி, குண்டாறு இணைப்புத் திட்டம் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; தாமிரபரணி ஆறு, கருமேனியாறு, நம்பியாறு இணைப்புத் திட்டம் 369 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டன. இன்றைக்கு அந்தத் திட்டங்கள் கவனிப்பாரற்று இருப்பதால் மழை, வெள்ளக் காலங்களில் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. அதனால்தான்

எங்கள் தளபதி அவர்கள் நதிகளை இணைக்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

இத்தகைய பல்வேறு புரட்சிகரமான திட்டங்களால் கழக ஆட்சிக் காலங்களில் வேளாண்மை செழித்து, உணவு உற்பத்தி பெருகி, மக்கள் பயன்பெற்றனர் என்பதை கடந்த கால வரலாறு அறிவித்துக் கொண்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களிலெல்லாம் அண்டை மாநிலங்களோடு நல்லுறவு பேணி, காவேரி ஆற்றிலும், பெரியாறு, பாலாறு முதலிய ஆறுகளிலும் உரிய காலங்களில் தண்ணீரைப் பெற்று, விவசாயப் பணிகள் தடையின்றி நடைபெற்று, விவசாய உற்பத்தி அதிகரித்து தமிழக விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தந்தது கலைஞர் ஆட்சி. ஆனால், இன்றைய நிலை, தமிழக விவசாயிகள் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு அல்லல்படுகின்றனர் என்பதை விவசாயப் பகுதியான டெல்டா மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய கலைஞர் ஆட்சியில் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டது. அந்த நல வாரியத்தின்மூலம் ஒரு கோடியே 70 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. கடந்த 6 ஆண்டுக்கால ஆட்சியில் இதுபோன்று பயனடைந்த தொழிலாளர்கள் உள்ளனரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்தியாவில் ஏறத்தாழ 120 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் 70 சதவிகிதம் மக்கள் விவசாயிகள். இவர்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் அல்ல. விவசாயத்தையே தங்கள் உயிராகவே மதிப்பவர்கள். வாழ்வோ, தாழ்வோ எந்த நிலையிலும் விவசாயத்தைக் கைவிடாதவர்கள் 'Indian agriculturists are born in debt, live in debt, die in debt' என்பார்கள். அதாவது இந்திய விவசாயி கடனாளியாகவே பிறக்கிறான், கடனாளியாகவே வாழ்கிறான், கடனாளியாகவே சாகிறான் என்று. அந்த அளவிற்கு விவசாயிகள் கடன்களோடு தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று இந்தியப் பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட கல்லைப் போல, கடன்கள் விவசாயிகளைக் கீழ்நோக்கியே இழுத்துக்கொண்டிருக்கின்றன.



பட்டுத் துணியில் நெருப்பைக் கட்டி வைத்தால், நெருப்பு பட்டுத் துணியை சாம்பல் ஆக்கிவிடும். அந்த நிலையில்தான் இன்று நம்முடைய விவசாயிகளுடைய பரிதாப நிலை அமைந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெளிநாடுகளில் விவசாயிகளுடைய நிலை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் பேசுகின்றபோது தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு இணைப்பு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். தண்ணீரெல்லாம் வீணாகப் போவதாகச் சொன்னார்கள். உங்களுடைய ஆட்சியில்தான் துவங்கப்பட்டது. இல்லையென்று மறுக்கவில்லை. நில எடுப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நில எடுப்புப் பணி முடிந்தால்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அந்தத் திட்டத்திற்கு உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது மறு மதிப்பீடு செய்த காரணத்தினாலே மீண்டும் மத்திய அரசு அனுமதி பெற்று, மறு மதிப்பீடு பெற்று பணி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–45

அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு பகுதிகளில் 90 சதவிகித நில எடுப்புப் பணிகள் முடிந்துவிட்டன. முதலாவது பகுதி, இரண்டாவது பகுதியில் 90 சதவிகிதம் நிலம் எடுக்கும் பணிகள் முடிந்துவிட்டன. எஞ்சிய 10 சதவிகித நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கென்று தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவது மற்றும் நான்காவது பகுதிகளில் நிலம் எடுக்க வேண்டிய இடங்களில் தற்போது survey செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. நில எடுப்புப் பணிகள் முடிந்தால்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஒரு திட்டத்தை அறிவித்தவுடனே நிறைவேற்ற முடியாது. நில உரிமையாளர்களைச் சமாதானப்படுத்தி, அந்த நிலங்களை மீட்டுத்தான் அந்தப் பணியை செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதால்தான் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதைத்

தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலாறு பற்றிச் சொன்னார்கள். பாலாற்றைப் பொறுத்தவரையில் உங்களுடைய ஆட்சியிலும் தடுப்பணைக் கட்டப்பட்டது. நீங்களும் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்தீர்கள். ஆகவே, பாலாற்றைப் பொறுத்தவரையில் ஆந்திர அரசு தொடர்ந்து தடுப்பணைக் கட்டிக்கொண்டே வருகிறது. இருந்தாலும், நாம் வழக்கு தொடர்ந்துள்ளோம், அவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. ஆகவே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் பாலாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டப்பட்டது. எங்களுடைய ஆட்சியிலும் தடுப்பணைக் கட்டப்பட்டிருக்கிறது. அது அண்டை மாநிலம். அவர்களுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற காரணத்தினாலே தடுப்பணைக் கட்டுகிறார்கள். இருந்தாலும் நாம் வழக்கு தொடர்ந்துள்ளோம். அந்த வழக்கு நிலுவையிலுள்ளது. உச்ச நீதிமன்ற வழக்கு விரைவிலே வர இருக்கின்றது. அப்போது வாதாடி, நமது விவசாயிகளுக்குத் தேவையான நீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** ஒரே ஒரு வார்த்தைதான். நான் அதிகம் குறுக்கிடவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய எங்களது கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உணவு உற்பத்தியில் அதிகம் உயர்ந்து இருந்ததற்காக பல விருதுகளையும், பாராட்டுதல்களையும் தமிழகம் பெற்றதாகச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து 4 ஆண்டுகளாக உணவு உற்பத்திக்கான Krishi Karman விருதைப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஒவ்வோராண்டும் 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேலே உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலம் தமிழகம் என்ற பெருமையைப் பெற்றது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன். விவசாயிகளுக்காகக் கவலைப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். கவலைப்படுகின்ற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. விவசாயிகளைத் தங்கள் குடும்ப நண்பர்களாக, தங்கள் குடும்பத்தில் ஒருவராகக் கருதியதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், டெல்டா விவசாயிகளை மட்டுமல்லாமல், மானாவாரி பகுதிகளிலுள்ள விவசாயிகளையும் காத்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வழியில் வந்த எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவர் ஆட்சிபுரிந்த சுமார் 120 நாட்களில் விவசாயிகளுக்காக அவர் வழங்கிய தொகை அளவிட முடியாதது. மானாவாரி தொகுப்புத் திட்டத்திற்கு 803 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 802 கோடி ரூபாயை நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். 300 கோடி ரூபாய்க்கு குடிமராமத்துப் பணிகளை விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். 100 கோடி ரூபாய்க்கு கூட்டுப் பண்ணையம் என்ற விவசாயக் குழுக்களை அமைக்க நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி எந்தவிதத்தில் பார்த்தாலும், தமிழக அரசு விவசாயிகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இறுதியாக மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வறட்சியிலும் வளர்ச்சி காண்கின்ற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தானே பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிக்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் பக்கத்து ஊர்க்காரர் என்பதால், பதில் வேகமாகச் சொன்னார். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. இந்த அரசுதான் விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படுகிற அரசு, நடவடிக்கை எடுக்கிற அரசு என்று சொன்னார்.

Right, நான் ஒன்றும் இல்லையென்று சொல்லவில்லை. அவ்வளவு கவலைப்படுகிற அரசு, அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று *(மேசையைத் தட்டும் ஒலி)* High Court–ல் order கொடுத்தால், தள்ளுபடி செய்திருக்க வேண்டுமே தவிர, அதற்குமேல், appeal செய்து, அதற்கு ஒரு stay வாங்கிக்கொண்டு வருகிறீர்களே, இதுதானா இந்த அரசு விவசாயிகளுக்காகக் கவலைப்படுகிற அரசு? *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னவாறு, வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். எதற்காக நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றோமென்றால், உங்கள் எல்லோருக்காகவும் சேர்த்துதான். *(குறுக்கீடுகள்)* நிதி மேலாண்மையைப் பற்றி விவாதிப்பதற்கு, அதை உருவாக்கிக் கொடுத்த இந்த சட்டமன்றத்திற்குத்தான் அந்த மரியாதையும் மதிப்பும் இருக்கிறதா அல்லது நீதிமன்றங்கள் அதுகுறித்து முடிவெடுக்கலாமா என்பதை அறிந்துகொள்வதற்காக நீதிமன்றத்திற்குச் சென்றோம்.

*பிற்பகல் 12–50*

மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகளோ, மற்ற நீதிபதிகளோ, யாராக இருந்தாலும் ஓர் அரசு தவறு இழைக்கும்பட்சத்திலோ, விதிகளை மீறி செயல்பட்டாலோ அதன்மீது வேண்டுமென்றால் தீர்ப்பு சொல்லலாமேயொழிய, அதைவிட்டு இந்தமாதிரி கருத்துகள் பதிவு செய்வது தவறு என்று ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் பலமுறை சொல்லியிருக்கிறது. எனவே, எது சரி என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் போயிருக்கிறோம். எனவே, இப்போது இடைக்காலத் தடை உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அது முடிந்த பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். நிச்சயமாக நல்ல தீர்ப்புக் கிடைக்க வேண்டும். ஆனால், ஒன்றுமட்டும் நான் சொல்கிறேன், நீங்கள் விவசாயிகளுக்கு நண்பன் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்; நீங்களாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், விவசாயிகள்மீது கரிசனமும், அன்பும், பாசமும் வைத்த ஒரே



தலைவர் இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை, *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்களும் இல்லை.

உண்மையிலேயே விவசாயிகள்மீது கருணையுடையவர்களாக இருந்தீர்கள் என்றால், அன்றைக்கு ஏன் கையெழுத்து போட்டீர்கள்? மாண்புமிகு இரசாயனத் துறை அமைச்சர்தானே கையெழுத்துப் போட்டார். இந்த உர மானியத்தை இரத்து செய்ய வேண்டுமென்று நீங்கள் கையெழுத்துப் போட்டிருக்கலாமா? நீங்கள் அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்தீர்கள். உங்களுடைய வாய்ப்புகளை வைத்துத்தான் மத்தியிலே அமைச்சராக இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. அப்படிப்பட்ட அரசை நீங்கள் வலியுறுத்தினீர்களா, வலியுறுத்தவில்லை. ஆனால், இன்றைக்கு இந்தியா முழுவதும் விவசாயிகளுக்கு வட்டி மானியம் கிடைக்கிறது என்றால், அதற்கு எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் காரணம். ஏனென்றால், இந்த வட்டி மானியத்தை திரு. அருண்ஜேட்லி அவர்கள் நிறுத்த வேண்டுமென்று கூறினார். 2015 ஆம் ஆண்டில் நிறுத்தப் போனார். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இது தெரிந்ததும் உடனே கடிதம் எழுதினார்கள். எந்த முதலமைச்சரும் இந்தியாவில் நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் உடனே கடிதம் எழுதி இந்த மானியம் என்பது விவசாயிகளுக்குக் கிடைத்தாக வேண்டும். இந்த மானியத்தை நீங்கள் இரத்து செய்வது தவறு, இது தொடர வேண்டுமென்று சொன்னார்கள். அந்தமாதிரி நீங்கள் இருக்கும்போது நடவடிக்கை எடுத்தீர்களா? ஒன்றுமே செய்யாமல், நாங்கள் விவசாயிகளின் நண்பன், நண்பன் என்று நீங்கள் சொல்லிக்கொள்ளலாம், யார் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் போதும், இந்த விவாதம் வேறு விதத்தில் போய்விட்டது. *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் பேசட்டும். *(குறுக்கீடு)* உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். *(குறுக்கீடு)* உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)* அவர் பேசுவார் அல்லவா? *(குறுக்கீடு)* சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர்

திரு. க. அன்பழகன் அவரே கேட்பார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் ஏன் நின்றுகொண்டிருக்கிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியைக் கிளப்பியிருக்கிறார். அதாவது, Financial Management–ல் who is superior-Assembly or Court? யாருக்கு power உண்டு என்று கேட்டார். ஒரு நல்ல கேள்விதான். அதிலே மாறுபட்டக் கருத்து அல்ல. ஆனால், உண்மையான அரசாக இருந்தால், யார் supreme என்பது வாதாடக்கூடியது. அதற்கு முன்னால் suffer ஆகிற விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகுகூட இந்தக் கேள்வியைக் கேட்கலாம். ஏனென்றால், ஜனாதிபதி அவர்கள் மூலமாகக்கூட பல கேள்விகள் கேட்டிருக்கலாம். எனவே, அக்கறையுள்ள அரசாக இருந்தால் அதைக் கொடுத்துவிட்டுப் போய்விடலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார், எங்களுக்கெல்லாம் அக்கறையே இல்லை என்று. ** (குறுக்கீடுகள்) இல்லை, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** ஏன் அதை எடுக்கிறீர்கள்? எடுக்க முடியாது சார். (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்) அப்போது இருக்கட்டும். ஏன் எடுக்கிறீர்கள் அதை? ** (குறுக்கீடுகள்) ஏன் அதை எடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இதுதான் நான் வேண்டாம் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இது உண்மையான அரசாக இருந்தால் இதைச் செய்திருக்கலாம் என்று சொன்னார். 122 பேர்களோடு மெஜாரிட்டியோடு இருக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப்போல 98 பேர்களை வைத்து மைனாரிட்டி அரசாக இருந்த அரசு இந்த அரசு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) இதுதான் நான் வேண்டாம் என்று சொன்னேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12–55

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உங்கள் நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் கட்சி உறுப்பினர் பேசக்கூடிய நேரத்தை நீங்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேசக்கூடிய நேரத்தை நீங்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினருடைய நேரம்தான் வீணாகிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கின்ற சாதனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதைப் பொறுக்க முடியாமல், இந்த மானியக் கோரிக்கையை எப்படியாவது திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த அவையின் திசையை மாற்றியிருக்கின்றார்கள். நீங்கள் என்னதான் திசை திருப்பினாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுக்குச் செய்துள்ளதை எந்தக் காலத்திலும் விவசாயிகள் மறக்க மாட்டார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேச வேண்டிய நேரத்தை, 15 நிமிடங்களுக்கு மேலாக நீங்கள்தான் வீணடித்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சித் தலைவர், திரு. கரி. இராமசாமி, என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர்களுக்குள் இங்கே ஒரு பிரச்சினை ஏற்பட்டு, விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று காங்கிரஸ் ஆட்சியின்மீது அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். (குறுக்கீடு) இப்பொழுது நீங்கள் விவசாயிகளுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால், 10 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்ததை ஏன் உதாரணமாகக் காட்ட வேண்டும்? (குறுக்கீடு) இப்பொழுது என்ன நடக்கிறது என்று அவர்கள் சொல்ல. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. கரி. இராமசாமி:** முடித்துவிடுகிறேன். இப்பொழுது வரை விவசாயிகளுக்கு அவர்களது இன்சூரன்ஸ் பணம் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கிடைக்காத நிலையை வைத்துக்கொண்டு, நீங்கள் விவசாயிகளுக்கு உதவியாக இருப்பதாகச் சொல்வது எந்த வகையில் நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. ரூ.1,228 கோடியை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்காக வழங்கியிருக்கின்ற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அதிகமாகப் பெற வேண்டி, கூடுதலாக, ரூ.22 கோடியைச் சேர்த்து, ரூ.450 கோடியை தமிழக அரசின் பங்காக காப்பீட்டுத் திட்டத்திற்கு வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கோபித்துக்கொள்ள வேண்டாம். விவசாயிகளுக்கு இந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமென்றால் எனக்கு நேரமே போதாது. ஏனென்றால், நேற்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு எப்படி நேரம் போதவில்லையோ, அதேபோல எனக்கும் நேரம் போதாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய கும்பகோணம் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதால், அவருக்குப் பேச வழி விட வேண்டும் என்பதற்காக சுருக்கமாகச் சொல்கிறேன். இன்னும் சொல்லவேண்டுமென்றால் எவ்வளவோ திட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, வறட்சி நிலைமையைக் கருதிதான், குறுவை தொகுப்புத் திட்டத்தையும், சம்பா தொகுப்புத் திட்டத்தையும் தொடங்கி விவசாயிகளைக் காப்பாற்றினார்கள். அவர்கள் வழியில் நடக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜூலை 5

அவர்களும் 56 கோடியே 92 இலட்சம் ரூபாயை டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கி, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு) இன்சூரன்ஸ் தொகையெல்லாம் வழங்கியாகிவிட்டது. நீங்கள் பத்திரிகைச் செய்தியைப் பார்க்கவில்லை. (குறுக்கீடு) ரூ.1,200 கோடி வழங்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, நீங்கள் இன்சூரன்ஸ் தொகை வழங்கப்படவில்லை என்று சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகை வழங்கியாகிவிட்டது என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர், நீங்கள் இன்சூரன்ஸ் தொகை வழங்கப்படவில்லை என்று சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகை வழங்கியாகிவிட்டது என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர், (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் என்னுடைய கருத்தைக் கேட்டுவிட்டு பிறகு பேசுங்கள். ரூ.1,200/– கோடிக்கு மேற்பட்ட தொகை வழங்கப்பட்டுவிட்டதாக (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லக்கூடிய வார்த்தைக்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் தொகை வழங்கப்பட்டுவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாகச் சொல்கிறார். நேற்று பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள். சரி, சொல்லுங்கள்.

பிற்பகல் 1–00

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இதுவரையிலும் ஒரு நபருக்குக்கூட insurance பணம் வழங்கப்படவில்லை. இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் கொடுத்தோம் என்று சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்களா?



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் insurance தொகை இன்னும் விவசாயிகளுக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் படிப்படியாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இன்றைக்கு அந்த Insurance Company–களிடம் இந்தத் துறையின் செயலாளர்கள் நேரடியாகச் சென்று எந்தெந்த விவசாயிகளுக்கு எவ்வளவு insurance தொகை கொடுக்க வேண்டும் என்று கணக்கிட்டு இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உங்களிடத்திலே தெரிவித்தார். இன்னும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நிச்சயமாக அரசு உரிய வழிகளைப் பின்பற்றி அந்த Insurance Company-யிலிருந்து பணம் பெற்றுத் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், எல்லாம் உங்கள் நேரம்தான். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கான தொகையை நாங்கள் படிப்படியாக வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற 3 Insurance Company-களும் படிப்படியாக இன்னும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. துறைச் செயலாளரும், மாண்புமிகு முதல்வரும், பெருமுயற்சி எடுத்து இதுவரை 1,220 கோடி ரூபாய் விவசாயிகளுக்குச் சேருகின்ற வகையிலே படிப்படியாக அவர்கள் வங்கிக் கணக்கிலே நேராக செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ரூபாய், எத்தனை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இப்பொழுது படிக்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டம், பயனடைந்த விவசாயிகள் 5,934, வழங்கப்பட்ட தொகை 8 கோடியே 59 இலட்சம் ரூபாய். திண்டுக்கல் மாவட்டம், பயனடைந்த விவசாயிகள் 330, வழங்கப்பட்ட தொகை 59 இலட்சம் ரூபாய். ஈரோடு மாவட்டம், பயனடைந்த விவசாயிகள் 3,823, வழங்கப்பட்ட தொகை 5 கோடியே 6 இலட்சம் ரூபாய். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்ல முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சி காங்கிரஸ் உறுப்பினர், எதுவும் வழங்கப்படவில்லை என்று சொன்னார். வழங்கியதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். ஆதாரம் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ICICI Lombard Insurance Company–ன்மூலம் சிவகங்கை மாவட்டத்தில் 9,209 விவசாயிகளுக்கு 65 கோடி ரூபாய் அவர்கள் வங்கிக் கணக்கில் கொஞ்சம் கொஞ்சமாக செலுத்தப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** அதேபோல இராமநாதபுரம் மாவட்டத்தில் 93,846 விவசாயிகளுக்கு 355 கோடி ரூபாயை செலுத்தி வருகிறார்கள். இன்னும் இரண்டு நாட்களில் அனைவருக்கும் கிடைத்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்நாள்வரை 1,282 கோடியே 54 ஆயிரம் ரூபாய் இந்த 3 காப்பீட்டுக் கழகங்கள் மூலமாகவும் சென்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** வேறு யாரும் இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய பேச்சுக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான் இடையூறு செய்துவிட்டார். பேசுங்கள். (குறுக்கீடு) அவர் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தார்.



**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு கொடுக்க வேண்டிய நேரத்தை கொடுத்துவிட்டு இப்படி செய்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் செய்தது? உங்கள் துணைத் தலைவர்தான் ஆரம்பித்தார்.

**திரு. க. அன்பழகன்:** இல்லை, இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றாகப் பேசிக் கொண்டிருந்தீர்கள். பேசுங்கள் நீங்கள்.

**திரு. க. அன்பழகன்:** ஒரு நிமிடம் இருங்கள். முதலமைச்சர் பதில் சொன்னார். அது புரிவதுபோல் இருந்தது. அது ஏற்றுக்கொள்வதுபோல் இருந்தது. ஏனென்றால் இன்னும் போய்ச் சேரவில்லை. நாங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுத்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். அது நியாயமான பேச்சு. உடனே போட்டுவிட்டேன், போட்டுவிட்டேன் என்று சொன்னால், போகாதவர்கள், 'வரவில்லை, வரவில்லை' என்று சொல்லத்தானே செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் நாட்டைவிட வெளிநாட்டில் விவசாயி என்ன மாதிரியெல்லாம் சௌகரியமாக இருக்கிறான் என்பதற்கு ஒரேயொரு உதாரணம். அமெரிக்காவில் ஒரு விவசாயி செய்யும் ஒட்டுமொத்த செலவு மானியமாக வழங்கப்படுகிறது என்பது ஒரு வியப்பான செய்தியாகும். 2015–ல் விளைவித்த பருத்தியினுடைய மதிப்பு 3.9 மில்லியன் டாலர். அதற்கு மானியமாக அரசு வழங்கியது 4.7 மில்லியன் டாலர். நமது கிராமங்களில் பருத்தி சேலையாகக் காய்த்த கதை என்று சொல்வார்கள். அந்தக் கதை அமெரிக்காவில் நடக்கிறது. மத்திய அரசுக்கு அழுத்தம் தராதது ஏன்? நாடாளுமன்றத்தில் 50 உறுப்பினர்களைக் கொண்ட 3–வது பெரிய கட்சியாக விளங்கும் தாங்கள் நினைத்திருந்தால் நாடாளுமன்றத்தையே தமிழக விவசாயிகள் பிரச்சினைக்காக முடக்கியிருக்க முடியும்.

பிற்பகல் 1–05

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலக்கட்டங்களில் 40 தொகுதிகளிலும் நாடாளுமன்றத் தேர்தலில்

வெற்றி பெற்றதால், தமிழகத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு, தமிழக அரசு மூலமாக மத்திய அரசுக்கு அழுத்தங்கள் தரப்பட்டு ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்றன. ஆனால், தற்போது மத்திய அரசுக்கு, மாநில அரசினால் அழுத்தம் தரப்படுகிறதா? தாங்கள் விவசாயிகள் பிரச்சினையில் அழுத்தம் தராமல் போய்விட்டீர்களோ என்று தெரிகிறது. அப்படி மாநில அரசு செயல்படாதது விவசாயிகளுக்கெல்லாம் வருத்தம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

ஒவ்வொரு மாநிலத்திலும் விவசாயத் துறையில் மேற்கொள்ளப்படும் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் விவசாயப் பொருட்களுக்கான சந்தை வசதிகள் அடிப்படையில் மாநிலங்களை வரிசைப்படுத்திய மத்திய அரசின் Niti Aayog அமைப்பு 2016 அக்டோபர் இறுதியில் வெளியிட்ட பட்டியலில், இந்திய மாநிலங்களில் தமிழகம் 20–வது இடம் பெற்று இருப்பது தமிழக விவசாயிகளின் பரிதாப நிலையை தெளிவுபடுத்துகிறது.

இந்திய தலைநகரமான டெல்லியில், தமிழக விவசாயிகளுடைய துயரக் குரல் தேசத்தின் ஆன்மாவையே உலுக்கியது. சுட்டெரிக்கும் வெயிலில் தமிழக விவசாயிகள் அரை நிர்வாணமாக மண்டை ஓடுகளை அணிந்து, தமக்கு தாமே ஈமச்சடங்குகள் செய்து, எலிக் கறியை உண்டு, 40 நாட்களுக்கு மேலாக போராட்டம் நடத்தியது நம்முடைய பிரதமர் நெஞ்சைத் தவிர, எல்லோருடைய நெஞ்சையும் உருகச் செய்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் தலைவர் எங்கள் தங்கத் தளபதி அவர்கள் புதுடெல்லி சென்று. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் தனியாக ஒரு சபையை நடத்தாதீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக் கூடாது என்றுதான் நினைக்கின்றேன். எலிக்கறி எங்கு சாப்பிட்டார்கள்? (குறுக்கீடுகள்) எலிக்கறி சாப்பிட்டது டெல்லியிலே. அது எதற்காக? (குறுக்கீடுகள்) இல்லை, அவர் ஒட்டுமொத்தமாகப் பேசுகின்றார். (குறுக்கீடுகள்) அவர் பேசுவது (குறுக்கீடுகள்) எங்களுக்கு இங்கு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) இங்கே கேளுங்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆட்சியில் அந்த மாதிரி



நிலைமை ஏற்படவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 கிலோ அரிசியை அன்னமிட்ட தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு வறட்சியிலும் பட்டினி என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அடுத்த subject–க்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் 6 ஆண்டுகளாக உரிய நேரத்தில் கிடைத்திடவில்லை. பருவ மழையும் தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாகப் பொய்த்துவிட்டது. தஞ்சை மாவட்டத்தின் மொத்த விவசாய சாகுபடிப் பரப்பு 1 இலட்சத்து 49 ஆயிரம் ஹெக்டேர். ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் நாள் மேட்டூர் அணை திறக்கப்படும் என்ற வழக்கத்தை 1972 ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் அறிவிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அதுவரையில் 40 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடியும், 1 இலட்சத்து 9 ஆயிரம் ஹெக்டேர் சம்பா சாகுபடியும் நடைபெற்றது. காவேரி நீர்ப் பிரச்சினை ஏற்பட்ட பிறகு, குறுவை, சம்பா சாகுபடி படிப்படியாகக் குறைந்துள்ளது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? சென்ற ஆண்டில் நடைபெற்ற சாகுபடி 25 ஆயிரம் ஹெக்டேர்தான். இந்த ஆண்டில் 10 ஆயிரம் ஹெக்டேரைவிட குறைவாக தெரிகிறது. மேலும் மின்சாரப் பற்றாக்குறையாலும், போதிய நிலத்தடி நீர் இல்லாததாலும் நட்ட பயிர்களைக் காப்பாற்ற இயலாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். 142 ஆண்டுகளாக இல்லாத மாபெரும் வறட்சி தமிழகத்தில் நிலவிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட

நிலையில் எப்படி விவசாயம் சரியாக நடைபெறும்? அதையும் மீறிதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவேரி டெல்டா பகுதியில் 56 கோடியே 92 இலட்சம் ரூபாயை வழங்கி இன்றைக்கு இந்தக் குறுவை தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். இருக்கின்ற நிலத்தடி நீரைக் கொண்டு குறுவை சாகுபடி செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதியுதவி வழங்கியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளினுடைய 7,000 கோடி ரூபாய் அளவிலான கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். (குறுக்கீடு) இருங்கள் நான் சொல்லிவிடுகிறேன். அடுத்தது சொல்கிறேன் இருங்கள், அவசரப்படாதீர்கள். இந்த அரசும் சிறு, குறு விவசாயிகளின் கடன்களை ஏறத்தாழ 5,324 கோடி ரூபாயை தள்ளுபடி செய்துள்ளது. மேலும் ஏறத்தாழ ஒரு ஆயிரம் கோடி ரூபாயைக் கூடுதலாகச் செலவிட்டால், அனைத்து விவசாயிகளுடைய கடன்களும் தள்ளுபடியாகும் வாய்ப்பு அமைந்திருக்கும். 2006 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்களுடைய அரசு பாரபட்சமின்றி எல்லா விவசாயிகளுடைய கடன்களையும் இரத்து செய்தது போல, இந்த அரசு மேற்கொண்டு ஏறத்தாழ ஒரு ஆயிரம் கோடி ரூபாயை கூடுதலாக ஒதுக்கி, அனைத்து விவசாயிகளினுடைய கடன்களையும் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு விவசாயம் பாழ்பட்டு, வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் மிகப் பெரிய அவதிக்கு ஆட்பட்டுள்ளனர். விவசாயம் பாழ்பட்டதால், பயிர்கள் கருகியதால், விவசாயத்திற்கு வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத அவலநிலை ஏற்பட்டதால் தற்கொலை செய்து கொண்டு—அதை சொன்னால்கூட அமைச்சர் எழுந்துவிடுவார். நான் எத்தனை பேர் என்று எண்ணிக்கையைச் சொல்லவில்லை. விவசாயிகள் தமிழகத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்





நேரில் சென்று ஒரு வார்த்தைகூட ஆறுதல் சொல்லாதது மிகவும் வருத்தம். விவசாயிகளின் வாழ்க்கையில் ஒரு மாற்றமும், நிம்மதியும், மகிழ்ச்சியும் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சென்றீர்கள், நீங்கள் சென்றீர்கள், உட்காருங்கள். நான் பேசுகிறேன். நீங்கள் கடைசியாகப் பேசுங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சென்றது அண்ணன் அவர்களுக்குத் தெரியும். அதுமாதிரி, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அமைச்சர்கள் சென்று பார்த்தார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இறந்த விவசாயிகளினுடைய குடும்பச் சூழ்நிலையைக் கருதி, அவர்களுடைய வறுமை நிலையைக் கருதி, 89 விவசாயிகளுக்கு, ஒரு குடும்பத்திற்கு 3½ இலட்சம் ரூபாய் என்ற அளவில் அவர்களுக்கு குடும்ப நிதியாக வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியுதவியை அளிப்பதற்கான மனம் உள்ளவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சௌந்தரபாண்டியன், நீங்கள் உட்கார்ந்துகொண்டே, தனியாகப் பேசிக்கொண்டிருப்பது தவறு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் தனியாகப் பேச வேண்டாம்.

**திரு. க. அன்பழகன்:** ஆகவே, விவசாயிகளினுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றமும், நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைத்திட, இவற்றை இந்த அரசு கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். விவசாயிகளுடைய அனைத்து வங்கிக் கடன்களையும் இரத்து செய்ய வேண்டும். தென்னிந்திய நதிகளை இணைத்திட மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். தமிழகத்தின் உரிமைகளைப் பறிக்கும் விதமாக அண்டை மாநிலங்கள் புதிதாக அணைகள் கட்டுவதை நிறுத்த வேண்டும். காவேரி மேலாண்மை வாரியம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு அழுத்தம் தரவேண்டும். வறட்சியால்

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25,000 ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். அதுபோல், வறட்சியால் தொழில் இன்றி வாடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் 5,000 ரூபாய் வழங்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசலில் ஏறத்தாழ 85 நாட்களாக நடைபெற்று வரும் போராட்டத்தைக் கருத்தில் கொண்டு, Hydro Carbon திட்டத்திற்கு முழுமையாகத் தடை விதிக்க வேண்டும். காவேரி டெல்டா பகுதிகள், குறிப்பாக மக்கள் போராடி வரும் கதிராமங்கலத்தில் மீத்தேன் எரிவாயுத் திட்டத்தைத் தடுத்திட வேண்டும். கர்நாடகத்திலிருந்து காவேரி நீர் பெறுவதற்கு 1968 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 30 முறை பேச்சுவார்த்தை நடத்தியும் அவற்றால் பயன் ஏற்படவில்லை. எனவே, மத்திய அரசை வலியுறுத்தி 1990–ல் அப்போதைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுடைய உதவியோடு காவேரி நடுவர் மன்றம் அமைத்து, 1991–ல் நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பாக தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென ஆணைப் பெறப்பட்டு, மத்திய அரசின் அரசிதழிலும் வெளியிடப்பட்டது. ஆணையின்படி தண்ணீர் பெறுவதற்கு 1998 ஆம் ஆண்டு தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநில முதலமைச்சர்களோடு அந்நாளைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் 6–8–1998, 7–8–1998 ஆகிய 2 நாட்கள், 9 மணி நேரம் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் கண்டதுடன், பிரதமர் தலைமையில் காவேரி பாயும் மாநிலங்களுடைய முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு கிடைத்தது. இவை அனைத்தையும் செய்தது தி.மு.க. ஆட்சி, கலைஞர்தான் என்பதை நான் இங்கே பதிவு செய்கிறேன். அதற்குப் பிறகு இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட பின்னரும் இன்றுவரை காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாமல் இருப்பதற்கு எது காரணம்? யார் காரணம்? என்பதை இந்த அவை உணரட்டும்.

இந்த நிலையில் திடீரென அனைத்து நதி நீர்ப் பிரச்சினைகளுக்கும் ஒரே நடுவர் மன்றம் (Single Permanent Tribunal for all Inter State Water Disputes) அமைப்பதற்கு மத்திய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பினால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள நீதியைத் தட்டிப் பறிக்கிற முயற்சியாகும். மத்திய அரசின் இந்த முயற்சியைக் கடுமையாக எதிர்த்து, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை நிலைநாட்டி, காவேரி மேலாண்மை வாரியம் உடனடியாக அமைக்கப்பட அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 45 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. க. அன்பழகன்:** அதெல்லாம் இல்லை. எனக்காக நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய துணைத் தலைவர்தான் எல்லா பிரச்சினைகளையும் கிளப்பி, நேரம் ஆனது.

**திரு. க. அன்பழகன்:** நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். நீங்கள் மிக மிக நல்லவர் என்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள்.

**திரு. க. அன்பழகன்:** ஏறத்தாழ 100 ஆண்டுக்காலமாக செயல்பட்டு வரும் ஆடுதுறை விவசாயப் பண்ணையைத் தரம் உயர்த்தி, வேளாண்மைக் கல்லூரியாகவோ. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து 45 நிமிடங்கள் ஆகிவிட்டன. கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள். நல்ல கருத்துகளைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** நான் விவசாயத்தைப் பற்றித்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவசாயத்தைப் பற்றி தேவையான நல்ல கருத்துகளைச் சொல்லி, சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** வேளாண்மைக் கல்லூரியாகவோ, பல்கலைக்கழகமாகவோ தரம் உயர்த்தித் தரவேண்டும் என

நான் கேட்டுக்கொள்கிறேன். 1967–1968 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் குறுகிய காலத்தில் அதிக மகசூல் பெறும், 'ஐ.ஆர்–8' என்ற புதிய நெல் இரகம், பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து பெற்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பின் கலைஞர் ஆட்சியில், 'கருணா', 'கரிகாலன்', 'காஞ்சி' போன்ற பல கலப்பின நெல் இரகங்கள் உருவாக்கப்பட்டன. சம்பா சாகுபடிக்கு ஏற்ப, 'பொன்னி', 'பவானி', 'கோ.36', 'ஐ.ஆர்.20', ஆகிய புதிய நெல் வகைகளும் பயன்படுத்தப்பட்டன. அதேபோல், சோளம், கம்பு போன்ற மானாவாரிப் பயிர் சாகுபடிகளும் மிக அதிக அளவில் மகசூல் தரக்கூடிய வீரிய ஒட்டு இரகங்களும் பயிரிடப்பட்டு உற்பத்தியில் சாதனைகள் படைக்கப்பட்டன. 1989–ல் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள், 'ஆடுதுறை–27', 'ஆடுதுறை 28' போன்ற பல்வேறு புதிய இரக விதைகளை அறிமுகம் செய்தார். மேலும், பல புதிய இரக நெல் கண்டுபிடிப்புகள், வேளாண்மைத் துறையின் மூலமாக அறிமுகப்படுத்தபட்டன. தலைவர் கலைஞர் அரசுபோல, இந்த அரசு புதிய நெல் விதைகள் எதையும் அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை என்பது என் வருத்தத்திற்குரியது. தற்போது கடும் வறட்சி நிலவும் நேரத்தில், உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, வறட்சியைத் தாங்கக்கூடிய புதிய நெல் இரகங்களை இந்த அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் புதிய நெல் இரகங்களைக் கண்டுபிடித்துதான், புதிய இரக நெல் வகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். விதைப் பண்ணை மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியான கும்பகோணத்தில், சாக்கோட்டையிலேயே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதனை நன்கு அறிவார். வேண்டுமென்றே அது இல்லை என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.



பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதைப் பண்ணை சாக்கோட்டையிலேயே இருக்கிறது என்று சொல்கிறார். அதோடு நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உலகத்தில் எந்தப் பொருளை உற்பத்தி செய்பவனுக்கும் அதன் விலையை நிர்ணயிக்கின்ற உரிமை உண்டு. ஆனால் விவசாயிக்கு மட்டும், தான் விளைவிக்கின்ற பொருளுக்கு விலையை நிர்ணயம் செய்கின்ற உரிமை இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்கிறேன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்கிறேன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்கிறேன்; எல்லோரும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். நாம் அனைவரும் விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம். நாம் விளைவிக்கின்ற பொருளுக்கு உரிய விலை கிடைக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பருத்தியை மாவட்ட வேளாண்மை விற்பனை வாரியம் மூலமாக விற்பனை செய்ய முடியவில்லை. காரணம், வியாபாரிகள் ஒன்று சேர்ந்து syndicate அமைத்துக்கொண்டு குறைந்த விலையை உறுதி செய்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிறார்கள். அரசின் வேளாண்மைத் துறை இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிய நானும் விரும்புகிறேன்; பாவப்பட்ட விவசாயிகளும் அறிய விரும்புகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமையைப் போக்கத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதிதாக e-trading முறையை அறிமுகப்படுத்தியுள்ளார். அதாவது, சங்கிலித் தொடர் விலைப் பட்டியலில் மின்னணு மூலமாக விலைப் பட்டியலை அவர்கள் தயார் செய்துகொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும்,

ஒவ்வொரு மாநிலத்திலும் எந்தளவில் விலை இருக்கிறதோ, அதன் அடிப்படையில் அதைக்கொண்டு வியாபாரிகளும், விற்கின்ற அந்த உற்பத்தியாளரும் சேர்ந்து விலையை நிர்ணயித்து பயன்பெறுவதற்காக விற்பனைக் கூடங்களில் e-trading முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. ஒரு விவசாயி ஓர் ஏக்கரில் நெல் பயிரிட்டால் ஆகும் உத்தேச செலவு, விதை நெல் ரூ.1,150/–, நாற்றங்கால் உழவு செய்திட ரூ.500/–, இரண்டு முறை உழவு செய்திட ரூ.3,400/–, வரப்பு சரி செய்திட ஏக்கருக்கு ரூ.1,000/–, நாற்று பறிக்க ரூ.1,500/–, நாற்று நடவுக் கூலி ரூ.2,000/–, களையெடுக்க ரூ.9,000/–, மருந்து தெளிக்க ரூ.1,200/–, கதிர் அறுவடை செய்திட ரூ.3,200/– நெல்லைக் களத்திற்குக் கொண்டு போக ரூ.450/–, மொத்த செலவு ரூ.23,500/–. அரசு விலைப்படி ரூ.1,450/– ஒரு குவிண்டால் என்றால் அதன்மூலம் மொத்தம் கிடைப்பது ரூ.29,000/–. செலவு போக வருமானம் ரூ.5,500/– தான். இது மிகக் குறைவான வருமானம். அதே வேளையில் 100 நாள் வேலைத் திட்டத்தில் ஒரு நாள் கூலி வேலை செய்தால், ஆண்டுக்கு, ரூ.20,300/– கிடைக்கிறது. கணவனும், மனைவியும் சேர்ந்து அந்த வேலையைச் செய்தால், ரூ.40,600/– கிடைக்கிறது. இந்த நிலையில் விவசாயத்தை ஏன் செய்யவேண்டுமென்ற எண்ணம் விவசாயிகளின் மனதில் ஏற்படுகிறது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதுபற்றி கூறினார்கள். நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். நாம் ஊக்கத் தொகைதான் வழங்கிக்கொண்டிருக்கிறோம். சன்ன இரகத்திற்கு ரூ.70/– மற்றும் சாதாரண இரகத்திற்கு ரூ.50/– என ஊக்கத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய



அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு வழங்கிக்கொண்டிருக்கிறது. நெல்லுக்கு ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசுதான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** இந்த நிலையை, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாடோடி மன்னன் திரைப்படத்தில் ஒரு பாடல் பாடுவார்.

"அட காடு விளஞ்சென்ன மச்சான்,
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்"
என பானுமதி அம்மா பாடுவார்கள். (குறுக்கீடு)

"இப்போ காடு விளையட்டும் பொண்ணே
நமக்கு காலமிருக்குது பின்னே" (குறுக்கீடு)

கடைசியாக வருகிறேன். (குறுக்கீடு) இப்போது நீங்கள் பாடியதைப் போல நானும் பாடட்டுமா? நேற்று நீங்கள் பாடினீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பாடுங்கள். பாடி, அதோடு உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:**

'அட காடு விளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்
கையும் காலுந்தானே மிச்சம்'
'அட காடு விளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்
கையும் காலுந்தானே மிச்சம்' (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த வரியைப் பாடுங்கள். தலைவர் பாடுகிற வரிகளைப் பாடுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள். ஒரே நிமிடம், உட்காருங்கள், அண்ணே! நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** நானும் பாடுவேன். நான் ஏன் பாடவில்லையென்றால், எங்கள் மாண்புமிகு அம்மா இருந்த அவையில் நான் பாடியிருக்கிறேன். இந்த அவையில் அவர்கள் இல்லாமல் என்னால் பாட்டு பாட முடியவில்லை என்பதற்காக நான் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், நீங்கள் பாடியதற்காகச் சொல்கிறேன்.

'நானே போடப்போறேன் சட்டம்,
பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்'

என்று பாடி, அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்குச் செயல்படுத்தி வருபவர்தான் எங்களுடைய தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

**திரு. க. அன்பழகன்:**

"அட காடு விளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்
கையும் காலுந்தானே மிச்சம்
இப்போ காடு விளையட்டும் பொண்ணே
நமக்கு காலமிருக்குது பின்னே
நானே போடப்போறேன் சட்டம்
பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்"

இதை நாங்கள் நினைத்துக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், ஆளுகின்ற சர்க்காருக்கு இருக்கா என்று கேட்பதற்குத்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.



**திரு. க. அன்பழகன்:** நாங்கள் எல்லாம் அப்போது எம்.ஜி.ஆர். ரசிகர்கள்தான். எங்களுக்கு எம்.ஜி.ஆர். பிடிக்கும்தான். எம்.ஜி.ஆர். படம் பார்ப்பதற்காக சட்டையைக் கிழித்துக்கொண்டு டிக்கெட் வாங்கிக்கொண்டு பார்த்தவர்கள்தான் நாங்கள். அது என்னுடைய நினைவுக்கு வருகிறது. எம்.ஜி.ஆர். உருவாக்கியிருக்கும் ஆட்சியில் இருக்கும் மாண்புமிகு அமைச்சர்களுக்கு நினைவு இருக்கிறதா என்பதை விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அடிப்படையில், 'உழவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது' என்பது பழமொழி. அப்பழமொழிக்கேற்ப விவசாயிகள் விவசாயம் செய்ய யோசிக்கின்றார்கள். இந்த நிலை நவீன அறிவியல் யுகத்திலும் தொடர வேண்டுமா என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** கடந்த 6 ஆண்டுக் காலமாக இந்த ஆட்சியில் கரும்புக்குண்டான விலையை நிர்ணயம் செய்ய முத்தரப்புக் கூட்டம் கூட்டப்படவில்லை. கலைஞர் ஆட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 52 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்ட நேரத்திற்கு மேலே 20 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன்.

**திரு. க. அன்பழகன்:** தாங்கள் பெரிய மனது வைத்து எனக்கு நேரத்தை ஒதுக்கித் தர வேண்டும். 12–23 மணிக்குத்தான் பேசுவதற்கு அனுமதி அளித்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், நீங்கள் 12–29 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள்.

**திரு. க. அன்பழகன்:** கடந்த 6 ஆண்டுக் காலமாக கரும்புக்குண்டான விலையை நிர்ணயம் செய்திட முத்தரப்புக் கூட்டம் கூட்டப்படவே இல்லை.

[2017 ஜூலை 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** கலைஞர் அவர்களுடைய ஆட்சியின்போது, கரும்பு விலையை நிர்ணயம் செய்திட, முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டுவது என்பது ஒரு மரபாகவே இருந்தது. தற்போது கரும்பு supply செய்யும் விவசாயிகளுக்கு, கரும்பு டன் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்த விலைப்படி, 2,850/– ரூபாய் வழங்க வேண்டும். ஆனால், ஆலை நிருவாகம், கரும்பு விவசாயிகளுக்கு ரூ.2,000/–தான் வழங்குகின்றது. மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.850/– இன்னும் வழங்கப்படவில்லை. கரும்பு விவசாயத்தைப் பொறுத்தவரையில், கரும்பு வெட்டுக் கூலி, ஏற்றுக் கூலி, பயிரிட வங்கியில் பெற்றக் கடன் தொகை என செலவு ரூ.2,000/–ஐ தாண்டுகிறது. இதன்படி கரும்பு விவசாயிகளுக்கு ரூ.850/–தான் மீதம் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் க. அன்பழகன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** இந்தப் பணத்தையும் ஆலை நிருவாகம் இரண்டு ஆண்டுகளாக வழங்காமல் இருப்பதால், விவசாயிகள் பெரும் வேதனைக்கும், பாதிப்புக்கும் உள்ளாகின்றார்கள். கரும்பு வெட்டப்பட்டு, ஆலைக்கு அனுப்பிய 15 நாட்களுக்குள் கரும்புக்குரிய முழு தொகையையும் வழங்க வேண்டுமென்பது அரசினுடைய விதிமுறையாகும். ஆனால், இதனை கரும்பு ஆலைகள் செயல்படுத்துவதில்லை. எனவே, கரும்பு ஆலைகள் நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கி, கரும்பு விவசாயிகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் க. அன்பழகன், இதோடு உரையை முடியுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தலைஞாயிறில் 60 சதவிகிதம் விவசாயிகளின் பங்குடனும், 40 சதவிகிதம் அரசு பங்குடனும்—25–1–1987–ல் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டது. தொடக்கக் காலத்தில், 1986–1987 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 817 டன் கரும்பு அரைவை



2017 ஜூலை 5] [திரு. க. அன்பழகன்]

செய்யப்பட்டு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 740 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. அதில் அதிகபட்சமாக, 1994–1995. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கருத்தோடு முடிங்கள். (குறுக்கீடு) இதற்குமேலும் நீங்கள் தொடர்ந்து பேசினால், நான் வேறு உறுப்பினரைப் பேச அழைப்பேன். (குறுக்கீடு) இந்தக் கருத்தோடு நீங்கள் முடிக்கவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டிவரும்.

**திரு. க. அன்பழகன்:** விவசாய மானியக் கோரிக்கையில் இதையெல்லாம் நாங்கள் பேசவில்லையென்றால், இங்கு இருக்க வேண்டிய அவசியமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன், நீங்கள் ஒரு மணிநேரம் பேசிவிட்டீர்கள்.

**திரு. க. அன்பழகன்:** 4 இலட்சத்து 22 ஆயிரத்து 52 டன் அளவுக்குக் கரும்பினை அரைவை செய்து, 3 இலட்சத்து 42 ஆயிரத்து 930 குவிண்டால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் 12–29 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது நேரம் 1–23 ஆகின்றது.

**திரு. க. அன்பழகன்:** ஐந்து நிமிடங்கள் மட்டும் அனுமதி கொடுங்கள். 1995–ல் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இன்னும் உங்களுக்கு இரண்டே இரண்டு நிமிடங்கள்தான் அளிக்க முடியும். அதற்குள் நீங்கள் என்ன முக்கியமான கருத்தைச் சொல்ல வருகின்றீர்களோ அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** 2015–2016 ஆம் ஆண்டு, சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ், ஆலை புனரமைப்பிற்கு ரூ.56 கோடி அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்ட அந்த ரூ.56 கோடி பணம் ஒதுக்கப்படாததால், 2016–2017 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில், அந்த ஆலை செயல்படவில்லை. இந்த ஆலையில் பணிபுரியும் சுமார் 350 அலுவலகப் பணியாளர்கள்

மற்றும் ஆலைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக உள்ளது. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டில், 2017–2018 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்திலாவது எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்க ஆவன செய்யுமாறு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் க. அன்பழகன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். தயவுசெய்து, இதற்குமேல் நீங்கள் புதிய கருத்துக்குச் செல்ல வேண்டாம். (குறுக்கீடு) இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** கொடைக்கானல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்கச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கேள்வியை மட்டும் கேட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள், அவைக் குறிப்பில் முழுமையாகப் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், நன்றியை நானே சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லியாகிவிட்டது. உங்களுக்காக நானே சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்கிறாராம். சொல்லிவிடட்டும்.



பிற்பகல் 1–25

**திரு. க. அன்பழகன்:** இந்த நாட்டில் தினச் சம்பளம் உண்டு, வாரச் சம்பளம் உண்டு, மாதச் சம்பளமும் உண்டு. ஆனால் தினச் சம்பளம், வாரச் சம்பளம், மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்கு அவர்கள் வாங்கும் சம்பளம் எவ்வளவு என்பது தெரியும். ஆனால் விவசாயிக்கு எவ்வளவு சம்பளம் என்பதோ, எவ்வளவு வருமானம் என்பதோ யாருக்கும் தெரியாது. அந்த வருமானத்தை வைத்துதான் வீடு கட்ட வேண்டும், பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும், பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். குடும்பத்தார்க்கு மருத்துவச் செலவு செய்ய வேண்டும். அதுவும் விவசாயம் பொய்த்துவிட்டால் அந்த விவசாயி தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. விவசாயி சேற்றில் கை வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பது பழமொழி. அந்த விவசாயிகளைப் பாதுகாக்காத எந்த அரசும் நீண்டநாள் நீடிக்க முடியாது என்பதை எல்லோரும் உணர வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி போதும். உரையை முடியுங்கள். 56 நிமிடங்கள் நீங்கள் பேசியாகிவிட்டது. போதும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற அரசு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதால்தான் தொடர்ந்து இரண்டாவது முறையும் வரலாறு காணாத அளவில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றி பெற்று இரண்டாவது முறை மீண்டும் முதல்வரானார்கள் என்று சொன்னால் அது விவசாயிகளுக்குச் செய்த நன்மையினால்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. க. அன்பழகன் அவர்கள் பேசும்போது விவசாயிகள் நல

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2017 ஜூலை 5

வாரிய உறுப்பினர்களுடைய நிலையையும், அதிலே பயன்பெறுகிற பயனாளிகளுடைய விவரத்தையும் அறிய விரும்புகிறேன் என்கிற கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்ததற்குப் பின்னாலே நல வாரியத்தை முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்கிற மேம்படுத்தப்பட்ட திட்டமாக உருவாக்கித் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். 10–9–2011 முதல் 30–4–2017 வரையில் ரூ.3,305.52 கோடி செலவில் 41.09 இலட்சம் பயனாளிகள், விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெற்ற ஒரே திட்டம் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நல வாரியத்திலிருந்து அவர் விவரங்கள் கேட்டிருந்தார். இது மொத்த விவரம். இந்த நிதியாண்டு 2017–2018–ல் நிதி ஒதுக்கீடு 250.99 கோடி ரூபாய்; செலவினம் 106 கோடி ரூபாய். பயனாளிகள் 1,82,230. 2,81,85,135 மொத்த உறுப்பினர்களைக் கொண்டு இந்தியாவிலேயே அதிக உறுப்பினர்களைக் கொண்ட ஒரே திட்டம் மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்திலேதான் இரண்டு கல்வி உதவித் தொகைகள். கல்வி உதவித் தொகை ஒரு திட்டத்திலே பெற்றால் ஒரு திட்டத்திலே பெறமுடியாது. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் நலன் கருதி முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் இரண்டு கல்வி உதவித் திட்டங்களைப் பெறலாம். அதேபோல ஆண்கள் திருமண உதவித் தொகை பெறுகிற ஒரே திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மேம்படுத்தப்பட்ட திட்டமாக, அவர்களுடைய தலைவர் அறிவித்த அந்த நல வாரியத்திலிருந்து மேம்படுத்தப்பட்டத் திட்டமாக கொடுத்ததன் காரணமாகத்தான் இத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது புரட்சித் தலைவரால் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள் இப்படி விவசாயிகளைக் கவனிக்காமல் இருக்கலாமா என்று பொத்தாம்பொதுவாகச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா, வேண்டாமா என்பதைக் கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் பேச்சு முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்றைக்கும் விவசாயிகளுடைய நண்பனாகவும், அவர்களுடைய வாழ்க்கையில் அக்கறை உள்ள ஓர் அரசாகவும் கடந்த 6 ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செய்த சில திட்டங்களை மட்டும் உங்களுக்கும் இந்த அவையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விவசாயிகள் என்ற அடிப்படையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்பட இருக்கிற உறுப்பினர்கள் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். 2011 ஆம் ஆண்டு தானே புயல் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஏற்பட்டது. 2,72,618 பேருக்கு 132 கோடியே 67 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இது ஒரு திட்டம். 2012–2013 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணமாக டெல்டா மாவட்டங்களில் 3,48,681 விவசாயிகளுக்கு 517.98 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதர மாவட்டங்களில், சென்னை தவிர, 15,96,857 விவசாயிகளுக்கு 766.60 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணமாக 9,21,949 விவசாயிகளுக்கு 428.83 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

பிற்பகல் 1–30

2016–ல், கடன் தள்ளுபடி என்ற திட்டத்தில், கூட்டுறவு வங்கிகளில் 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 விவசாயிகள் வாங்கிய கடன் 5,318.73 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

2016–ல் குறுவை தொகுப்புத் திட்டம். இதிலே 3.16 இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய 1,37,314 விவசாயிகளுக்கு மானியமாக 54.65 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

மேட்டூர் அணையில் நீர் இல்லாததால், சம்பா தொகுப்புத் திட்டத்திற்கு மானியமாக 2,79,449 விவசாயிகளுக்கு 64.30 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு மழை குறைவாகப் பெய்ததினால், நில வரியே இல்லை. அம்மா அவர்கள் அதை இரத்து செய்திருக்கிறார்கள்.

2016–ல் வறட்சி. குறுகிய கால பயிர்க் கடனை, மத்தியக் கால பயிர்க் கடனாக மாற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அரசை வழிநடத்தும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்தார்கள். 46,657 விவசாயிகளுக்கு 144.32 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இடுபொருள் மானியமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2,247 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

2016–2017–ல் 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக மாற்றியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம். 2016–2017–ல் விவசாயிகள் சார்பில் காப்பீடு premium 15 இலட்சத்து 19 ஆயிரம் பேருக்கு 428 கோடி ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது.

2015–2016–ல் வறட்சியின் காரணமாக, பயிர் காப்பீட்டு இழப்பீடாக 403.79 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக 2016–2017–ல் வறட்சி பயிர் காப்பீட்டு இழப்பிற்காக, 2,92,096 விவசாயிகளுக்கு 928.12 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு, 66 இலட்சத்து 16 ஆயிரத்து 726 விவசாயிகளுக்கு 11,434.99 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். 7,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) இந்த 7,000 கோடி ரூபாய் என்பதை (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், நீங்கள் உங்களது ஆட்சியில் பயிர்க் கடன் தள்ளுபடி செய்தது, 5 வருடத்திற்கு 3,715.68 கோடி ரூபாய். அதேபோன்று மத்தியக் கால கடனாக அறிவித்தது, 688.08 கோடி ரூபாய். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

அதேமாதிரி நீண்ட காலக் கடன் 986.12 கோடி ரூபாய். மொத்தத்தில் நீங்கள் உங்களது ஆட்சியில் தள்ளுபடி செய்தது 7,000 கோடி ரூபாய் இல்லை, இல்லை, இல்லை. உங்கள் ஆட்சியில் நீங்கள் தள்ளுபடி செய்தது மொத்தம் 5,369.88 கோடி ரூபாய்தான். ஆனால், 7,000 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்தோம் என்று நீங்களே சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் சொல்வது கோயபல்ஸ் மாதிரி இருக்கிறது. உண்மைக்குப் புறம்பான தகவலை, இந்தச் சட்டமன்றத்தில் தொடர்ந்து பதிவு செய்து கொண்டு வருகிறீர்கள். அது தவறான தகவல், அதை நீங்கள் அவையில் பதிவு செய்து கொண்டு வருகிறீர்கள். அது தவறு, தவறு, தவறு.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது N.P.K. நடிப்பிசைப் புலவர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பற்றி குறிப்பிட்டார். அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும். 3,000 டன் அரைவைத் திறனுக்கு விரிவாக்கம் செய்ய வேண்டும் என்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** அந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு போதிய கரும்பு வரத்து இல்லை. தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக போதிய கரும்பு வராததன் காரணமாக, நஷ்டத்தில் இயங்குகிறது. அங்கு 36,000 டன் கரும்பு இருப்பு இருக்கிறது. 36,000 டன் கரும்பு அரைவை செய்தால், அதனால் மிகப் பெரிய நஷ்டம் வரும். அதனால் நாங்கள் அருகிலுள்ள சேத்தியாதோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பை diversion செய்துவிட்டோம். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் modernisation-காக நிதியொதுக்கி அறிவித்திருந்தார்கள். அது அரசின் கவனத்தில் இருக்கிறது. இப்போதுகூட 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் அந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்குவதற்கான நடவடிக்கை அரசினுடைய முழு கவனத்தில் இருக்கிறது. அதை விரைந்து வழங்குவதற்கான

நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது, அதோடு விடுங்கள். (குறுக்கீடு) வேண்டாம், நீங்கள் ஒன்று சொல்லி, அதற்கு அவர்கள் ஒன்று சொல்லி, இதெல்லாம் வேண்டாம், விடுங்கள்.

**திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசி அவர் பேசி. . . (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் சொல்லுங்கள். நீங்கள் திரும்பிப் பாருங்கள், பின்னால் எத்தனை பேர், இதெல்லாம் என்ன? இப்படி எல்லோரும் எழுந்து நின்றால், எல்லோருக்கும் மைக் கொடுக்க முடியுமா? ஒரு நிமிடம் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைச் சொன்னார்கள். நான் ஒன்றும் குறுக்கிடவில்லை. ஆனால் எனக்கு ஒன்று தெரிய வேண்டும். இவர் சொன்னதையெல்லாம் நான் ஒத்துக்கொள்கிறேன். அவர் எனக்கு என்ன சொல்ல வேண்டுமென்று கேட்டால், ** என்று சொல்லுங்கள், இதையெல்லாம் நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் உட்காருங்கள். அவர் கூறிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் பேசுகின்றபோது காவேரி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலாண்மை வாரியத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட 5–6 பக்கங்களில் விளக்கம் இருக்கின்றது. நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், நீண்ட நேரம் விளக்கம் சொல்ல வேண்டும். இருந்தாலும் சுருக்கமாகச் சொல்கின்றேன். ஏனென்றால், இது மிக முக்கியமானது. ஏதோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் இங்கே பதிவு செய்திருக்கின்றார். அது தவறு. 5–2–2007 அன்று காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தது. அதன்பிறகு சரியான நடவடிக்கை நீங்கள் எடுக்காத காரணத்தினால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, 19–12–2011 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பிறகு காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க வேண்டும் என்று பல முறை பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதப்பட்டன. 22–2–2013, 11–3–2013 என பல முறை கடிதங்கள் எழுதப்பட்டன. அதன்மீது அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், உச்ச நீதிமன்றம் சென்று, இன்றைக்கு அந்த வழக்கு 11–7–2017 அன்று வர இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க வேண்டும் என்பதுதான். அதற்காக சட்ட ரீதியாக இன்றைக்கு போராடிக்கொண்டு வருகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், பேசுங்கள். (குறுக்கீடு) பேசட்டும். இல்லை, நீங்கள் பேசுங்கள்.

***திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) புதுமைக்கு புதுமையாய், பொதுமைக்கு பொலிவிடமாய், (குறுக்கீடு) துஞ்சாத துணிவுடைமை, தூய்மையான பொதுவுடைமை, தஞ்சமென வந்தவர்க்கு தாயாகி நின்றவராய், தமிழ் மண்ணை தரணியில் தலைநிமிர்த்திய தங்கத் தாரகையாய் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு மணி நேரத்திற்கு மேல் உங்கள் உறுப்பினர் பேசினார். பேசி முடித்துவிட்டு இதுபோன்று செய்கிறீர்களே? இது சரியா? மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டாமா? நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள்.

**திரு. வி. பன்னீர்செல்வம்:** சலசலப்புக்கு சற்றும் சலியாத சங்கீதமாய், சாயாத கோலோடு ஜகம் காத்த செந்தமிழாய். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. வி. பன்னீர்செல்வம்:** அரிமாவே பார்த்து அசந்து போகும் அதிசயமாய், (மேசையைத் தட்டும ஒலி) அன்னை தெரசாவின் வாழும் வடிவமாய், அன்னி பெசன்ட் அம்மையாரின் அச்சாய். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது முறையல்ல. நீங்கள் பேசி முடித்துவிட்டு, ஒரு மணி நேரத்திற்கு மேல் எதிர்க்கட்சி உறுப்பினர் பேசி முடித்த பிறகு நீங்கள் தேவையில்லாத சாராம்சத்துக்குள் போய் இதுபோல் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடு) இல்லை, கொஞ்ச நேரம் (குறுக்கீடு) நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் தெளிவான விளக்கம் அளித்திருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் கேட்டால், அவர் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) நீங்கள் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு (குறுக்கீடு) அதுகுறித்து இன்னொரு வாய்ப்பு கிடைக்கும்போது பிறகு சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சபாநாயகர் எழுந்து நிற்கும்போது நீங்கள் அமர வேண்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** இன்றைக்கு இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய கட்சியாக நாடாளுமன்றத்தில் இருக்கிறீர்கள், தகுந்த அழுத்தம் கொடுக்கவில்லை என்று ஒரு



குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்குத்தான் பதிலளித்தேன். இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (குறுக்கீடு) காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றது என்பதனைச் சுட்டிக்காட்டினேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பேச வேண்டிய நேரத்திற்கு மேல் உங்கள் உறுப்பினர் பேசிவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். அவையின் நடவடிக்கைகளுக்கு மேற்கொண்டு இடையூறு செய்யாமல் தயவுசெய்து அனைவரும் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முதலில் சபாநாயகர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் அனைவரும் அமர வேண்டும். (குறுக்கீடு) அந்த மரபுகளைக் காப்பாற்ற நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பதில் சொல்லி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஒரு நிமிடத்தில் முடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியானால் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசி முடித்த பிறகு, (குறுக்கீடு)

**திரு. வி. பன்னீர்செல்வம்:** புதுமைக்கு புதுமையாய், பொதுமைக்கு பொலிவிடமாய். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். உங்கள் உறுப்பினர் பேசி முடித்த பிறகு, தேவையில்லாத ஒரு subject–க்குள் போய் அதற்குள் பிரச்சினையை உண்டாக்கி (குறுக்கீடு) பிறகு என்ன நீங்கள்? உங்கள் உறுப்பினர் பேசிய பிறகு (குறுக்கீடு) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள்.

[பேரவைத் துணைத் தலைவர்] [2017 ஜூலை 5

(குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஏன் கூடபேசுகிறீர்கள்? அவருக்கு பேசத் தெரியாதா? நீங்கள் பேச வேண்டுமா?

பிற்பகல் 1–40

நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்கள் உறுப்பினர் பேசும்போது காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான மேல் நடவடிக்கை இல்லையென்று சொன்னார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) பிறகு வேறென்ன சொல்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். நீங்கள் ஒரு நிமிடத்தில் விளக்கம் தருவதாக இருந்தால் நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அதற்கு மேல் போகக்கூடாது. சரி, ஒரு நிமிடத்தில் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை gazette–ல் போட்டோம் என்று சொன்னவற்றிலும், அதன் பிறகு நாங்கள் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க Supreme Court சென்றோம் என்று சொன்னவற்றிலும் எங்களுக்கு மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால், அவர் ஒரு வார்த்தைச் சொன்னார், இறுதித் தீர்ப்பு கிடைத்ததற்கு பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று கூறினார். (குறுக்கீடுகள்) நான் ஒன்று சொல்கிறேன். என்ன விஷயம் என்று கேளுங்கள். இறுதித் தீர்ப்பு கிடைத்தவுடன், உடனடியாகச் சென்று, அந்தத் தீர்ப்பை நீங்கள் gazette–ல் போடுங்கள் என்று கேட்க முடியாது. ஏனென்றால், The Inter-State River Water Disputes Act Section 5(3)-ன்படி, நமக்கு இருக்கிற குறைபாடுகளை எழுதி அனுப்ப வேண்டும். அதேபோன்று, பிறரும் குறைபாடுகளை எழுதி அனுப்புவார்கள். அதன் பிறகு Cauvery Tribunal என்ன செய்யும் என்று கேட்டால், ஒரு வருட காலத்தில் மேல் நடவடிக்கை எடுத்து, இறுதித் தீர்ப்பை அனுப்ப வேண்டும். Tribunal–ல் நாங்கள் குறைகளையெல்லாம் சொன்ன பிறகு, ஒரு முடிவெடுத்து final report கொடுப்பார்களே, அது எங்கள் காலத்தில் கிடைக்கவில்லை. அதற்குள் எங்கள் ஆட்சி போய்விட்டது. நீங்கள் வந்தீர்கள். ஆட்சி அமைத்தீர்கள்.



2017 ஜூலை 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, போதும். அமருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஒன்றும் நன்றி சொல்ல வேண்டாம். நானே நன்றி சொல்லிவிட்டேன்.

**திரு. க. அன்பழகன்:** தொகுதிக் கோரிக்கைகளை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

கும்பகோணம் திருநகரை மாநகராட்சியாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தை மாவட்டத் தலைநகரமாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, சேஷம்பாடி ஊராட்சி, மூப்பகோவிலில் திருக்குறள் நகரில் உள்ள 1,330 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் புறவழிச்சாலை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்தி, முழு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம்–மன்னார்குடி–அதிராம்பட்டினம் SH-66 சாலையில் 7/4–ல் திப்பிராஜபுரத்தில் திருமலைராஜன் ஆற்றில் உள்ள பழுதடைந்த பழைய ஆர்ச் பாலத்தை புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் NH-45-C சாலை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியை விரைவுபடுத்தி சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் NH-45-C சாலை நான்கு வழிச் சாலையில் அணைக்கரையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலத்தநல்லூர்–கும்பகோணம் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம்–மன்னார்குடி–அதிராம்பட்டினம் SH-66 சாலையில் திப்பிராஜபுரத்தில், திருமலைராஜன் ஆற்றில் 59/4 மைலில் உள்ள பழுதடைந்த ரெகுலேட்டரை திரும்ப கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, குடிதாங்கியில் ஒரு படுக்கை அணை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் பகுதியில் வருகிற குடமுருட்டி ஆற்றின் வடகரைப் பகுதியிலும் (தெற்கு கரை, திருவாரூர் மாவட்டம்) முடிகொண்டான், திருமலைராஜன், அரசலாறு, நாட்டாறு, கீர்த்திமானாறு, காவேரி, பழவாறு, மண்ணியாறு, கொள்ளிடம் ஆகிய ஆறுகளைத் தூர் வாரி சுத்தப்படுத்த வேண்டுகிறேன்.

உலகப் புகழ்பெற்ற கும்பகோணம் மகாமகக் குளம், பொற்றாமரைக் குளம் ஆகிய குளங்கள் வறண்டு போகாமல், வற்றிவிடாமல் ஆண்டு முழுவதும் நீர் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் நகரில் உள்ள பயணியர் விடுதியில் / விருந்தினர் மாளிகையில் கூடுதலாக அறைகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் புதிதாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மாவட்ட மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர், தொழில்நுட்ப வல்லுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இதர அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப வேண்டுகிறேன். மழைக் காலங்களில் மருத்துவமனை வளாகத்தில் நீர் தேங்காமல் வடிகால் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் நீதிமன்ற வளாகத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்கு இடம் தேர்வு செய்து புதிய சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

தாராசுரம், சோழபுரம், திருநாகேஸ்வரம் பேரூராட்சிகளில் புதிதாகக் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டையூர் மற்றும் கல்லூரில் துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கும்பகோணம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வருகின்ற வாகனங்கள் சிரமமின்றி வருவதற்கு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தனியாக கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் நகராட்சி–நாச்சியார்கோவில் வழிநடப்பு சாலையில் மாதளம்பேட்டை இரயில்வே கேட் பகுதியில் இரயில்வே கேட் எண் LC 269 பகுதியில் இரயில்வே கீழ்பாலம் அமைக்க வேண்டுகிறேன்.

கும்பகோணம் நகரில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக சாம்பசிவபுரம் பகுதியில் நவீன தங்கும் விடுதி கட்டித்தர வேண்டுகிறேன்.

நகராட்சியின் 45 வார்டுகளிலுமுள்ள தெருச் சாலைகள், உள் சாலைகளைச் செப்பனிட வேண்டுகிறேன்.

கும்பகோணம் நகராட்சியின் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை புதிதாக உருவாக்கியுள்ள திருஞானசம்பந்தம் நகர், ஆதிலெட்சுமி நகர், முத்து நகர், சத்தியம் நகர் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுகிறேன்.

கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதிதாகக் கட்ட வேண்டுகிறேன்.

தாராசுரம், சோழபுரம், திருநாகேஸ்வரம் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

கும்பகோணம் நகரத்திலுள்ள நெசவாளர் குடும்பங்களுக்கு தறிக்கூடத்துடன்கூடிய நெசவாளர் வீடுகள் கட்டித்தர வேண்டுகிறேன்.

கும்பகோணம் தொகுதி, நாதன்கோவில் அருள்மிகு ஜெகந்நாத பெருமாள் திருக்கோயிலுக்குப் பக்தர்கள் ஓய்வுக்கூடம், குளியலறை கட்டுதல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் சாலை மேம்பாட்டு பணிகளுக்காக அரசு நிதி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தில் மகளிர் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. வி. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுமைக்குப் புதுமையாய், பொலிவிற்குப் பொலிவிடமாய், துஞ்சாத துணிவுடைமை, தூய்மையான பொதுவுடைமை, தஞ்சமென வந்தவர்க்குத் தாயாகி நின்றவராய், தமிழ் மண்ணை தரணியில் தலை நிமிர்த்திய தங்கத் தாரகையாய், சலசலப்புக்குச் சற்றும் சலியாத சங்கீதமாய், சாயாத கோலோடு, ஜகம் காத்த செந்தமிழாய், அரிமாவே பார்த்து அசந்துபோகும் அதிசயமாய், அன்னை தெரசாவின் வாழும் வடிவமாய், அன்னி பெசன்ட் அம்மையாரின் அச்சாய், அனைவரையும் அன்பால், அரவணைப்பால், இரக்கத்தால், இன்முகத்தால், ஈகையால் ஈர்த்து, விதவிதமாய் திட்டங்களை வீடுதோறும் விதைத்திட்ட வித்தகராம், (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான் மக்களுக்காகவே நான், உங்களால் நான், உங்களுக்காகவே நான்' என்ற உன்னதக் கோட்பாடோடு, தமிழகத்தை ஆற்றல் மிக்கப் பெண் அரிமாவாய் இருந்து வழிநடத்தி, தமிழகத்தை இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக்கி, வங்கக் கடலோரம் வற்றாத புகழோடு, மறைந்தும் மறையாது வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, அவர்களின் பொற்பாதம் பணிந்து என் உரையைத் துவக்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உழவே உலகின் உன்னத உத்தியோகம். உழுபவருக்குக் கழனியே கடவுள், மழையே மணியக்காரர், காற்றே கண்காணிப்பாளர், அவர்களுக்கு நாற்று நடுவதே கடக்கால், நீர்ப் பாய்ச்சுவதே அபிஷேகம், அறுவடையே குடமுழுக்கு. வேளாண்மை மண்ணுக்கு மரகதம் போர்த்தும் அரிய கலை என்பதால்தான், உழவர்கள் தங்கள் கழனியில் காலணிகளைக்கூட அணிவதில்லை. இந்தியாவில் மொத்த பரப்பளவில், 4 சதவிகிதமும், நீர் ஆதாரத்தில் 3 சதவிகிதமும் கொண்ட என் தாயின் தமிழகமே, ஆடும்போது மயில் அழகு, ஓடும்போது மான் அழகு, தாவும்போது முயல் அழகு, கர்ஜிக்கும்போது சிங்கம் அழகு, கூவும்போது குயில் அழகு, பாயும்போது புலி அழகு, மேயும்போது பசு அழகு, விடியும்போது



விண்ணழகு, சாயும்போது அருவி அழகு, துதிக்கும்போது பாடல் அழகு, அணியும்போது நகை அழகு, நாணும்போது பெண்ணழகு, சிரிக்கும்போது குழந்தை அழகு, பேணும்போது தாய் அழகு, பேசும்போது தமிழ் அழகு, தமிழ் வார்த்தைகளிலேயே அம்மா என்ற சொல்லே அழகு. (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஆளாக்கி, இன்று சட்டமன்ற உறுப்பினராக்கிய என் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய திசையில், ஆட்சித் தேரைச் சரியாகச் செலுத்திவரும் எங்கள் கழகத்தினுடைய சாரதி, தொண்டனுக்குத் தொண்டனாக இருந்து, அம்மா அவர்களால் அடையாளம் கண்டு ஆளாக்கப்பட்ட எங்கள் பாசமிகு அண்ணன், சேலத்து சிங்கம், கொங்கு நாட்டுத் தங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சா நெஞ்சுரத்தோடும், இராஜகம்பீரத்தோடும் ஆளுமைத் திறனோடும், அறிவு தீட்சண்யத்தோடும், நல்லாட்சி நடத்திய எங்கள் மாண்புமிகு அம்மா இன்று இல்லை. மக்கள் மேம்பாடும் மாநில வளர்ச்சியும் தன் இரு கண்கள் என பாவித்து, அயராது உழைத்த எங்கள் அன்புத் தலைவியை இழந்து நிற்கின்றோம். வேதனை மிகுதியால் வழிந்தோடும் எங்கள் விழிநீரைத் துடைக்க வழியின்றி விம்முகிறோம். பகலில் கதிரவனாய், இரவில் நிலவாய் என்றும் எங்களுக்கு ஒளி தந்த அன்னையை இழந்து தவிக்கிறோம். அந்த அன்னையின் திருவடி பொற்பாதங்களில் என் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எது நடந்தாலும் அம்மா இருக்கிறார், அவர் பார்த்துக்கொள்வார் என்று இருந்தோம். இன்று நம் அம்மா அவர்கள் இல்லாத சூழ்நிலையில், எதுவெல்லாமோ நடக்கிறது; என்னவெல்லாமோ நடக்கிறது; எல்லாம் நன்மைக்கே என்று கருதி அமைதி காப்பதா, ஏதாவது நடந்துவிடுமோ என்று அச்சப்படுவதா என்று ஒன்றுமே புரியவில்லை. 'கழகம் வீழ்ந்து விடாதா, கழக ஆட்சி கவிழ்ந்து விடாதா' என சிலர் கண்கொத்திப் பாம்புபோல்

காத்துக் கிடக்கிறார்கள். உரசலும், விரிசலும் அவர்களுக்கு உயிரோட்டத்தைக் கொடுத்துவிடும். கட்டுக்கோப்பும், ஒற்றுமையும் மட்டுமே கழகத்திற்கு வலு சேர்க்கும் என்பதை நாங்கள் அனைவரும் முழுமையாக உணர்ந்துள்ளோம். அந்த வகையில், இதய தெய்வம் அம்மா அவர்கள்மீது ஆணையிட்டு சொல்கிறேன், கழகத்திற்கோ, கழக ஆட்சிக்கோ ஒரு சிறிதும் பங்கம் ஏற்பட அனுமதிக்க மாட்டோம், இது உறுதி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்று சொல்வார்கள். ஆனால், ஒருசிலரோ, எதையுமே விதைக்காமல் அறுவடைக்குக் காத்திருக்கிறார்கள். அவர்களின் கனவு ஒருபோதும் மெய்ப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில் ஒருசில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் இந்த அவையில் பதிவு செய்துவிட்டு, பின்னர் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் என் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு சில கோரிக்கைகளை மட்டும் நான் இங்கு பேசுகிறேன். மீதமுள்ள கோரிக்கைகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவற்றை பதிவு செய்துகொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஜமுனாமரத்தூர் பகுதியில் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட மலைவாழ் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் பேருந்தில் பயணம் செய்து, போளூர், கலசப்பாக்கம் அல்லது செங்கம் தாலுகா அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆதலால், மலைவாழ் மக்களின் வாழ்வு மேம்பட பல்வேறு திட்டங்களை வாரி வழங்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த பாடுபட்ட, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சியையும், கட்சியையும் வழி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் போளூர், கலசப்பாக்கம் மற்றும் செங்கம் பகுதிகளிலிருந்து உள்வட்டங்களைப் பிரித்து, ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கலசப்பாக்கம் கிராம ஊராட்சியை அருகிலுள்ள பூண்டி, காப்பலூர் கிராம ஊராட்சிகளுடன் இணைத்து மூன்றாம் நிலை பேரூராட்சியாகவும், புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியை முதல்நிலை பேரூராட்சியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் புதிதாக பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட படவேடு பகுதியில் அமைந்திருக்கின்ற செண்பகத்தோப்பு அணையைத் தூர் வாரி அதன் மதகுகளைச் சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட மேல்சோழங்குப்பம், புதுப்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட மசார், மேல்நாச்சிப்பட்டு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட மேல்ஆரணி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கலையரங்கம் மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் பள்ளிப் படிப்பை முடித்த பெண் குழந்தைகள் கல்வி கற்க இருபாலர் இணைந்து பயிலும் திருவண்ணாமலை அல்லது செய்யாறு அரசு கலைக் கல்லூரிகளுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆதலால், எங்கள் தொகுதியில் உள்ள ஏழையெளிய விவசாயக் கூலித் தொழிலாளர் மக்களின் பெண் குழந்தைகள் உயர் கல்வி பயில்வது என்பது எட்டாக் கனியாகவே இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கலசப்பாக்கம் தொகுதியில் தங்கும்

உணவு விடுதியுடன்கூடிய அரசு மகளிர் கலைக் கல்லூரியை வழங்க வேண்டுமாய் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கத்தில், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சில சமூக விரோதிகளின் ஆசை வார்த்தைகளால் அண்டை மாநிலங்களுக்கு சமூக விரோத செயல்களுக்காக அழைத்துச் செல்லப்பட்டு, துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகின்றனர். இதைத் தடுக்கும் நோக்கத்தில், ஜமுனாமரத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தந்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–50*

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தென்மகா தேவமங்கலம் ஊராட்சியிலுள்ள பர்வதமலை மல்லிகார்சுன சுவாமி திருக்கோயிலைத் தரிசிக்க வரும் பக்தர்களின் வசதிக்காக இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எலத்தூர் மோட்டூர் நட்சத்திரக் கோயில் அருள்மிகு சுயம்பு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் அமைத்துத் தரவும், அங்குள்ள திருக்கோயில் திருக்குளங்களைத் தூர்வாரி மேம்படுத்தித் தருமாறும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் பயணியர் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.





கலசப்பாக்கம் மற்றும் ஆதமங்கலம்புதூர் கிராமங்களில் தீயணைப்பு நிலையங்களை உருவாக்கித் தருமாறும் மற்றும் ஆதமங்கலம்புதூரில் புறக்காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த போயஸ் தோட்டத்து இல்லத்தையும், அவர் பயன்படுத்திய பொருட்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தாயுள்ளத்தோடு அரசுடைமையாக்கி *(மேசையைத் தட்டும் ஒலி)* நிரந்தரமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவு இல்லமாக மாற்றிட கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெயவம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தினந்தோறும் போயஸ் தோட்டத்திலிருந்து தலைமைச் செயலகத்திற்குப் பயணித்த கடற்கரைச் சாலைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, “என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்; ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்” என்று மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியதுபோல அனைத்து வளங்களும் நிறைந்தது நமது பாரத தேசம். அதிலும், குறிப்பாக நம் தமிழ் மண் வளம் நிறைந்த மண். அதனால்தான் வேளாண்மைத் தொழில் இங்கே சிறந்து விளங்குகிறது. இந்த வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயப் பெருமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மக்கள் போற்றுகின்ற மாதரசி புரட்சித் தலைவி அம்மா அவர்களும் எண்ணற்ற பல நல்ல திட்டங்களை, உதவிகளை, சலுகைகளை வழங்கி வந்திருக்கிறார்கள். அவர்களின் வழிவந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையிலான அரசும் அதன்படி செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் வேளாண் உற்பத்தி தன்னிறைவு பெற்று சிறந்து விளங்கியது.

இரு மடங்கு விளைச்சல், மும்மடங்கு வருமானம் என்ற உயரிய நோக்கத்தை அடைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வேளாண் பெருமக்களுக்கு விதை மானியம், உர மானியம், இடுபொருட்கள் மானியம், பயிர்க் கடன் உதவி, விளைச்சல் பாதித்தால் கடன் தள்ளுபடி, நுண்ணுயிர் நீர்ப் பாசனத்திற்கு மானியம், வேளாண் கருவிகள் வாங்குவதற்கு மானியத்துடன் கடனுதவி என எண்ணிலடங்காச் சலுகைகளையும், உதவிகளையும் வழங்கினார்கள். மழை வெள்ள பாதிப்புக்கு மட்டுமே விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கி வந்த நிலையில், தமிழகம் முழுவதுமுள்ள விவசாயிகளுக்கு வறட்சிக்காகவும் நிவாரண உதவிகள் வழங்கி வரலாற்றுச் சாதனைப் படைத்தவர் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்று ஆட்சி நடத்திய கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஆண்டுக்காண்டு உற்பத்தி அதிகரித்து வந்துள்ளது. உதாரணத்திற்குக் கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் மத்திய அரசின் புள்ளியியல் துறை அறிக்கையின்படி தேசிய அளவில் மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் மொத்த எண்ணெய் வித்து பயிர்கள் உற்பத்தியில் முதலிடமும்; கரும்பு பயிர் உற்பத்தியில் இரண்டாமிடமும்; நெல் மற்றும் சூரியகாந்தி உற்பத்தியில் மூன்றாமிடமும் பெற்று இந்தியாவிலேயே ஒரு சரித்திர சாதனையை படைத்திருக்கின்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1880 ஆம் ஆண்டு இந்தியாவில் கடும் பஞ்சம் நிலவியபோது அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி 1882 ஆம் ஆண்டுதான் வேளாண்மைக்கென ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டது. வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தேவையான பணியாளர்களுடன் இந்தத் துறை தனித்து இயங்கும் வகையில் 1904 ஆம் ஆண்டுதான் ஏற்படுத்தப்பட்டது. இப்படி பழமையான இந்தத் துறை நம்முடைய மாநிலத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்குகின்ற வகையில் எத்தனை தலைப்புகளின்கீழ் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்பதை கண்ணுற்றால் இதனுடைய சிறப்புகள் நமக்கு விளங்கும்.



பிற்பகல் 1–55

தரக் கட்டுப்பாடு, உரக் கட்டுப்பாடு, உரக் கட்டுப்பாடு ஆய்வகங்கள், மண் ஆய்வுக்கூடங்கள், பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், இடுபொருட்கள் உற்பத்தி மையங்கள், விதை உற்பத்தி மையங்கள், எண்ணெய்வித்து விதை பண்ணைகள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள், பயறு வகை விதைப் பெருக்குப் பண்ணைகள், தென்னை நாற்றுப் பண்ணைகள், உயிர் உர மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், பூச்சி மேலாண்மை மற்றும் ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், வேளாண் தகவல் பரவலாக்க மையங்கள், அம்மா சேவை மையங்கள், உழவர் பயிற்று நிலையங்கள், விதைக் கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம், பேரூட்டச் சத்துக்கள் வழங்கல், பயிர் பாதுகாப்பு மற்றும் மருந்துகள் விநியோகம், பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், அரிசி மற்றும் பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டங்கள், சிறு தானிய சாகுபடி, நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம், எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனைக்கான தேசிய இயக்கம், வேளாண் விரிவாக்க தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம், விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், இவை மட்டுமா, தேசிய மின் ஆளுமைக்கான திட்டம், வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள், தென்னை வளர்ச்சி, தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவிபெறும் திட்டங்கள், ஒருங்கிணைந்த மண் வள மேலாண்மை, பருத்தி சாகுபடி இயக்கம், நீர்வள, நிலவளத் திட்டம், பயிர் விளைச்சல் போட்டி, மனிதவள மேலாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம், மானாவாரிப் பகுதி மேம்பாடு, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், சிறு பாசனத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் மற்றும் இயக்கங்கள்மூலம் அரசு தனிக் கவனம் செலுத்தி வேளாண்மைத் துறையைத் தமிழகத்தின் முதன்மைத் துறையாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இது மக்களால் பாராட்டையும் பெற்று வருகின்றது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் கால இறுதியில் இரண்டு ஆண்டுகளுக்கான முன்னுரிமைத் திட்டங்கள் சில அறிவிக்கப்பட்டன. புதிய உத்திகளைக் கொண்டு செறிவூட்டல்மூலம் புதுமையான உணவுப் பொருட்களை உருவாக்குதல், பல்கலைக்கழகங்களில் பசுமை முயற்சியாக சூரிய மின் இயக்கப் பண்ணைகள் அமைத்தல், கால்நடை மற்றும் கோழியினக் கழிவு மேலாண்மை மையங்கள் அமைத்தல், புதுக்கோட்டையில் உள்ள மண்டல ஆராய்ச்சிப் பண்ணையில் கடந்த கல்வியாண்டு முதல் கால்நடை மருத்துவ பல்தொழில்நுட்ப வகுப்புகள் துவக்குதல் என இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த மேற்கண்ட திட்டங்களை விரைவில் துவக்கி செயல்படுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த 140 ஆண்டுகள் இல்லாத அளவிற்குக் கடும் வறட்சியை நம் மாநிலம் சந்தித்து வரும் நிலையில் வேளாண் பெருமக்கள் எந்தவகையிலும் பாதிக்கக் கூடாது, அதன்மூலம் வேளாண் உற்பத்தி குறைந்து விடக்கூடாது என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதை நாம் அனைவரும் அறிவோம். அம்மா அவர்களின் ஆட்சியை அவரது வழியில் செம்மையாக நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்ற 100 நாட்களிலேயே வேளாண் துறைக்கென பல்வேறு சலுகைகளையும், உதவிகளையும் வழங்கியுள்ளார்கள். குறிப்பாக, விவசாயிகள் 1918 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக 16 கோடியே 6 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், 7 கோடி ரூபாய் மானியத்தில் சூரிய சக்தியால் இயங்கும் 355 பம்பு செட்டுகள் வாங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 8 பாசனத் திட்டப் பணிகளில் பண்ணை மேம்பாட்டு பணிகள் 2,912 ஹெக்டேர் நிலப்பரப்பில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏரிகள் தூர் வாரும் குடிமராமத்துப் பணிகள் தொடங்கப்பட்டு, மாநிலம் முழுவதும் பல்வேறு ஏரி, குளங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 100 நாட்களில் மட்டுமே 24 ஆயிரத்து 694 ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம் அமைக்கப்பட்டு, அதற்காக 137 கோடி ரூபாய் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 29 ஆயிரத்து 622 விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.



வறட்சியால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட 1 இலட்சத்து 63 ஆயிரத்து 695 ஹெக்டேருக்கு இடுபொருள் நிவாரணத் தொகையாக 197 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது. இதன்மூலம் 3 இலட்சத்து 27 ஆயிரத்து 398 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். அதுமட்டுமல்ல, 627 பண்ணைக் குட்டைகள், 1200 தடுப்பணைகள், 312 கசிவு நீர்க்குட்டைகள், 697 ஊரணிகள், 346 சிறிய நீர்க் குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நீர்வழிப் பகுதி மேம்பாட்டு முகமையின்மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து 251 ஹெக்டேர் பரப்பளவு சாகுபடி நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 210 தூர்ந்த கிணறுகள் மழைநீர் சேகரிப்பு அமைக்க செறிவூட்டப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. வி. பன்னீர்செல்வம்:** 725 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலமற்றத் தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுப் பணிக்காக 7 கோடியே 63 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இப்படி 100 நாட்களில் வேளாண் துறையில் மட்டுமே, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் செயல்படுத்தி வருவதை மக்கள் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் எதிர்க்கட்சியின் இலக்கணம் குறித்து மறைந்தும், மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, நாங்கள் நித்தம், நித்தம் வணங்குகின்ற எங்கள் குல தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்த கருத்தினை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் என்றால் அரசின் கொள்கைகளை, திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்று பொருள் இல்லை. அரசு திட்டங்களின் நிறை, குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவதுதான் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும். மேலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தையும்

[திரு. வி. பன்னீர்செல்வம்] [2017 ஜூலை 5

அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். ‘ஆளும்கட்சி கொதிக்கிற சோறு என்றால், எதிர்க்கட்சி அதை பதம் பார்க்கின்ற அகப்பை’ என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறுவார். ஆனால் சோற்றைப் பதம் பார்க்கிறேன் என்று கூறி, பானையை உடைக்கும் பணியில் அகப்பை ஈடுபடுமேயானால், அந்த அகப்பையைப் பதம் பார்க்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இதய தெய்வம் அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை உணர்ந்து, எதிர்க்கட்சி நண்பர்கள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கழகத்தை உருவாக்கி, கட்டிக்காத்து, வளர்த்தெடுத்து எங்கள் அம்மா அவர்களின் கைகளிலே பத்திரமாக ஒப்படைத்துச் சென்ற பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிறந்து நூற்றாண்டு விழா நடைபெறும் சமயத்தில் நம் கழகம் ஆட்சியில் இருப்பது மிகவும் சிறப்பு; மகிழ்ச்சி. இந்தச் சிறப்பிற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் நம்முடைய கழக அரசும், கழகமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி வருவது மகிழ்ச்சிக்குரியது; வரவேற்கத்தக்கது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது சார்பிலும், எனது கலசப்பாக்கம் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் எத்தனையோ பேரவைத் தலைவர்களைச் சந்தித்திருக்கிறது. ஆனால், நமது பேரவைத் தலைவரைப் போன்று அமைதியாகவும், பொறுமையாகவும், அதிலும் அளவிற்கு அதிகமான பொறுமையோடும், நிதானத்தோடும், நேர்மையோடும் இந்த அவையை நடத்திச் சென்றவர் எவரும் இல்லையென்றே சொல்லலாம். இந்தப் பேரவை அவருக்கு அளித்திருக்கிற உயர்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்கள் யார் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கலாம். ஆனால், ‘மறப்போம், மன்னிப்போம்’ என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வழிப்படி, இதய தெய்வம் அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழி நடந்து, நம்மை வழி நடத்திய புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் பெற்ற பயிற்சியின் விளைவாக இந்த அவையை அமைதியாக விதிப்படியும், மரபுப்படியும், சட்டப்படியும் சரியான முறையில் நடத்திச் செல்கிறார்கள். அதற்காக அவர்கள் மன்றாடுகிறார்கள்.



2017 ஜூலை 5] [திரு. வி. பன்னீர்செல்வம்]

இந்த மாண்புடையச் செயலை நாங்கள் அனைவரும் மதிக்கிறோம், பாராட்டுகிறோம், வணங்குகிறோம், நன்றி தெரிவிக்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியல் புயலும், பூகம்பமும் ஒரு சேர வந்தாலும், சதி எனும் சூறாவளி எங்களைச் சுற்றி, சுற்றி சுழன்றடித்தாலும் கழகக் கோட்டையையோ, கழகத்தின் ஆட்சியையோ ஒரு சிறிதும் சேதாரப்படுத்திவிட முடியாது. சிங்கத்தின் குகையிலே சிறு நரிகள் விளையாட நினைக்கின்றன. எங்கள் தங்கத் தலைவி அம்மாஅவர்களின் கோட்டையை சில சிற்றெறும்புகள் தகர்க்க நினைக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒருபோதும் நடக்காது, முடியாது என்பதைக் காலம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல, இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் கழக ஆட்சி தொடரும். எதிரே இருப்பவர்கள் வாழ்நாள் முழுவதும் எதிர்க்கட்சி வரிசையிலேதான் அமர்வார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி எனது தொகுதி கோரிக்கைகளை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்து பணிமனை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் கோமுட்டேரி ஏரியினைத் தூர் வார வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளையும் மேம்படுத்த

[திரு. வி. பன்னீர்செல்வம்] [2017 ஜூலை 5

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் மூலிகைப் பண்ணை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை, ஜமுனாமரத்தூரில் வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பம், மிருகண்டா நதி நீர்தேக்கத்தைத் தூர் வாரி, பூங்காக்கள், தங்கும் விடுதி, வணிக வளாகம் அமைத்து சுற்றுலாத் தலமாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, மிருகண்டா நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, ஆணைவாடி ஊராட்சி, செய்யாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலத்தை சிறப்பு நிதி ஒதுக்கத்தில் விரைவில் கட்டி முடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் பயணியர் தங்கும் விடுதி கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில், திருமாமுடிஸ்வரர் திருக்கோயிலுக்கு மரத்தேர் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5] [திரு. வி. பன்னீர்செல்வம்]

கலசப்பாக்கம் தொகுதி, மேல்வில்வராயநல்லூர் ஊராட்சி, வில்வராணி கிளை நூல்நிலையத்தை பழுது நீக்கி, சுற்றுச்சுவர் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, மேல்வில்வராயநல்லூர் ஊராட்சி, கச்சேரிமங்கலம் ஏரிக்கரையோரம் பக்கச்சுவர் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, காந்தப்பாளையம் ஊராட்சி, புதியதாக ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, கெங்கவரம் ஊராட்சி, நவாப்பாளையம் கிராமம், கழிவறை வசதியுடன் கிராம சமுதாய கூடம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, மேல்வில்வராயநல்லூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனிக்கு புதிய திறந்தவெளி கிணறு மற்றும் பைப்லைன் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கலையரங்கம் மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியை முதல் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, கீழ்தாமரைப்பாக்கம் முதல் கோயில்மாதிமங்கலம் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, காரப்பட்டு முதல் மட்டவெட்டு வரை மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, அல்லியந்தல் முதல் ஜப்திகாரியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, அன்னந்தல் முதல் அல்லியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, காஞ்சி முதல் ஒரவந்தவாடி வரை இடுகாத்தூர் அருகே செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, காரப்பட்டு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, காரப்பட்டு ஊராட்சி, நேரடி நெல் கொள்முதல் நிலையம் மற்றும் கட்டடம் கட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் முதல் தேவனந்தல் ஊராட்சி வழியாக புதுப்பாளையம் வரை தார்ச்சாலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சி, ஆற்றுக்கால்வாய் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சியில் புதிய திறந்தவெளி கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சி, வேடியப்பன் நகர், புதியதாக 1.5 கி.மீ. தூரம் தார்ச்சாலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படிஅக்ரஹாரம் ஊராட்சி, புதியதாக ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சி, அருள்மிகு படவேடு ரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, செண்பகத்தோப்பு அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சியில் மருத்துவமனை மற்றும் வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ இரத்தினசபாபதி அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். உறுப்பினர் நீங்கள் பேசுங்கள்.





**திரு. ஏ. இரத்தினசபாபதி:** கருணையும், கண்டிப்பும் நிறைந்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற புதிய உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பையும், நேரத்தையும் வழங்கும் தங்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். போற்றுதலுக்கும், புகழுக்கும் உரிய பொன்மனத் தலைவி துயில் கொள்கின்ற நினைவாலயம் நோக்கி தொழுகிறேன். சாதாரண தொண்டர்கள் மீதும், சாமானிய மக்கள் மீதும் எந்த அளவிற்குப் பாசம் கொண்டிருந்தார் என்பதை என் வாழ்க்கையிலும் சந்தித்தேன் என்பதற்கு இந்தச் சம்பவம் சான்றாக அமைந்தது.

பிற்பகல் 2–05

எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் உடல்நலம் குன்றி அப்பல்லோ மருத்துவமனையில் இரண்டாவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பெற்றபோது, நான் அதே மருத்துவமனையில் இதய பரிசோதனைக்காக Angio செய்வதற்காக மூன்றாவது தளத்தில் சேர்க்கப்பட்டிருந்தேன். இதனை மருத்துவர்கள்மூலம் தெரிந்து கொண்ட எங்கள் அன்புத் தாய், தனது உதவியாளர்களை அனுப்பி வைத்து, எனது உடல் நலத்தை விசாரித்ததோடு அல்லாமல், உடனிருந்த எங்கள் தியாகத் தலைவி சின்னம்மா அவர்களை அழைத்து, சிகிச்சைப் பெற்று வரும் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் இரத்தினசபாபதி மற்றும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வெற்றிவேல் ஆகியோரின் உடல் நலனையும் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, தன் உடல் நலத்தைப் பற்றி கவலைப்படாமல், கடைக்கோடியில் வாழ்கின்ற இந்தச் சாதாரண தொண்டனைப் பற்றி கவலைப்பட்ட கருணைத் தாயை இழந்துவிட்டோம்.

உலக வரலாற்றிலேயே வேறு எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவிற்கு, அவர் இந்த மண்ணுலகை விட்டு மறைந்து, இன்றோடு 212 நாட்கள் ஆனபிறகும், அவர் நினைவிடத்தில் மக்கள் குடும்பம், குடும்பமாக, கிராமம், கிராமமாக காலையிலிருந்து, இரவு வரை வரிசையில் நின்று தரிசித்து விட்டு செல்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட ஆற்றல்மிக்கத் தலைவியை. புரட்சித் தலைவர் நமக்குத் தந்து விட்டுப் போனார். அந்த ராமன் தேடித் தந்த சீதையை இழந்து விட்டோம். தலைவன் பாடிய காதல் பாடல் நம் செவிகளில் சோகப் பாடலாக மாறி சுட்டெரிக்கிறது.

"எங்கே அவள்

என்றே மனம்
தேடுதே ஆவலால், ஓடிவா
அங்கே வரும்
பாடலைக் கேட்டதும் கண்களே பாடிவா"

என்ற புரட்சித் தலைவருடைய பாடல் நமக்கு சோகமாக வந்து துக்கம் தொண்டையை அடைக்கிறது. கண்கள் குளமாகிறது. எல்லாமே முடிந்து விட்டது.

நாம் அவருக்குச் செலுத்த வேண்டிய அஞ்சலி, எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, கட்சியையும், ஆட்சியையும் அம்மா காட்டிய வழியில் தமிழக மக்களுக்கும், தமிழகத்திற்கும் அவர் ஏற்படுத்தித் தந்த திட்டங்களை, தடையில்லாமல் கிடைக்கச் செய்து, அவர் மீட்டுத் தந்த தமிழக உரிமைகளைக் காத்து, அவர் கண்ட இலட்சியக் கனவுகளை நிறைவேற்றுவோம் என்ற சபதம் ஏற்று, இலட்சிய நடைபோடுவோம்.

பல தலைமுறைகளாக விவசாயம் செய்து வந்த குடும்பத்தில் பிறந்து, இன்றும் விவசாயம் மட்டுமே குலத் தொழிலாக செய்து வரும் எனக்கு, இந்த மாபெரும் அவையில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த அனைவருக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள்
"கடவுள் என்னும் முதலாளி,
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி"
என்றும்
"முன்னேற்ற பாதையிலே மனச வைத்து
முழுமூச்சா அதற்காக தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ
வழங்கும் குணம் உடையோன் விவசாயி"

என்றும் விவசாயிகளை வாழ்த்திப் பாடினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல இந்த நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருக்கலாம்; கொடி இருக்கலாம்; சின்னம் இருக்கலாம். ஆனால், விவசாயியின் கொடி உயரப் பறந்தால்தான், உலகம் செழிக்கும் என்ற நோக்கில் "இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக் கொடி, எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி, பறக்க வேண்டும் எங்கும்



ஒரே சின்னக்கொடி, அது பஞ்சம் இல்லையெனும் அன்னக் கொடி" என்று முழுங்கினார் புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழ்நாள் சாதனையாளராக வாழ்ந்து காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, என்ன தொழில் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, நான் ஒரு விவசாயி என்று குறிப்பிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள்மீது உள்ள பற்றையும், பாசத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

மிகப் பெரிய சட்டப் போராட்டத்தை நடத்தி, காவேரியில் நமக்குள்ள உரிமையை அம்மா பெற்று தந்ததற்கு, சோழ மண்டலமே திரண்டு பாராட்டு தெரிவித்தபோது, அந்தக் கூட்டத்தில் அம்மா சொன்னார்கள், எத்தனையோ சாதனையை நிகழ்த்தியிருக்கிறேன். ஆனால், காவேரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பை பெற்றதுதான் என் வாழ்நாள் சாதனையாகக் கருதுகிறேன் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் காட்டியவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விழிநீரைத் துடைத்தெறிந்த விரல்களுக்குச் சொந்தக்காரர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு விடியலைத் தந்தவர் அம்மா. விவசாயிகள் வெள்ளை வேட்டி, சட்டை போட்டு வெளியே வந்தது அம்மா ஆட்சியிலேதான். ஒருகாலத்திலே தமிழ்நாட்டு விவசாயி அண்டை மாநிலங்களிலேபோய் அடிமையாய் வேலைபார்த்த காலம் போய் இன்று வடமாநிலங்களிலிருந்து கூலித்தொழிலாளியாய் நம்மவர்களிடத்தில் வந்து வேலைபார்க்கின்ற பொருளாதாரப் புரட்சியைச் செய்தவர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களால் நேசிக்கப்படுகின்ற இந்த வேளாண்மைத் துறைக்கு அம்மா அவர்களையே பூஜித்துக் கொண்டிருந்த ஆரம்ப காலத் தொண்டர் மாண்புமிகு சகோதரர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்களை அமைச்சராகத் தேர்வு செய்தார்கள். இவர் சொந்த மண்ணோடும், மனிதர்களோடும் இரண்டறக் கலந்து நிற்கும் எளியவர். மூன்று முறை தொடர்ந்து ஒரே தொகுதியில் வெற்றிவாகைச் சூடிய மனிதநேயப் பண்பாளர்.

அம்மா அவர்களின் ஆசியோடு வேளாண்மைத் துறையை சிறந்த துறையாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த சாதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்றால், 140 ஆண்டுகள் கண்டிராத வறட்சி, இயற்கைச் சீற்றம், எதிர்பார்த்த அளவிற்கு மைய அரசின் நிதி கிடைக்காத சூழ்நிலையிலும், மைய அரசின் மானியங்கள் இரத்து என்ற நிதிச் சுமைகள் இருந்தாலும் அனைத்தையும் இந்த அரசு தோள்களிலே சுமந்துகொண்டு, நிதிச் சுமைகள் மக்களைத் தாக்காத வகையில், தமிழக சட்டமன்ற வரலாற்றில் இரண்டு முறை வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த அரசு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அத்துடன் கூட்டுறவுக் கடன்கள் இரத்து, நில வரி இரத்து, வறட்சி நிவாரணம், பயிர்க் காப்பீட்டுத் தொகை என எண்ணற்றச் சலுகைகளை வழங்கும் அரசு அம்மா அவர்களின் அரசு. (குறுக்கீடு) அருமைச் சகோதரர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒரு சரியான தகவலை எனக்குக் கொடுத்ததற்கு நன்றி. 6 முறை வரி இல்லாத பட்ஜெட்டை வழங்கிய அரசு அம்மா அவர்களின் அரசு என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஆதாரமில்லாமல் எல்லாம் சொல்ல மாட்டார். அவரெல்லாம் ரொம்ப முக்கியமானவர். நான் புதிய உறுப்பினர். அவர் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையை தொடருங்கள். தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** புனிதத் தாயின் ஆட்சிதான் கல்வித் துறையின் பொற்காலம் என்று சொல்லலாம். அவர் உறுதியாகப் போட்டு வைத்த அஸ்திவாரத்தில்தான் அழகிய கல்வி மாளிகையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் எங்கள் இயக்கத்தின் உதய காலத் தலைவர்களில் ஒருவரும், கழகத்தின் அவைத் தலைவரும், அவை முன்னவரும், கல்விக் காவலருமாகிய அன்புச் சகோதரர் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். எங்கள் மாவட்டத்திலே பல கல்விக்கூடங்களைத் தரமுயர்த்தித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, அறந்தாங்கியில் நாங்கள் கோரிக்கை வைத்த 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்கியதோடு மட்டுமல்லாமல், சுற்றுச் சுவர், கழிப்பறை மற்றும் புதிய கட்டடங்கள், நூலகங்கள் என்று எல்லாவற்றையும் அமைப்பதற்கு ஆணையிட்டதற்கு முதலில் எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குகிற கோரிக்கைக்கு மைய அரசின் அனுமதி வாங்க வேண்டுமென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். கல்வித் துறையில் உள்ள ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப வேண்டியுள்ளது. எத்தனையோ சாதனைகளை நிகழ்த்திய தாங்கள் இவற்றையும் செய்து தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.



அடுத்ததாக, உள்ளாட்சித் துறையின் அமைச்சர், கோவை ஈன்றெடுத்த குணக் குன்று, அம்மா அவர்களின் அன்புத் தம்பி. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உழைப்பால், உத்வேகத்தால் உள்ளாட்சித் துறையில் நிதியும், திட்டங்களும் அடிமட்ட மக்களையும் சென்றடைந்திருக்கிறது. குறிப்பாக, இந்தக் கொடூரமான வறட்சியிலும் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு, எப்படி வரலாற்றில் அனைத்துச் சாலைகளும் ரோம் நகரை நோக்கித் திரும்பட்டும் என்று சொல்வார்களோ, அதைப்போன்று, அனைத்து நிதிகளும், திட்டங்களும் குடிநீர் வழங்க திரும்பட்டும் என்று திருப்பி விட்டவர் அருமை அண்ணன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். ஊடகங்களும், எதிர்க்கட்சிகளும் சென்னையில் இன்னும் ஒரு மாதத்தில் தண்ணீர் இருக்காது; இரண்டு மாதங்களில் தண்ணீர் இருக்காது. தட்டுப்பாடு வந்துவிடும் என்று 10 மாதங்களாக பயமுறுத்திக் கொண்டிருந்தாலும், குடிநீர் தட்டுப்பாடின்றி தலைநகரின் தாகம் தீர்த்த ஆட்சி அம்மா அவர்களின் ஆட்சி.

பிற்பகல் 2–15

எங்கள் அறந்தாங்கி தொகுதியில் உள்ளாட்சித் துறை மூலமாக பல பணிகள் நிறைவேற்றப்பட்டதற்கு மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். கடந்த முறை சட்டமன்றத்தில் நான் பேசியதற்குப் பின்னால், அறந்தாங்கி நகராட்சி முழுவதுமாக இயங்க ஆரம்பித்துவிட்டது. இன்னும் அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்படவேண்டும். தஞ்சாவூர் சத்திரம் நிருவாகத்திற்குச் சொந்தமான இடத்தை கையகப்படுத்தி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்திட வேண்டும். ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி, மீமிசல், கோட்டைப்பட்டினம் ஆகிய ஊர்களில் சிறிய பேருந்து நிலையங்களை அமைத்துத்தர வேண்டும்

[திரு. ஏ. இரத்தினசபாபதி] [2017 ஜூலை 5

என்றும், காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அமைச்சரவையிலே, மீனவர் சமுதாயத்தில் பிறந்த அன்புச் சகோதரர் மீன் வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்களை 3 முறை அமைச்சராக அமரவைத்து அழகு பார்த்தார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலே கடற்கரை அமைந்துள்ள தொகுதி அறந்தாங்கி தொகுதி. அங்கே வாழும் மீனவர்களுக்காக பல திட்டங்களைக் கேட்டு, கடந்த ஆண்டு மீன்வளத் துறை மானியக் கோரிக்கையிலே பேசினேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நிதி இல்லை என்று கூறி நிராகரித்துவிட்டார்கள். இப்போது நிதியே உங்களைத் தேடி வந்திருக்கிறது. மாநில கஜானாவே உங்கள் கையில் இருக்கிறது. எங்கள் தொகுதிப் பக்கம் அந்த கஜனாவைத் திருப்பிவைத்து திறந்துவிடுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஆலங்குடியில் கடற்கரை இல்லை. இல்லையென்றால் அவருக்கும் சேர்த்தே சொல்லியிருப்பேன். வேண்டுமென்றால் உள்நாட்டு மீனவர்களுக்கு ஏதாவது சலுகை செய்யச் சொல்லலாம்.

வருவாய்த் துறை அமைச்சராக வலிமையோடு பணியாற்றுகின்ற மாநில அம்மா பேரவையின் மதிப்புமிக்கச் செயலாளரும், அம்மா அவர்களின் ஆற்றல்மிகு தம்பியும், எங்களுடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், இன்றைக்கு வருவாய்த் துறை மூலமாக பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார். எங்களுடைய அறந்தாங்கி தொகுதியில் 3 வட்டங்கள் உள்ளன. அதில் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமையானது; பழுதடைந்துள்ளது. அதை அகற்றிவிட்டு புதிய கட்டடத்தைக் கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நமது அரசு பல நிவாரணத் தொகைகளை அதிகரித்து வழங்கி வருகிறது. ஆனால், தீப்பிடித்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வெறும் 5,000 ரூபாய் மட்டுமே தொடர்ந்து எல்லா ஆட்சிக் காலத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. தீயினால் பாதிக்கப்பட்டு, அனைத்து உடைமைகளும் இழந்துவிட்ட குடும்பத்திற்கு 5,000 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகை என்பதால், குறைந்தது 50,000 ரூபாய் அல்லது பாதிப்பிற்குத் தகுந்தாற்போல் நிவாரணம் வழங்கி அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜூலை 5] [திரு. ஏ. இரத்தினசபாபதி]

எல்லா தரப்பினருக்கும் வாரி வழங்கிய நம் அம்மா அவர்கள், முதியோர்களுக்கும் வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு அள்ளி, அள்ளிக் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல. 'முதியோர்களாகிய உங்களை உங்கள் பிள்ளைகள் கைவிட்டிருக்கலாம், நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லி அதிகமான நிதியை ஒதுக்கி, ஆதரவு தந்தார்கள். ஆனால் ஒரு சில இடங்களில் சின்ன, சின்ன குறைகள் இருக்கின்றன. அதனால் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைத்து, முதியோர் உதவித் தொகை வழங்குவதை முறைப்படுத்த வேண்டுமாறு அன்புடன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டும். இன்று பெரும்பான்மையான உறுப்பினர்கள் car வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு driver தேவைப்படுகிறார். ஒவ்வொருவருக்கும் ஓர் உதவியாளர் தேவைப்படுகிறார். நாங்கள் வாங்குகிற சம்பளத்தை அவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கே சரியாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) உங்களுக்கும் சேர்த்துதான் பேசுகிறேன். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிகமானச் செலவு கிடையாது, பிரித்துக் கொடுப்பதற்குச் சரியாக இருக்கிறது. எனவே, சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதோடு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையும் ஒரு கோடி ரூபாய் அதிகரித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதை உறுப்பினர்கள் விரும்பும் சில திட்டங்களுக்கு ஒதுக்க வழிவகை செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லா அமைச்சர்களுக்கும் கோரிக்கைகள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், காலம் கருதி அனைத்தையும் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களிடம் கொடுக்கிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** கொடுத்துவிடுங்கள், பதிவு செய்துகொள்ளலாம்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** ஏனென்றால், அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும், அம்மா இருந்திருந்தால், அம்மா

அவர்களின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையில் எந்தளவிற்குச் செயல்படுவார்களோ, அதேபோல், அவர்களுடைய ஒவ்வொரு துறையையும் முன்னணிக்குக் கொண்டுவர வேண்டுமென்று இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லுகின்ற காரியத்தை உடனே செய்து முடிக்கின்ற ஆற்றல் படைத்தவர்கள் எங்கள் மாண்புமிகு அமைச்சர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றுகூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறந்தாங்கி மருத்துவமனைக்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதியை அறிவித்தார்கள். புதுக்கோட்டைக்கு அடுத்து பெரிய மருத்துவமனை அறந்தாங்கி மருத்துவமனை. அதற்கு ஏன் நிதி ஒதுக்கீட்டை அறிவித்தார், தலைமை மருத்துவமனையாகவே அறிவிக்க வேண்டியதுதானே என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோதே, இன்றைக்கு அதை தலைமை மருத்துவமனையாகவும் அறிவித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என்னுடைய நன்றி. அதை அறிவிக்க வைத்த ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களுக்கும் என்னுடைய நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் 3, 4 பேர் பேச வேண்டும்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** இன்னும் கொஞ்சம்தான், சுருக்கமாகப் பேசி முடித்து விடுகிறேன். கடுமையான வறட்சியால் தங்களது விவசாயம் கருகிப் போனதை நினைத்து ஒரு சிலர் வேதனையிலும், விரக்தியிலும் இறந்திருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், பட்டினிச் சாவு என்பது இல்லவே இல்லை, இருக்கவும் முடியாது. ஏனென்றால், அம்மா வழங்கிய 20 கிலோ விலையில்லா அரிசியை இந்த அரசு தொடர்ந்து வழங்கிக்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்ல, முதியோர்களுக்கு 35 கிலோ அரிசி, சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்குக் கலவை சாதம், கூடவே சத்துணவும் வழங்கப்படுகிறது. அரிசியை வாங்கி வந்து சமைப்பதற்கு சங்கடமாக இருந்தால், அம்மா உணவகத்திற்குச் சென்று இட்லி ஒரு ரூபாய், சாம்பார் சாதம் 5 ரூபாய், தயிர் சாதம் 3 ரூபாய் என்று வாங்கி சாப்பிடலாம். அதற்கும் வழியில்லையென்றால், பக்கத்தில் இருக்கின்ற திருக்கோயிலுக்குப் போனால், திருக்கோயில் அன்னதானத் திட்டத்தில், சாதம்,



கூட்டு, பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாய், வடை, பாயாசம், அப்பளத்தோடு திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு எப்படி வரும் பட்டினிச் சாவு?

அடுத்ததாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பெரியவர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள், இங்கு நகைச்சுவையாகவும், யதார்த்தமாகவும் நன்றாகப் பேசினார். பேசுகின்றபொழுது ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தினார். அதாவது, அவருடைய செயல் தலைவரைக் காவல் துறை கைது செய்ய வந்தபோது, அவர் தந்தையே அனுப்பி வைத்தார் என்றும், அவரைச் சிறையில் தள்ளி கொடுமைப்படுத்தியதாகவும் கூறினார். (குறுக்கீடுகள்) அவர் உரையாற்றியதுதான். அவர் உரையாற்றியதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** இல்லையில்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** அவர் உயிரோடு திரும்பி வருவாரா என்பது சந்தேகமாக இருந்தது என்று கூறினார். இவையெல்லாம் நடந்தது எப்போது? யாருடைய ஆட்சியில் என்பதை வசதியாக மறந்துவிட்டாரா அல்லது மறைத்துவிட்டாரா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** இந்த நிகழ்ச்சிக்கெல்லாம் காரணமானவர்கள் உங்களோடு தோளோடு தோள் நிற்கின்ற தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சிதான் என்பதை நீங்கள் மறைத்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதிலே உங்களுக்கு ஏதாவது சந்தேகம் என்றால் பக்கத்தில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்களிடம் நீங்கள் விளக்கமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இந்த மன்றத்தில் கேட்பதற்குத் தயக்கமாக இருந்தால், நீங்கள் வெளிநடப்புச் செய்கின்றபோது உங்கள் பின்னாலேயே வருகின்ற அவர்களிடம் 'ஏன் எங்கள் செயல் தலைவரைக் கைது செய்து கொடுமைப்படுத்தினீர்கள்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 2–25*

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** அதை விடுத்து, ஏதோ எங்கள் மாண்புமிகு சட்ட அமைச்சர், இளைய தளபதி திரு. சி.வி. சண்முகம் அவர்கள் உத்தரவு போட்டு, காவல் துறை கைது செய்ததுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவது நியாயமா என்பதைக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** அடுத்ததாக ஒரு கருத்தைச் சொன்னார். அது நியாயமான கருத்து. அடுத்துச் சொன்ன கருத்து, நியாயமான கருத்து.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** அதை நான் மறுக்க முடியாது. அதிலே நாங்கள் என்ன உதவி செய்ய முடியும் என்றுதான் எங்களுக்குத் தெரியவில்லை. உத்தரப் பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் தன் மகன் அகிலேஷ் யாதவுக்கு காலா காலத்தில் முதல்வர் பதவியை விட்டுக்கொடுத்து, முதல்வராக அமர வைத்தார். (குறுக்கீடுகள்) அவர் பேசியதுதான், இங்கே பதிவாகி இருக்கிறது.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து குறுக்கிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குற்றச்சாட்டு சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.



**திரு. ஏ. இரத்தினசபாபதி:** இன்னும் பல மாநிலங்களில் மகனுக்கு தந்தைகள் மனமுவந்து விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், “எங்கள் தலைவரோ, எங்கள் செயல் தலைவருக்குக் கடைசி வரையிலும் விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார்” என்று இங்கே வருத்தப்பட்டார். நியாயமான வருத்தம். இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? இது உங்கள் உட்கட்சிப் பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் தலைவரிடம் கேட்க வேண்டிய கேள்வி. உங்கள் கட்சிப் பிரச்சினைகளில், இல்லை, தந்தைக்கும் மகனுக்கும் உள்ள குடும்பப் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு நாங்கள் யார்? இந்த மன்றத்தில் முறையிடுவது நியாயம்தானா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Conclusion வந்துவிட்டார்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** தமிழகத்தில் இன்று பெரும் தலைவர்கள் (குறுக்கீடுகள்) பேசியவற்றிற்குப் பதில் சொல்லக் கூடாதா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** ஏன், மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நாங்கள் சிரித்துக்கொண்டிருந்தோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** இதோ முடித்துவிடுகிறேன். 15 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வேறு சப்ஜெக்ட்டிற்குப் போய்விட்டார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** தமிழகத்தில் இன்று பெரும் தலைவர்கள் இல்லாத சூழலில் இருக்கின்ற நாம், ஒற்றுமையாகச் செயல்பட்டால் மக்களுக்குப் பல நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த முடியும். எதிர்க்கட்சிகள் என்றால் எங்களைப்

புகழ்ந்து பேசுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது. தவறு செய்தால் சுட்டிக்காட்டுங்கள். தப்பு செய்தால் தட்டிக் கேளுங்கள். அதை விட்டுவிட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை அகற்றி விட வேண்டுமென்று நினைப்பது என்ன நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள், conclusion–க்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அவர் ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உரையை முடியுங்கள், conclusion–க்கு வாருங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** ஏதோ அவர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். 4, 5 மத யானைகள் எங்களை விரட்டி வருவதைப் போலவும்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** நாங்கள் பயந்து கொண்டு பாழுங் கிணற்றில் விழ வேண்டும் என்றும், அங்கே ஒரு தலை, இரண்டு தலை நாகம்கூட கிடையாது, 5 தலை நாகம் எங்களைத் தீண்ட வேண்டுமென்று ஆசைப்பட்டு கதை சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்,

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** ஐந்து தலை நாகம் தீண்டினாலும் சரி, இல்லை, (குறுக்கீடு) பத்து தலை நாகம் தீண்டினாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. அதற்கான பயிற்சியை எங்கள் தலைவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் பொதுவாகத்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) குறிப்பிட்டு உங்களைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** சமீபத்தில் ஆர்ப்பாட்டம் செய்ய புதுக்கோட்டைக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மேடையிலே பேசுகின்றபொழுது, நான் பேசி இறங்குவதற்குள் இந்த ஆட்சி கலைக்கப்பட்டுவிடும் அல்லது நான் சென்னைக்கு செல்வதற்குள் இந்த ஆட்சி கலைக்கப்பட்டுவிடும் என்று தன் கனவை மேடையிலே பேசினார்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஏதாவது பேசுகிறீர்களா?

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** கலைக்க வேண்டும், முடக்க வேண்டும், அறுக்க வேண்டும் என்று அபசகுனமாகப் பேசுகின்றார்கள். இது என்ன நினைத்தவுடன் கலைப்பதற்கு வீட்டு வாசலில் போட்ட மாக்கோலமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடு)

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** நீங்கள் நினைத்தவுடன் கலைப்பதற்கு, கடற்கரையில் சிறுவர்கள் கூடி விளையாடுகின்ற மணல் வீடா? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்றி வைத்த இலட்சிய தீபம் இந்த ஆட்சி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் கட்டிய எஃகுக் கோட்டை இந்த இயக்கம். இதை எந்த சக்தியாலும் அணைக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உரையை முடிக்கிறார்.

பிற்பகல் 2–30

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** கடலை விட்டு அலையைப் பிரிக்கலாம், கதிரவனை விட்டு ஒளியைப் பிரிக்கலாம், மலரை விட்டு மணத்தைப் பிரிக்கலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** அவர் பொதுவாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** ஆனால், மக்கள் சக்தியை வைத்து இந்த ஆட்சியையும், கட்சியையும் பிரிக்க எந்தச் சக்தியாலும் முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இறுதியாக ஒன்றைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** பல்லாயிரம் உயிர்களுக்குப் பசி தீர்த்த எங்கள் பரங்கிமலை பாரி புரட்சித் தலைவரின். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உங்களைப் பற்றிச் சொல்லவில்லை, உட்காருங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** நூற்றாண்டு விழாவை நிரந்தர முதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் தலைமையில் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். அதைப்போல, வீரத்தின் விளை நிலமாய், வெற்றியின் திருமகளாய் ஆட்சி செய்த எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நூற்றாண்டு விழாவையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் தலைமையில். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** உட்காருங்கள். அவர் சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** இந்த ஆட்சி நடத்தும் என்பதைச் சொல்லி, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பொதுவாகத்தானே சொன்னார். உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே. (குறுக்கீடுகள்) Proceedings–ஐப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) Proceedings–ஐப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள்.



(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, Proceedings–ஐப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்தில், நாங்கள்தான் ஆட்சியைக் கலைப்பதுபோல பேசினார். ஒற்றுமையாக இருந்து, இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் சொன்னார். உங்கள் அணியில் 122 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டுதான் இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. உங்கள் கட்சிக்குள்ளேயே எத்தனையோ பிரிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) பல பிரிவுகள் இருக்கின்றன. யார், யார், எந்த அணியில் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) எனவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது, **

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசுகின்றபோது, ** என்று கேட்டார்கள். இந்த சபையில் இருக்கின்ற யாருமே அதற்குத் தயாராக இல்லை. இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் எல்லோருக்கும் இருக்கின்றதே தவிர, வேறு கருத்து இல்லை என்பதை நான் அறிவேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த அருமை அன்னை திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், மாண்புமிகு திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், எனது அருமைத் தலைவர் அண்ணன் ஆர். பிரபு அவர்களுக்கும், மாண்புமிகு கலைஞர் ஐயா அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மைத் துறையைச் சார்ந்து நிறைய தொழில்கள் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் தேயிலை தொழிற்சாலைகளிலிருந்து 'Catechin Powder' கிடைக்கிறது. முதல் முறையாக ரூ.4 கோடியை இரண்டு தொழிற்சாலைகளுக்கு அளிக்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த கேட்டசின் பவுடரானது மருத்துவ குணம் கொண்டது. 20 கிலோ பசுந்தேயிலையிலிருந்து, 1 கிலோ 'Catechin Powder' கிடைக்கும். நிச்சயமாக இதற்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது. ஆனால், அது நடைமுறைக்கு வருவதற்கு நிச்சயமாக ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் ஆகும்.

கடந்த ஆட்சியில் மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பசுந்தேயிலைக்கு 2 ரூபாய் மானியம் அளித்தார்கள். ஓராண்டுக் காலம் அந்த மானியத் தொகை நல்ல முறையில் வந்துகொண்டிருந்தது. கடந்த ஓராண்டுக் காலமாக அந்த மானியத் தொகை எங்களுக்குக் கிடைக்கவில்லை. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 22 ரூபாயாக இருந்த பசுந்தேயிலையின் விலை தற்போது 12 ரூபாயாகக் குறைந்துவிட்டது. தயவுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, அந்த மானியத் தொகையை 5 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*பிற்பகல் 2–35*

அடுத்தபடியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் நீலகிரி மாவட்டமானது கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே நிறைய இடங்களில் jewel loan என்று சொல்லக்கூடிய தங்கத்திற்கான கடன் தொகையை வசூலிக்க board-களிலே நமது போட்டோவை திருடர்களைப்போல, மறைக்கப்பட்ட மனிதர்களைப்போல ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். திருடர்களைப்போல சித்தரித்து வங்கியினுடைய அறிவிப்புப் பலகையிலே ஒட்டியிருப்பதை உடனடியாக திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை உதகையில் சந்தித்து நான் பேசினேன், அங்கேயிருக்கிற நகராட்சி அந்த வேலைகளை எங்களுக்கு செய்ய இயலாது. அதிகமான செலவுகள் வரும். ஓர் ஆண்டிற்கு கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் வருமானம் நமது தோட்டக்கலைத் துறைக்கு வந்து கொண்டிருக்கிறது. தோட்டக்கலைத் துறையின் வருமானமான 18 கோடி ரூபாயிலே ஏதோவொரு பங்கினை நகராட்சிக்கு வழங்க வேண்டும். மரியாதைக்குரிய இன்றைய வேளாண் துறை செயலாளர் அவர்கள் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர்தான். அவர் இதை மனதிலே கொண்டு அமைச்சருடன் பேசி இதற்கான ஓர் ஆணையைப் பிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாப் பயணிகளால் ஏற்படும் அனைத்து குப்பைகளை அகற்றவும், தண்ணீர் வசதி உள்ளிட்ட அனைத்தையும் மேற்கொள்ள நகராட்சிக்கு நிச்சயமாக ஒரு பங்குத் தொகையினை அளிக்கும் வகையில் அரசாணை ஒன்று வெளியிட வேண்டுமென்று இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே e-வேளாண்மைக்கு நான் வரவேற்பு தெரிவித்திருக்கிறேன். காரணம் இனி வருங்காலத்தில் e-வேளாண்மை மற்றும் e–trading தான் நடைமுறைப்படுத்தப்படும். நீங்கள் e–trading–ஐ நடைமுறைப்படுத்துவதற்கு முன்னால் தயவுசெய்து பழைய காலங்களில் Training and Visit–TV என்று சொல்வார்கள். அந்த அலுவலர்கள் எல்லா கிராமங்களுக்கும் நிச்சயமாகச் சென்று பார்வையிடுவார்கள். இப்பொழுது அலுவல் காரணமாக அவர்கள் office–ல் இருக்க வேண்டிய கட்டாயம். அவர்கள் தோட்டங்களுக்குப் போவதில்லை. அதனால், தயவுசெய்து அலுவல் நேரத்தைக் குறைத்து அலுவலர்கள் நிச்சயமாக அனைத்து விவசாயிகளையும் சந்தித்து, அவர்கள் சந்தேகங்களுக்கு ஒரு முடிவு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு நல்ல கருத்தினைக் கூறவேண்டும்.

Food Safety and Standards Authority of India (FSSAI) என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. இந்த Food Cell பணியானது கண்டிப்பாக adulterated foods–ஐ பிடிப்பதுதான். இதில் என்ன கொடுமை என்று பார்த்தீர்களென்றால், மாம்பழம், வாழைப்பழங்களில் carbon வைப்பது மாதிரி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். எந்த பழத்தில் என்ன இருக்கிறது என்று கடைக்காரனுக்கும் தெரியாது, மக்களுக்கும் தெரியாது. அதனால் இந்த FSSAI அமைப்பு வாரத்தில் 4 நாட்கள் வேளாண் பொருட்கள் விளையும் ஒவ்வொரு இடத்திற்குச் சென்று, அதில் இரசாயனம் கலந்திருக்கிறதா என்பதை நிச்சயமாகக் கலந்தாய்வு செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பாக பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். தேயிலையிலும் கலப்படம் அதிகமாக இருக்கிறது. அதற்கும் இந்த அமைப்பைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிழங்கானாலும் சரி, தக்காளியானாலும் சரி நான்கு நாட்களுக்கு பிறகு rate இல்லாமல் தெருவில் கொட்ட வேண்டிய நிலை வரும். அதை சேமிப்பதற்கு அரசாங்கம் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்து அனைத்து விவசாயிகளுக்கும் உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வைரவிழா கண்ட நாயகர் மரியாதைக்குரிய ஐயா கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம் உழவர் சந்தை. அந்த உழவர் சந்தைக்கு இந்த முறை பட்ஜெட்டில் ஏதாவது நிதி ஒதுக்குவார்கள் என்று நான் நினைத்தேன். ஏனென்று கேட்டால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தாய்மார்கள் காய்கறி வாங்குவதற்கு உழவர் சந்தைக்குச் செல்கிறார்கள். அங்கு கட்டமைப்பு வசதி குறைவாக இருக்கிறது. கழிப்பிடங்கள் கிடையாது. கலைஞர் எடுத்து வந்துவிட்டார் என்பதற்காக அதைத் தள்ளிவிட வேண்டாம். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மனதில் கொண்டு, கண்டிப்பாக கழிப்பிட வசதிகளும், அடிப்படை வசதிகளும் ஏற்படுத்த வேண்டும் என்பதை தயவுடன் இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

வேளாண் பொருட்களைக் கொண்டு செல்லக்கூடிய உதகை மார்க்கெட் 100 ஆண்டுக் காலம் பழமை வாய்ந்தது. 100 ஆண்டுக் காலம் பழமை வாய்ந்த மார்க்கெட்டில் பிரிட்டிஷ் காலத்தில் கொடுக்கப்பட்ட கடைகள் இன்று தார் shed–களாகவும், தகர shed–களாகவும் R.C.building–ஆகவும் இருக்கின்றன. வாடகையை வசூல் செய்வதற்காக இப்பொழுது municipality notice அனுப்பி



கொண்டிருக்கிறது. 3 வருடத்திற்கு ஒருமுறை 15 சதவிகிதம் உயர்த்தலாம் என்று ஒரு சட்டவிதி District Municipality Act–ல் இருக்கிறது. ஆனால் இப்பொழுது 300 சதவிகிதம், 200 சதவிகிதம் என்று உயர்த்தி notice அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கோரிக்கையாக வைக்கிறேன். Commissioner தலைமையிலே ஒரு committee அமைத்து அதை ஒழுங்குபடுத்தி உதகையிலே வரிவசூல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய விவசாயிகள் நிறைய பேர் நீலகிரி மாவட்டத்திலே. . .

பிற்பகல் 2–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பள்ளிக்கூட வகுப்பறையில் பின் வரிசை desk–ல் மாணவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். அவர்கள் எப்படியென்றால் படிக்கின்ற மாணவர்களைக்கூட பின்புறம் உட்கார வைத்துக்கொண்டு அவர்களைப் படிக்கவிடமாட்டார்கள். (குறுக்கீடுகள்) அதுமாதிரி நீங்கள், பின்னால் தனியாக ஒரு சட்டசபையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் கணேஷ் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அவரை கொஞ்சம் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அவரை கொஞ்சம் பேசவிடுங்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இப்பொழுது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று எல்லோரும் சேர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் படிக்கின்ற பிள்ளை, அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** எனக்கு இன்றைக்கு support செய்கின்ற ஒரு நிலைமை. 1993 ஆம் ஆண்டில் Master Plan என்று சொல்லி மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் எடுத்து வந்த ஒரு plan. அது மலை மாவட்டங்களுக்கு பொருந்தும் என்று சொல்லிவிட்டார்கள். நான் சென்ற முறை பேசும்போது சொல்லியிருந்தேன், எங்களுக்கு 2007 வரை ஒரு முறை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டிருந்தேன். மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள்,

[திரு. ஆர். கணேஷ்] [2017 ஜூலை 5

கண்டிப்பாக அது நடக்கும், நான் செய்து தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் சென்ற 4 நாட்களுக்கு முன் வந்த அரசாணையைப் பார்த்தீர்களென்றால் தமிழ்நாட்டிலுள்ள அனைவருக்கும் பொருந்தும், except hill area என்று போட்டிருக்கிறீர்கள். பொருந்தாது என்று போட்டிருக்கிறீர்கள். நான் உடனடியாகச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து இதுகுறித்து பேசினேன். அவர் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். ஏனென்று கேட்டால், District Municipality Act–ல் 217–Q –ல் மாநில அரசுக்கு authority இருக்கிறது. 217–Q Section–படி குடியிருப்பு வீடுகளுக்கு ஒரு முறை வரன்முறைப்படுத்தலாம். நான் கேட்பது hotel–க்கோ, commercial building–க்கோ கிடையாது. குடியிருப்பு வீடுகளுக்கு ஒரு முறை வரன்முறைப்படுத்துவதற்கான authority, State Government–க்கு இருக்கிறது. தயவுசெய்து, எந்தக் கட்சியாக இருந்தாலும் இதைச் செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 3,000 வீடுகள் பாதிக்கப்படுகின்றன. ஒரு சுவரை இடித்தாலே நாம் கதிகலங்குகிறோம். குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் இப்பொழுது இங்கு இல்லை, அவர் தொகுதியில் கிட்டத்தட்ட 800 வீடுகள், உதகமண்டலத்தில் 1,200 வீடுகள், கூடலூரிலும் கொஞ்சம் வீடுகள் போகின்றன. District Municipality Act–ல் 217–Q–ன்படி அந்த வீடுகளை ஒரு முறை வரன்முறைப்படுத்தி சீர் செய்து தர வேண்டும். அதற்கு அரசு அலுவலர்கள் கண்டிப்பாக உறுதுணையாக இருக்க வேண்டும். ஏனென்று கேட்டால், அவர்கள் வித்தியாசமாக cut and paste என்பது மாதிரி ஓர் ஆணையை எடுத்து வந்து அங்கு ஒட்டிவிட்டு, இது உங்களுக்குச் செல்லாது என்று சொல்லக் கூடாது. அதற்கு தீர்க்கமாக ஒரு கமிட்டியை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மரியாதைக்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் அன்றையதினம் பேசும்போது risk எடுத்து Secretary–ஐ வைத்து பேசினீர்கள். தயவு செய்து இந்த மலை மாவட்டங்களுக்கு 217–Q District Municipality Act–ல் தமிழக அரசுக்கு அந்தக் குடியிருப்புகளை காப்பாற்றக்கூடிய அதிகாரம் இருக்கிறது என்று சரியாக ஆணையில் இருக்கின்றது. நீலகிரிக்கு மட்டுமல்ல, மலை மாவட்டங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். அடுத்த subject–க்கு செல்லுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.



2017 ஜூலை 5]

**திரு. ஆர். கணேஷ்:** ஒரு நிமிடம். 217–Q இருக்கின்றது. தயவு செய்து எங்களுக்கு அதைச் சீர் செய்து தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற வீடுகளை இடித்துவிட்டு புதிதாகக் கட்டுகின்றபோதுதான் பிரச்சினை இருக்கிறதே தவிர, பழைய வீடுகள் அப்படியே இருப்பதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. இதற்கு மத்திய அரசின் தடை இருக்கின்ற காரணத்தின் அடிப்படையிலேதான் மாநில அரசால் அதை வழங்க இயலவில்லை என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அந்தச் சிக்கல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கணேஷ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், அவர் பேசுகின்றார். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். கணேஷ்:** ஒரு நிமிடம். Except hill area. (குறுக்கீடு) அதுதான், அதைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) அதைச் சொல்லிவிடுகிறேன். 2007 வரை இருக்கின்ற வீடுகளை இடிக்காமல் இருந்தால் ஒரு பிரச்சினையும் கிடையாது. இந்த அரசாணையைப் பார்த்தவுடன் கிட்டத்தட்ட 40, 50 நபர்கள் வண்டியை எடுத்துக் கொண்டு என்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டார்கள். என்னால் 3 நாட்கள் தூங்கவும் முடியவில்லை, அவர்களுக்குப் பதில் சொல்லவும் முடியவில்லை. அந்த ஆணையை தயவுசெய்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். 217–Q–ல் குடியிருப்புகளுக்கு விதிவிலக்கு இருக்கின்றது. தமிழ்நாடு அரசானது ஓர் ஆணையைக் கொண்டு வந்து அதை முடிக்கலாம் என்ற ஒரு விதிவிலக்கு இருக்கிறது. 3,000 குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற இந்த ஆட்சி நிச்சயமாக மக்களுக்காகச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து பேசி, அந்த 3 ஆயிரம் வீடுகளைக் காப்பாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கணேஷ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** Please, ஒரு நிமிடம். அடுத்து, தூர்வாரும்போது அந்த மதகுகளுக்குக் கீழே தூர் வாரினால் தண்ணீர் நிற்கிறது. 2, 3 இடங்களை visit செய்தபோது தெரிந்தது. அப்படியென்றால், அந்த அதிகாரிகளை அழைத்து, மதகுகளுக்கு மட்டமாகத் தூர் வாரினால் தண்ணீர் அடியில் குளமாக நிற்காமல், அதற்கு மேல் நிற்கும் தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படும் என்பதை இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மார்க்கெட் பிரச்சினையை நீங்கள் கண்டிப்பாக முடித்துத் தர வேண்டும். இல்லாவிட்டால் கண்டிப்பாக அங்கு விவசாயிகளுக்குப் பேராபத்து விளையும். அவர்கள் விலையை அதிகப்படுத்துவார்கள். Tax–ஐ அதிகப்படுத்தும்போது, மார்க்கெட்டிலே அவர்கள் விலையை அதிகப்படுத்துவார்கள். எனவே Commissioner தலைமையில் ஒரு Committee அமைக்க வேண்டும். மற்றபடி இன்னும் நிறைய subjects இருக்கின்றன. பெரும் மரியாதைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டதற்கிணங்க. . .

பிற்பகல் 2–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** எனக்கு நீங்கள் என்ன செய்வீர்களோ இல்லையோ, அந்த 3,000 வீடுகளை மட்டும் காப்பாற்றிக் கொடுத்தால் போதும் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன். நமது வீட்டின் ஒரு சுவரை இடித்தாலே நாம் கவலைப்படுகிறோம். அந்த 3,000 வீட்டு விவசாயிகளும் V.R.S. வாங்கின அதிகாரிகள்தான். நான் கேட்பது குடியிருப்புகளுக்குத்தான். Commercial building–க்குக் கிடையாது; Hotels–க்குக் கிடையாது; Cottage–க்குக் கிடையாது. குடியிருப்புகளுக்கு மட்டும் நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற அனைத்து வேளாண் குறிப்புகளையும் இங்கே பதிவு செய்கிறேன். இதை நான் படித்ததாகக் கருதி, பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

**தொகுதிக் கோரிக்கைகள்:**

தோட்டக்கலைத் துறையில் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தினக் கூலிப் பணியாளர்களாக பணியாற்றியவரை 2006



ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை (MS) எண் 22, நாள் 28–2–2006–ன்படி 10 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றிய தினக்கூலிப் பணியாளர்கள் 29–11–2007 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 494–ன்படி தமிழகம் முழுவதும் தோட்டக்கலைத் துறையில் 1,083 பேர் பணி வரன்முறைப்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு சத்துணவு அமைப்பாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதம் ரூ.1300–20–1500–25–2000 சம்பளமாக வழங்கப்பட்டது. பின்னர் 6–வது ஊதியக் குழுவின் ஒரு நபர் குழுவில் ஊதிய விகிதம் அரசாணை எண் (MS) 287, நாள் 26–8–2010–ன்படி, பண்ணைப் பணியாளர்கள் ஊதிய விகிதம் 2500–500+500 தர ஊதியம் என்று மாற்றப்பட்டுள்ளது. இவர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியம் வழங்கிட வேண்டும். சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் கல்வித் தகுதி உள்ள பணியாளர்களுக்கு இதுநாள் வரை பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இவர்களுக்குத் தகுதியான பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

ஓய்வு பெறும்பொழுது பணப்பலன்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. பணிக்காலங்களில் இயற்கை எய்தும் பணியாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் குடும்ப நல நிதி இப்பணியாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பொது சேம நல நிதி எதுவும் பிடித்தம் செய்யப்படுவதில்லை. 10 ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலியாக பணியாற்றும் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்திடுமாறும் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

K.V.K. என்ற அமைப்பை உடனே அமைக்க வேண்டும். வேளாண் பரிசோதனை மையம் அமைக்க வேண்டும். உயர் நீதிமன்ற உத்தரவுப்படி தேயிலைக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

***திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தை முன்வைத்து, இந்த நாட்டில் ஏழையெளிய மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, 16 ஆண்டுக் காலம் தமிழகத்தில் ஒளிமயமான பொற்கால ஆட்சி நடத்திய, பெருமைக்குரிய நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் துயில் கொண்டுள்ள அவரது நினைவிடம் நோக்கி என் வணக்கத்தையும், இதயம் கனந்த கண்ணீர்த் துளிகளையும் காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் எனக்கு இரண்டாவது முறையாக பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆண்ட அம்மா அவர்களின் அரசை மக்கள் திரும்பவும் முழு நம்பிக்கை வைத்து மகத்தான வெற்றியை அளித்தார்கள் என்ற பெருமை நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் கிட்டியது. 1977–ல் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தொடர்ச்சியாக 3 முறை வெற்றி பெற்று சாதனைப் படைத்தார். அதேபோல, இதய தெய்வம் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ச்சியாக வென்று முதலமைச்சரான வரலாற்றைப் படைத்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, சாதி, மத இன பேதங்களைக் கடந்து, தமிழ்நாட்டு மக்கள் நினைத்ததற்குக் காரணம், அவர் இந்த மண்ணின் உரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு போராளியாக, போர்க்குணம் மிக்கத் தலைவராக, தான் எடுத்துக் கொண்ட எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக முடித்துக் காட்டுகின்ற ஆற்றல் பெற்றவராக இருந்தார் என்பதுதான். இன்றைக்கு நாம் இங்கே விவசாயத் துறை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக நீண்ட காலமாக நமக்குப் பிரச்சினையாக இருந்த, காவேரி நதிநீர்ப் பங்கீட்டில் இடைவிடாத சட்டப் போராட்டம் நடத்தி, அதில் வென்று, காவேரி நதிநீர்ப் பங்கீட்டில் நமது உரிமையை நிலைநாட்டிய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. அதனால்தான் அத்தனை விவசாயிகளும் தஞ்சையிலே ஒன்றுகூடி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டும்





விழாவை நடத்தி, அம்மா அவர்களுக்கு, 'பொன்னியின் செல்வி' என்ற பட்டமும் தந்து, புகழாரம் சூட்டினார்கள் என்பதை நாடு அறியும்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி அமைத்துக்கொள்ள நமது உரிமையை சட்டப் போராட்டம்மூலம் வென்று, நமக்குப் பாதுகாப்புத் தந்தவரும் நம் புரட்சித் தலைவி அம்மாதான். இன்றைக்கு அம்மா அவர்களின் வழியில் அற்புதமாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற அம்மாவின் உண்மை விசுவாசி, கொங்கு நாட்டுத் தங்கம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அண்ணன் அவர்கள் விவசாயிகளின் நலனில் பெரும் அக்கறையோடு, மக்கள் பாராட்டக்கூடிய வகையில் குடிமராமத்துப் பணி என்ற மகத்தான திட்டத்தை முழுவீச்சில் செயல்படுத்தி வருகிறார்கள். அதற்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிமராமத்துத் திட்டத்திற்கு முதலில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பிறகு கூடுதலாக 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து ஏரி, குளங்களைத் தூர் வாரி, அதனை ஆழப்படுத்தி, அதிக நீரைச் சேமித்து வைக்க எடுக்கும் நடவடிக்கைகளை நான் மட்டுமல்ல, இந்த நாடே பாராட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள, கீழ்பவானி மற்றும் காளிங்கராயன் அணைக்கட்டு பாசனப் பகுதிகளை உள்ளடக்கிய மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதியில்விவசாயத்தைப்பாதுகாக்க,மொடக்குறிச்சி தொகுதியின் பிரதான ஓடையான கொரகன்பள்ளம் ஓடையை, மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனுமன்பள்ளியிலிருந்து, கொடுமுடி ஒன்றியம் பனப்பாளையம் வரை முழுவதுமாகத் தூர் வாரி, நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், இரண்டு இடங்களில் தடுப்பணையை உடனடியாகக் கட்டித்தரவும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை மழை வெள்ளத்தால் விவசாயிகளின் பயிர்கள் பாதிக்கப்பட்டபோது மாநில அரசு நிதியுதவி செய்ததுண்டு.

[திரு. வே.பொ. சிவசுப்பிரமணி] [2017 ஜூலை 5

ஆனால் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்டபோது நிதியுதவி அளித்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனிதநேய அரசு மட்டும்தான்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் நவீன தொழில்நுட்பத்தின்மூலம் குறைந்த நீரைப் பயன்படுத்தி, அதிகப் பரப்பளவில் விவசாயம் செய்திட குறு, சிறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 100 சதவிகித மானியம் அளித்து விவசாயிகளைப் பாதுகாத்திட்ட அரசு நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுத் திட்டமான நஞ்சு கலப்பில்லாத இயற்கை விவசாயத்திற்கு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் முதல்வர் அவர்கள் உயர் தொழில்நுட்பத்தில் உருவான செயற்கை உரத்தைவிட பன்மடங்கு மேம்பட்ட சத்துள்ள தரச்சான்றிதழ் பெற்ற இயற்கை உரங்களை வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் வேளாண்மைத் துறை சார்ந்த நிறுவனங்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கிட கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வட்டார அளவில் வேளாண்மைத் துறை அலுவலர்மூலம் இயற்கை விவசாய உரங்களை முன்னிறுத்தி, விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தி, மண் வளத்தினைப் பெருக்கி, எதிர்காலச் சந்ததியினருக்கு மட்டுமல்ல, நிகழ்காலத்தில் நமக்கும் நஞ்சில்லாத உணவை உற்பத்தி செய்து நோயில்லா பெருவாழ்வு வாழ, உலக அளவில் தமிழகம் முன்னோடி மாநிலமாக இருக்க நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்த ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி தொகுதி மாநிலத்திலேயே மஞ்சள் அதிகமாக விளைகின்ற பகுதியாகும். ஆகவே இந்தப் பகுதியிலே மஞ்சள் ஆராய்ச்சி மையம் ஒன்றினை உருவாக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டுகின்றேன்.



2017 ஜூலை 5] [திரு. வே.பொ. சிவசுப்பிரமணி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் நஞ்சை, புஞ்சை மற்றும் மானாவாரிப் பயிர்கள் அதிகமான அளவில் விளைகின்றன. ஆகவே மொடக்குறிச்சி தொகுதியில் அரசு தோட்டக்கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். இதனால், அண்டை மாவட்டங்களான நாமக்கல் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறுவார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு தோட்டக்கலைக் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியின் பிரதானப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பவானிசாகர் அணையிலிருந்து pipeline மூலம் நேரடியாக மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி ஒன்றியத்திற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தந்திட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகர போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஈரோடு வெளிவட்டச் சாலையின் அருகிலுள்ள ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான சோலார் பகுதியில் புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் விசுவாசமான ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட 60 வேலம்பாளையம் கிராமத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பெயரால் ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தை அமைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரின் முக்கிய சாலையான ஈரோடு–காங்கேயம் சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஈரோடு இரயில்

[திரு. வே.பொ. சிவசுப்பிரமணி] [2017 ஜூலை 5

நிலையத்திலிருந்து ஈரோடு வெளிவட்டச் சாலை அமைந்துள்ள ஆனைக்கல்பாளையம் வரை நான்கு வழிச் சாலையாக நெடுஞ்சாலைத் துறையின்மூலம் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு—பழனி சாலையில் அரச்சலூரிலுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைத்திட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு வெளிவட்டச் சாலையில் ஈரோடு முதல் காங்கேயம் சாலை, ஈரோடு முதல் முத்தூர் சாலை மற்றும் ஈரோடு முதல் கரூர் சாலை சந்திக்கும் இடங்களில் roundtana-களை அமைத்து அங்கு நடைபெறுகின்ற விபத்துகளைக் குறைக்க உதவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக செயல்பட்டுவந்த கலைக் கல்லூரி தற்போது சொந்தக் கட்டடத்திற்கு செல்லவுள்ளதால், தற்போது ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள 25 வகுப்பறைகளைப் பயன்படுத்தி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திட அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவன், பிரம்மா மற்றும் விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் குடிகொண்டுள்ள அருள்மிகு கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோயிலின் படித்துறையை மேம்படுத்தி அங்கே வருகைபுரியும் வெளி மாநில மற்றும் மாவட்ட பக்தர்களின் வசதிக்கேற்ப தங்கும் விடுதி உருவாக்கிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், திருக்கோயிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பக்தர்கள் சிரமமின்றி ஆலய தரிசனம் செய்திட வழிவகை செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு வேண்டுகிறேன்.



2017 ஜூலை 5] [திரு. வே.பொ. சிவசுப்பிரமணி]

பிற்பகல் 2—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சிக்குட்பட்ட பொரசப்பாளையம் முதல் கரூர் மாவட்டம், பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட ரங்கசாமி கோயிலையும் இணைக்கும் நொய்யலாற்றின் குறுக்கே உள்ள தரைமட்டப் பாலம் மிகவும் பழுதடைந்து, போக்குவரத்திற்குச் சிரமமாக உள்ளது. இதைச் சீர்செய்து பொதுப் பணித் துறையின் சார்பாக ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டுகிறேன். மேலும், கொடுமுடியிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகை மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. நெடுஞ்சாலைத் துறைமூலம் இதை அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்தில் புதிய பயணியர் ஆய்வு மாளிகை கட்டித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே எனக்குப் பிறகும் இந்த அரசு நூறாண்டுகள் செயல்படும் என்று சூளுரைத்து சென்றுள்ளார்கள். ஆகவே, அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களாகிய நாங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை, வரும் 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற வைப்பதோடு மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளே இல்லாத அளவிற்குச் செய்திட, எங்களுடைய சீரிய செயல்பாடுகள் இனிவரும்காலங்களில் இருக்குமென்ற உறுதியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த வாய்ப்பை அளித்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், காங்கேயனூர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், கே.ஜி. வேடியப்பன்–பவுனம்மாள் ஆகியோரின் மகனான என்னை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், போளூர் சட்டமன்ற உறுப்பினராகவும் உருவாக்கிய உலகத் தமிழரின் ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வறியா உழைப்பாளி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகச் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது பொதுவாழ்வில் உயர்வதற்கு உறுதுணையாக இருக்கின்ற முன்னாள் அமைச்சர், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் எனது பாசமிகு அண்ணன் அவர்களுக்கும், வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், ஊராட்சிக் கிளைக் கழக அனைத்து நிலை நிருவாகிகளுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும், உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்த போளூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

‘போற்றுபவர் போற்றட்டும்! புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்! தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை எனதுள்ள மென்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும், நில்லேன்! அஞ்சேன்!,

என்ற வார்த்தைக்கு இணங்க, என் கருத்தைத் தெரிவித்து, எங்கள் தளபதியை மீண்டும் ஒருமுறை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளைப் பதிவு செய்ய அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மானியக் கோரிக்கைமீதான என்னுடைய உரையைத் தொடங்குவதற்குமுன் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் தமிழக விவசாயிகளுக்கு செய்த நன்மைகளை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்புக் கட்டணத்தில் யூனிட் ஒன்றுக்கு ஒரு பைசா குறைக்க வேண்டுமென்று போராடிய விவசாயிகளுக்கு, ஒரு பைசாகூட கட்ட வேண்டாமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை இலவச மின்சாரம் வழங்க வித்திட்ட அரசு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு NABARD வங்கி ஒத்துக்கொள்ளாமல், விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வாய்ப்பில்லை என்று சொன்ன நேரத்தில், அனைத்து விவசாயிகளுடைய கடனையும் அறவே இரத்து செய்தது தலைவர் கலைஞர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–00

விவசாயிகள் நவீன முறையில் விவசாயம் செய்ய கோவையில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைத் துவக்கிய அரசு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. ஆற்காடு, கிச்சிலி போன்ற நெல் வகைகள் ஏக்கருக்கு 15 மூட்டைகள் மட்டுமே விளைந்த தமிழ்நாட்டில், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் புதிய இரக நெல் விதை ஐ.ஆர்.8 என்ற நெல் விதையைக் கண்டுபிடித்து, ஏக்கருக்கு 45 மூட்டைகள் விளைய காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் விவசாயிகளுக்கு 3 மடங்கு இலாபத்தை அரை நூற்றாண்டுக்கு முன்பே பெற்றுத் தந்தது தலைவர் கலைஞர் அரசு என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கியது தலைவர் கலைஞர் அரசு. இலவச பம்ப்செட் இணைப்பு வழங்கியது தலைவர் கலைஞர் அரசு. நிலமற்றவர்களுக்கு இலவசமாக 2 ஏக்கர் நிலம் வழங்கியது தலைவர் கலைஞர் அரசு. உழவர் சந்தை அமைத்து விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்தியது தலைவர் கலைஞர் அரசு. நதிகள் இணைப்பு, இன்னும் பல திட்டங்களைத் தந்து விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய அரசு தலைவர் கலைஞர் அரசு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக் கோரிக்கைகள். செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து போளூரான் கால்வாயைச் சீரமைத்து போளூர், காங்கேயனூர், காப்பலூர், கலசப்பாக்கம், பூண்டி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி நீர் நிரப்பப்பட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். போளூர் வட்டம் படவேட்டில் உள்ள செண்பகத் தோப்பு அணையை மறுசீரமைத்து radial shutter அமைத்து முழு கொள்ளளவு நீரைத் தேக்கி சுமார் 2,709 ஹெக்டேர் நிலத்திற்கான பாசன வசதி செய்துதரவும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். போளூர் தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமானத் தீர்வு காண்பதற்காக செண்பகத் தோப்பு அணையிலிருந்து களம்பூர், பேரூராட்சியான சந்தவாசல், கேளூர், வெல்லூர், ஏரிக்குப்பம், கிருஷ்ணாபுரம் ஆகிய ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அரசு குடிநீர் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போளூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊராட்சிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்திடக் கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள எனது தொகுதித் தேவைகளை காலத்தின் அருமையைக் கருதி அவையில் நான் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்திட கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் எண் 22, 23–ல் பயிர் சாகுபடி பரப்பளவுக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. 2009–2010 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் ஆட்சியில் 18.46 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் உங்கள் ஆட்சியில் படிப்படியாகக் குறைந்து இந்த ஆண்டில் 17.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில்தான் சாகுபடி செய்யப்படும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளீர்கள். எனவே, இந்த அரசு தலைவர் கலைஞர் ஆட்சியில் கொண்டுவந்த நதிநீர்த் திட்டங்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் நெல் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அதிக அளவில் செலவாகிறது. எனவே ஒரு குவிண்டால் நெல்லுக்கு 2,000 ரூபாய் வழங்க வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஓர் ஆண்டுக்கு 90,000 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுவதில், 40,000 மெட்ரிக் டன் விதைகள் திருப்பூர் மாவட்டத்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் விதை பரிசோதனை நிலையம், விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் எண் 52–ல் கரும்பு விவசாயம் சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவர் கலைஞர் ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டு மத்திய அரசு குறைந்தபட்ச ஆதார விலை டன் ஒன்றுக்கு 1,391 ரூபாய் 20 காசுகள் என்று நிர்ணயித்திருந்தது. ஆனால் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புத் தொகையாகக் கூடுதலாக தலைவர் கலைஞர் ஆட்சியில் 608 ரூபாய் 80 காசுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு டன்னுக்கு 2,000 ரூபாயாக உயர்த்தி விவசாயிகள் வாழ்வாதாரம் உயர வழிவகை செய்யப்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டு இந்த அரசு கரும்பு டன் ஒன்றுக்கு 2,750 ரூபாய் என்று அறிவித்தது. 2017–2018 ஆம் ஆண்டில் டன் ஒன்றுக்கு 3,500 ரூபாய் வழங்கி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்றும், திரு. எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையைச் செயல்படுத்த மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். அதேவேளையில் தனியார் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய சுமார் 2,000 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கிடைக்க இந்த அரசு முன்வரவேண்டும். இன்றுகூட இதே கோரிக்கையை வலியுறுத்தி, அரசினர் விருந்தினர் மாளிகை அருகே கரும்பு விவசாயிகள் போராட்டம் நடத்தி வருவதைக் கண்கூடாகப் பார்த்தோம்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நுண்ணீர்ப் பாசனத் திட்டம் குறித்து கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் எண் 68–ல் உள்ளது. இந்தத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் கடும் வறட்சி

ஏற்படுவதாலும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் முக்கிய நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதாலும், தமிழக விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசனத் திட்டம் பெரும் வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு போதுமான நிதி வழங்கியும், இந்தத் திட்டத்தினை இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்தவில்லை. தமிழகம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையிலாவது, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி விவசாயிகளையும், விவசாயத்தையும் காப்பாற்ற வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கருதுகிறேன். நானும் ஒரு விவசாயி. நான் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரின் பக்கத்தில் நிறைய உறுப்பினர்கள் இருந்து, அவரை இயக்காதீர்கள். அவரையே பேச விடுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் நன்றாகப் பேசுவார், அவரை விடுங்கள். ஏன் அவரை இயக்குகிறீர்கள்?

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் இருக்கை மாறி உட்கார்ந்திருந்தனர்.)*

மாண்புமிகு உறுப்பினர், திரு. மு.பெ. கிரி உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர் இருக்கைக்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர் ஒருவரைப் போய் மற்ற உறுப்பினர்கள் ஆட்டி வைக்காதீர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் 114–117–ல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், வேளாண்மைச் சாகுபடியை உயர்த்துவதற்கு தொழில்நுட்பப் பணியாளர்களாக 4,835 பேரும், இதர பணியாளர்களாக 8,275 பேரும், ஆக மொத்தம் 13,110 பேர் துறையில் பணியாற்றுவதாகத்



தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் அறிந்தவரையில், தற்போது இத்துறையில் 4,140 பணியிடங்கள் அனைத்து நிலையிலும் காலியாக இருப்பதாகவும், அதோடுமட்டுமல்லாமல், வேளாண்மைத் துறையின் இயக்குநரும் பயிற்சிக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகின்றேன். இவ்வளவு காலிப் பணியிடங்களை வைத்துக்கொண்டு, இந்த அரசு எப்படி விவசாயத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும், மாநில விதை மேம்பாட்டு முகமையின்கீழ் 41 அரசு விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரசுக்கு நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கம் கிராமத்தில் சுமார் 12,000 ஏக்கர் மத்திய, மாநில விதைப் பண்ணை மற்றும் நாற்றங்கால் பண்ணை சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. தற்போது அந்த நிலத்தை மத்திய அரசு மாநில அரசுக்கு ஒப்படைத்துவிட்டது. தற்போது, இந்த அரசு, மேற்கண்ட அந்த நிலத்தை வனத் துறையிடம் ஒப்படைத்து, நிலத்தடி நீரை உறிஞ்சக்கூடிய தன்மையுடைய நீலகிரி மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளதால், அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பண்ணைக்குள், தற்போது நிலவும் கடும் வறட்சியிலும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம். நீங்கள் தொடர்ந்து குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். நீங்கள் கோரிக்கைகளைக் கேட்கலாம். ஆனால் நீங்கள் தொடர்ந்து குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசு நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கு நிதியொதுக்கியுள்ளது. தற்போது நிலவும் வறட்சி நிலையைக் கருதிதான், இன்றைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்காக சுமார் 1,148 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் விவசாயத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது குறிப்பிட்ட மேல்செங்கத்திலுள்ள நிலம் வனத் துறைக்குச் சொந்தமானது. அந்த நிலத்தை மத்திய அரசு 30 ஆண்டுகள் lease எடுத்து விதைப் பண்ணையை நடத்தினார்கள். அந்த காலக்கெடு முடிந்ததால், அருகிலுள்ள நாம்தான் அந்த விதைப் பண்ணையை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களுடைய இடம் கிடையாது. அந்த இடம் வனத் துறையைச் சேர்ந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறியது, தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மை மையம் உருவாக்கப்படும் என இதே மாமன்றத்தில் அறிவித்தார். அவ்வாறு அவர் அறிவித்த திட்டத்தையோ அல்லது வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தையோ அந்த இடத்தில் அமைக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் எண் 122–ல், எண்ணெய் வித்துக்கள் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருவண்ணாமலை நகரில், வேளாண்மைத் துறையின்கீழ் பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த மணிலா எண்ணெய் உற்பத்தி ஆலை TANCOF தற்போது செயல்படாமல் மூடிக்கிடக்கிறது. இந்த ஆலையைச் சீரமைத்து, செயல்பாட்டிற்கு அரசு கொண்டு வருமா? அப்படி இல்லையென்றால் அதில் பணிபுரியும் பணியாளர்களின் நிலை குறித்தும், அந்த ஆலையின் தற்போதைய நிலை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கப் குறிப்புப் புத்தகம் பக்கம் 125–ல் திட மற்றும் திரவ உயிர் உரம் உற்பத்தி செய்யும் மையங்கள் பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, தமிழ்நாட்டில் இது போன்ற உரம் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டு, எந்தெந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்ற விவரம் எதுவும்



இல்லை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இதுபோன்ற உற்பத்தி மையங்கள் பெயரளவில் மட்டுமே இயங்கி, இதன்மூலம் அரசின் பணம் வீணடிக்கப்படுகிறதே தவிர, விவசாயத்திற்கு உதவிகரமாக இல்லை என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 137–ல் வேளாண்மை உற்பத்தியை இரண்டு மடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக ஆக்குவதுதான் இந்த அரசின் கொள்கை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, தோட்டக்கலைத் துறையின் மூலமாக வளர்க்கப்பட்ட செடிகள்மூலம், பயிரிடப்பட்ட பரப்பளவு, விவசாயத் தோட்டங்களின் விவரப் பட்டியல் இதில் குறிப்பிடப்படவில்லை. தனியார் நாற்றங்காலிலிருந்து சொற்ப விலைக்கு செடிகளை வாங்கி வந்து பெயரளவில் மட்டுமே வழங்கப்படுவதாலும், தரமற்ற செடிகள் வழங்கப்படுவதாலும், எப்படி மும்மடங்கு இலாபம் பெற முடியும் என்றும் இந்தத் திட்டம் வெறும் வெற்றுக் கனவாக அமைந்துவிடுமோ என்ற ஓர் அச்சமும் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னூர் தோட்டக்கலைப் பண்ணையில் வாசனைத் திரவியப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தி, சுற்றுலாவை அபிவிருத்திச் செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 184 மற்றும் 185–ல் வேளாண்மைப் பொறியியல் துறை சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் திட்டப் பணிகளைச் செயல்படுத்த, 1973 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சியில் 211 வேளாண்மை பொறியியல் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை படிப்படியாகக் குறைந்து, தற்போது 102 சங்கங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. இந்தச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டால், விவசாயப் பெருமக்களுக்கு பேருதவியாக இருந்திருக்கும் என்பதோடு தற்போது இருக்கின்ற சங்கங்களின் செயல்பாடுகள்–இதில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை, மாற்றுப் பணியும் வழங்கப்படவில்லை. இந்நிலை இருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு வகை சமையல் எரிவாயுக்கு G.S.T. போடப்பட்டுள்ளது. ஆனால், அதிகமாகப் பயன்படும் டீசல், பெட்ரோல் இவைகளுக்கு ஏன் G.S.T. போடவில்லை? இதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை பக்கம் எண் 19–ல், விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக ATMA திட்டத்தில் நிதி இருந்தபோதிலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட நிதி 84 கோடியே 68 இலட்சம் ரூபாய் பயன்படுத்தியதால், 45 கோடியே 6 இலட்சம் ரூபாய் நிதி வீணடிக்கப்பட்டிருப்பதாக இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ** என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியாகக் கூறிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, அதெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசிய பேச்சுக்கும், சொல்கின்ற சொல்லுக்கும் சம்பந்தமே இல்லை. அதாவது, தமிழக அரசு இன்றைக்கு எடுக்கின்ற நடவடிக்கைகளின்மூலம் விவசாயிகளுக்கும், விவசாய வளர்ச்சிக்கும் என்னென்ன சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தப்பட வேண்டுமோ, என்னென்ன சலுகைகள் வழங்கப்பட வேண்டுமோ, அத்தனையையும் செய்து வருகின்றோம். விவசாயம் செய்வதற்காக நுண்ணீர்ப் பாசனத் திட்டம், வியாபாரிகளுக்காக தனி வணிக வளாகங்கள் என இத்தனையும் செய்து கொடுத்து விவசாயிகளுக்கு வேண்டிய அத்தனை வசதியையும் செய்து கொடுக்கின்றோம். நீங்கள் கூறிய அந்த விவசாயிகளின் ** அதற்காக அரசு 89 பேருக்கு இப்போது பணம் கொடுத்திருக்கின்றோம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிட்டோம். அந்த சப்ஜெக்ட்டை விட்டுவிடுங்கள். இப்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் எல்லா சப்ஜெக்ட்டையும் பேசி முடித்துவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் என்ன கேட்டார் என்று பார்த்தீர்களா? (குறுக்கீடுகள்) அது ஒன்றும் இல்லை. சரி, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 3–15

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் தலைவர் கலைஞர் ஆட்சியில் விவசாயக் கடன் தள்ளுபடி செய்து, விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்த பிறகு, 2008 ஆம் ஆண்டு இதே அவையில், வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்து விட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, முடியுங்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், 'உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்குகூட மிஞ்சாது' என்றும், 'விவசாயிகளுக்குக் கோவணம்தான் மிஞ்சியிருக்கிறது' என்றும் அந்த நேரத்தில் பேசியிருக்கிறார். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, உங்கள் ஆட்சியில் **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அமைதியாக இருங்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அளவிற்கு, என் கருத்தை இந்த அவையில், பதிய வைத்ததற்காக தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அண்ணன்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தளபதியார் அவர்களுக்கும், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

போளூர் சட்டமன்றத் தொகுதியில் பெரியகொழுப்பலூர், சந்தவாசல், சேத்துப்பட்டு, போளூர், மண்டகொளத்தூர், கேளூர்சந்தைமேடு, எண் 99 புதுப்பாளையம், கரைப்பூண்டி ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டுகிறேன்.

விவசாயிகளுக்கு இடுபொருட்கள் அனைத்தும் அரசு டெப்போமூலம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் வேதியியல் ஆய்வுக் கூடம் உள்ள கட்டடங்களை அப்புறப்படுத்தி புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டுகிறேன்.

போளூர் தொகுதியில், பெண்கள் அரசு கல்லூரி அமைக்கவும், சேத்துப்பட்டு தாலுகா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரவும், மாணவர்களின் கல்விக் கடன்களை அரசே ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சேத்துப்பட்டு ஒன்றியம் வடமாதிமங்கலம் ஊராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் தொகுதியில் அரசு நீர் நிலைகள் ஆக்கிரமிப்பைத் தனியாரிடமிருந்து மீட்கவும், போளூர், பெரணமல்லூர் ஒன்றியம், விநாயகபுரம்—பெரியகொழப்பலூர், செய்யாறு குறுக்கே பாலம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

சேத்துப்பட்டு பேரூராட்சி, என்.எச். சாலைக்கு பைபாஸ் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

விதி 110—ன்கீழ் அறிவிக்கப்பட்ட போளூர் இரயில்வே மேம்பாலத்தை உடனடியாகக் கட்டித் தர வேண்டுகிறேன்.

போளூரிலிருந்து சென்னைக்கு ஆரணி—ஆற்காடு வழியாக பேருந்து இயக்கவும் மற்றும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பேருந்து இயக்கவும் வேண்டுகிறேன்.



போளூர் தொகுதிக்குட்பட்ட சந்தவாசல் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று 30 படுக்கை வசதியுடன் அமைக்கவும், பெரியகொழப்பலூர், வடமாதிமங்கலம், கொம்மனந்தல், களம்பூர் மற்றும் சேத்துப்பட்டுபேட்டை ஆகிய ஊர்களில் இயங்கும் ஆரம்ப சுகாதார மையங்களைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் பேரூராட்சியில் நெடுஞ்சாலையான டைவர்ஷன் சாலையில் ஆஞ்சநேயர் கோயில், உழவர் சந்தை பிரியும் இடம், பேருந்து நிலையம், அண்ணா சிலை, இரயில்வேகேட் போன்ற மக்கள் கூடும் இடங்களில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க வேண்டுகிறேன்.

போளூர் அரசுப் போக்குவரத்து பணிமனையின் சுற்றுச் சுவர் கட்டித்தரவும், தரை அளவு முழுவதும் கான்கிரீட் அமைத்துத் தரவும், இங்கு உயர் கோபுர மின் விளக்கு அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர், நவீன அரிசி ஆலைக்கு தேவையான குடோன் வசதி கட்டித் தர வேண்டுகிறேன்.

போளூர் தொகுதி நெடுஞ்சாலைகள் மற்றும் கிராம சாலைகளைச் செப்பனிட வேண்டுகிறேன்.

போளூரில் அரசுப் போக்குவரத்து மத்திய பணிமனை அமைக்கவும், போளூர் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதி ஆத்துரை, சேதாரம்பட்டு ஊராட்சிகளில் புதிய துணை சுகாதார நிலையம் அமைத்துத்தரவும், ஏற்கெனவே உள்ள துணை சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கவும் கேட்டுக்கொள்கிறேன். செவிலியர்கள் சுகாதார நிலையங்களில் தங்கி பணிபுரிய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

போளூர் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பயணியர் மாளிகை கட்டித் தர வேண்டுகிறேன்.

போளூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், சிறைத் துறை, தீயணைப்புத் துறை, குடியிருப்பு இல்லம், வணிக வரித்துறை, தோட்டக் கலைத் துறை அலுவலகம் ஆகியவற்றிற்கு கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.வி. சேகரன்] [2017 ஜூலை 5

போளூர் நுகர்பொருள் வாணிபக் கழகம் அமைந்துள்ள ware house குடோன் சாலையை சிமென்ட் சாலையாக செப்பனிட்டுத் தர வேண்டுகிறேன்.

பெரணமல்லூர் மற்றும் சேத்துப்பட்டு ஒன்றிய சாலைகளை செப்பனிட்டுத் தர வேண்டுகிறேன்.

போளூர் ஒன்றியம், திருச்சூர் ஊராட்சி, துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ** நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுச் சொல்லி, எப்படி நடைபெற்றது என்று சொன்னார்கள். அது இங்கு அவைக் குறிப்பிலிருப்பது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்டியோருக்கெல்லாம் ஆல் போல் நிழல் கொடுத்த, அன்பின் திருவடிவம், வணங்கிய கரங்களுக்கெல்லாம் வாழ்வு தந்த வள்ளல் பெரு உள்ளம், புண்ணியமே வடிவாகி, பூமிக்கு வந்து போன பொன்மனத்துப் புகழ் தெய்வம், எனக்காக ஏதும் இல்லை, எல்லாமே என் மக்களுக்கே எனத் தன்னையே தந்து உழைத்த, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் குலச் சாமி, வீரு தமிழ் பூமிக்கு வெளிச்சமாகி வந்த வேதா இல்லத்து ஞான ஒளி, சிப்பிக்குள் தவம் இருந்து முத்துக்கள் பிறப்பதுபோல், 10 கோடி தமிழினத்துக்குப் பணி செய்து கரைவதற்கே வடிவெடுத்து வந்த எங்கள் பாசப் பெட்டகம், இந்தியத்தின் அரசியலை விந்தியத்திற்கே தெற்கே திருப்பிக் காட்டிய சந்தியா தாய் ஈன்றெடுத்த சாதனை சரித்திரம், டிசம்பர் திங்கள் 5 ஆம் நாளில் நம்மை தவிக்கவிட்டுச் சென்று

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜூலை 5] [திரு. இரா. துரைக்கண்ணு]

இன்று ஜூலைத் திங்கள் 5 ஆம் நாளோடு, 212 நாட்கள் ஆகின்றன. அப்பல்லோ வாசலில் 75 நாட்கள் நாம் கையேந்திக் கேட்ட கருணை மனுவை இரக்கமில்லா இறைவன் மறுத்துவிட்டு, ஈகைக்கும் வாகைக்கும் இலக்கணம் வகுத்த தாயை தம்மிடம் அழைத்துக்கொண்டு, நம்மையெல்லாம் கதறி அழவைத்து, கடற்கரையில் நித்திரைக் கொண்டுவிட்ட கழகத்துக் காவியமாம், கண்விட்டு அகலா ஓவியமாம், நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வங்கத்துக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் எங்கள் குல தெய்வம் அம்மா, விழி கசியும் நீரோடும், விம்மி எழும் துயரோடும், அந்த வழித்துணைத் தெய்வத்தின் திசை நோக்கித் தொழுது, மலர்ப்பாதங்களை வணங்குகிறேன்.

தாயில்லா நேரத்தில் தலைமை இல்லா காலத்தில் சீரிளமை இயக்கத்தின் மிடுக்கில் சிறிதளவும் குறையின்றிக் கொண்டு சேர்க்க குருதியிலே உறுதிகொண்டு உழைக்கின்ற எங்கள் தாயுமானவராம், மக்களுக்காக மழை வேண்டி யாகம் செய்த ஒப்பில்லா மாணிக்கம், சேலத்துச் சீமை தந்த, கொங்குநாட்டுத் தங்கம், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று உடல் நலம் குறைந்தாலும், சட்டங்களும் திட்டங்களும் கருவாகி உருவாகும் இப்புனிதமிக்க பேரவையை, அவை விதிகளுக்கு அணுவளவும் குறையில்லாது காத்து, நடுவு நிலை போற்றிவந்த மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இரண்டு நாட்களாக இந்தப் பேரவையைத் தன்னுடைய திறமையால்* அமைதிப்படுத்தி, உரிமையோடு அனைவரையும் அரவணைத்து இந்தப் பேரவையை நடத்திவருகின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களால் நான். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ** என்பதைவிட அமைதிப்படுத்தி என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** அமைதிப்படுத்தி, அனைத்தே இந்தப் பேரவையை நடத்திவருகின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான் மக்களுக்காகவே நான்’ என்று தவ வாழ்வு வாழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடிச்சுவற்றைப் பின்பற்றி அவர் வகுத்த அறநெறியில் பீடு நடைபோடும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகளின் நலனுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அவர்தம் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படவும், உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடையவும் தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த வேளாண்மையில் இரண்டாம் பசுமைச் புரட்சி என்ற கொள்கை முடிவினை வேளாண்மைத் துறையின் பல்வேறு நிலைகளில் தீவிரப்படுத்தி, செயல்வடிவம் கொடுத்துவந்ததன் விளைவாக, இன்று தமிழகம் வேளாண்மையில் தலை சிறந்த மாநிலமாக அகில இந்திய அளவில் திகழ்கிறது என்பதை மகிழ்வோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*பிற்பகல் 3–20*

“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை”

என்றார் வள்ளுவப் பெருந்தகை. சுழலும் இந்த பூமி நிலம் கிளறி வளம் கொழிக்க கலப்பையை நம்பித்தான் சுழல்கிறது என்பதற்காக கவி பாடியவன் உலகப் பொதுமறை தந்த புலவன், வள்ளுவன்.

‘ஏர் கொண்ட உழவன் இன்றி
தேர் கொண்ட மன்னன் ஏது,
பேர் சொல்லும் புலவன் ஏது,
போர் செய்யும் வீரன் ஏது’



என கவியரசு கண்ணதாசன் போற்றி புகழ் பாடியதும் உழவர் இனத்தைத்தான். அந்த உழவர் இனத்தை உயிராக நேசிக்கிற அரசு, நம் தாய் வழியிலான தமிழக அரசு. காரணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற இந்த கடல் போன்ற இயக்கத்தைக் கண்டெடுத்த, மன்னாதி மன்னனாம், மஞ்சள் நிறத்துக் கர்ணனாம், மண் மணக்கும் நாடாண்டு, மறைந்தும் மறையாமல் இன்று நூற்றாண்டு பிறந்த நாள் காணுகின்ற எங்கள் கற்கண்டு கண்ணனாம், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் மக்கள் திலகம், நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ‘தாயைக் காத்த தனயன், குடியிருந்த கோயில், தாய்க்குப் பின் தாரம், பெற்றால்தான் பிள்ளையா’ என்றெல்லாம் தனது படங்களுக்கான தலைப்பின் வழியில் வாழ்வியலுக்கான தத்துவங்களை முன்வைத்தவர். தான் நடித்த திரைப்படங்களையெல்லாம் திரைப் பாடங்களாகத் தமிழினத்திற்கு மூலமாக்கியவர். அவர் நடித்த விவசாயி திரைப்படத்தின்மூலம் ‘கடவுள் எனும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி’ என்ற மருதகாசியின் பாடல் வழியே அன்றே தமது இலட்சியத்தை மக்களுக்கு முன்மொழிந்தவர் நம் மக்கள் திலகம். பொன்மனச் செம்மல் வழியிலேயே நம் அம்மா அவர்களும் அரசாட்சியில் அமர்ந்து, ‘அம்மா என்றால், அன்பு’ என காற்றிலே கலந்த கீதத்தை, தமிழினத்தின் தேசிய கீதமாக மாற்றிய அந்த தெய்வீகத் தாயும் தன்னை ஒரு விவசாயி என்றே பறைசாற்றினார்கள்.

தன் தேனாட்சிக் காலத்தில் எல்லாம் உழவர் இனத்தின் உயர்விற்காக ஓய்வின்றி உழைத்தார்கள். ஏரோட்டும் உழவர் இனத்திற்கே உயிரோட்டம் கொடுத்ததும், கழகத்தின் வெற்றி தேரோட்டம் நடத்திக் காட்டியதும் நம் கருணை தாய்தான். முடக்கப்பட்ட முல்லைப் பெரியாறு நீர்த்தேக்க உரிமையை முறையாக தகர்த்ததும், தமிழகம் வளம் காண, வழக்காடி காவேரியை வென்றெடுத்தும் காவேரித் தாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அம்மா, ‘ஏர் உள்ளவரை உங்கள் பேர் இருக்கும் தாயே, உழவு நடக்கும் காலம் எல்லாம் உங்கள் புகழ் நிலைக்கும் தாயே’ என நஞ்சை மற்றும் புஞ்சையை நம்பி வாழும் மக்களெல்லாம் நெஞ்சார வாழ்த்தும் வண்ணம் விவசாயம் சிறப்பதற்கு வியத்தகு திட்டங்களைத் தமிழகத்திற்கு அள்ளி, அள்ளி தந்தீர்கள்.

'தானே' புயல், பேரிடர் பெருமழை வெள்ளம், வரலாறு காணாத வறட்சி என இயற்கைச் சீற்றத்தின் இன்னல்களிலிருந்து தமிழகத்தின் விவசாயப் பெருமக்களை விழிக்கு இமையாக நின்று காத்ததும் எங்கள் வீரத் தாயின் அரசுதான் என்பதையெல்லாம் இவ்வேளையில் மகிழ்ச்சியோடு நிலைநிறுத்துகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கல்லூரி மாணவர் செயலாளராக, கிளைக் கழக அமைப்பாளராக, கிளைக் கழகச் செயலாளராக, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைத் தலைவராக 22 வருடங்கள் பாபநாசம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கியும், 2006, 2011 மற்றும் 2016–ல் நடைபெற்ற மூன்று சட்டமன்றத் தேர்தல்களில் எனக்குப் போட்டியிட வாய்ப்பளித்தும், கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, கடுமையாகப் பிரச்சாரம் செய்து ஒரு குக்கிராமத்தில் ஏழையெளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை மூன்று முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற செய்தும், வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் வேளாண்மைத் துறைக்கு அமைச்சராக்கி, வேளாண் பெருமக்களுக்குச் சேவை புரிய வாய்ப்பளித்த, எங்கள் குல தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர் பாதங்களை வணங்குகிறேன். மேலும், என்னை வெற்றி பெற செய்ய இரவு, பகல் பாராது உழைத்த கழக நிருவாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், வாக்களித்த எனது பாபநாசம் சட்டப் பேரவைத் தொகுதி பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன்.

அம்மா, கடந்த ஆண்டு மலர் கொத்து கொடுத்து, நல்லாசி பெற்று மானியக் கோரிக்கைமீதான என் பதிலுரையைத் துவங்கினேன். இன்றோ, அம்மா நீங்கள் இல்லா இப்பேரவையில் தங்களின் நினைவுகளை நெஞ்சில் நிலைநிறுத்தி, நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தி, தங்களின் ஆசியோடு 2017–2018 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைக்கு இப்பேரவையில் பதிலளிக்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்பதை குறிக்கோளாகக் கொண்ட அம்மா வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வேளாண் வளர்ச்சி, விவசாயிகளின் பாதுகாப்பு மற்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு எனும் குறிக்கோள்களை அடைய



பல்வேறு முன்னோடித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். அதன் வழியில், நீராதாரங்களை மேம்படுத்தும் வகையில், வேளாண் பெருமக்கள் பயனடைய, குடிமராமத்துப் பணிகளுக்கு என்று முதலில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, பின்னர் ரூபாய் 300 கோடிக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தி உத்தரவிட்டுள்ளார் அம்மா வழியில் நடக்கும் நமது தமிழக முதல்வர் அவர்கள்.

உணவு தானிய உற்பத்திக்கும், உழவர்களின் வாழ்வாதார உயர்விற்கும், பாதுகாப்பிற்கும் அரணாக நம் அம்மா அவர்களின் அரசு திகழ்கிறது. மாற்றுமுறை விவசாயத்திற்கும், பணப் பயிர் மேலாண்மைக்கும் ஏதுவாக, தமிழக விவசாயிகளைத் தயார்படுத்தும் மேம்பட்ட முயற்சிகளை நம் தாய் வழியிலான அரசு முன்னெடுத்து வருகிறது.

*பிற்பகல் 3–25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளியில் பந்தியிட்டு; ஆலயத்தில் அமுதூட்டி; அம்மா உணவகத்தில் அனைவருக்கும் அன்னமிட்டு பசிப் பிணி போக்கியவர் நம் பாசத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். 2011–2012 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கான இயக்கம் உருவாக்கப்பட்ட பின்னர் தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி ஏறத்தாழ இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளாக உணவு தானிய உற்பத்தியில் ஆண்டுக்கு 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக உற்பத்தி செய்து சாதனை படைத்ததற்காக தேசிய அளவில் 4 ஆண்டுகளும் மத்திய அரசிடமிருந்து "கிருஷி கர்மான்" விருதை *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். மேற்படி சாதனைகளைப் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை அகில இந்திய அளவில் முன்னணி பத்திரிகைகளான "இந்தியா டுடே" மற்றும் "அக்ரிகல்சர் டுடே" ஆகியவை விருதுகள் வழங்கியும் பாராட்டியுள்ளன. மேலும், சிறந்த மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதையும், சிறந்த இடுபொருள் மேலாண்மைக்கான "ஸ்காட்ச் வெண்தங்க விருதையும்" மத்திய அரசிடமிருந்து தமிழகம் பெற்றுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜூலை 5

ஏழைப் பெண்களின் துயர் துடைக்க "தாலிக்குத் தங்கம்" வழங்கிய தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள் டெல்டா விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் கடந்த ஆண்டு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி குறுவை சாகுபடியினை மேற்கொள்ள 54 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். இதன்விளைவாக 3 இலட்சத்து 16 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 903 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கடந்த 142 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தற்போது மிகக் கடுமையான வறட்சி தமிழகத்தில் நிலவி வருகிறது என்பது இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடுமையான வறட்சியிலும், வளர்ச்சிக் காணும் நோக்கத்துடன் நிலத்தடி நீரைக் கொண்டு நடப்பாண்டில் விவசாயிகள் குறுவை சாகுபடி பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு 56 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினை டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்த 12–6–2017 அன்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், நெல் சாகுபடி 1 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கரிலும், நெற்பயிருக்கு மாற்றாகக் குறைந்த நீர் தேவைக் கொண்ட பயறு வகை சாகுபடி 1 இலட்சத்து 32 ஆயிரம் ஏக்கரிலும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், இத்திட்டத்தின்கீழ் 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம், மானிய விலையில் நீர்ப்பாசன குழாய்கள், உழவு மானியம், சான்று விதை, பசுந்தாள் உர விதைகள், நெல் இயந்திர நடவு, ஜிங்க் சல்பேட், திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை மற்றும் இலைவழி தெளிப்பு டி.ஏ.பி உர மானியங்கள் விவசாயிகளுக்கு வழங்கி வறட்சியிலும் வளம் காண மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலான அரசு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டில் இயற்கை பொய்த்து மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இல்லாததால், மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து டெல்டா பாசனத்திற்காக உரிய காலத்தில் தண்ணீர் திறந்து விட முடியாத



2017 ஜூலை 5] [திரு. இரா. துரைக்கண்ணு]

நிலை மற்றும் உரிய நேரத்தில் இயல்பாகப் பெற வேண்டிய பருவ மழை பொய்த்த அசாதாரண சூழ்நிலைகளால் விவசாயிகள் சாகுபடி பணிகளைக் குறித்த பருவத்தில் துவங்க முடியாத நிலை நிலவி வந்ததால் டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடி நெல் விதைப்பு முறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து 64 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி செலவில் "சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தை" அறிவித்தார்கள். இதனால் டெல்டா மாவட்டங்களில் சென்ற ஆண்டில் சம்பா பருவத்தில், 9 இலட்சத்து 56 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 2 இலட்சத்து 79 ஆயிரத்து 449 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சிபுரியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குறுகியகால மற்றும் குறைவான நீர்தேவையுடைய பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும்பொருட்டு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 59 ஆயிரத்து 738 ஏக்கர் நிலப்பரப்பில் சொட்டு நீர்ப் பாசன முறையில் பயறு வகை பயிர்களுக்கான சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 27 ஆயிரத்து 845 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு, நிலவரியை முழுமையாகத் தள்ளுபடி செய்தும், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற குறுகியகால பயிர்க் கடன்களை, மத்தியகால பயிர்க் கடன்களாக மாற்றி அமைத்தும் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி உள்ளது.

மேலும், சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மல்பெரி சாகுபடி செய்யும் 32 இலட்சத்து 30 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கி அவர்தம் வாழ்வாதாரத்தை பேணிப் பாதுகாத்தவர் நம் தாய் வழியிலான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜூலை 5

பிற்பகல் 3–30

விவசாயிகள் நலனில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் தமிழக முதல்வர் அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, ரூ.20 ஆயிரம் ஆக உயர்த்தி விவசாயிகளின் துயர்துடைக்க தாயுள்ளத்தோடு உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்வருடம் பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 89 விவசாயிகளுக்கு அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில்கொண்டும், வறுமை நிலையை அறிந்தும் அவர்களின் குடும்பத் துயர் போக்கிட தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் 2 கோடியே 67 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கி உதவியுள்ளார்கள்.

கடந்த ஆண்டு வீசிய வார்தா புயல் பாதிப்புகளால் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில், பயிரிழப்பால் பாதிப்படைந்த 69 ஆயிரத்து 860 விவசாயிகளுக்கு, 55 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்ப ஏழையெளிய பாமர மக்கள் அனைத்து உயர்தர மருத்துவ சிகிச்சைகளைச் செலவின்றி பெறும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தினைப் போன்று இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் பயிர் இழப்பால் அவதியுறும் விவசாயிகளின் துயர்துடைக்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு சிறப்பான வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தினை மும்முரமாகச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2015–2016 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நெற்பயிரை காப்பீடு செய்த 2 இலட்சத்து 96 ஆயிரம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 403 கோடியே 79 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



2017 ஜூலை 5] [திரு. இரா. துரைக்கண்ணு]

2016–2017 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நம் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் அதிக அளவு விவசாயிகளைப் பங்கேற்கச் செய்ய இத்துறை எடுத்த முயற்சியின் விளைவாக, அகில இந்திய அளவில் அதிகபட்சமாக 15 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு காப்பீட்டுக் கட்டண மானியத்தில் தமிழக அரசின் பங்காக ரூபாய் 428 கோடி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளார்கள். மேற்கூறிய சீரிய முயற்சியின் பலனாக, இந்நாள்வரை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சம்பா நெற்பயிருக்காக பதிவு செய்துள்ள 4 இலட்சத்து 10 ஆயிரத்து 491 விவசாயிகளுக்கு ரூபாய் ஆயிரத்து 282 கோடியே 5 இலட்சத்து 40 ஆயிரம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உடனடி மற்றும் போர்க்கால நடவடிக்கைகளின் பயனாக பயிர் இழப்பு ஏற்பட்ட குறுகிய காலத்திற்குள் இழப்பீட்டுத் தொகை இந்தியாவிலேயே முதன் முறையாக வழங்கிய சரித்திர சாதனை என்பதை பெருமையுடன் இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள தொகையை அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில் பெற்றுத்தந்து அவர்கள் வாழ்வு ஏற்றம் பெற அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், 2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் சுமார் 24 இலட்சம் விவசாயிகளைப் பதிவு செய்ய உத்தேசித்து, மாநில அரசின் காப்பீட்டு மானியத் தொகையாக ரூபாய் 522 கோடியே 7 இலட்சம் நிதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு மேற்கொண்ட உன்னத நடவடிக்கைகளின் பயனாக, கடந்த ஆண்டு வணிக வங்கிகளில் பெறப்பட்ட பயிர்க் கடன்கள் மற்றும் வேளாண் சார்ந்த நகைக் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலாத விவசாயிகள்மீது எடுக்கப்பட்டு வந்த நிர்ப்பந்த நடவடிக்கைகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'துளி நீர், அதிக பயிர்' என்ற கோட்பாட்டின்படி, நுண்ணீர்ப்

பாசனத்தை ஊக்குவிக்கும்பொருட்டு இந்தியாவிலேயே குறு, சிறு விவசாயிகளுக்கு முதன்முறையாக 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கி, நீர் பயன்பாட்டுத் திறனை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்க அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து அதிக நிதியினை வழங்கி வருகிறது.

2006 முதல் 2011 வரையிலான காலத்தில் ரூபாய் 168 கோடியே 57 இலட்சம் நிதி செலவினத்தில் ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 106 ஏக்கர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டு 51 ஆயிரத்து 995 விவசாயிகள் மட்டுமே பயனடைந்துள்ளனர். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்பான முயற்சிகளாலும், விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்கள் பாசன நீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தாலும் 2011 முதல் 2016 வரையிலான அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நுண்ணீர்ப் பாசனத்திற்காக ரூபாய் 1,038 கோடியே 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 இலட்சத்து 39 ஆயிரத்து 727 ஏக்கர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டு 2 இலட்சத்து 10 ஆயிரத்து 362 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 35 ஆயிரத்து 969 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூபாய் 803 கோடியே 94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகள் வறட்சியிலும் வளர்ச்சி காண முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள்.

*பிற்பகல் 3–35*

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். வாட்டமுற்ற விவசாயிகளின் வாழ்க்கை ஏற்றம் பெற, ஏற்ற திட்டங்கள் வகுத்தார் அம்மா. அவரின் அடிச்சுவட்டை பின்பற்றும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும், நமது தமிழக முதல்வர் அவர்கள் பாசன வசதி எதுவுமின்றி, முழுவதுமாக பருவ மழையையே நம்பி சாகுபடி மேற்கொள்ளும் மானாவாரி விவசாய நிலங்களைக் கண்டறிந்து, மானாவாரி பகுதியில் நீடித்த நிலையான வேளாண்மை சிறப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்புக்கு 2,500 ஏக்கர் வீதம், நான்காண்டுகளில் மொத்தம் 1,000 மானாவாரி தொகுப்புகள் கண்டறியப்பட்டு, அதன்மூலம் 25 இலட்சம் ஏக்கர்





பரப்பில் மானாவாரி நிலங்களை மேம்படுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க மொத்தம் ரூபாய் 802 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டம் 200 தொகுப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்ற பழமொழிக்கேற்ப கூட்டு பண்ணைய முறையை ஊக்குவிக்கும் வகையில் குறு, சிறு விவசாயிகளை ஒன்றிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களாகவும், இக்குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாகவும் உருவாக்குவதற்கு ஒரு புதிய திட்டம் அம்மா அவர்களின் ஆசிகளோடு ஆட்சிபுரியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் குறைந்தபட்சம் 100 குறு, சிறு விவசாயிகள் கொண்ட 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தொடங்கப்பட்டு, மூலதன நிதியாக தலா ரூபாய் 5 இலட்சம் வழங்கப்பட்டு, அதன்மூலம் விவசாய பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்து, விவசாயிகள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கு முதற்கட்டமாக நடப்பாண்டில் ரூ.100 கோடி நிதி வழங்கி விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

“பெற்ற பிள்ளை சோறிடாவிட்டாலும் வைத்த பிள்ளை சோறிடும்” என்ற பழமொழிக்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) தென்னை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தென்னையிலிருந்து “நீரா பானம்” உற்பத்தி செய்ய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சரித்திர சாதனையாக இச்சீர்மிகு திட்டத்தை 18–4–2017 அன்று அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் தென்னை விவசாயிகளின் வருமானம் மேலும் உயர்வதோடு, தமிழக மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த இயற்கை பானம் குறைந்த விலையில் கிடைத்திடவும் அளப்பரிய சாதனையை நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த நடைமுறையில் உள்ள உரிய சட்டங்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தென்னை வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து, அங்கீகரிக்கப்பட்ட தென்னை உற்பத்தியாளர்

சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கி, நீரா பானம் உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

"விதையே விளைச்சலுக்கு வித்து" என்பதற்கேற்ப தரமான விதைகளே பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. இந்நோக்கத்துடன் 2015–2016 ஆம் ஆண்டில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்ட, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமைமூலம் சான்று பெற்ற விதைகளை விவசாயிகள் உபயோகிப்பதை ஊக்குவிப்பது, விவசாயிகளுக்கு விதை மாற்று விகிதப்படி விதை விநியோகத்தை உறுதி செய்வது, தரமான விதைகள் விவசாயிகளுக்கு மாநிலம் முழுவதும் ஒரே விலையில் கிடைப்பதை உறுதி செய்வது ஆகியன இம்முகமையின் நோக்கமாகும். தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையில் உள்ள சுழல் நிதி மூலமாக அரசுக்கு விதைகள் வழங்கும் விதைப்பண்ணை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையுடன்கூடிய உரிய தொகை உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் பயனாக, 2017–2018 ஆம் ஆண்டு வேளாண்மைப் பயிர்களில் வல்லுநர் விதையிலிருந்து ஆதார மற்றும் சான்று விதைகள் உற்பத்தியை பெருக்கும் நோக்கோடு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016–2017 ஆம் ஆண்டில் 20 ஆயிரத்து 781 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் 880 அம்மா சேவை மையங்களின் மூலமாக 5 இலட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து சாதனை அடையப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 25 ஆயிரத்து 740 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, 7 இலட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை சார்ந்த விவசாயத்தை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்திவரும் பாசத்தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நீடித்த நிலையான சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன வேளாண் செயல்பாடுகளில், சீரிய முயற்சிகளை விரிவுபடுத்தும் விதமாக, 2016–2017 ஆம் ஆண்டில், 20 மாவட்டங்களில் ரூபாய் ஒரு கோடி செலவில் 100 புதிய பயிர் பாதுகாப்பு



மாதிரி கிராமங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இயற்கை சார்ந்த வேளாண்மைக்கான இடுபொருட்களைக் கிராமத்திலேயே உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? இடையிடையே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்பொழுதாவது சொல்ல வேண்டும் இல்லையா? மாநிலம் முழுவதிலும் அரசு நிர்ணயித்த மானிய விலையில் (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் உரத்தை பற்றி பேசும்பொழுது நான் எழுந்தேன். உறுப்பினர் பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள் என்றார்கள். இப்பொழுது சொல்ல வேண்டும் அல்லவா?

மாநிலம் முழுவதிலும் அரசு நிர்ணயித்த மானிய விலையில் உரங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யவும், விவசாயம் அல்லாத பயன்பாட்டிற்கு உரங்கள் மானிய விலையில் விற்கப்படுவதைத் தடுக்கவும், விற்பனை முனையக்கருவிகள் வாயிலாக உர பரிவர்த்தனை செய்யும் புதிய முறையினை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள தனியார் உர விற்பனை மையங்களுக்கு 5,298 விற்பனை முனையக் கருவிகளும், கூட்டுறவு உர விற்பனை மையங்களுக்கு 4,139 விற்பனை முனையக் கருவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற நிலை காண வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி காண உறுதி பூண்டுள்ள அம்மா வழியிலான அரசு, வேளாண்மையைத் தொழில்மயமாக்கவும், பண்ணை செயல்பாடுகளை வணிக ரீதியாகவும் செயல்படுத்துவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து தகவல்களையும் விவசாயிகள் உடனுக்குடன் அறிந்து உரிய முடிவுகள் எடுக்க, தகவல் தொழில்நுட்ப முறைகளை உருவாக்கி, முதற்கட்டமாக ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் நிதி செலவில் கைபேசி மற்றும் புரோஜெக்டர் வசதிகள் அட்மா திட்டத்தின்கீழ் வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

"ஊக்குவிக்க ஆள் இருந்தால், ஊக்கு விற்கும் ஆள்கூட தேக்கு விற்பான்" என்பதற்கு இலக்கணமாக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொண்டு, அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையும், ரூபாய் 3 ஆயிரத்து 500 மதிப்புள்ள தங்க பதக்கமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வு வளம் பெற, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்த பாதையில் நடைபோடும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசு, தோட்டக்கலைத் துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக, தமிழகம் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் முன்னிலையில் உள்ளது.

வாழை, மரவள்ளி, மலைத் தோட்டப்பயிர்கள் மற்றும் உதிரிப்பூக்கள் உற்பத்தியில் முதலிடத்திலும், நறுமணப் பயிர்கள் உற்பத்தியில் தமிழகம் இரண்டாம் இடத்திலும் உள்ளது. "வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காகப் பெருக்குவதே" புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தாரக மந்திரமாகும். அதன் அடிப்படையில், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பளவைத் தற்போதுள்ள 34 இலட்சம் ஏக்கர் என்ற அளவிலிருந்து, 2017–2018 ஆம் ஆண்டில் 39 இலட்சம் ஏக்கராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டு, அதனைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2016–2017 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தித் திறன் பெருக்குத் திட்டம், தேனீ வளர்ப்புமூலம் உற்பத்தியை அதிகரித்தல், மாடித் தோட்டத்தை ஊக்குவிப்பதற்கான இயக்கம், விவசாயிகளின் தோட்டங்களில் நிழல்வலைக் குடில்கள் அமைத்தல், புதிய அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலைப் பயிர்த் திட்டங்கள் ரூபாய் 36 கோடியே 13 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்டன. நடப்பு



2017–2018 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூபாய் 41 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதன்மூலம் குறைந்த பரப்பளவில் அதிக வருமானத்தைப் பெறச் செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் 2016–2017 ஆம் ஆண்டில் ரூபாய் 91 கோடியே 72 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. மேலும், 2017–2018 ஆம் ஆண்டில் ரூபாய் 92 கோடியே 78 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவச் செல்வங்களுக்குக் காலணி முதல் கணினி வரை தேவையறிந்து வழங்கி, ஏழை மாணாக்கர்கள் கல்வி கற்க ஊக்குவித்த கருணை தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா வழி வந்த நமது பாசமிகு தமிழக முதல்வர் அவர்கள் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்களைச் செயல் விளக்கப்படுத்தி, அதிக உற்பத்தித் திறனை எட்டுவதற்காகத் திட்டமிட்டு, இஸ்ரேல் தொழில்நுட்ப உதவியுடன் கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் கொய்மலர்களுக்கான மகத்துவ மையம் ரூபாய் 8 கோடியே 80 இலட்சம் செலவிலும், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் காய்கறி பயிர்களுக்கான மகத்துவ மையம் ரூபாய் 10 கோடியே 18 இலட்சம் திட்ட மதிப்பீட்டிலும் இரண்டு மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மலைக் காய்கறிகளுக்கான மகத்துவ மையம், ஊட்டியில் உள்ள நஞ்சநாடு பகுதியிலும் மற்றும் வெப்பமண்டல பழங்களுக்கான மகத்துவ மையம், திருச்சியிலும் ஆக இரண்டு மகத்துவ மையங்கள் ரூபாய் 11 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசில் இந்நாள் வரை விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வாயிலாக ஒரு கோடியே 49 இலட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளனர். அதன்மூலம் வேளாண் விற்பனை வாரியத்திற்கு ரூபாய் 598 கோடியே 18 இலட்சம் சந்தைக் கட்டணமாக வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜூலை 5

பிற்பகல் 3–45

விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், தேசிய அளவில் பரிவர்த்தனை மேற்கொள்ளவும் வழிவகை செய்யும் தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தினைச் செயல்படுத்திட ஏதுவாக, உரிய சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, முதற்கட்டமாக 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிதியின்மூலம் ஒருங்கிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக வேலூர் மற்றும் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிசோதனை அடிப்படையில் மின்னணு வர்த்தகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மூன்று மாதங்களில் 1,491 விவசாயிகள் மற்றும் 685 வியாபாரிகள் கலந்துகொண்டு ரூபாய் 10 கோடியே 7 இலட்சம் மதிப்புள்ள 1,600 மெட்ரிக் டன் மஞ்சள் விளைபொருள் பரிவர்த்தனை மேற்கொண்டுள்ளனர். கடந்த 6 ஆண்டுகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ரூபாய் 150 கோடியே 56 இலட்சம் செலவில் 2 இலட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட 88 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 1,750 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட 70 குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை வணிகப்படுத்த திருச்சி மாவட்டம், கள்ளிக்குடியில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய சந்தை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

தோட்டக்கலை விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும்பொருட்டு தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர விளைபொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தை ரூபாய் 398 கோடியே 75 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2016–2017 ஆம் ஆண்டில் வேளாண் விளைபொருட்களைச் சேமித்து பாதுகாத்திடவும், பதப்படுத்தி மதிப்புக்கூட்டி, அதன் தரத்தை உயர்த்திடவும், மஞ்சள் மற்றும் முந்திரிக்கான பதப்படுத்தும் இயந்திரங்கள், பருத்தி இழை மற்றும் மிளகாய்க்கான தர ஆய்வுக் கருவிகள், சூரிய உலர்விப்பான் மற்றும் தானிய சேமிப்புக்கலன் ஆகியவை மொத்தம் ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



2017 ஜூலை 5] [திரு. இரா. துரைக்கண்ணு]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பண்ணை இயந்திரமயமாக்கல்மூலம் வேளாண்மையில் தொழிற்புரட்சி ஏற்படுத்தி விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், பண்ணை சக்தியின் அளவினை அதிகரிக்கவும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், குறு, சிறு தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்திலும், 3,020 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூபாய் 23 கோடியே 50 இலட்சம் மானியத்தில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த 2016–2017 ஆம் ஆண்டில், 420 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் ரூபாய் 41 கோடியே 91 இலட்சம் மானிய உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க 535 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் மொத்தம் ரூபாய் 49 கோடியே 50 இலட்சம் மானிய உதவியுடன் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பொறியியல் துறையின்மூலமாக புல்டோசர்கள், டிராக்டர்கள், லேசர் சமன் செய்யும் கருவிகள், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள், சுழற்கலப்பைகள், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரங்கள் மற்றும் வரப்பு அமைக்கும் கருவிகள் வாங்கப்பட்டு, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். வட்டார அளவில் வேளாண்மை இயந்திரங்கள், கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்மூலமாக ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள அதிக குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்கள், நாற்று நடும் கருவிகள், கதிரடிக்கும் கருவிகள், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரங்கள் ஆர்வமுள்ள விவசாயக் குழுக்களால் வாங்கப்பட்டு குறு மற்றும் சிறு விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10 இலட்சம் மானியமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் மானாவாரி வேளாண்மை இயக்கத்தின்கீழ் கிராம அளவிலான 200 பண்ணை இயந்திர மையங்களுக்கு ரூபாய் 16 கோடி மானிய உதவியுடன் ரூபாய் 10 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பீட்டில் தலா ரூபாய்

8 இலட்சம் மானியத்தில் விவசாயக் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

கரும்பு சாகுபடியை ஊக்குவிக்க, கரும்பு அறுவடை இயந்திரங்கள் மற்றும் இதர கருவிகள் கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள், வேளாண் உற்பத்திக் குழுக்கள், தொழில் முனைவோர்மூலம் ஏற்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் வழியே வாங்கப்பட்டு தேவைப்படும் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில்விட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 3 கோடி மானியம் ஒதுக்கீடு செய்து 5 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மையத்திற்கும் ரூபாய் 60 இலட்சம் மானியத் தொகையாக வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விவசாயிகளுக்குப் பாசன வசதிக்கான மின்சக்தியினை உறுதி செய்திடும்பொருட்டு, இந்நாள் வரை 2,826 சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுக்கு ரூபாய் 102 கோடி மானியம் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்படும் மழைநீரைக் கொண்டு, மிளகாய், பருத்தி, பயறு வகைகள் மற்றும் சிறு தானியங்கள் போன்ற மானாவாரி பயிர்களின் முக்கிய பயிர் வளர்ச்சிக் காலங்களில் உயிர்ப் பாசனம் வழங்கிட, 1,352 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 6 கோடியே 66 இலட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 2017–2018 ஆம் ஆண்டில் 800 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 4 கோடியே 19 இலட்சம் செலவில் சிறப்புத் திட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பரப்பளவுக் குறைவினால் ஏற்படும் உற்பத்தி இழப்பினை ஈடுகட்டவும் 2017–2018 ஆம் ஆண்டில் 35,000 ஏக்கர் பரப்பளவிற்குக் கரும்பு



சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசன முறையை ஏற்படுத்தவும், 40,000 ஏக்கர் பரப்பளவில் நீடித்த நவீன கரும்புச் சாகுபடித் திட்டத்தை விரிவுபடுத்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் ரூபாய் 30 கோடி மானிய உதவியில் விவசாயிகளுக்கு 1,600 நிழல் வலைக் கூடங்கள் அமைக்கவும், 24 கோடி கரும்பு பருசீவல் நாற்றுகள் வழங்கவும் அம்மா அவர்களின் அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–50

“நீரின்றி அமையாது உலகு” எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினைப் பின்பற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து, நீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்து விவசாய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு ‘தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை’ கடந்த 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இம்முகமையின்கீழ், இயற்கைவள மேம்பாடு, பண்ணை உற்பத்தித் திட்டம், வாழ்வாதார மேம்பாடு ஆகிய திட்டங்கள் 2017–2018 ஆம் ஆண்டில் ரூபாய் 220 கோடியே 25 இலட்சம் செலவில் 26 மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் “செயல் ஒன்று, பலன் இரண்டு” என்ற வகையில், நீர்வள ஆதாரத்தைப் பெருக்கி நீர் தேக்கும் அளவினை அதிகரிக்கவும், விவசாய நிலங்களின் வளத்தினை மேம்படுத்த நீர் நிலைகளில் கட்டணமில்லாமல் வண்டல் மண் எடுத்து பயன்பெறவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி அளித்தது தமிழக மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்போது 13 இளமறிவியல், 33 மூதறிவியல், 26 முனைவர் பட்டப் படிப்புகள், 27 பகுதிநேர ஆராய்ச்சி சார்ந்த முனைவர் பட்டப் படிப்புகள் மற்றும் நான்கு ஒருங்கிணைந்த முனைவர் பட்டப் படிப்புகள் ஆகியவற்றைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 14 உறுப்புக் கல்லூரிகள்மூலம் வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு முழுவதும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 14 கல்லூரிகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜுலை 5

இதன் பயனாக பல்கலைக்கழகம் பல்வேறு புதிய பயிர் இரகங்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மற்றும் பயிர் மேலாண்மைத் தொழில்நுட்பங்களைத் தனது ஆராய்ச்சியின் மூலமாக விவசாயிகளின் மேம்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது.

'நமது இலட்சியம் உயர்வானது, நமது பார்வை தெளிவானது, நமது வெற்றி முடிவானது' என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அமுதமொழிக்கேற்ப, "கருவிலிருந்து கல்லறை வரை" நல்ல பல திட்டங்களை அறிவித்து, மக்களின் நலம் காத்த மகராசி, வேளாண்மைத் துறையிலும், "விதையில் இருந்து விளைபொருள் விற்பனை வரை" என்று விவசாயிகளுக்கு பல சிறப்பான சீர்மிகு திட்டங்களை வழங்கி, உழவர்தம் உள்ளம் உவகையடைய உரிய வழிமுறைகளை அமைத்து வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி வேளாண்மைத் துறை சார்ந்த அனைத்து சகோதரத் துறையின் தொழில்நுட்பங்களும் விவசாயிகளுக்கு ஒரு குடையின்கீழ் ஒரே இடத்தில் எளிதில் கிடைத்து பயன்பெறும் வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்க 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டு ரூபாய் 150 கோடி நபார்டு வங்கி நிதியுதவியுடன் அறிவிக்கப்பட்ட 100 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடங்களில், 52 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மீதமுள்ள 48 மையங்கள் கட்டி முடியும் தருவாயில் உள்ளன.

மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் 46 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் கட்ட ரூபாய் 69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வெவ்வேறு நிலையில் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் நமது பாசமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கப் பணிகள் விரைந்து விவசாயிகளுக்கு சென்றடைய வேளாண் துறைக்கென 53 Bolero ஜீப்புகள் ரூபாய் 3 கோடியே 59 இலட்சம் செலவிலும், 17 Xylo வாகனங்கள் ரூபாய் 5 கோடியே 4 இலட்சம் செலவிலும், வேளாண் பொறியியல் துறைக்கென 104 Bolero ஜீப்புகள் ரூபாய் 6 கோடியே 63 இலட்சம் செலவிலும் வழங்கியுள்ளார்கள்.



2017 ஜுலை 5] [திரு. இரா. துரைக்கண்ணு]

பணியாளர்களின் நலம் பேணும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் வேளாண்மைத் துறைக்கென வேளாண் அலுவலர் 55 நபர்கள், உதவி வேளாண் அலுவலர் 100 நபர்கள் மற்றும் தோட்டக்கலைத் துறைக்கென தோட்டக்கலை அலுவலர் 29 நபர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

"வயிற்றுக்கு சோறிடல் வேண்டும்
இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம்"

என்ற மகாகவி பாரதியார் கனவை நனவாக்க, விலையில்லா அரிசி தந்து, பசிப்பிணி போக்கி, பார் வியக்கும் புகழால் சிறந்தது நம் பாசத் தாயின் அரசு. 'சாதி, மதச் சண்டையில்லை, சமத்துவத்தில் குறையில்லை, கருணைக்கும் பாதகமில்லை, கழனிகளில் பசுமைக்கு பஞ்சமில்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற குறிக்கோளுடன் எங்கள் அம்மா வழி அரசு அயராது உழைத்து வருகிறது. அரசியல் பகையோரும் ஆதரித்து வாழ்த்துகின்ற வண்ணம் நல்லாட்சிக்கே இலக்கணம் வகுத்து பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார் தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

பிற்பகல் 3–55

"நாளை நமதே, நாளும் நமதே" என்பதை இலட்சியமாக்கி, "எனக்குப் பின்னால் நூறு ஆண்டுகள் ஆனாலும் நம் கழக ஆட்சி தொடர்ந்து இருக்கும்" என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சூளுரையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) "தாய்வழி வந்த தங்கங்களெல்லாம், ஓர் வழி நின்று நேர் வழி சென்றால், நாளை நமதே" என்கிற நம் தலைவன் போதனையை தலைமேல் சுமந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உதித்த வயிறு பல்வேறு ஆயினும் ஒன்றரைக்கோடி தொண்டர்களைக் காக்கும் தாய், கருணை தெய்வம் புரட்சித் தலைவி அம்மாதான் என்ற உணர்வோடு, கழகம் என்கிற ஒப்புமை இல்லா எஃகுக் கோட்டையை உயிராகக் காப்போம் என்று சபதம் ஏற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். நல்லாட்சி நடத்தி வருகின்ற நமது பாசமிகு மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

மேலும் இந்த மானியக் கோரிக்கை நிறைவேறவும், நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிதி பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக "அம்மா" உயிர் உரம் விவசாயிகளுக்கு விநியோகம்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பத்தைத் தமிழக விவசாயிகள் அதிக அளவில் பின்பற்றுவதற்காக, திரவ உயிர் உர உற்பத்தியைத் தொடர்வதற்கான அறிவிப்பை 2014–2015 ஆம் ஆண்டில் அறிவித்தார்கள். அதன்படி, தற்போது திரவ உயிர் உரம் ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், ஆண்டொன்றுக்கு 3,000 மெட்ரிக் டன் திட உயிர் உரமும் துறைமூலம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியினை நினைவுகூரும் வகையில், அம்மா அவர்களது ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படியும், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மண் வளம் பேணி, மகசூல் பெருக்கும் மலிவு விலை உயிர் உரங்கள் "அம்மா உயிர் உரம்" என்ற பெயரில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 1.80 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் 22 அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள்மூலம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது தென்னை நாற்றுப் பண்ணைகளில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், வளமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய இப்பண்ணைகளுக்குப் போதிய நீர் வசதி அளிப்பது



அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில் 6 தென்னை நாற்றுப் பண்ணைகளில் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் நீர்ப் பாசனம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 34 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய தென்னை ஒட்டுண்ணி மையம் அமைக்கப்படும்**

தென்னை சாகுபடியில் கருந்தலைப் புழு தாக்குதலால், தென்னை மரங்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 2,000 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. கருந்தலைப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த தமிழகத்தில் 18 இடங்களில் ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. தென்னை விவசாயிகளின் நலன்கருதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2017–2018 ஆம் ஆண்டில் ஒரு புதிய தென்னை ஒட்டுண்ணி மையம் 34 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**4. சூரியசக்தி விளக்குப் பொறிமூலம் பூச்சிக் கட்டுப்பாட்டிற்காக ரூபாய் 5 கோடி ஒதுக்கப்படும்**

உடல் நலம் பேண, நஞ்சற்ற வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் பெற்று பயனடைய, வேளாண் சாகுபடியில் பூச்சிக்கொல்லி மருந்தின் பயன்பாட்டினைத் தவிர்த்து, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த தமிழ்நாடு அரசு சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பயிர்ப் பாதுகாப்பில், புதிய முயற்சியாக சூரிய சக்தியின்மூலம் இயங்கும் 25,000 விளக்குப் பொறிகள் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**5. தோட்டக்கலைப் பயிர்களில் தரமான நடவுப் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய ரூ.2.67 கோடி மதிப்பில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் வலுப்படுத்தப்படும்**

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளைச் செயல்விளக்கப் பண்ணைகளாக மாற்றுவதுடன், விவசாயிகளுக்குத் தரமான, இனத்தூய்மையான நடவுப் பொருட்களை அதிக அளவில் வழங்குவதற்காக, பயன்பாட்டில் இல்லாத பண்ணைப் பகுதிகளைத் திறம்பட பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில் ஐந்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் 2 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூபாய் 3 இலட்சமாகவும், வியாபாரிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூபாய் 2 இலட்சமாகவும் உயர்த்தப்படும்**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், ரூபாய் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது உயர்ந்துவரும் விலைவாசியினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், இத்தொகை ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், வியாபாரிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 2 இலட்சமாகவும், விளைபொருட்களை இருப்பு வைக்கும் காலத்தினை 3 மாதத்திலிருந்து 6 மாதமாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. வேளாண் விற்பனை தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க ரூபாய் 7.34 கோடி மதிப்பில் மின்னணு பயிற்றுவித்தல் மையம் அமைக்கப்படும்**

அறுவடை பின்செய் மேலாண்மை தொழில்நுட்பம், மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சந்தைத் தகவல்களை விவசாயிகளுக்கும், தொழில் முனைவோர்களுக்கும்



மின்னணு நூலகம் மற்றும் தகவல் தொடுதிரை அமைப்புகள் வாயிலாக வழங்குவதற்கும், சிறு திட்ட மாதிரிகளை உருவாக்கி உதவுவதற்கும் கிருஷ்ணகிரி, மதுரை, தேனி, கன்னியாகுமரி, கரூர், திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் கோவை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும்வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் 9 மின்னணு கற்பிக்கும் மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**8. கடலூர் மாவட்டத்தில் சேத்தியாத்தோப்பு, ஸ்ரீமுஷ்ணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ரூபாய் 6.10 கோடி மதிப்பில் வலுப்படுத்தப்படும்**

விவசாயிகளின் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சிரமமின்றி கொண்டு சென்று விற்பனை செய்திடவும், விளைபொருட்களைப் பாதுகாத்து, சேமித்து நல்ல விலைக் கிடைக்கும்போது விற்பனை செய்ய ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு மற்றும் ஸ்ரீமுஷ்ணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உட்கட்டமைப்புகள் 6 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**9. அக்மார்க் ஆய்வகங்கள் ரூபாய் 1.20 கோடி மதிப்பில் வலுப்படுத்தப்படும்**

நுகர்வோருக்குத் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்களை வழங்கும்பொருட்டு, உணவுப் பொருட்களைப் பரிசோதனை செய்து, அக்மார்க் தரம் வழங்க 30 அக்மார்க் ஆய்வகங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. தற்போது அக்மார்க் ஆய்வகங்களில் உணவுப் பொருட்களை விரைவாகவும் துல்லியமாகவும் பரிசோதனைச் செய்வதற்காக அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த வேண்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில் 30 அக்மார்க் ஆய்வகங்களுக்கு அதிநவீன ஆய்வக உபகரணங்கள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

**10. தக்காளியை பண்ணையளவில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய ரூபாய் 2 கோடி மதிப்பில் பதப்படுத்தும் இயந்திரங்கள் கொண்ட வாகனங்கள் வழங்கப்படும்**

தக்காளி அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் காலங்களில், விவசாயிகளுக்குப் போதிய விலை கிடைப்பதில்லை. தக்காளியினை மதிப்புக்கூட்டி விற்கும்பொழுது, நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளதாலும், சந்தைத் தேவை அதிகம் உள்ளதாலும், விவசாயிகளின் நலனுக்காக, தக்காளி பதப்படுத்தும் இயந்திரங்கள் கொண்ட ஐந்து வாகனங்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் வழங்கப்படும். இதன்மூலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நாச்சிபாளையம், கிணத்துக்கடவு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ராயக்கோட்டை, பாலக்கோடு மற்றும் சூளகிரி பகுதிகளில் விவசாயிகளின் விளை நிலங்களுக்கு அருகிலேயே இவ்வாகனங்களைக் கொண்டு சென்று பதப்படுத்தி மதிப்பு கூட்டும் பொருட்களைத் தயாரிக்க வழிவகை செய்யப்படும். இதனால், விவசாயிகளுக்கு 20 முதல் 50 சதவிகிதம் கூடுதல் வருவாய் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**11. பத்து மாவட்டங்களில் 4.32 கோடி ரூபாய் மதிப்பில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்படும்**

தமிழகத்தில் விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக்கி, தரமான இடுபொருட்கள் மற்றும் சேவைகளை ஒருங்கே பெற்று, உயரிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, அதிக வருவாய் பெற, தற்போது தமிழகத்தில் 42 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிலக்கடலை, திருநெல்வேலி மாவட்டத்தில் வாழை மற்றும் தேங்காய், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழை, கரூர் மாவட்டத்தில் குறுதானியங்கள், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் காய்கறிகள், திருப்பூர் மாவட்டத்தில் அங்ககக் காய்கறிகள், வேலூர் மாவட்டத்தில் பயறு வகை மற்றும் காய்கறிகள் என பத்து உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கிட மாண்புமிகு இதய



தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதி செலவிடப்படும்.

**12. ஈரோடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் மற்றும் தென்னைக்கான சூரிய உலர்விப்பான்கள் அமைக்கப்படும்**

சூரிய உலர்விப்பான்களில் உலரவைக்கப்படும் கொப்பரை தரமாக இருப்பதால், சூரிய உலர்விப்பான்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளத்தூர் மற்றும் திருச்சிற்றம்பலம் கிராம தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் 2 சூரிய உலர்விப்பான்களும், மஞ்சள் அதிகம் சாகுபடி செய்யப்படும் ஈரோடு மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் கருமாண்டிசெல்லிபாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2 சூரிய உலர்விப்பான்களும் 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

**13. அறுவடைக்குப் பின் செய்நேர்த்திக்கான மேலாண்மை இயந்திரங்கள் 2 கோடி ரூபாய் மதிப்பில் விநியோகிக்கப்படும்**

விவசாயிகள் தங்கள் பகுதிகளில் விளையும் வேளாண் விளைபொருட்களைப் பண்ணை அளவிலேயே மதிப்புக் கூட்டி, விற்பனை செய்து, நல்ல இலாபம் ஈட்ட ஏதுவாக, 2017–2018 ஆம் ஆண்டில் அறுவடைக்குப் பின் செய்நேர்த்திக்கான மேலாண்மை இயந்திரங்கள் (Distribution of Post Harvest Technology and Management Machinery) விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், விவசாய உபயோகிப்பாளர் குழுக்கள், விவசாய கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மானியத்தில் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், இதற்காக தமிழ்நாடு அரசு மொத்தம் இரண்டு கோடி ரூபாய் நிதியினை வழங்கும்.

**14. வேளாண்மை பொறியியல் துறைக்கு 54 இலட்சம் ரூபாய் மதிப்பில் கணினியுடன்கூடிய நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் வாங்கப்படும்**

போதிய மழையின்மையால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதால், விவசாயிகள் புதிய கிணறுகளையும், ஆழ்துளைக் கிணறுகளையும் அமைத்து வருகின்றனர். நிலத்தடி நீர்மட்டம் உயர தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், குறைந்த செலவில் நிலநீர் ஆய்வுகளை மேற்கொண்டு, கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும் இடங்களைத் தேர்வு செய்வதில் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வேளாண்மை பொறியியல் துறைக்கு கணினியுடன்கூடிய புதிய நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Digital Resistivity Meters) 15 எண்கள், 54 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

**15. நீரில் கரையும் உரத் தயாரிப்பு மையம் 5.3 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்**

சிக்கன நீர்ப்பாசன முறையைப் பிரபலப்படுத்துவதற்காக, நுண்ணீர்ப் பாசன முறையை அமைக்கும் குறு, சிறு விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவில் தமிழ்நாடு அரசு 100 சதவிகித மானியம் அளித்து வருகிறது. மேலும், நுண்ணீர்ப் பாசனம்மூலம் இரசாயன உரங்களைச் சிக்கனமாகப் பயிர்களின் தேவைக்கேற்ப வழங்க இயலும் என்பதாலும், இவ்வகை நீரில் கரையும் உரங்கள் இறக்குமதிமூலம் பெறப்படுவதால் ஏற்படும் விலை உயர்வைக் கருத்தில் கொண்டும் தமிழக அரசே இவ்வுரங்களை உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. முன்னோடி முயற்சியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நீரில் கரையும் உரங்களை உற்பத்தி செய்ய கோயம்புத்தூர், மதுரை மற்றும் கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி வளாகங்களில் 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் நீரில் கரையும் உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும்.



**16. ஊட்டச்சத்துக்கள் நிறைந்த, கால நிலை மாறுபாடுகளைத் தாங்கி வளரக்கூடிய உயர்தரமான நெல் இரகங்கள் 2.46 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்படும்**

தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவு அரிசி என்பதால், உடல் நலத்திற்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களும் அடங்கிய நெல் இரகங்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். புரதம், நார்ச்சத்துக்கள், இரும்பு மற்றும் துத்தநாகம் போன்ற சத்துக்கள் அடங்கியதும், பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டதும், காலநிலை மாறுபாடுகளைத் தாங்கி வளரக்கூடிய தன்மை கொண்ட மிகச்சன்ன நெல் இரகங்கள் உருவாக்கும் திட்டத்திற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2 கோடியே 46 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும்.

**17. காய்கறிப் பயிர்களில் தரமான வீரிய ஒட்டு நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம் 2.78 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்**

ஒட்டு கட்டிய காய்கறி நாற்றுக்களை பசுமைக் குடில்களில் உற்பத்தி செய்யும்போது பயிரின் வாழ்நாள் அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக மகசூலும் அதிக வருமானமும் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளின் தேவைக்கேற்ப வீரிய ஒட்டு இரகங்களை உற்பத்தி செய்து வழங்கவும், வியாபார ரீதியாக ஒட்டு செடிகளை உற்பத்தி செய்வதற்கான பயிற்சியை தொழில் முனைவோர்களுக்குத் தரவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

**18. அங்கக வேளாண்மையில் அங்கக மற்றும் உயிரி இடுபொருட்களுக்கான தர நிர்ணய அளவீடு மேற்கொள்ள 1.17 கோடி ரூபாய் வழங்கப்படும்**

அங்கக வேளாண்மையில் தரமான அங்கக இடுபொருட்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய, அங்கக இடுபொருட்கள், உயிர்பூச்சிக்கொல்லி மற்றும் நுண்ணுயிர் இடுபொருட்களின் தர நிர்ணயம் செய்யும் முன்னோடித் திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இயற்கை இடுபொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், நிலையான வேளாண்மைக்கு சான்றளிப்பதற்கும் அங்கக வேளாண்மையை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதற்கும் இத்திட்டம் உதவும்.

**19. விதைப் பரிசோதனை நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வலுப்படுத்தப்படும்**

விவசாயிகளுக்குத் தரமான விதைகளை உரிய நேரத்தில் வழங்குவதில் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார்மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் தரத்தினைப் பரிசோதனை செய்து, அவற்றை உறுதிசெய்ய மாநிலம் முழுவதும் 33 விதை பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இப்பரிசோதனை நிலையங்களில் விதைப் பரிசோதனை முடிவுகளைத் துல்லியமாகவும், விரைவாகவும் வழங்கிடும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில் அனைத்து விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் நவீன ஆய்வுக் கருவிகளும் உபகரணங்களும் வாங்கப்படும்.

**20. வேளாண் இயக்குநரகத்தில் உள்ள கூடுதல் மற்றும் இணை இயக்குநர்களுக்கு வாகனம் வழங்கப்படும்**

விவசாயிகளின் நலன் போற்றும் எண்ணத்துடன் மாநில அளவில் திட்டங்களை விரைந்து செயலாக்க வேளாண் இயக்ககத்தில் உள்ள ஐந்து கூடுதல் வேளாண்மை இயக்குநர்களுக்கும், வேளாண்மை இணை இயக்குநருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2017–2018 ஆம் ஆண்டில், புதிதாக வாகனங்கள் 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். ஓட்டுநர் மற்றும் எரிபொருள் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 14.50 இலட்சம் செலவாகும்.



**21. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களின் வாகன எரிபொருள் பயன்பாட்டு உச்சவரம்பு உயர்த்தப்படும்**

விவசாயிகளின் தேவைகளை நேரில் ஆய்வு செய்து உடனடித் தீர்வு வழங்கிடவும், உயர் தொழில்நுட்பங்கள் உடனுக்குடன் விவசாயிகளைச் சென்றடையச் செய்யும்வகையில், பல்வேறு விரிவாக்கப் பணிகளை கிராமங்களுக்குச் சென்று மேற்கொள்ள வேண்டியுள்ளது. பல்வேறு திட்டப் பணிகளை திறம்பட மேற்கொள்ளவும், ஆய்வு செய்யவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள 55 லிட்டர் எரிபொருள் பயன்பாட்டு உச்சவரம்பினை 100 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூபாய் 1 கோடியே 44 இலட்சம் செலவாகும்.

**22. தோட்டக்கலைத் துறையில் 805 உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படும்**

தோட்டக்கலை விரிவாக்கச் சேவையினை மேம்படுத்தி, உரிய நேரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தோட்டக்கலைத் தொழில்நுட்பங்களைச் செயல் விளக்கங்கள் மற்றும் பண்ணை அளவில் எடுத்துரைப்பதன்மூலம் தோட்டக்கலை உற்பத்தியை இரு மடங்காக்கி விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தோட்டக்கலைத் துறையில் காலியாகவுள்ள 805 உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் முன் வைத்த கருத்துகளுக்கெல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் எனது பதிலுரையில் உரிய விளக்கத்தினை அளித்துள்ளேன். எனவே மாமன்ற உறுப்பினர்கள், எனது விளக்கத்தினை ஏற்று, அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ்க விவசாயிகள் என்ற நிலை இன்று சாவு விவசாயி என்ற நிலையாக இருக்கிறது. ஆந்திராவில் மாண்புமிகு முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் விவசாய அதிகாரி ஒருவரை நியமித்துள்ளார். அந்தந்தக் காலத்திற்கேற்ப பயிர்கள் செய்வதற்கும், அறிவுரைகள் வழங்குவதற்கும், பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கும், விளைந்த பொருட்களை விற்பனை செய்வதற்கும், தகுந்த வழிகாட்டுதல்களை வழங்கும் வகையில் நியமித்திருக்கிறார்கள். அதுபோல் தமிழ்நாட்டிலும் அனைத்துக் கிராமங்களுக்கும் விவசாய அதிகாரிகளை நியமிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதைக் கேட்கின்றேன். விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து, விதை அனைத்தும் இலவசமாகக் கொடுத்து, விவசாயிகளுடைய தரத்தை உயர்த்தும் திட்டம் அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் சார்பாக கொடைக்கானல் மேல்மனைகள் மற்றும் கீழ்மனைகள் பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் முழுமையாக வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் கிடைக்க வழிவகை செய்திட அரசு முன்வர வேண்டும். இதுபோல் தமிழகம் முழுவதும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துகொண்டாரா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், போதும், இனி ஒரு தடவை பேசப் போகிறீர்களா? போதும் நிறைய கேட்டுவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், சொல்லுங்கள், உரையை முடியுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** ஓர் ஆண்டிற்கு 90 ஆயிரம் மெட்ரிக் டன் விதை உற்பத்திச் செய்து, விநியோகம் செய்யப்படுவதில், 40 ஆயிரம் மெட்ரிக் டன் விதை திருப்பூர் மாவட்டத்தில் மட்டும்



உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் விதை பரிசோதனை நிலையம், விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில், ராஜபாளையம் தொகுதியில், தெற்கு தேவதானம் ஊராட்சியில் 52 ஏக்கர் நிலப்பரப்பில் விதைப் பண்ணை அமைந்துள்ளது. இந்த விதைப் பண்ணைக்குக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் மூன்று போர்வெல் அமைக்கப்பட்டு இன்று வரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லை. இதனால் 52 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படாமல் உள்ளன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு, இனியாவது இந்த அரசு இந்த விதைப் பண்ணை செயல்பட நடவடிக்கை எடுக்குமா என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குடந்தை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை என்று கொடைக்கானல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறினார்கள் என்று சொன்னார்கள். தமிழகத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், வேளாண்மை அதிகாரிகள் மூலமாகவும் முறையாகக் கணக்கெடுக்கப்பட்டு, உரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தாங்கள் கூறியபடி இலவசமாக பூச்சி மருந்து வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த விதைப் பண்ணைக் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,047,39,46,000/–, மூலதனக் கணக்கில் ரூ.437,09,65,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.130,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–7–2017) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

94. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

95. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

96. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

97. பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2016–2018)

98. பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2016–2018)

99. பொதுக் கணக்குக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2016–2018)

100. பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2016–2018)

101. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2016–2018)

# இணைப்பு

(688 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை,

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018

**முன்னுரை**

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.”

(திருக்குறள்:1032)

“எனது தலைமையிலான அரசு, விரிவான பல்வேறு புதிய திட்டங்கள் மூலமாக முதன்மை பிரிவுக்கு புத்துயிர் அளித்து வருகிறது. தமிழக மக்களுக்கு அர்ப்பணிக்கும் விதமாக, விரைவு இயக்க அணுகுமுறையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, எனது அரசு பல்வேறு முயற்சிகள் எடுக்க திட்டமிட்டுள்ளது. உற்பத்தித்திறனில் உள்ள இடைவெளியைக் குறைத்து வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதோடு வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டுவதன்மூலம் நாங்கள் இரண்டாம் பசுமைப் புரட்சியை உறுதியாக ஏற்படுத்துவோம்.”

-மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

உணவு பாதுகாப்பு, ஊரக பொருளாதாரம் மற்றும் விவசாயிகளின் நிலையான சமூக-பொருளாதார மேம்பாட்டின் முக்கிய அங்கமாக வேளாண்மைத் தொழில் திகழ்கிறது. உற்பத்தி பிரிவான வேளாண்மை, வறுமையை அகற்ற வழிவகுப்பதோடு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பல்வேறு துறைகள் செயல்படுவதற்கும் உறுதுணையாக விளங்குகிறது. துரித வளர்ச்சி கொண்ட வேளாண்மைப் பிரிவால் மட்டுமே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமப்புறத்தில் தனிநபர் வருமானத்தை உயர்த்தவும், பல்வேறு வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளை மேம்படுத்த நுகர்வோர் விரும்பும் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை

[2017 ஜுலை 5

உருவாக்கவும், கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்வதை குறைக்கவும், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் முடியும்.

வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த பிரிவுகள் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. எனினும் உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்ற அதே வேளையில் நீடித்த நிலையான சுற்றுச் சூழலுக்கு உகந்ததாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமாதலால், வேளாண்மை இருமுனை சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதிகரித்துவரும் மக்கள் தொகை, மாறிவரும் பருவநிலை, குறைந்துவரும் உற்பத்தி வள ஆதாரங்கள், அதிகரித்துவரும் இடுபொருள் செலவினம், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை மற்றும் நிலையற்ற சந்தை விலையால் வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் பல்வேறு சவால்கள் உள்ளன. இச்சவால்களை எல்லாம் எதிர்கொண்டு, 2023-க்குள் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை ஏற்படுத்தும் வலிமையான பிரிவாக வேளாண்மையை மாற்றும் நோக்கத்தில், அரசு நீடித்த நிலையான மேம்பாட்டிற்காக குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

மேலும் தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்காக, சாகுபடி பரப்பளவை அதிகரித்தல்; பண்ணை உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கும் பயிர் சார்ந்த நவீன வேளாண்மை முறைகளை பரவலாக்குதல்; தற்போதுள்ள வேளாண் முறைகளை மாற்றி வணிக ரீதியான வேளாண்மைக்காக உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்; நேரம் மற்றும் இடுபொருள் செலவினத்தைக் குறைக்க இயந்திரமயமாக்கி வேளாண்மையை திறம்பட மேற்கொள்ளுதல்; செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் அறிவை செறிவூட்டி விவசாய சமூகத்தை வலுப்படுத்துதல்; வலுவான சந்தை முறையை ஏற்படுத்துதல்; உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை அதிகளவில் பரவலாக்கம் செய்ய விரிவாக்க முறைகளை மேம்படுத்துதல்; வேளாண்மை மேற்கொள்ள இயலாத பகுதிகளிலும் கூட வேளாண் பணிகளை மேற்கொள்ள தேவையான தொழில்நுட்ப பயிற்சிகள் மற்றும் தேவையான இடுபொருட்கள் வழங்குதல் போன்ற விவசாயிகளுக்கு உகந்த உத்திகளை உள்ளடக்கிய விரிவான கொள்கையை தமிழக அரசு வகுத்துள்ளது.



2017 ஜுலை 5]

நிலவள ஆதாரங்களை மேம்படுத்துதல், ஊட்டச்சத்து மற்றும் மண்வள பாதுகாப்பு, நீர் ஆதார மேலாண்மைமூலம் பயிர் சாகுபடியை தீவிரப்படுத்துதல், வேளாண் உட்கட்டமைப்பு மேலாண்மை, மாற்று ஆற்றல் ஆதாரங்களை கொண்டு பண்ணை மேம்பாடு, வேளாண் விரிவாக்க அமைப்பினை வலுப்படுத்துதல், மனித வள மேலாண்மை மற்றும் பேரிடர் நிவாரணம் போன்ற கொள்கை அளவிலான சீர்திருத்தங்கள் தொழில்நுட்ப அளவில் வேளாண்மையில் மாற்றங்கள் ஏற்படுத்தி உயர் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல உறுதுணையாக இருந்தன. மேலும் 2011-12 ஆம் ஆண்டில் இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டு, இம்மாநிலம் உணவு தானிய உற்பத்தியை ஏறத்தாழ இருமடங்காக உயர்த்தியுள்ளது. உற்பத்தித்திறன் மற்றும் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களால், 2011-12, 2013-14, 2014-15 மற்றும் 2015-16 ஆம் ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக சாதனை அடையப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீட்டின்படி, உணவு தானிய உற்பத்தி 113.69 இல. மெ.டன் ஆகும். இவ்வுணவு தானிய உற்பத்தி 2010-11 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் இது 43 சதவீதம் அதிகமாகும்.

உணவு தானிய உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காக, தமிழக அரசின் வேளாண்மைத் துறை தேசிய அளவில் பல உயரிய விருதுகளைப் பெற்றுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், 2011-12 இல் உணவு தானிய உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும், 2013-14 இல் பயறுவகை உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும், 2014-15 இல் சிறுதானிய உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும், 2015-16 இல் உணவு தானிய உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும் மத்திய அரசிடமிருந்து நான்கு முறை கிருஷி கர்மான் விருதை பெற்ற பெருமைக்குரியது தமிழக அரசு. தேசிய அளவில் பாராட்டுதலுக்குரிய பல சாதனைகளை செய்தமைக்காக "அக்ரிகல்சர் டுடே" என்ற முன்னணி பத்திரிகை, "2013 ஆம் ஆண்டிற்கான மாநில வேளாண்மை தலைமை விருதையும், 2015 ஆம் ஆண்டிற்கான "உணவு உற்பத்தித் திட்ட தலைமை விருதையும்", 2016 ஆம் ஆண்டிற்கான "உலக அளவிலான வேளாண்மை தலைமை விருதையும்" வழங்கியுள்ளது. மேலும், "இந்தியா டுடே" என்னும் புகழ்பெற்ற பத்திரிகை, "வேளாண்மையில் சிறந்த பெரிய மாநிலத்திற்கான விருதையும்" இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

[2017 ஜூலை 5

2014-15 ஆம் ஆண்டின் “சிறந்த மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதையும்” மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு பெற்றுள்ளது. மேலும், திட்டங்களை திறம்பட செயல்படுத்தியதற்கும், வேளாண் சேவைகளை சிறப்பான முறையில் வழங்கியதற்கும் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த முறைகளையும் செயல்முறை மாதிரிகளையும் பாராட்டும் விதமாக, வேளாண்மையில் மின் ஆளுமை பிரிவின்கீழ், “விரிவான இடுபொருள் விநியோக மேலாண்மைத் திட்டத்திற்காக”, 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான “ஸ்காட்ச் வெண்தங்க விருதும்” தமிழக அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கான சிறந்த வேளாண் முறைகளை செயல்படுத்தி, வேளாண்மை பிரிவுக்கு புத்துயிரூட்டி புதிய கோணத்தில் கொண்டு செல்ல அரசு தீவிரமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை பொய்த்தது, கர்நாடகா மாநிலத்தில் காவேரி நீர் திறந்து விடப்படாதது, முக்கிய அணைகளில் குறைவான நீர் இருப்பு, வார்தா புயல், கடுமையான வறட்சி போன்ற பல்வேறு காரணங்களால், சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிப்பு அடைந்தன. இருப்பினும், அரசின் முழு ஆதரவோடு அனைத்து இடர்பாடுகளையும் எதிர்கொண்டு வேளாண்மையை தொடர்ந்து மேற்கொள்ளும் தமிழக விவசாயிகளால், இம்மாநிலம் 2017-18 ஆம் ஆண்டிலும், 100 இல.மெ.டன் உணவு தானிய உற்பத்தியை அடையும்.

நீர்ப் பற்றாக்குறை மாநிலமான தமிழகத்தில் ஒவ்வொரு துளி நீரையும் திறம்பட உபயோகித்து அதிக பரப்பில் சாகுபடி மேற்கொள்ளவும், குறைந்த இடுபொருட்களை உபயோகித்து தரமான விளை பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் நுண்ணீர்ப்பாசன முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அகில இந்திய அளவில் தமிழகத்தில் மட்டும் குறு, சிறு விவசாயிகளுக்கு நுண்ணீர்ப்பாசன அமைப்புகளுக்காக 100 சதவீதம் மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் தொடர்ந்து அதிக நிதி ஒதுக்கீட்டில் நுண்ணீர்ப்பாசனம் அமைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2017 ஜூலை 5]

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் ஓர் அங்கமாக, தமிழ்நாடு சூரியசக்திக் கொள்கை 2012-ஐ வகுத்து, நடைமுறைப்படுத்தி வருகிறது இவ்வரசு. மின்சக்தியின் தேவை அதிகரித்துவரும் இவ்வேளையில், சூரிய சக்தியினை வேளாண்மையிலும் அதிகளவில் பயன்படுத்துவதை அரசு ஊக்குவித்து வருகிறது. பாசன நீர் இறைக்க சூரியசக்தியினால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகள், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறையின் அங்கமான சூரிய சக்தி விளக்குப் பொறிகள், தரமான உலர்ந்த விளைபொருட்கள் பெற சூரிய உலர்த்திகள் போன்ற பலவகைகளில் சூரிய சக்தி பயன்பாடு ஊக்குவிக்கப்படுகிறது.

அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைமூலம், விரைவில் அழுகும் தன்மை கொண்ட விளைபொருட்கள் வீணாவதை குறைக்கவும், மதிப்புக்கூட்டல்மூலம் வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், அரசு ஆவன செய்து வருகிறது. முதற்கட்டமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் முக்கிய பழங்கள் மற்றும் காய்கறிப்பயிர்களில் ரூ.398.75 கோடி நிதியில் தேவையான அறுவடை பின்செய் மேலாண்மை உட்கட்டமைப்புகள், சேமிப்புக்கிடங்குகள், ஒருங்கிணைந்த குளிர்பதன வசதி போன்றவற்றுடன் விவசாயிகளின் காய்கனிகளை சேகரிப்பு மையங்களில் ஒன்று சேர்த்து முதன்மைப்படுத்தும் மையங்களுக்கு எடுத்துச்செல்ல போதிய வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### துறையின் தோற்றம்

கடந்த 1880 ஆம் ஆண்டு, இந்தியாவில் பஞ்சம் நிலவியபோது அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி, 1882 ஆம் ஆண்டு வேளாண்மைக்கென ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டது. வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தேவையான பணியாளர்களுடன் வேளாண் துறை தனித்து இயங்கும் வகையில் 1904 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பொதுக் கல்வித் துறையில் இருந்த வேளாண் கல்லூரி கடந்த 1905 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையில் சேர்க்கப்பட்டு இன்று பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது. மாநிலம், மாவட்டங்கள், வட்டங்கள் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, துறையின் நிர்வாக அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

[2017 ஜூலை 5

## தமிழக வேளாண்மை - ஒரு கண்ணோட்டம்

பரப்பளவின் அடிப்படையில் தேசிய அளவில் பதினோராவது பெரிய மாநிலமாகத் திகழும் தமிழகம், நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 6 சதவீதத்துடன், ஏழாவது அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலமாக விளங்குகிறது. தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பு 130.33 இல.எக்டர் (நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவீதம்). கடலோர மாநிலமான தமிழகம் (கடற்கரை நீளம் 1076 கி.மீட்டர்) பல்வேறு பருவ மாறுதல்களால் பாதிக்கப்படுவதால் வேளாண் உற்பத்தியில் ஒரு நிச்சயமற்ற நிலை உருவாகிறது. மிகுந்த நீர்ப்பற்றாக்குறை உள்ள மாநிலமான தமிழகம் நாட்டின் நீர்வள ஆதாரங்களில் 3 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளதால், பாசன நீர் கிடைக்கப் பெறுவதில் அதிக இடர்பாடுகள் உள்ளன.

சமீபத்திய புள்ளியியல் அறிக்கையின்படி (2015-16), தமிழகத்தில் நிலப்பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 1.1 : நிலப்பயன்பாடு**

| வ. எண் | விவரம் | பரப்பு (இல. எக்) | % மொத்த நிலப் பரப்பிற்கு |
|---|---|---|---|
| 1. | காடுகள் | 21.57 | 16.55 |
| 2. | நிகர பயிரிடும் பரப்பு (*) | 48.33 | 37.08 |
| 3. | இதர மரப்பயிர்கள் சாகுபடி நிலங்கள் | 2.34 | 1.79 |
| 4. | நிரந்தர மேய்ச்சல் நிலங்கள் | 1.08 | 0.83 |
| 5. | தரிசு நிலங்கள் | 9.89 | 7.59 |
| 6. | இதர தரிசு நிலங்கள் | 17.29 | 13.27 |
| 7. | பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள் | 3.24 | 2.49 |
| 8. | வேளாண்மை தவிர இதர உபயோகத்திலுள்ள நிலங்கள் | 22.01 | 16.89 |
| 9. | சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்கள் | 4.58 | 3.51 |
| | மொத்த நிலப்பரப்பு | 130.33 | 100.00 |
| | பயிரிடுதிறன்(%) | 126 | - |

(*) மொத்த பயிரிடும் பரப்பு (60.74 இல. எக்டர்) மற்றும் ஒருமுறைக்குமேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (12.41 இல. எக்டர்)-க்குள்ள வேறுபாடு



2017 ஜூலை 5]

பாசன நீருக்காக தமிழகம் அண்டை மாநிலங்களை பெரிதும் சார்ந்திருக்கும் நிலையுள்ளது. தனித்துவமான பருவமழை காலம் மற்றும் மழையளவைக் கொண்டுள்ள தமிழகம், நீர்நிலைகளை நிரப்புவதற்கு பருவ மழையையே முழுவதுமாக சார்ந்துள்ளதால், பருவமழை பொய்த்தால் கடும் நீர் பற்றாக்குறை மற்றும் வறட்சி ஏற்படுகிறது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உறுதியாக மழை பெய்யும் வாய்ப்புள்ள தென்மேற்கு பருவமழைக்காலத்தில், மேற்கு தொடர்ச்சி மலையின் மழைமறை பகுதியில் அமைந்துள்ள தமிழகத்திற்கு இப்பருவ மழை கிடைப்பதில்லை. மேலும் பெறப்படும் மழை அளவு மற்றும் காலத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் பயிர் சாகுபடி முறைக்கும் இடையூறு ஏற்படுகிறது.

நாட்டின் சராசரி மழையளவான 1,200 மி.மீட்டரை ஒப்பிடுகையில் தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவான 921 மி.மீட்டர் மிகவும் குறைவானது ஆகும். குளிர்காலம் (ஜனவரி-பிப்ரவரி), கோடை காலம் (மார்ச்-மே), தென்மேற்கு பருவகாலம் (ஜூன்-செப்டம்பர்) மற்றும் வடகிழக்கு பருவகாலத்தில் (அக்டோபர்-டிசம்பர்) முறையே 3%, 14%, 35%, மற்றும் 48% மழை பெறப்படுகிறது. மாநிலத்தில் தனிநபருக்கு கிடைக்கும் ஆண்டு சராசரி நீர் அளவு அகில இந்திய அளவான 2,200 கன மீட்டருடன் ஒப்பிடுகையில் 750 கன மீட்டராகவே உள்ளது. மொத்த சாகுபடி பரப்பளவான 60.74 இல.எக்டரில், இறவை சாகுபடி பரப்பளவு 35.75 இல.எக்டராகும். இதில் 80 சதவீத பரப்பளவில் உணவுப் பயிர்களும், 20 சதவீத பரப்பளவில் இதர பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு பாசன நீர் ஆதாரங்கள்மூலம் பயன்பெறும் நிகர பாசனப் பரப்பளவு விவரம் பின்வருமாறு.

**அட்டவணை 1.2 : நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு**

| ஆதாரம் | எண்ணிக்கை (எண்கள்) | நிகர பாசன பரப்பு (இல. எக்டர்) | நிகர பாசன பரப்புக்கு சதவீதம் |
|---|---|---|---|
| வாய்க்கால்கள் | 2,239 | 6.72 | 23.72 |
| ஏரிகள் | 41,127 | 4.38 | 15.45 |
| கிணறுகள் | 18,69,723 | 17.20 | 60.72 |
| இதர பாசன ஆதாரங்கள் | | 0.03 | 0.11 |
| மொத்தம் | | 28.33 | 100.0 |

[2017 ஜூலை 5

தமிழகத்தில் உள்ள 81.18 இலட்சம் நிலவுடைமைதாரர்கள், 64.88 இல. எக்டர் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை வைத்துள்ளனர். நிலவுடைமைதாரர்களில் 92 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகள். இவர்கள் சாகுபடி மேற்கொள்ளும் பரப்பளவு மொத்த சாகுபடி பரப்பளவில் 61 சதவீதம் ஆகும். தமிழகத்தின் சராசரி நில உடைமையான 0.80 எக்டர் என்பது, நாட்டின் சராசரி நில உடைமையான 1.15 எக்டருக்கு 44 சதவீதம் குறைவாகும்.

## 1. வேளாண்மை

### 1.1 துறையின் தொலைநோக்கு கொள்கை, குறிக்கோள் மற்றும் அணுகுமுறைகள்

ஊரக பொருளாதாரத்தின் ஆதாரமாக திகழும் வேளாண்மை, கிராமப்புற மக்களின் பிரதான தொழிலாக மட்டுமன்றி அவர்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு அச்சாணியாக திகழும் வேளாண்மையில், நடைமுறையில் உள்ள சவால்களை உத்வேகத்துடன் எதிர்கொண்டு, நீடித்த நிலையான ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைய, தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய உத்திகளைப் புகுத்துவது மிகவும் அவசியமாகிறது.

சமீபகாலமாக, தமிழக அரசு பல்வேறு நவீன அணுகுமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை செயல்படுத்தி, வேளாண்மையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்னோடியாக விளங்குகிறது. உணவு தானியங்கள் மற்றும் இதர பயிர்களின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியில் வலுவான வளர்ச்சி பெற்று தமிழக அரசு உயரிய சாதனை பெற இதுபோன்ற நவீன உத்திகள் வழிவகுத்தன.

பல்வேறு பரிமாணங்களில் வேளாண்மையை மேம்படுத்தி, உற்பத்தியை இருமடங்காகவும் விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காகவும் உயர்த்தும் நோக்கத்தோடு, குறைந்துவரும் வள ஆதாரங்கள், மாசுபடும் சுற்றுச்சூழல், மாறுபடும் பருவநிலை, இயற்கை பேரழிவுகள் போன்றவற்றை எதிர்கொள்வதற்காக, வேளாண்மைத் துறை, கொள்கையளவில் வரவேற்கத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு 2023-க்கான தொலைநோக்கு கொள்கையில், தமிழகத்தை அனைத்து துறைகளிலும் குறிப்பாக வேளாண்மையில் முதன்மை மாநிலமாக திகழச்செய்து, துரிதமான பொருளாதார வளர்ச்சியின் பயன்களை அனைத்து விவசாயிகளும் பெறவும்,



2017 ஜூலை 5]

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மிகுந்த, வளமான மாநிலமாக தமிழகத்தை மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்ணையளவில் வேளாண்மையை மேம்படுத்த திட்டமிட்டுள்ள தமிழக அரசு, இரண்டாம் பசுமை புரட்சியை விரைவுபடுத்த கீழ்க்கண்ட குறிக்கோள்கள் மற்றும் அணுகுமுறைகளை வகுத்துள்ளது:

#### 1.1.1 குறிக்கோள்கள்

- ஒருங்கிணைந்த முறையில் கொள்கைகள் வகுக்கவும், திட்டமிடவும், வரன்முறை மற்றும் மதிப்பீட்டாய்வு செய்யவும் உரிய முறைகளை வலுப்படுத்துதல்.
- வளஆதாரங்களை பாதுகாத்து, நீடித்த நிலையான முறையில் பயன்படுத்துதல்.
- மண்வளம், உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவல்ல, வேளாண் தட்பவெப்ப மற்றும் சுற்றுச்சூழலுக்கேற்ற பண்ணை முறைகளை வகுத்து பிரபலப்படுத்துதல்.
- உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதோடு உயர் வருவாய் ஈட்டும் வேளாண் முறைகள் சார்ந்த மாற்றுப் பண்ணையம்மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.
- விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், வேளாண் இயந்திரங்கள், விரிவாக்க சேவை, மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- மாறிவரும் பருவ நிலையை எதிர்கொண்டு இழப்பை ஈடுசெய்யும் உரிய அமைப்புகளை ஏற்படுத்துதல்.

#### 1.1.2 அணுகுமுறைகள்

- தரிசு நிலங்களையும், பிரச்சினைக்குரிய நிலங்களையும் சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றி சாகுபடி பரப்பளவை அதிகரித்தல்.

[2017 ஜூலை 5

- மண்வளம் மற்றும் இடுபொருட்களின் பயன்பாட்டு திறனை அதிகரித்து வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- இறவை மற்றும் மானாவாரி பகுதிகளில், சூழலியல் மற்றும் பொருளியல் சார்ந்த பயிர்த் திட்டத்தை வகுத்து, குறைவான வளஆதாரங்களைக் கொண்ட விவசாயிகளும் தங்கள் பண்ணையிலிருந்து முழு பயன்பெறும் வகையில் பண்ணைக்கேற்ற பயிர்களைத் தெரிவு செய்து நவீன முறையில் சாகுபடி மேற்கொள்ளுதல்.
- தரமான விதை/நடவு பொருள், உரம், உயிரியல் பூச்சிக்கொல்லிகள்/உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், வேளாண் இயந்திரங்கள் போன்றவை உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல்.
- சிறந்த பயிர் மேலாண்மை, குறைந்த செலவில் கிடைக்கும் உள்ளூர் இடுபொருட்களை பிரபலப்படுத்துதல், இடுபொருள் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல், பகுதிக்கேற்ற நவீன தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், சிறந்த வேளாண்முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்றுவித்தல், வேளாண் பணிகளை இயந்திரமயமாக்குதல் போன்ற சிறந்த செயல்பாடுகள்மூலம் பயிர் சாகுபடி செலவினத்தைக் குறைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வளஆதாரங்கள் உபயோகத்தை பிரபலப்படுத்துதல்.
- வேளாண்மையில் தனியார் பங்களிப்பை உறுதி செய்தல்.
- கிராம அளவில் வேளாண் உட்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவித்தல்.
- சிறந்த பாசன முறை/பாசன நீர் சேகரிப்பு மற்றும் சிக்கன பயன்பாட்டு முறைகள்மூலம் பருவமழையை சார்ந்திருப்பதை தவிர்த்தல்.
- அனைத்து வகை இயற்கை இடர்பாடுகளையும் எதிர்கொள்ளும் பயிர் சாகுபடி முறையை வகுத்து பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க பயிர் காப்பீடு செய்தல் மற்றும் பேரிடர் காலங்களில் வேளாண் சார்ந்த



2017 ஜூலை 5]

செயல்பாடுகள்மூலம் வாழ்வாதாரத்திற்கான மாற்று வருவாய் ஆதாரங்களை உருவாக்குதல்.

- உற்பத்தி திறனில் உள்ள இடைவெளியைக் குறைக்கவும் விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள்மூலம் நவீன தொழில்நுட்பங்களையும் சிறந்த வேளாண் செயல்பாடுகளையும் பிரபலப்படுத்துதல்.

விவசாயிகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மாநிலமான தமிழகம், புதிய வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து மாநிலத்தில் இரண்டாவது முறையாக பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, வேளாண் மேம்பாட்டிற்கான சிறந்த தளத்தை இம்மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ளது. மேலும் நிலையான வளர்ச்சியை விரைவாக அடைய அரசு பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்து செயல்படுத்திவருகிறது.

**அட்டவணை 1.3 : உற்பத்தித் திறனில் தேசிய அளவில் தமிழகத்தின் நிலை**

| பயிர் | தேசிய அளவில் தமிழகத்தின் நிலை | தமிழகத்தில் உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) | தேசிய அளவில் சராசரி உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|
| மக்காச்சோளம் | 1 | 5,360 | 2,557 |
| கம்பு | 1 | 2,881 | 1,272 |
| நிலக்கடலை | 1 | 2,699 | 1,400 |
| மொத்த எண்ணெய் வித்துக்கள் | 1 | 2,294 | 1,037 |
| பருத்தி | 1 | 718 | 461 |
| தென்னை | 2 | 10,236 | 7,164 |

[2017 ஜூலை 5

| பயிர் | தேசிய அளவில் தமிழகத்தின் நிலை | தமிழகத்தில் உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) | தேசிய அளவில் சராசரி உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|
| அரிசி | 2 | 3,191 | 2,390 |
| கரும்பு (மெ.டன்) | 3 | 93 | 70 |
| சூரியகாந்தி | 3 | 1,625 | 753 |
| சோளம் | 3 | 1,485 | 953 |
| சிறுதானியங்கள் | 4 | 3,066 | 1,729 |
| உணவு தானியங்கள் | 5 | 2,529 | 2,070 |
| மொத்த பயறுவகைகள் | 8(*) | 689 | 744 |

(*) முன்பிருந்த 14 ஆம் இடத்திலிருந்து முன்னேறியுள்ளது (ஆதாரம்:வேளாண்மை புள்ளியியல் ஒரு பார்வை, 2015)

பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள்மூலம் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க தமிழகம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இரண்டாம் பசுமை புரட்சிக்கு தொடர் வெற்றிகளை அளிக்கும் விதமாக, உயர் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் திட்டங்கள் குறித்த தகவல்களை துரிதமாக பரவலாக்கம் செய்வதோடு, விவசாயிகள் அத்தொழில்நுட்பங்களை பின்பற்றவும், அரசால் எடுக்கப்பட்ட அயராத முயற்சிகளால், 2010-11 ஆம் ஆண்டை (75.94 இல.மெ.டன்) ஒப்பிடுகையில், 2011-12, 2013-14, 2014-15 மற்றும் 2015-16 ஆம் ஆண்டுகளில் 100 இல.மெ.டன்னுக்கும் அதிகமாக உணவு தானிய உற்பத்தியில் சாதனை அடையப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி விவரம் பின்வருமாறு:



2017 ஜூலை 5]

**அட்டவணை 1.4 : கடந்த ஆறு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி**

| பயிர் | உணவு தானிய உற்பத்தி (இல.மெ.டன்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16(*) | 2016-17(**) |
| அரிசி | 74.59 | 40.50 | 71.15 | 79.49 | 73.57 | 40.38 |
| சிறு தானியங்கள் | 23.24 | 13.42 | 32.73 | 40.79 | 34.27 | 16.63 |
| பயறு வகைகள் | 3.69 | 2.13 | 6.14 | 7.67 | 5.85 | 3.31 |
| மொத்த உணவு தானியங்கள் | 101.52 | 56.05 | 110.02 | 127.95 | 113.69 | 60.32 |

(*) இறுதி மதிப்பீடு (**) நான்காம் முன் மதிப்பீடு

### 1.1.3 2017-18 ஆம் ஆண்டிற்கான பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் இலக்கு

கடந்த 141 ஆண்டுகளில் இல்லாத பேரிடராக, 2016-17 ஆம் ஆண்டில், தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால், வேளாண் உற்பத்தியில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும், விவசாயிகள் சார்ந்த அணுகுமுறைகளுக்கு முக்கியத்துவமளிக்கும் தமிழக அரசு, விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, வேளாண் வளர்ச்சிக்கான தொலைநோக்கு கொள்கைகளை வகுத்துள்ளது. இதனடிப்படையில், 2017-18 ஆம் ஆண்டில், பல்வேறு வேளாண் பயிர்களில் திட்டமிடப்பட்டுள்ள சாகுபடிப் பரப்பளவு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை எய்திட பின்வருமாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 1.5 : 2017-18 ஆம் ஆண்டுத் திட்டம்**

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி (இல. மெ.டன்) | உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|
| அரிசி | 17.80 | 60.00 | 3,370 |
| சிறு தானியங்கள் | 9.30 | 34.00 | 3,656 |
| பயறு வகைகள் | 9.40 | 6.00 | 638 |
| மொத்த உணவு தானியங்கள் | 36.50 | 100.00 | |
| எண்ணெய் வித்துக்கள் | 5.00 | 12.00 | 2,400 |
| பருத்தி (*) | 1.80 | 5.77 | 545 |
| கரும்பு (**) | 3.00 | 309.00 | 103 |
| மொத்தம் | 46.30 | | |

(*)உற்பத்தி (இல. பொதிகள்); (**)உற்பத்தித் திறன் (மெ.டன்/ எக்டர்)

[2017 ஜூலை 5

## 1.1.4 முன்னேற்றப் பாதைக்கான முக்கிய செயல்பாடுகள்

குறைந்து வரும் வேளாண் விளை நிலங்கள், அதிகரித்து வரும் பாசன நீர் பற்றாக்குறை, குறைந்து வரும் நில உடைமை, அதிகரிக்கும் வேளாண் தொழிலாளர்கள் புலப்பெயர்வு மற்றும் சீரற்ற பருவ நிலை காரணமாக, மாநிலத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்தை பாதுகாப்பது பெரும் சவாலாகவே உள்ளது. இலாபகரமாகவும், வள ஆதார பயன்பாட்டுத்திறன் மிக்கதாகவும், பருவநிலை இடர்பாடுகளை எதிர்கொள்ளும் தகுதி வாய்ந்ததாகவும் வேளாண்மைத் தொழிலை மாற்றுவதற்காக, அரசு 2017-18 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழலோடு இணைந்த வேளாண் மேம்பாட்டிற்கான கீழ்க்கண்ட சிறப்பு கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுத்துள்ளது:

1. நீடித்த நிலையான சாகுபடி பரப்பு விரிவாக்கம்மூலம் ஊரக பகுதி பண்ணைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை ஏற்படுத்துதல்.

2. உழவியல் புரட்சி வாயிலாக உற்பத்தித் திறன் மற்றும் இடுபொருள் பயன்பாட்டுத்திறனில் உள்ள இடைவெளியைக் குறைத்தல், பகுதிக்கேற்ற நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் எளிதில் கிடைக்கக்கூடிய வேளாண் தொழில்நுட்ப செய்திகளைக் கொண்டு துல்லிய பயிர் சாகுபடி மேலாண்மை மேற்கொள்ளுதல்.

3. பாசன நீர், ஊட்டச்சத்து மற்றும் ஆற்றல் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கும் நவீன தொழில்நுட்பங்கள்: நுண்நீர்ப்பாசனம் மற்றும் பாசன நீரை சேமிக்கும் இதர அணுகுமுறைகள், பகுதிக்கேற்ற ஊட்டச்சத்து மேலாண்மை, சுற்றுச்சூழலையும் வள ஆதாரங்களையும் பாதுகாக்கும் இலாபகரமான வேளாண்மை முதலியவற்றை மேற்கொண்டு வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்.

4. மண்வள மேம்பாடு, சமச்சீர் உர நிர்வாகம் மற்றும் பாசன நீர் மேலாண்மைமூலம் சாகுபடி செலவினத்தைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.

5. அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான இடுபொருட்களை கிடைக்கச் செய்யவும், இடுபொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேம்படுத்தவும் உரிய அணுகுமுறைகளை வகுத்து இடுபொருள் மேலாண்மை முறையை திறம்பட செயல்படுத்துதல்.



2017 ஜூலை 5]

6. பண்ணை மகளிர் திறன் மேம்பட சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

7. பயிர் சாகுபடி செய்யும் சூழல், குறிக்கோள் மற்றும் சாகுபடி மேற்கொள்வதில் உள்ள இடர்பாடுகளுக்கு ஏற்றவாறு வேளாண்மையைச் சார்ந்த பிற பிரிவுகளையும் உள்ளடக்கிய பன்முகத்தன்மை உடையதாக வேளாண் தொழிலை மாற்றுதல்.

8. வேளாண் பயிர்கள்-மரப்பயிர்கள்-கால்நடை வளர்ப்பு சார்ந்த வேளாண் முறைகளை ஊக்கப்படுத்துவதோடு, சுற்றுச்சூழலை பாதுகாக்க உயிரி அங்ககப் பொருள் / துணை விளைபொருட்களை மறு சுழற்சி செய்து பயன்படுத்துதல்.

9. அனைத்து வேளாண் தட்பவெப்ப மண்டலங்களிலும் உள்ள மானாவாரி நிலங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

10. வானிலை முன்னறிவிப்பின் அடிப்படையில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டத்தை வகுத்தல் மற்றும் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பை ஈடுசெய்ய பயிர் காப்பீடு செய்தல்.

11. விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த விரிவாக்க சேவை வழங்குதல்.

12. வலுவான புதிய வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதோடு தீவிர வேளாண் பயிர் சாகுபடி மற்றும் மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் வேளாண் விரிவாக்க சேவை முறைகளை வலுப்படுத்துதல்.

13. அதிநவீன வேளாண் செய்தி பரிமாற்றத்தை ஊக்குவிப்பதோடு தொழில்நுட்ப அணுகுமுறைகள்மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.

[2017 ஜூலை 5

### 1.2 பருவநிலை-மழையளவு

தமிழகத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டில், குளிர்காலத்தில் குறைவான மழையும் அதனை தொடர்ந்து கோடை காலத்தில் இயல்பான மழையும் பெறப்பட்டது. எனினும் தென்மேற்கு பருவ மழை காலத்தில் குறைவான மழையும் (225.50 மி.மீ-30 சதவீதம்), வடகிழக்கு பருவமழை காலத்தில் மிக மிகக் குறைவான மழையும் பெறப்பட்டதால் பயிர் சாகுபடியில் தொய்வு ஏற்பட்டது. இந்திய வானிலை ஆய்வுத் துறையின் அறிக்கையின்படி, வடகிழக்கு பருவமழை காலத்தில், இயல்பான மழையளவான 440மி.மீ-க்கு 168.30 மி.மீ மழையே (-62 சதவீதம்) பெறப்பட்டது. கடந்த 141 ஆண்டுகளில் இது எப்போதுமில்லா அளவுக்கு மிகக் குறைவான மழை ஆகும்.

இந்திய வானிலை ஆய்வுத் துறையின் கணிப்பின்படி 2017 ஆம் ஆண்டில், தென்மேற்கு பருவமழை நாடு முழுவதும் 98 சதவீத அளவிலும், தெற்கு தீபகற்பத்தில் 99 சதவீத அளவிலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.3 பயிர் நிலை

தமிழக மக்களின் முதன்மைத்தொழில் வேளாண்மைத் தொழிலாகும். தமிழகத்தில் நெல், சிறு தானியங்கள், பயறுவகைப்பயிர்கள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி மற்றும் கரும்பு போன்ற பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

தமிழகம் ஏழு வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக கருதப்படும் காவேரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் திருச்சி மாவட்ட பகுதிகளும் தமிழகத்தின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மண்டலமாக கருதப்படுகிறது. பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வரும் இதர மண்டலங்களும் வேளாண் மண்டலங்களாகவே கருதப்படுகின்றன. எனினும் தமிழக வேளாண்மை, காவேரி பாசனம், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழைமூலம் 15 முக்கிய அணைகளில் நீர் இருப்பு மற்றும் நிலத்தடி நீர் போன்ற பல்வேறு காரணிகளை சார்ந்துள்ளது.



2017 ஜூலை 5]

வேளாண் வளர்ச்சியில் முன்னணி பாதையில் விளங்கும் தமிழகம், விவசாயிகளுக்கு உகந்த அணுகுமுறைகள்மூலம் ஒட்டு மொத்த வளர்ச்சியை அடைய தொடர் முயற்சிகள் எடுத்து வருகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த இலாபம் ஈட்டும் உயர்தொழில்நுட்ப உத்திகள் மற்றும் தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்த, அரசால் வகுக்கப்பட்ட முன்னோடி வேளாண் மேம்பாட்டுக் கொள்கைகள் மற்றும் உன்னத முனைவுகள் தற்போது பல்வேறு மாநிலங்களால் பின்பற்றப்படுகின்றன. மாநில அரசு பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறாக எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள் காரணமாக தமிழகத்தில் வேளாண் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விவசாயிகள் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறைகளை வகுத்து, உணவு தானிய உற்பத்தி இலக்கினை அடைந்திட தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

#### 1.3.1 நெல் (Paddy)

தமிழ்நாட்டின் உணவுப் பயிர்களில் நெற்பயிரே முதன்மையான பயிராகும். பெரும்பாலும், அனைத்து மாவட்டங்களிலும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிரானது, இயல்பாக 17.65 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு சராசரியாக 64.74 இலட்சம் மெ.டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மாநிலத்தின் மொத்த சாகுபடி பரப்பளவில் சுமார் 30 சதவீதமும், மொத்த பாசனப் பரப்பில் 50 சதவீதத்தையும் உள்ளடக்கியது. ஏறத்தாழ 94 சதவீதம் இறவைப் பயிராகவே பயிரிடப்படுகிறது.

நெல் பயிரானது மாநிலத்திற்கே உரிய பருவங்களான கார் / குறுவை / சொர்ணவாரி (ஏப்ரல்-ஜூலை); சம்பா / தாளடி / பிசானம் (ஆகஸ்ட்-நவம்பர்) மற்றும் நவரை / கோடை (டிசம்பர்-மார்ச்) ஆகிய மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது.

மாநிலத்தின் சராசரி அரிசி உற்பத்தி திறன் எக்டருக்கு 3,668 கிலோவாகும். பண்ணை அளவில் உற்பத்தி திறனை பெருக்கும் நோக்கத்துடன் கடந்த ஆண்டுகளில் அரசானது அதி நவீன தொழில்நுட்பங்களை பல்வேறு திட்டங்களின் வாயிலாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

[2017 ஜூலை 5

- திருந்திய நெல் சாகுபடி-பாசன நீரை செம்மையான முறையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை கொண்ட திருந்திய நெல் சாகுபடி 2016-17 ஆம் ஆண்டில் 5.81 இலட்சம் எக்டரில் (14.35 இலட்சம் ஏக்கர்) செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் இச்சாகுபடி முறை 9.91 இலட்சம் எக்டரில் (24.48 இலட்சம் ஏக்கர்) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- விவசாயிகளின் சிரமத்தினை குறைக்கும் பொருட்டும், தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையிலும் நெல் இயந்திர நடவினை ஊக்குவிக்க 2014-15 ஆம் ஆண்டு முதல் அரசு பெரும் முயற்சி எடுத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் எக்டர் (4.25 இலட்சம் ஏக்கர்) பரப்பளவில் நெல் இயந்திர நடவு மேற்கொள்ளப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில், 2 இலட்சம் எக்டரில் இயந்திர நடவு முறை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- நெல் சாகுபடியில் நேரடி நெல் விதைப்பானது, குறைந்த நீர்த்தேவை, சாகுபடி செலவு மற்றும் சாகுபடி காலம் ஆகிய சிறப்பம்சங்களை கொண்ட தொழில்நுட்பமாகும். 2016-17 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நிலவிய நீர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில் இத்தொழில்நுட்பம் 5.15 இலட்சம் ஏக்கரில் பரவலாக்கம் செய்யப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- தமிழக அரசால் வகுக்கப்பட்ட நிகரில்லா கொள்கைகள் மற்றும் நவீன அணுகுமுறைகளால், வேளாண்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, வாழ்வாதாரத்திற்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்த வேளாண்மைத் தொழில், பல்வகை விளைபொருள் சாகுபடிக்கேற்ற, தொழில்நுட்பம் சார்ந்த வணிக உற்பத்திக்கு ஏதுவாக மாற்றமடைந்தது. பல்வேறு திட்டங்களின்கீழ் வேளாண் துறையால் வழங்கப்படும் மானிய உதவிகளால் பருவகால மாற்றங்களுக்கேற்ற நீடித்த நிலையான வேளாண் செயல்பாடுகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (National Food Security Mission-Rice) புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்



2017 ஜூலை 5]

சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில், நேரடி நெல் விதைப்பு, வரிசை நடவு மற்றும் சுவர்ணா சப்-1 என்ற நெல் இரகத்திற்கான செயல் விளக்கங்களையும் தொழில்நுட்ப பயிர்த்திட்டம் சார்ந்த செயல் விளக்கங்களையும், தொகுப்பு அணுகுமுறையில் அமைத்தல், நெல்லுடன் பசுந்தாளுரப் பயிர் விதைப்பு, உயர் விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரகங்களுக்கான தரமான விதைகள், நுண்ணூட்ட உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், உயிரியல் காரணிகள், தெளிப்பான்கள், விதை விதைக்கும் கருவி, சுழற்கலப்பை, மின் மோட்டார் விநியோகம், நெல் நடவு மற்றும் அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் பயிர் திட்டம் சார்ந்த பயிற்சிகள் வழங்குதல் முதலிய செயல்பாடுகளுக்காக கடந்த ஆண்டு ரூ.20.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- **தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (National Agricultural Development Programme)**

நெல் பயிரின் உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், அந்தந்த பகுதி மற்றும் பிரச்சினை சார்ந்த தொழில்நுட்பங்களான சான்று விதை உற்பத்தி, உயர்விளைச்சல் இரக விதைகள் விநியோகம், இயந்திர நெல் நடவு, நாற்றங்கால் தட்டுக்கள் மற்றும் விசை உழுவை விநியோகம் ஆகியவை 2016-17 ஆம் ஆண்டில் ரூ.63.10 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன. 2017-18 ஆம் ஆண்டிலும் உழவுப் பணிக்கான மானியம், விதைக் கருவி கொண்டு நேரடி நெல் விதைப்பு மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் இடுபொருட்கள் விநியோகம் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

### 1.3.2 பயறு வகை பயிர்கள் (Pulses)

பயறு வகை பயிர்கள் விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரக்கூடிய பயிராக விளங்குகிறது. தமிழகத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி, இயல்பாக 7.03 இலட்சம் எக்டரில் மேற்கொள்ளப்படுகிறது. இதில், உளுந்து, பச்சை பயறு மற்றும் துவரை பயிரின் பங்கு முறையே 44 சதவீதம், 25 சதவீதம் மற்றும் 7

சதவீதமாக உள்ளது. மானாவாரி நிலங்கள் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்துவதன் மூலமாக, அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் பயறு வகை பயிர்களின் சாகுபடி பரப்பை 11 இலட்சம் எக்டராக உயர்த்துவதே அரசின் நோக்கமாகும்.

சிறப்பு உத்திகளாக, பயறு வகை பயிர்களை தனிப்பயிராகவும், ஊடு பயிராகவும், வரப்பு பயிராகவும் பயிரிட ஊக்குவிப்பதோடு, நெல் தரிசில் பயறு வகை பயிர்களை, நுண்ணீர் பாசன கருவிகளான தெளிப்பான்கள் மற்றும் மழைத் தூவான்கள் உதவியுடன் பயிர் செய்வதற்கான உத்திகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பின்வரும் தொழில் நுட்பங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

- திருந்திய பயறு வகை சாகுபடி -பயறு வகை பயிர்களின் உற்பத்தி திறனை உயர்த்துவதற்கான அனைத்து தொழில்நுட்பங்களும் ஒரு தொகுப்பாக, முழு கிராம அணுகுமுறையில் 1.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் (3.09 இலட்சம் ஏக்கர்) 2,000 கிராமங்களில், 2016-17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டிலும் திருந்திய சாகுபடி முறையானது, 2,000 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

- நடவு முறை துவரை சாகுபடி என்ற நவீன தொழில்நுட்பம் வாயிலாக துவரைப் பயிரில் நாற்றுகளை உற்பத்தி செய்து, நடவு செய்யும் முறையானது கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், தேனி, கரூர் மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில், இந்த தொழில்நுட்பமானது, அரசின் மானிய உதவியோடு 8,000 எக்டரில் செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டிலும் நடவு முறை துவரை சாகுபடி செயல்படுத்தப்படும்.

- பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள டிடி 401 (துவரை), டியு 40 (உளுந்து) போன்ற உயர் விளைச்சல் தரக்கூடிய இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன..

- பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (National Food Security Mission- PULSES) உற்பத்தி திறனை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாலும், விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஈட்டித்தரும் பயிராக இருப்பதாலும், உற்பத்தியை அதிகரிக்கும் செயல்பாடுகள்





விரைவு இயக்க அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டு, தமிழகம் முழுவதும் பயறு வகை பயிர்கள் சாகுபடி ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. நெல் தரிசில் பயறுவகைகள் சாகுபடி மூலமும், சிறுதானியங்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் வணிகப் பயிர்களில் ஊடுபயிராகவும், பயறுவகை சாகுபடியை மேற்கோண்டு பரப்பளவு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு, பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில், துவரை, உளுந்து, பச்சைப்பயறு ஆகிய பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கும் தொகுப்பு செயல்விளக்கங்கள், நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர்களில் ஊடுபயிர் செயல் விளக்கங்கள், பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல் விளக்கங்கள், உயர்விளைச்சல் சான்று விதை விநியோகம், பயறுவகை விதைகள் உற்பத்தி மானியம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி நோய் மேலாண்மை, டிராக்டர், தெளிப்பான்கள், சுழற்கலப்பை போன்ற வள ஆதார பாதுகாப்புக்கான கருவிகள் விநியோகம் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டன. பயறு வகைகளில் பாசனப் பரப்பை அதிகரிப்பதற்காக, தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், மழைத்தூவான்கள், பம்புசெட்டுகள், நீர் எடுத்து செல்லும் குழாய்கள் ஆகிய திறன்மிகு பாசன கருவிகள் வழங்கப்பட்டன. மேலும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் சிறிய வகை பயறு உடைக்கும் இயந்திரம் வழங்குதல், பயறுவகைகளை வகைப்படுத்துதல், தரம் பிரித்து சுத்திகரிப்பு செய்தல் போன்ற சந்தைப்படுத்தும் செயல்பாடுகளுக்கான உதவிகளும் அளிக்கப்படுகின்றன. இவை அனைத்திற்காகவும் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.41.64 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து ரூ.41.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - பயறு பெருக்குத் திட்டத்தின்கீழ், டிஏபி இலைவழி தெளிப்பு, தரமான சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியம், நடவு முறை துவரை சாகுபடி மற்றும் இதர இனங்கள் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.23.58 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன. 2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

[2017 ஜூலை 5

### 1.3.3 சிறுதானியங்கள் (Millets)

உணவு, கால்நடை தீவனம், உடல் நலம், ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரம் போன்ற பல்வகை பாதுகாப்பை சிறுதானியங்கள் தருகின்றன. சிறுதானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் மற்றும் பிற சிறுதானியங்களான தினை, வரகு, சாமை மற்றும் குதிரைவாலி போன்ற பயிர்கள் 7.54 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. இதன் உற்பத்தி அளவானது 25 இலட்சம் மெ. டன் ஆகும். சிறுதானியங்கள் விழுப்புரம், கடலூர், சேலம், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, பெரம்பலூர், அரியலூர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அறுவடைக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல் போன்றவற்றை கண்கூடாக பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் மாதிரி விளக்கத்திடல்கள் அமைத்தல் மற்றும் நிரூபிக்கப்பட்ட உத்திகளை உருவாக்கி அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் சான்றளிக்கப்பட்ட விதை, மேம்படுத்தப்பட்ட இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்கள் போன்றவற்றை சிறுதளைகளாக விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் விதை உற்பத்தியை அதிகரிக்க உள்ளூர் மற்றும் உள்நாட்டு உத்திகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல், முக்கிய இடுபொருட்கள் விநியோகம் போன்றவற்றை அரசு மேற்கொண்டு வருகிறது. சிறுதானியங்களின் உபயோகத்தை அதிகரிக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற உத்திகளை மேற்கொண்டு மிகப்பெரிய அளவில் மக்களின் பயன்பாட்டிற்கு எடுத்துச் செல்ல, நடைமுறையில் உள்ள மற்றும் புதிய திட்டங்கள்மூலம் சிறுதானியங்களுக்கென தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் சிறுதானியங்கள் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.8.22 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2017 ஜூலை 5]

2016-17 ஆம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2.69 கோடி செலவிடப்பட்டது. மேலும், இத்திட்டம் 2017-18ஆம் ஆண்டில் சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.4 எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனை (Oil Seeds and Oilpalm)

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்க உயர்ரக மாற்று விதை, புதிய ரகங்களை அறிமுகப்படுத்துதல், எண்ணெய்வித்துக்களின் பாசன பரப்பளவை 26 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக உயர்த்துதல், குறைந்த விளைச்சல் தரக்கூடிய சிறுதானிய பயிர்வகைகளின் பரப்பளவை எண்ணெய்வித்துக்களின் பரப்பளவாக மாற்றுதல், கரும்பு, பயறுவகை, சிறுதானிய பயிர்களில் ஊடுபயிராகவும், நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் மறு பயிராகவும், எண்ணெய்வித்துப் பயிர்கள் பயிர் செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. எண்ணெய்வித்துக்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 4.22 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, 9.62 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், தேசிய அளவில் உற்பத்தித் திறனில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. எண்ணெய்வித்துப் பயிர்கள் கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது.

- தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஒருங்கிணைந்த எண்ணெய்வித்துக்களுக்கான உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்-சான்று விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம், வரப்பு பயிராக ஆமணக்கு பயிரிடுதல் மற்றும் உயிர் உரங்கள் விநியோகம், எள்ளில் மாங்கனீசு சல்பேட் விநியோகம் மற்றும் விதைக்கும் கருவியைக் கொண்டும்/ வரிசையாகவும் நிலக்கடலையில் பயறு வகைகளை ஊடுபயிர் செய்தல் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டமானது கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டத்தை தவிர அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2016-17 ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி நிதி செலவில் இத்திட்டம்

செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம்-எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்ப் பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்துக்களுக்கான மூன்று குறு இயக்கங்களை உள்ளடக்கிய எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம் போதிய அளவில் சமையல் எண்ணெய் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு 2014-15 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கும் தாவர எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2016-17ஆம் ஆண்டில் இவ்வியக்கம் ரூ.12.62 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் இவ்வியக்கம் ரூ.18.77 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- **குறு இயக்கம் I (எண்ணெய்வித்துக்கள்)**

கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் எண்ணெய் வித்துகளுக்கான வல்லுநர் விதை கொள்முதல், ஆதார மற்றும் சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோகம், நிலக்கடலையில் ஜிப்சம் மற்றும் களைக்கொல்லி விநியோகம், பெருவிளக்கத்திடல் மூலம் நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்குதல் போன்ற இனங்களில் கவனம் செலுத்தப்படுகிறது.

- **குறு இயக்கம் II (எண்ணெய்ப்பனை)**

எண்ணெய்ப்பனை பரப்பு விரிவாக்கம் செய்ய தரமான எண்ணெய்ப்பனை கன்றுகள் வழங்குவதோடு, ஏற்கெனவே நடவு செய்யப்பட்டுள்ள எண்ணெய்ப்பனை மரங்கள் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடிக்கான உற்பத்தி இடுபொருட்கள் வழங்குதல், மண்புழு உர மையங்கள் மற்றும் டீசல் பம்புசெட்டுகள், எண்ணெய்ப்பனை அறுவடை கருவிகள், ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க மானிய உதவி வழங்குதல் மற்றும் வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு எண்ணெய்ப்பனை தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல் ஆகிய இனங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது, கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி, தூத்துக்குடி, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





- **குறு இயக்கம் III (மரவகை எண்ணெய்வித்துக்கள்)**

மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களான வேம்பு மற்றும் புங்கம் ஆகியவற்றின் பரப்பு விரிவாக்கம் செய்வதோடு ஏற்கெனவே நடவு செய்யப்பட்டுள்ள மரங்களின் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடிக்கான உற்பத்தி இடுபொருட்கள் வழங்குதல், வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல் ஆகிய இனங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், விழுப்புரம், மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய பதினொன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1.3.5 தென்னை (Coconut)

மாநில பொருளாதாரத்தில், தென்னை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் தென்னை 4.65 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. தமிழகம் தென்னை உற்பத்தியில் முதலிடமும் மற்றும் உற்பத்தி திறனில் இரண்டாம் இடத்தையும் வகிக்கிறது. தென்னை ஒரு பல்லாண்டு பயிர் என்பதால் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் அளித்து வருகிறது.

தென்னை வளர்ப்பினை இலாபகரமானதாக ஆக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு மிகுந்த கவனத்துடன், செயல் விளக்கம், புதிய தொழில்நுட்பங்கள் கடைபிடித்தல், இயந்திரமயமாக்கல், பயிர் பாதுகாப்பு மற்றும் மதிப்புக்கூட்டுதல் போன்ற முயற்சிகளை மேற்கோண்டு வருகிறது.

தென்னை சாகுபடி பரப்பினை அதிகரித்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து தென்னை உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்குடன் தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தரமான “நெட்டை x குட்டை” கன்றுகள் மற்றும் “குட்டை x நெட்டை” கன்றுகள் வேலூர் மாவட்டத்திலுள்ள நவ்லாக் தென்னை நாற்றுப்பண்ணைமூலம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குதல், மண்டல தென்னை நாற்றுப் பண்ணைகளை மேம்படுத்துதல், தென்னை உற்பத்தித்

[2017 ஜூலை 5

திறனை உயர்த்த செயல்விளக்கத் தளைகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016-17 ஆம் ஆண்டில், தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் ரூபாய் ஒரு கோடி செலவில் 3.25 இலட்சம் வீரிய ரக தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் 808.85 எக்டர் பரப்பில் செயல்முறை விளக்கத்திடல் ரூ.1.42 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவி பெறும் திட்டங்கள், 2017-18 ஆம் ஆண்டிலும் ரூ.16.02 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதில் தென்னந்தோப்பில் மறுநடவு மற்றும் புத்துணர்ச்சி திட்டம் ரூ.13.43 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

இது தவிர, குறைவான மழையளவு, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் தென்னைப் பயிர் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையில், தென்னை சாகுபடியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் 100 சதவீத மானிய நிதியுதவியோடு ரூ.20 கோடி செலவில், “தென்னந்தோப்புகளுக்கான மறு நடவு மற்றும் புத்துயிர் தொகுப்புத் திட்டம்”, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மொத்தம் 4,470 எக்டர் (11,175 ஏக்கர்) பரப்பளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், தென்னை வளர்ச்சி வாரியத்தின் விதிமுறைகளின்படி, வயதான / உற்பத்தித் திறன் இழந்த தென்னை மரங்களை வெட்டி அகற்ற எக்டருக்கு ரூ.32,000/-மும், (32 தென்னை மரங்களுக்கு) மறுநடவு செய்ய கன்று ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.40/-வீதம் எக்டருக்கு 100 கன்றுகளும், தற்போதுள்ள தென்னந்தோப்புகளுக்கு புத்துயிரூட்ட ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை மேற்கொள்ள எக்டருக்கு ரூ.17,500/-ம் (ஒரு தவணைக்கு ரூ.8,750/- வீதம் இரண்டு தவணைகள்) வழங்கப்படும். இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

2016-17 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 4.99 இலட்சம் தென்னங்கன்றுகள் ரூ.1.07 கோடி மானிய தொகையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும் சிவப்பு கூன்வண்டு கட்டுப்படுத்துதல் திட்டத்தின்கீழ் 10,000 எக்டர் பரப்பளவில் ரூ. 79.23 இலட்சம் மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பு 2017-18 ஆம் ஆண்டில் சிவப்பு கூன்வண்டு கட்டுப்படுத்தும் திட்டம் ரூ.80 இலட்சம் மானிய செலவில் செயல்படுத்தப்படும்.



2017 ஜூலை 5]

## தென்னையில் இருந்து நீரா உற்பத்தி

நீரா என்பது தென்னை மரங்களில் மலராத தென்னம்பாளையில் இருந்து உற்பத்தியாகும் சாறு ஆகும். இது நொதிக்காத, ஆல்கஹால் இல்லாத நமது உடல் நலத்திற்கு பெரிதும் உதவக்கூடிய இயற்கையான ஊட்டச்சத்து பானமாகும். இதில் வைட்டமின் ஏ, பி, சி மற்றும் சோடியம், பொட்டாசியம், இரும்பு போன்ற தாது உப்புக்கள் உள்ளன. நீராவிலிருந்து நீரா வெல்லம், நீரா சர்க்கரை, நீரா ஜாம், நீரா கேக், நீரா பிஸ்கட்டுகள், நீரா சாக்லேட்டுகள் மற்றும் நீரா இனிப்புகள் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கலாம். நீராவில் குறைவான அளவு குளுகோஸ் (கிளைசமிக் குறியீட்டு எண்) கொண்டுள்ளதால் நீரா பானத்தினை நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம். மேலும் நீரா உற்பத்தியில் ஈடுபடும்போது விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதோடு கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பும் பெருகும்.

நீரா உற்பத்தி செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18-4-2017 அன்று தென்னை மரத்திலிருந்து நீரா இறக்குதல், நீரா உற்பத்தி, பதப்படுத்துதல், விற்பனை செய்தல், உரிமம் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு நீரா தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

நீரா இறக்குவதற்கு தற்போது உள்ள தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937 மற்றும் மதராஸ் நீரா அல்லது பதநீர் விதி, 1939 ஆகியவற்றில் உரிய திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையினர் தற்போது உள்ள சட்டம் மற்றும் விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின் வேளாண்மைத் துறை தென்னை வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து, தென்னை வளர்ச்சி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட

[2017 ஜூலை 5

கூட்டுறவுச் சங்கங்களின் விவசாயிகளுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி நீரா பானம் உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.3.6 கரும்பு (Sugarcane)

கரும்பு தமிழகத்தில் பயிரிடப்படும் ஒரு முக்கியமான பணப்பயிர் ஆகும். கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக பிற மாவட்டங்களில் சராசரியாக 3.17 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு உற்பத்தி திறன் சராசரியாக ஒரு எக்டேருக்கு 106 மெட்ரிக் டன் கரும்பும், 335.58 இலட்சம் மெட்ரிக் டன் மொத்த கரும்பு உற்பத்தியும் பெறப்படுகிறது.

கரும்பு அதிகளவில் நீர் பயன்படுத்தும் பயிர் என்பதாலும், அதன் சாகுபடிப் பரப்பு குறைந்து வருவதாலும், நீர் சேமிப்பை ஊக்குவித்து அதன் உற்பத்தித் திறனை அதிகரித்து, சாகுபடிப் பரப்பு குறைவினால் ஏற்படும் உற்பத்திக் குறைவினை நிவர்த்தி செய்ய நீடித்த நிலையான கரும்பு சாகுபடித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நிழல் வலை கூடம்மூலம் ஒரு பரு கரணை கரும்பு நாற்று தயாரித்தல், அதிக இடைவெளி மற்றும் குறைந்த வயதுடைய கரும்பு நாற்றுகளை நடவு செய்தல், நுண்ணீர் பாசனம்மூலம் உரங்களை பயிருக்கு கிடைக்க செய்தல் போன்ற உத்திகள் கையாளப்படுகின்றன. இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டு 275 எக்டேர் (708 ஏக்கர்) பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம் 16,000 எக்டர் (40,000 ஏக்கர்) பரப்பில் செயல்படுத்தப்படும். மேலும் கூடுதலாக 14,000 எக்டர் (35,000 ஏக்கர்) கரும்பு பயிர் சாகுபடி நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

கரும்பு பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், 2016-17 ஆம் ஆண்டில், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கடலூர்மூலம் கடலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. ஊடுபயிர் சாகுபடி மற்றும் ஒரு பரு கரணை தொழில்நுட்பம் (Single Bud Chip Technology) தொடர்பான செயல்விளக்கங்கள், வல்லுநர் விதை உற்பத்தி (Breeder Seed Production), திசுவளர்ப்புக் கூடத்தை மேம்படுத்துதல் மற்றும் மாநில அளவிலான பயிற்சிகளுக்காக ரூ.47.75 இலட்சம் செலவிடப்பட்டது. இவ்வியக்கம் 2017-18



2017 ஜூலை 5]

ஆம் ஆண்டிலும் தொடர்ந்து ரூ.49.42 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.7. பருத்தி (Cotton)

பருத்தி பயிரானது 1.45 இலட்சம் எக்டேர் பரப்பளவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. இதன் உற்பத்தி 3.80 இலட்சம் பொதி Bales ஆகும்.

ஐந்தாண்டுகளில் பருத்தி சாகுபடி பரப்பளவை அதிகரிப்பதோடு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம், 2014-15 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு, சென்னை, நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடி மேற்கொள்ளாத பகுதிகளில் கோடை பருவ பருத்தி சாகுபடி மற்றும் டெல்டா பகுதிகளில் நெல் தரிசில் பருத்தி சாகுபடியை குறைந்த செலவில் மேற்கொள்ளவும், உற்பத்தி திறன் மற்றும் பருத்தியின் தரத்தை உயர்த்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், 2016-17 ஆம் ஆண்டில், நீரில் கரையும் உரங்களுடன் கூடிய சொட்டு நீர் பாசனம், மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விநியோகம் போன்றவை ரூ.8 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன. 2017-18 ஆம் ஆண்டிலும், இவ்வியக்கம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பருத்தி பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், 2016-17ஆம் ஆண்டில், விருதுநகர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, உள்ளூர் (DESI) மற்றும் மிக நீள இழை பருத்தி இரக விதை உற்பத்தி, ஊடுபயிர் மற்றும் அடர் நடவு முறை தொடர்பான செயல் விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளுக்கு ரூ.48.42 இலட்சம் செலவிடப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ.51.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.4 அரசின் சிறப்புத் திட்டங்கள்

நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அவற்றை பரவலாக்கம் செய்வதே ஒரு மாநிலத்தின் வேளாண்மை

வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும். பல்வேறு பாரம்பரிய வேளாண்மையில் இல்லாத அதிநவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதோடு விவசாயிகளின் பொருளாதார நிலையையும் உயர்த்தி வேளாண்மையில் பெருமையடையத்தக்க முன்னேற்றம் அடைவதற்காக தமிழக அரசு தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது. விவசாயிகளின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட தமிழக அரசு, வேளாண்மையில் உள்ள முக்கிய செயல்பாடுகளில் சிறப்புக்கவனம் செலுத்துவதோடு வேளாண்மையில் சாதகமான பலன்களை பெறுவதற்காக இது போன்ற தன்னிகரில்லா புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி வருகிறது.

### 1.4.1 குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம்

2016-17 ஆம் ஆண்டில், தென்மேற்கு பருவமழை குறைவாக பெறப்பட்டதாலும், மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதாலும் (20-9-2016) காரீப் பருவ பயிர்கள் சாகுபடி பெரிதும் பாதிப்படைந்தது. எனினும், ரூ.54.65 கோடி செலவில் தமிழக அரசு அறிவித்த குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானிய உதவி, டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வுக்கு புத்துணர்ச்சி அளித்தது. இத்தொகுப்புத் திட்டத்தினால் நிலத்தடி நீரைக் கொண்டு டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடியை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டதால் வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில் இயல்பு பரப்பான ஒரு இலட்சம் ஏக்கருக்கு பதிலாக 3.16 இலட்சம் ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 1,37,903 விவசாயிகள் பயனடைந்தனர்.

### குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம், 2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிலத்தடி நீரைக் கொண்டு விவசாயிகள் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.56.92 கோடி ஒதுக்கீட்டில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தினை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களிலும், கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்ட டெல்டா பகுதிகளிலும் செயல்படுத்த 12-6-2017 அன்று அறிவித்தார்கள். டெல்டா மாவட்டங்களில் தற்போது உள்ள நீர் ஆதாரத்தினைப் பயன்படுத்தி இயல்பான பரப்பில் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் வகையில் நெல் சாகுபடி 1.60 இலட்சம் ஏக்கரிலும், நெற்பயிருக்கு மாற்றாக குறைந்த



நீர்த் தேவை கொண்ட பயறு வகை சாகுபடி 1.32 இலட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்குவதோடு, நெல் இயந்திர நடவு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் இடுபொருட்களான துத்தநாக சல்பேட், திரவ உயிர் உரங்கள் 80,000 ஏக்கருக்கும் மற்றும் நுண்ணூட்ட கலவை 25,000 ஏக்கருக்கும்; பயறு வகை பயிருக்கான சான்று விதை, டிஏபி, இலைவழி உரம் மற்றும் திரவ உயிர் உரங்கள் 75,000 ஏக்கருக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவு செய்ய மானியம் 60,000 ஏக்கருக்கும்; நீர் பாசனக் குழாய்கள் 1300 அலகுகளும்; வெண்ணாறு பகுதிகளில் 20,000 ஏக்கர் பரப்பளவிற்கு பசுந்தாள் விதைகள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

மேற்கூறிய அனைத்து செயல்பாடுகளும் 100 சதவீத மானியத்திலும், நீர் பாசன குழாய் 75 சதவீத மானியத்திலும் வழங்கப்பட உள்ளன.

### 1.4.2 சம்பா நெல் சாகுபடி

மேட்டூர் அணையில் நீர் இருப்பு தொடர்ச்சியாக குறைவாக இருந்ததால், சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ள நாற்றங்கால் அமைக்கவும், நிலத்தை தயாரிக்கவும் போதுமான நீர் இல்லாததால், 18-8-2016 அன்று, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், திருச்சி, கரூர், புதுக்கோட்டை மற்றும் அரியலூர் மாவட்ட விவசாயிகளை ஊக்குவித்து, குறைந்த பாசன நீர், சாகுபடி செலவினம் மற்றும் பயிர் வளர்ச்சிக்காலம் போன்ற நன்மைகளைக் கொண்ட நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளவும், வாய்ப்புள்ள இடங்களில் நெல் நடவு மேற்கொள்ளவும் ரூ.64.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் "சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை" தமிழக அரசு அறிவித்தது. உச்ச நீதிமன்றத்திலிருந்து உரிய ஆணைகளைப் பெற்று, கர்நாடக மாநிலத்திலிருந்து பாசன நீரை பெற தமிழக அரசு தீவிர முயற்சிகள் எடுத்ததன் காரணமாக, 20-9-2016 அன்று மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக காவேரி நீர் திறந்து விடப்பட்டது.

இச்சிறப்புத் தொகுப்புத் திட்டத்தால் சம்பா சாகுபடியில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது. இதனால் 9.55 இலட்சம் ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 2,86,306 விவசாயிகள் பயனடைந்தனர்.

[2017 ஜுலை 5

2017-18 ஆம் ஆண்டு சம்பா பருவ நெல் சாகுபடி குறித்து தமிழக அரசு தகுந்த வாழ்வாதார மேம்பாட்டு முறைகளை மேற்கொள்ளும்.

### 1.4.3 பயறுவகை சிறப்புத் திட்டம்

மாநிலத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ள தமிழக அரசு, கடும் வறட்சி நிலவிய போதும், போதுமான நிலத்தடி நீர் உள்ள இடங்களில், திறனான நீர் ஆதார மேலாண்மைமூலம், குறைந்த பயிர் காலம் கொண்ட பயறு வகை பயிர் சாகுபடியினை ஊக்குவித்து வருகிறது. இதற்காக, 2016-17 ஆம் ஆண்டில், ரூ.50 கோடி மதிப்பீட்டில், வாய்ப்புள்ள மாவட்டங்களில் பயறு வகை பயிர்களுக்கான சிறப்பு தொகுப்பு திட்டம் (Special Package for Pulses) செயல்படுத்தப்பட்டது. முக்கிய இடுபொருட்களுக்கு 100 சதவீத மானியமாக ஏக்கருக்கு ரூ.2,000/- வழங்கப்பட்டு, இத்திட்டம், 17 மாவட்டங்களில், 59,738 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. இதுதவிர, இறவைப்பயிராக பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய, தெளிப்பான் மற்றும் மழைத்தூவான் போன்ற நுண்ணீர்ப்பாசன கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.4.4 மானாவாரி பகுதிகளில் நீடித்த நிலையான வேளாண்மை

நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மைக்கான இயக்கத்தின்மூலம், ரூ.802.90 கோடி நிதி ஒதுக்கீட்டில், 2016-17 முதல் 2019-20 வரை படிப்படியாக, 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. மானாவாரி பகுதி விவசாயிகளின் பங்கேற்புடன் இத்திட்டத்தை தொகுப்பு அணுகுமுறையில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய தொழில்நுட்ப பயிற்சி அளித்தும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கியும், உற்பத்தியை மேம்படுத்தும் நவீன உழவியல் முறைகளை கடைபிடித்தும், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டி மானாவாரி விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ், முக்கிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை மையமாகக் கொண்டு, நான்காண்டுகளில் 1,000 எக்டர் கொண்ட 1,000 மானாவாரி



2017 ஜுலை 5]

தொகுப்புகள் அமைக்கப்படும். முதற்கட்டமாக 2016-17 ஆம் ஆண்டில், 5 இலட்சம் ஏக்கர் மானாவாரி பகுதியை மேம்படுத்த 200 மானாவாரித் தொகுப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பயிர்வாரியான, தொகுப்புவாரியான பரப்பு தெரிவு செய்யப்பட்டு, தொகுப்பு மேம்பாட்டுக்குழு மற்றும் வட்டார அளவிலான குழுமூலம் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

i. மழை நீரை சேமிப்பதற்காக, மானாவாரி பகுதி விவசாயிகளுக்கு மிகவும் அவசியமாக தேவைப்படும் பண்ணைக் குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள், சமுதாய நீர் சேமிப்பு அமைப்புகள் மற்றும் தடுப்பணைகள் அமைத்தல்.

ii. ஒவ்வொரு தொகுப்புக்கும் கோடை உழவு போன்ற நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற ஆரம்ப நிலை பணிகளுக்காக நிதி உதவி வழங்கப்படும்.

iii. பயறுவகைகள், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி போன்ற மானாவாரிப் பயிர்களில், வறட்சியை தாங்கி வளரக்கூடிய குறுகிய கால பயிர் இரக விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரக்கலவைகள் விநியோகத்திற்காக 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

iv. அறுவடை செய்யும் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுவதற்காக, பயறு உடைக்கும் சிறு இயந்திரங்கள், எண்ணெய் பிழிந்தெடுக்கும் இயந்திரங்கள், சிறுதானிய சுத்திகரிப்பு இயந்திரங்கள் போன்றவற்றை நிறுவுவதற்காக தொகுப்பில் உள்ள முக்கிய தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு மானிய உதவி வழங்கப்படும். மேலும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களுக்கு பயறு உடைக்கும் சிறு இயந்திரங்கள், எண்ணெய் பிழிந்தெடுக்கும் இயந்திரங்கள், சிறுதானிய சுத்திகரிப்பு இயந்திரங்கள், விற்பனை மையங்கள் அமைக்கவும், பொட்டலமிடுதல், முத்திரையிடுதல், தரம் நிர்ணயம் செய்தல் போன்ற மதிப்புக்கூட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் நிதி உதவி வழங்கப்படும்.

v. மானாவாரி தொகுப்பு கிராமங்களில் உள்ள வேலையில்லா இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் 80 சதவீத மானியத்துடன் வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்து, இயந்திர வாடகை மையங்கள் (Custom Hiring Centres அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படும்.

[2017 ஜூலை 5

vi. மானாவாரித் தொகுப்பில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் ஒவ்வொரு தொகுப்பிற்கும் ரூ.10 இலட்சம் மதிப்பிலான ஊட்டச்சத்துக் கலவை மற்றும் நோய்தடுப்பு மருந்துகள் வழங்கப்படுவதுடன், கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

2017-18 ஆம் ஆண்டில், மேலும் 400 தொகுப்புகள் உருவாக்கப்பட்டு 10 இலட்சம் ஏக்கர் மானாவாரி பகுதி சாகுபடி பரப்பு மேம்படுத்தப்படும். இதற்காக ரூ.175.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்- மானாவாரி பகுதி மேம்பாடு-மானாவாரி பயிர்களின் உற்பத்தித்திறன் மற்றும் அப்பகுதி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முனைப்புடன் செயல்படும் அரசு "கறவை மாடுகள் / ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணையம்" மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. பாசன நீர் சேமிக்கும் முறைகளை மேற்கொண்டு சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கத்தில், 22,100 ஏக்கர் பரப்பில் பயிர் திட்டத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணையம் 2016-17 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும் பண்ணை மேம்பாட்டு நடவடிக்கைகளான மண்புழு உற்பத்தி கட்டமைப்புகள் மற்றும் விவசாய பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.25.32 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.30 கோடியில் சென்னை, நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, காஞ்சிபுரம், திருவள்ளூர், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக செயல்படுத்தப்படும்.

### 1.4.5 கூட்டுப்பண்ணையம்

தமிழகத்தில் உள்ள 81.18 இலட்சம் நில உடைமைகளில் 92 சதவீதம் சிறு, குறு விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இது மொத்த சாகுபடி நிலபரப்பில் சுமார் 61 சதவீதமாகும். இதனால், இவ்விவசாயிகள் தங்களுக்கு தேவையான கடன் வசதியைப் பெறவோ, புதிய தொழில்நுட்பங்களை தங்களது நிலங்களில் செயல்படுத்தவோ இயலாமல் உள்ளது. மேலும் தங்களின் விளைபொருட்களின் மதிப்பைக் கூட்டி அதிக லாபம்



2017 ஜூலை 5]

பெறும் வகையில் சந்தைப்படுத்தவும் முடியாமல் போகிறது. இதனால் மாநிலத்தின் ஒட்டு மொத்த வேளாண்மை உற்பத்தி குறைகிறது.

இந்நிலையினை கருத்தில் கொண்டு, சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், அவர்களை ஒருங்கிணைத்து, கூட்டுப்பண்ணைய முறையை ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த கடன் வசதி பெறுதல், சிறந்த தொழில்நுட்ப முறைகளை பின்பற்றுதல், முன் மற்றும் பின் சந்தை இணைப்பு தொடர்புகளை ஏற்படுத்துதல் முதலியவற்றை சிறப்பாக மேற்கொள்வதற்கு புதிய திட்டத்தினை தமிழக அரசு 2017-18 ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது.

2017-18 ஆம் ஆண்டில் மட்டும் இரண்டு இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் முன்னோடித் திட்டமாக இது அறிமுகப்படுத்தப்பட்டு குறைந்தபட்சம் 100 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தமிழகம் முழுவதும் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் மூலதன நிதியாக ரூ.5 இலட்சம் வீதம் வழங்கப்படுவதோடு, நபார்டு (NABARD) வங்கி மற்றும் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு ஆகியவைமூலம் நிதி உதவி மற்றும் கடன் வசதிகளைப் பெற தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும். 2017-18 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக மொத்தம் 100 கோடி ரூபாய் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் செயல்பாடுகள் செம்மைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் அருகருகே உள்ள 10 குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக (Farmer Producer Organization) மேம்படுத்தப்படும் இத்திட்டத்தில் ஆண்டுதோறும் படிப்படியாக நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு வரும் 5 ஆண்டுகளில் 40 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

### 1.4.6 நுண்ணீர்ப்பாசனம்

பயிரின் வேர்ப்பரப்பிற்கு நீர் கிடைக்கும் வகையில் பாசனம் செய்யும் முறை நுண்ணீர்ப்பாசனம் எனப்படுகிறது. இப்பாசன முறையினால் பயிருக்கு அளிக்கப்படும் தண்ணீர், உரங்களின்

அளவு சிக்கனமாகக் கையாளப்படுகிறது. இப்பாசன முறையினால் கிடைக்கும் பிற பயன்களாவன: மண் அரிமானத் தடுப்பு, களைகள் கட்டுப்படுத்தப்படுதல், சீரான நீர் விநியோகம், பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, பயிர் உற்பத்தி திறன் அதிகரிப்பு, வேளாண் விளைப்பொருட்களின் தர உயர்வு ஆகியனவாம். மேற்கண்ட பயன்களைக்கருதி தமிழக அரசு இந்நுண்ணீர்ப்பாசன முறையைப் பரவலாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நீர் சேமிப்பு உத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானிய விலையிலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானிய விலையிலும் நுண்ணீர்ப்பாசன வசதிகளை அமைத்துத்தருகிறது.

இந்நுண்ணீர்ப்பாசனத் திட்டம் "பிரதம மந்திரி விவசாயிகள் பாசனத் திட்டம் (PMKSY)" மூலம் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் பயிர்களான துவரை, பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், தென்னை மற்றும் எண்ணெய்ப்பனை ஆகிய பயிர்களுக்கு நுண்ணீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2016-17 ஆம் ஆண்டில் நிலவிய வறட்சிக்குப் பின்னர், நுண்ணீர்ப் பாசனம் அதிக முக்கியத்துவம் பெற்றது. 2016-17 ஆம் ஆண்டில் ரூபாய் 126.04 கோடி மதிப்பீட்டில் 30,412 எக்டேர் நிலப்பரப்பில் நுண்ணீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில், நுண்ணீர்ப்பாசனத்திற்காக தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.803.93 கோடியில் வேளாண் பயிர்களுக்கு ரூ.394.86 கோடி மதிப்பீட்டில் 70,990 எக்டர் நிலப்பரப்பில் நுண்ணீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 1.5 விவசாயிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு நடவடிக்கைகள்

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை தாமதமாக துவங்கியது, குறைவான நீர் இருப்பு மற்றும் கர்நாடக மாநிலம் நீர் திறந்துவிடாத காரணத்தால், மேட்டூர் அணை காலதாமதமாக திறக்கப்பட்டது, மிகக்குறைவான மழை மற்றும் மாநிலத்தில் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியால் முக்கிய பயிர்களில், குறிப்பாக நெற்பயிரில் சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தித்திறன் பெரிதும் பாதிக்கப்பட்டது. வடகிழக்கு பருவமழை துவங்கிய போது, சம்பா நெல் மற்றும் ராபி பருவ சிறுதானியங்கள், பயறு





வகைகள் மற்றும் பருத்தி பயிர் சாகுபடியை அதிக பரப்பளவில் மேற்கொள்ள வாய்ப்புகள் இருந்த போதும், குறைவாக பெறப்பட்ட பருவமழை காரணமாக 2016 ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை சாகுபடி செய்யப்பட்ட முக்கியப் பயிர்களில் பெரும்பான்மையான பரப்பளவு வறட்சியால் பாதிப்படைந்தது. மேலும் வார்தா புயலாலும் இம்மாநிலம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பாதிக்கப்பட்டது.

எனினும், இதுபோன்ற இடர்பாடுகளால் எவ்வித பாதிப்பும் அடையாமல், விவசாயிகளின் வாழ்வாதார பாதுகாப்புக்கான அணுகுமுறைகளாக, டெல்டா மாவட்டங்களில் பாசன நீர் மேலாண்மை மற்றும் பயிர் சாகுபடிக்கான முறையான ஒருங்கிணைந்த திட்டம் நுண்ணிய அளவில் வகுக்கப்பட்டதோடு, பொதுப் பணித் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறைகளின் ஒருங்கிணைப்போடு, சிறப்பு தொகுப்புத் திட்டங்கள் செயல்படுத்துதல், பாதிக்கப்பட்ட பயிர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், உரிய நேரத்தில் பயிர் கடன் வழங்குதல் மற்றும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளை பதிவு செய்தல் போன்ற செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### 1.5.1 "வார்தா" புயலால் ஏற்பட்ட பயிர் பாதிப்பு

12-12-2016 அன்று "வார்தா" புயல் தமிழகத்தின் வடக்கு கடற்கரையை கடந்ததால் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 33 சதவீதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட மொத்தம் 1,02,869 ஏக்கரில் (85,515 ஏக்கர் வேளாண் பயிர்கள், 17,354 ஏக்கர் தோட்டக்கலைப்பயிர்கள்) சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ், இறவைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.5,465/-ம், பல்லாண்டு பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.7,287/-ம், நிவாரணத் தொகையாக வழங்க அரசு ஆணையிட்டு, பாதிப்படைந்த 64,269 விவசாயிகளுக்கு, ரூ.55.46 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

#### 1.5.2 சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைக் காப்பதற்கான மீட்பு நடவடிக்கைகள்

சம்பா நெற்பயிரை அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்த போதிலும், வடகிழக்கு பருவ

[2017 ஜூலை 5

மழையால் பெறப்பட்ட குறைவான மழையாலும், மேட்டூர் அணை உட்பட அனைத்து நீர்தேக்கங்களிலும் நீர்இருப்பு இல்லாததாலும் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியால், நெற்பயிர் அதிகளவில் பாதிப்படைய நேரிட்டது. இந்நிலையில் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளோடு நில்லாமல், தமிழக அரசு, சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெற்பயிரை கருகும் நிலையிலிருந்து பாதுகாக்க பொட்டாசியம் குளோரைடு, பி.பி.எப்.எம் பாக்டீரியா (Pink Pigmented Facultative Methylotroph) போன்றவற்றை தெளிக்க நடவடிக்கை மேற்கொண்டது. நீர் பற்றாக்குறையினை எதிர்கொள்ளவும், நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும் தேவையான உத்திகளைக் கடைப்பிடிக்க விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காக்க 7.82 இலட்சம் ஏக்கரில் பொட்டாசியம் குளோரைடும் 7.57 இலட்சம் ஏக்கரில் பி.பி.எப்.எம் பாக்டீரியாவும் தெளிக்கப்பட்டது.

இவ்வாறாக, அரசால் பல்வேறு பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக, சம்பா மற்றும் ராபி பருவங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதுகாக்க இயலாத அளவுக்கு கருகிவிட்டன.

### 1.5.3 பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட பயிர் பாதிப்புக்கான நிவாரணம்

2016-17 ஆம் ஆண்டில், வடகிழக்கு பருவமழை காலத்தில் மிகக் குறைவான மழை பெறப்பட்டதாலும் முக்கிய அணைகளில் குறைவான நீர் தேக்கத்தாலும் மாநிலம் முழுவதும் ஏற்பட்ட வறட்சியால், சம்பா மற்றும் ராபி பருவ பயிர்கள் பாதிப்படைந்ததோடு, முக்கிய வேளாண் பயிர்களில் சாகுபடி பரப்பளவும் குறைந்தது. தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சியின் உண்மை நிலையை ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, அரசு உயர்மட்டக் குழு ஒன்றினை அமைத்தது. தமிழகத்தின் 32 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, நெல் மற்றும் இதர இறவை பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5,465/-ம்; மானாவாரி பயிர்களுக்கு ரூ.3,000/-மும் பல்லாண்டு பயிர்களுக்கு ரூ.7,287/-ம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மொத்தம் 50.35 இலட்சம் ஏக்கர் பரப்பளவு பாதிக்கப்பட்டதால், பயிர் சாகுபடி செய்த 32.30 இலட்சம் விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரண உதவித் தொகையாக ரூ.2,247.07 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.



2017 ஜூலை 5]

### 1.5.4 வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள்

விவசாயிகளிடையே அதிக வரவேற்பை பெற்றுள்ள வேளாண் காப்பீட்டுத் திட்டங்களின் செயல்பாடு, தமிழக அரசின் சீரிய முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. விவசாயிகளின் நலனில் அதீத அக்கறை கொண்ட தமிழக அரசு, 2015-16 ஆம் ஆண்டில், பயிர் இழப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பதற்காக, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ், இழப்பீட்டு தொகை வழங்கும் பொருட்டு மாநில அரசின் பங்காக ரூ.168.66 கோடி தொகையை இந்திய வேளாண் காப்பீட்டு கழகத்திற்கு வழங்கியது. பாதிக்கப்பட்ட சம்பா நெற்பயிருக்கான இழப்பீட்டுத் தொகையாக, ரூ. 403.79 கோடி, 2,96,550 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பயிர் உற்பத்தி இடையூறுகளிலிருந்து விவசாயிகளை பாதுகாத்தல், உணவு பாதுகாப்பை உறுதி செய்தல், மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்குவித்தல், இதர பிரிவுகளுக்கு இணையான வளர்ச்சியை வேளாண் பிரிவில் ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கி வகுக்கப்பட்ட “பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்” கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

- இயற்கை இடர்பாடுகளால் பயிர் இழப்பு ஏற்படும் போது, விவசாயிகளுக்கு நிதிஉதவி வழங்குதல்.
- பண்ணை வருவாயை நிலைப்படுத்தி வேளாண் பணிகளில் விவசாயிகள் தொடர்ந்து ஈடுபடுவதை உறுதி செய்தல்.
- புதிய அதிநவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் தங்கள் வயல்களில் பின்பற்றுவதை ஊக்குவித்தல்.

காரீப் 2016 முதல், சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளுக்கும் மிகுதியாக, இப்புதிய திட்டத்தின்கீழ், இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான இழப்பீட்டுத்

தொகையை விவசாயிகளுக்கு விரைந்து வழங்குவதோடு மட்டுமன்றி, விதைப்பு பொய்த்தாலும், நடவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும், அறுவடைக்குப் பின் இழப்பு ஏற்பட்டாலும், பகுதி சார்ந்த பல்வேறு இயற்கை இடர்பாடுகள் (புயல், ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பருவம் தவறிய மழை மற்றும் வயல்களில் வெள்ள நீர்த்தேக்கம்) மற்றும் இடைபருவ கால இடர்பாடுகளால் இழப்புகள் ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடன்பெறும் மற்றும் கடன்பெறா விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய ஒரே மாதிரியான காலக்கெடுவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மிக துல்லியமாக பயிர் இழப்பீட்டுத் தொகையை விவசாயிகள் பெறும் வகையில் “வருவாய் கிராமங்கள்” அறிவிக்கை செய்யப்படுகின்றன.

மூன்று தொகுப்புகளாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட மூன்று காப்பீட்டு நிறுவனங்களான இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் (Agriculture Insurance Company of India Limited), ஐ.சி.ஐ.சி.ஐ. பொதுக் காப்பீட்டுக் கழகம் (ICICI General Insurance Company), நியூ இந்தியா அசூரன்ஸ் பொது காப்பீட்டுக் கழகம் (New India Assurance General Insurance Company) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில், காப்பீட்டுக் கட்டண மானியத்தில் தமிழக அரசின் பங்காக ரூ.428 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 31.85 இலட்சம் ஏக்கரில் பயிர் சாகுபடி செய்த 15.37 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டனர். கடன் பெறா விவசாயிகளை பதிவு செய்ததில் (12.04 இலட்சம்) அனைத்திந்திய அளவில் முதலிடத்தில் இருப்பதோடு, 2016-17 ராபி பருவத்தில் அதிக அளவில் விவசாயிகளை பதிவு செய்த மாநிலங்களுள் ஒன்றாகவும் தமிழகம் விளங்குகிறது.

மேலும் கிராம அளவில் நடத்தப்படும் பயிர் அறுவடை பரிசோதனையில் கணக்கிடப்படும் மகசூல் இழப்பின் அடிப்படையில், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள காவேரி டெல்டா பகுதி விவசாயிகள் நெல்லுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25,000/-மும்; இதர பகுதி விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.21,500/- முதல் ரூ.26,000/- வரையிலும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையாக பெற இயலும். அதே போல, பயறுவகை பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.12,000/-மும், சிறுதானியப் பயிர்களுக்கு ரூ.4,800/- முதல் ரூ.20,000/- வரையிலும், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ரூ.6,000/- முதல் ரூ.22,500/- வரையிலும், பருத்தி பயிருக்கு ரூ.16,500/- முதல் ரூ.25,500/- வரையிலும், கரும்புக்கு ரூ.34,000/- முதல் ரூ.60,000/- வரையிலும் இழப்பீட்டுத் தொகையாக பெற இயலும்.





விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை விரைந்து வழங்குவதற்காக, பயிர் அறுவடை பரிசோதனைகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு மகசூல் விவரங்கள் வழங்குவதை துரிதபடுத்த அரசு தீவிர முயற்சிகள் எடுத்துள்ளது. மாநில அரசு எடுத்த இம்முயற்சிகளால், காப்பீட்டு நிறுவனங்கள்மூலம் இதுவரை 2,92,096 விவசாயிகளுக்கு, ரூ.928.12 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கிட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காப்பீட்டுக் கட்டணத்தில் மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.522.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்த சாகுபடி பரப்பளவில் 40 சதவீதத்தை காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, தென்னை மர காப்பீட்டுத் திட்டமும், அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.6 தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (TANSEDA)

தரமான விதைகள் மற்றும் அவற்றுக்குகந்த இதர வேளாண் இடுபொருட்களின் பயன்பாடு, பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. எனவே, புதிய / மேம்படுத்தப்பட்ட பயிர் இரகங்களின் விதை உற்பத்தி செய்வதும், உரிய நேரத்தில் போதுமான அளவில் தரமான விதை / விதை பொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவது மட்டுமே பயிர் உற்பத்தித் திறனை விரைவாக அதிகரிக்கும்.

2015-16 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையை துவக்கி, விதைப் பிரிவில் விரிவான சீர்திருத்தத்தை ஏற்படுத்தி, முன்கூட்டியே விதை திட்டம் வகுக்கவும், முறையான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை செயல்படுத்துவதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தமிழக அரசு முனைந்து வருகிறது.

சான்று பெற்ற விதைகள் உபயோகிப்பதை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதும்; தன்மகரந்த சேர்க்கை பயிர்களான நெல்,

[2017 ஜுலை 5

கேழ்வரகு மற்றும் சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் 33 சதவீத விதை மாற்று விகிதமும், அயல் மகரந்த சேர்க்கைப் பயிர்களான சோளம், கம்பு மற்றும் பருத்தி பயிர்களில் 50 சதவீதமும், வீரிய ஒட்டு இரகங்களில் 100 சதவீதமும் விதை மாற்று விகிதம் அடைவதும்; நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி மற்றும் தென்னை ஆகிய வேளாண் பயிர்களில் தரமான சான்று பெற்ற விதை / தென்னங்கன்றுகளை போதுமான அளவு உற்பத்தி செய்து உரிய நேரத்தில் மாநிலம் முழுவதும் ஒரே விலையில் கிடைப்பதை உறுதி செய்வதும் இம்முகமையின் நோக்கமாகும். மேலும் பழைய இரகங்களுக்கு மாற்றாக புதிய இரக விதைகள் பிரபலப்படுத்தப்பட்டு, விதை உற்பத்திக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

2016-17 ஆம் ஆண்டில், 24,488 மெ.டன் தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, 20,781 மெ.டன் விதைகள் 880 அம்மா சேவை மையங்களின் மூலமாக 5.20 இலட்சம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், 9.05 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன. கடந்த 2016-17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிர்வாரியான விதை உற்பத்தி மற்றும் விநியோக விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 1.6 : விதை கொள்முதல் மற்றும் விநியோகம் 2016-17**

| பயிர் | விதை கொள்முதல் (மெ.டன்) | விதை விநியோகம் (மெ.டன்) |
|---|---|---|
| நெல் | 18,206 | 15,294 |
| சிறுதானியங்கள் | 314 | 302 |
| பயறுவகைகள் | 3,658 | 3,186 |
| எண்ணெய்வித்துக்கள் | 2,282 | 1,979 |
| பருத்தி | 28 | 20 |
| மொத்தம் | 24,488 | 20,781 |



2017 ஜுலை 5]

2017-18 ஆம் ஆண்டில், 25,240 மெ.டன் விதைகள் கொள்முதல் செய்து, 7.20 இலட்சம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 9.55 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படும்.

**அட்டவணை 1.7 : விதை கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம் 2017-18**

| பயிர் | விதை கொள்முதல் (மெ.டன்) | விதை விநியோகம் (மெ.டன்) |
|---|---|---|
| நெல் | 17,800 | 17,800 |
| சிறுதானியங்கள் | 400 | 400 |
| பயறுவகைகள் | 4,000 | 4,000 |
| எண்ணெய்வித்துக்கள் | 3,000 | 3,000 |
| பருத்தி | 40 | 40 |
| மொத்தம் | 25,240 | 25,240 |

### 1.6.1 விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் (Sub-Mission on Seeds and Planting Material (SMSP))

வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும், விதை மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் 60 : 40 என்ற மத்திய - மாநில அரசுகளின் நிதி பங்கீட்டு விகிதத்துடன் செயல்படுத்தப்படுகிறது. இந்த துணை இயக்கம், கரு விதை முதல் சான்று பெற்ற விதைகள் வரை விதை பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது மற்றும் விதைப்பிரிவு மேம்பாட்டிற்கு தேவையான உட்கட்டமைப்புகளை அமைப்பது சார்ந்த அணுகுமுறைகளை உள்ளடக்கியது. விவசாயிகளின் விதை தேவையை பூர்த்தி செய்யவும், பண்ணை வருமானத்தை உயர்த்தவும், விஞ்ஞான முறையில் தரமான விதை உற்பத்தி மேற்கொள்ள உரிய பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறுவகைகளில் ஆதார/ சான்றளிக்கப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

[2017 ஜூலை 5

2016-17 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.13.46 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.7 பயிர் பாதுகாப்பு

பல்வேறு தொழில்நுட்பங்கள், மேம்படுத்தப்பட்ட பயிர் இரகங்கள் மற்றும் அதிநவீன பயிர் சார்ந்த உற்பத்தி அணுகுமுறைகளை அறிமுகப்படுத்திய போதிலும், பயிர் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை நிர்ணயிப்பதில் "பயிர் பாதுகாப்பு" இன்றியமையாத பங்கு வகிக்கிறது. எனவே, இலாபகரமான, சுற்றுப்புறச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத உழவியல் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை அதிகளவில் கடைப்பிடிப்பதில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகளவில் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், தீவிர பூச்சி நோய் கண்காணிப்பு மேற்கொள்ளுதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளை அறிவுறுத்துதல், கிராம அளவில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களை பரவலாக்குதல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மைக்கான தொழில்நுட்ப செயல்பாட்டிற்கு மானியம் வழங்குதல், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தியை அதிகரிக்க தற்போது இயங்கி வரும் ஆய்வகங்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளின் தரத்தை உறுதி செய்தல் போன்ற உத்திகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், வானிலை காரணிகளை பதிவு செய்ய, வட்டார அளவில் தானியங்கி வானிலை மையங்களையும் நிறுவி, விவசாயிகளுக்கு பூச்சி நோய் தாக்குதல் குறித்த முன்னறிவிப்புகளை அரசு வழங்கி வருகிறது.

கடந்த 2016-17 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவரம் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை 1.8 : 2016-17 பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்**

| இனம் | அளவு | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| தூள் (மெ.டன்) | 3,055 | 5.10 |
| திரவம் (லிட்டர்) | 4,94,600 | 32.00 |



2017 ஜூலை 5]

#### 1.7.1 பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு

நிரந்தர பூச்சி நோய் கண்காணிப்புத் திடல்கள் அமைத்து வாராந்திர இடைவெளியிலும், சுற்றுக் கணிப்பு முறைமூலம் தினசரியும் தீவிரமாக பூச்சி நோய் தாக்குதலை கண்காணிப்பதோடு முன்னறிவிப்பும் வழங்கப்படுகிறது. குறுஞ்செய்திகள், குரல் வழிச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சி, துண்டுப் பிரசுரங்கள் மற்றும் முகாம்கள்மூலம் பகுதிக்கேற்ற பயிர்வாரியான / பயிரைத் தாக்கும் பூச்சிகள்வாரியான முன்னறிவிப்புகள் வழங்கப்படுகின்றன.

#### 1.7.2 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை

தீவிரமாக மேற்கொள்ளப்படும் நவீன வேளாண் முறைகள் களைக்கொல்லிகளையும், பூச்சிக்கொல்லிகளையும் அதிகளவில் சார்ந்திருப்பதால், வயல்களில் உள்ள பல்வேறு நன்மை தரும் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தி வரும் தமிழக அரசு, பொருளாதார சேதநிலை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பயிர் பாதுகாப்பு அணுகுமுறைகளுக்கு மாற்றாக பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் பயிரின் நிலை, பயிரின் பூச்சி நோய் எதிர்ப்பு சக்தி, பயிரை தாக்கும் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளின் இடையிலான விகிதம், மண்ணின் தன்மை, சீதோஷ்ணநிலை, விவசாயிகளின் அனுபவம் போன்ற பல்வேறு பயிர் பாதுகாப்பு உத்திகளை உள்ளடக்கிய நீடித்த நிலையான, எளிதில் கடைப்பிடிப்பதற்கேற்ற திறன்மிகு அணுகுமுறையாக வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு அடிப்படையிலான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்புத் திறன் அதிகரிப்பதாலும் நிலைப்புத் தன்மையாலும் வேளாண் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பயிர் சாகுபடி செலவினத்தை குறைக்க இவ்வணுகுமுறை வழிவகை செய்கிறது.

நீடித்த நிலையான சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன வேளாண் செயல்பாடுகளில், தனது சீரிய முயற்சிகளை விரிவுபடுத்தும் விதமாக, தமிழக அரசு, 2015-16 ஆம் ஆண்டில் 150 "சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்களை" அமைத்தது. இத்திட்டம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றதால், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

[2017 ஜூலை 5

அணுகுமுறைகள் சார்ந்த வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு குறித்து பயிற்றுவிக்கவும் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் / உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை வயல்களிலேயே உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கவும், 2016-17 ஆம் ஆண்டிலும், 20 மாவட்டங்களில் ரூபாய் ஒரு கோடி செலவில் 100 புதிய கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான அணுகுமுறைகளை தமிழக அரசு ஊக்குவித்ததன்மூலம் 1984-85 ஆம் ஆண்டில் 10,926 மெ.டன்னாக இருந்த பூச்சிக் கொல்லி மருந்து மூலக்கூறுகளின் பயன்பாடு, 2016-17 ஆம் ஆண்டில் 2,000 மெ.டன்னாக குறைந்துள்ளது.

## 1.8 உரங்கள்

விவசாயிகளின் தேவையில் சிறப்பு கவனம் செலுத்துவதோடு, பயிர் பருவம், மண் வகை, மண்வளம், பண்ணைவாரியான பயிர்த்திட்டம் மற்றும் பயிர் சாகுபடி முறைகளின் அடிப்படையில், வேளாண்மைத் துறை ஆண்டுதோறும் உர விநியோகத் திட்டத்தை வகுத்து வருகிறது. மேலும் மத்திய அரசிடமிருந்து உரிய நேரத்தில் உர ஒதுக்கீட்டினைப் பெறவும், பருவவாரியான உர விநியோகத் திட்டத்தை வகுக்கவும், போதுமான உரங்களை முன்கூட்டியே இருப்பு வைத்து விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்யவும் அரசு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உரங்கள் மீதான 4 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும், நாப்தா அடிப்படையிலான யூரியாவை மாநிலத்தில் தொடர்ந்து உற்பத்தி செய்யும்பொருட்டு, விவசாயிகளின் நலன் காத்திட எம்.எப்.எல். மற்றும் ஸ்பிக் உர நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் நாப்தா மீதான 5 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும் விலக்களித்ததோடு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்ஃபெட்) வட்டியில்லாக் கடனும் வழங்கி உரிய நேரத்தில் போதிய அளவில் தரமான உரங்கள் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்ய தமிழக அரசால் எடுக்கப்படும் தீவிர நடவடிக்கைகள் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 2017-18 ஆம் ஆண்டில், தேவையான அளவு உரங்களை முன்கூட்டியே இருப்பு வைத்திட இந்நிறுவனத்துக்கு உரம் கொள்முதல் செய்வதற்காக ரூ.150 கோடி வட்டியில்லா கடனாக வழங்கப்படும். கடந்த 2016-17 ஆம் ஆண்டில், உர விநியோகம் மற்றும் 2017-18 ஆம் ஆண்டின் உரத் தேவை விவரம் பின்வருமாறு:



2017 ஜூலை 5]

**அட்டவணை 1.9 : 2016-17 உர விநியோகம் மற்றும் 2017-18 உரத் தேவை (இல.மெ.டன்)**

| உரம் | 2016-17 | 2017-18 உரத்தேவை | | |
|---|---|---|---|---|
| | விநியோகம் | காரீப் | ராபி | மொத்தம் |
| யூரியா | 7.76 | 3.50 | 6.59 | 10.09 |
| டி.ஏ.பி | 2.51 | 1.50 | 1.89 | 3.39 |
| பொட்டாஷ் | 2.52 | 1.30 | 1.94 | 3.24 |
| காம்ப்ளக்ஸ் | 5.07 | 2.50 | 3.18 | 5.68 |

தற்போது யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளெக்ஸ் போன்ற உரங்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளன.

### 1.8.1 விற்பனை முனையக்கருவி (PoS) வாயிலாக உர பரிவர்த்தனை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் சில்லரை உர விற்பனை மையங்கள் மற்றும் வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் விற்பனை முனையக்கருவி வாயிலாக உர பரிவர்த்தனை செய்யும் புதிய முறையினை செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனால் மாநிலம் முழுவதிலும் அரசு நிர்ணயித்த மானிய விலையில் உரங்கள் விற்பனை செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது. விற்பனை முனையக்கருவி வாயிலாக உர பரிவர்த்தனை செய்யப்படுவதால் விவசாயம் அல்லாத, இதர பயன்பாடுகளுக்கு மானிய விலை உரங்கள் விற்பனை செய்வது முழுமையாக கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும், உர மானிய திட்ட செயலாக்கத்தில் ஒரு வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படுவதால் உர விநியோகம், உர நகர்வு, உர இருப்பு ஆகியவற்றை எளிதாக கண்காணிக்க இயலும். உரிய விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யப்பட்ட விவரம் விற்பனை முனையக்கருவி வாயிலாக உறுதி செய்தபின்னரே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும். இதனால் விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் உரங்களை வாங்குவது உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள தனியார் உர விற்பனை மையங்களுக்கு 5,298 விற்பனை முனையக்கருவிகளும் கூட்டுறவு உர விற்பனை மையங்களுக்கு 4,139 விற்பனை முனையக்கருவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

[2017 ஜூலை 5

## 1.9 மண் வளம்

தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட "விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு" வழங்கும் திட்டம்மூலம் 67.45 இலட்சம் நிலவுடைமைகளுக்கு கையேடுகள் வழங்கப்பட்டன. மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பண்ணை மற்றும் பயிருக்குகந்த ஊட்டச்சத்து மற்றும் உரங்களைப் பற்றி தமிழக விவசாயிகள் அறிந்து கொள்ள இத்திட்டம் வழிவகுத்தது. இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, 2015-16 ஆம் ஆண்டில், மத்திய அரசால் துவக்கப்பட்ட "மண்வள அட்டை இயக்கம்" என்ற திட்டத்தை வேளாண்மைத் துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2015-16 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை கட்ட அடிப்படையிலான (Grid sampling) மண்மாதிரிகள் ஆய்வு மேற்கொண்டு, 70 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 67.67 இலட்சம் மண்வள அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2017-18 ஆம் ஆண்டில் 6.45 இலட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்து அதனடிப்படையில் 34 இலட்சம் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளன.

### 1.9.1 இலாபகரமான வேளாண்மைக்கான உயிரியல் மண்வள மேலாண்மை

வள ஆதார பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், சிறிய பண்ணைகளிலும் உற்பத்தித் தொழில்நுட்பங்களில் உள்ள இடர்பாடுகளை குறைக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும், இலாபம் ஈட்டும் நிலைத்தன்மையான வேளாண் முறைகளை உறுதி செய்யவும், செலவு குறைவான அங்கக இடுபொருட்களை பண்ணைகளிலேயே உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதால், சுற்றுச் சூழலை பாதுகாக்கும் அணுகுமுறைகள், மண்வள மேம்பாட்டு முறைகள், அங்கக பயிர் ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய "சுற்றுச்சூழலியல் வேளாண்மை" விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.



2017 ஜூலை 5]

அங்கக இடுபொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க, தமிழக அரசு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

- வயல்களிலேயே மடக்கி உழுது மண்ணின் அங்ககச் சத்தை அதிகரிக்க ஆண்டுதோறும் 250 மெ.டன் பசுந்தாள் உரவிதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.5.07 கோடி செலவில் 35,477 எக்டர் பரப்பளவுக்கு பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்பட்டன. 2017-18 ஆம் ஆண்டில் இத்திட்டம் நீலகிரி, சென்னை, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மண் வளத்தை மேம்படுத்த நெற்பயிருடன் பசுந்தாளுரப் பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்து, உரங்கள் உபயோகிக்கும் திறன் மற்றும் அரிசியில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம் ரூ.4.00 இலட்சம் செலவில் 1,805 எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது.

- பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோட்டஸ் மூலம் மக்கு உரம் தயாரிப்பதற்கு ஒரு கிலோ புளூரோட்டஸ் மற்றும் 5 கிலோ யூரியா அடங்கிய 5,000 பைகள், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு விலையில்லாமல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- மண்ணில் தழைச்சத்தை அதிகரிக்கவும், களைகளைக் குறைக்கவும், ஆண்டுதோறும் 525 மெ.டன் நீலப்பச்சைப்பாசி மற்றும் 500 மெ.டன் அசோலா உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

2016-17 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட உயிரி இடுபொருட்கள் விவரம் மற்றும் 2017-18 ஆம் ஆண்டுக்கான திட்டம் பின்வருமாறு:

[2017 ஜூலை 5

**அட்டவணை 1.10: உயிரி இடுபொருட்கள் - 2016-17 ஆம் ஆண்டில் விநியோகம் மற்றும் 2017-18 ஆம் ஆண்டுக்கான திட்டம்**

| உயிரி இடுபொருட்கள் | ஆண்டு இலக்கு | விநியோகம் 2016-17 | திட்டம் 2017-18 |
|---|---|---|---|
| நீலப் பச்சைபாசி (மெ.டன்) | 525 | 500 | 525 |
| பசுந்தாள் உர விதைகள் (மெ.டன்) | 250 | 152 | 250 |
| புளூரோட்டஸ் பைகள் (எண்கள்) | 5,000 | 5,000 | 5,000 |
| அசோலா (மெ.டன்) | 500 | 500 | 500 |

- கரும்பு சோகை வழக்கமாக வயல்களிலேயே எரிக்கப்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு மண்ணில் நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, கரும்பு பயிர்க்கழிவுகள் மேலாண்மைக்காக, கரும்புத் தோகையை உரமாக்கும் திட்டம், 2016-17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

- விவசாயிகளின் நிலங்களிலேயே அவர்களின் தேவைக்கேற்ற இயற்கை உரங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும்பொருட்டு, ரூ.2.17 கோடி செலவில் 1,400 மண்புழு உர மையங்கள் அமைக்க நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்-மானாவாரி பகுதி மேம்பாட்டின்கீழ் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

- பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்பு முறையின் (PGS) கீழ், குழு அணுகுமுறையில் அங்கக பண்ணையத்தை பிரபலப்படுத்த, நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்-பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் (மூன்று ஆண்டு திட்டம்) கீழ், விவசாயிகளை ஒருங்கிணைத்து குழுக்கள் அமைத்தல், திறன் மேம்பாடு, அங்கக இடுபொருள் கொள்முதல் மற்றும் அங்கக இடுபொருள் உற்பத்தி மையங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்காக ரூ.2.94 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. இம்முறையின்கீழ்



2017 ஜூலை 5]

42 குழுக்களின்மூலம் 10 மாவட்டங்களில் 2,096 ஏக்கர் பரப்பளவில் அங்கக பண்ணையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், இரண்டாம் ஆண்டு இனங்கள் 42 தொகுப்புகளில் ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டம் 53 புதிய தொகுப்புகளில் ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் 19 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

### 1.10 விவசாயிகளுக்கான பயிற்சி

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளின் செயல்திறனைக் கூட்டுவதிலும் இத்தொழில்நுட்பங்களை திறன்பட பரவலாக்கம் செய்வதிலும், வயல் அளவில் அவற்றை முழுமையாகக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதிலும் பயிற்சி முக்கிய பங்கு வகிப்பதால், ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியில் இவற்றின் பங்கு இன்றியமையாததாகும். விவசாயிகளின் தேவைக்கேற்ற பயிர் உற்பத்தி சார்ந்த, குறுகிய கால மற்றும் நீண்ட கால உள்வளாக மற்றும் வெளிவளாகப் பயிற்சிகளை கிராம அளவில் திட்டமிட்டு நடத்துதல், செயல் விளக்கங்கள், விழிப்புணர்வு முகாம்கள் போன்ற செயல்பாடுகள் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படுவதன்மூலம் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு பண்ணை அளவில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் உயர்த்திட வழிவகை செய்யப்படுகிறது.

### 1.10.1 வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் - மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் (Sub-Mission on Agricultural Extension (SMAE)- Support to State Extension Programmes for Extension Reforms Scheme (SSEPERS))

புதிய நிருவாக கட்டமைப்புமூலம் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம் செய்து, விரிவாக்க முறையை விவசாயிகள் சார்ந்ததாகவும் விவசாயிகளுக்கென மாற்றுவதுமே வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன் வளர்ப்பு,

வனத் துறை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று ஆகிய துறைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

விரிவாக்கத்தில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் விரிவாக்க உத்திகளை ஊக்குவித்தல், பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து விவசாயிகளின் பங்கேற்புடன் பண்ணைய முறை சார்ந்த விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்துதல், விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய விளைபொருள் ஆர்வலர் குழுக்கள், விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் என விவசாயிகளிடையே குழு அணுகுமுறையை ஊக்குவிப்பதோடு அவர்களை ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பை ஏற்படுத்துதல், பண்ணை மகளிருக்கு முக்கியத்துவமளித்து மகளிர் குழுக்களை அமைத்தல் மற்றும் விவசாயிகளுக்கான அனைத்து நலத் திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் திட்டம் தயாரித்து செயல்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின்கீழ், பயிற்சி செயல்விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா, விருதுகள் வழங்குதல், விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுக்கிடையே கலந்துரையாடல், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வு, வயல் விழாக்கள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் நடத்துதல், நவீன தொழில்நுட்ப தகவல் பரிமாற்ற உத்திகள் போன்ற பல்வேறு இனங்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும், செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2016-17 ஆம் ஆண்டில் ரூ.31கோடி செலவிடப்பட்டது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.10.2 விவசாயிகளுக்கான பயிற்சி மையங்கள்

தமிழக அரசு 22 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 28,820 விவசாயிகள், உழவர் விவாதக் குழு அமைப்பாளர்கள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கி வருகின்றன.



**அட்டவணை 1.11: உழவர் பயிற்சி நிலையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2. | விழுப்புரம் | திண்டிவனம் |
| 3. | வேலூர் | வேலூர் |
| 4. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 5. | சேலம் | சேலம் |
| 6. | நாமக்கல் | நாமக்கல் |
| 7. | தருமபுரி | தருமபுரி |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 9. | ஈரோடு | ஈரோடு |
| 10. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 12. | கரூர் | கரூர் |
| 13. | புதுக்கோட்டை | குடுமியான்மலை |
| 14. | தஞ்சாவூர் | சாக்கோட்டை |
| 15. | தேனி | தேனி |
| 16. | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 17. | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 18. | சிவகங்கை | சிவகங்கை |
| 19. | விருதுநகர் | விருதுநகர் |
| 20. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 21. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 22. | கன்னியாகுமரி | நாகர்கோவில் |

[2017 ஜூலை 5

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் நீர் மேலாண்மை பயிற்சி நிலையத்தின்மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 180 களப் பணியாளர்களுக்கும் 900 விவசாயிகளுக்கும் பாசன தொழில்நுட்பங்கள் மற்றும் பாசனத் திறன் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம்,குடுமியான்மலையில் இயங்கிவரும் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் (STAMIN), வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் முக்கிய பயிற்சி நிலையமாகும். ஆண்டுதோறும் 1,100 வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

திட்டமிடுதல், மதிப்பீட்டாய்வு செய்தல் தொடர்பான ஆலோசனை சேவைகள் வழங்க மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலைய வளாகத்தில், 2012-13 ஆம் ஆண்டில் மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் ((SAMETI) அமைக்கப்பட்டுள்ளது.

### 1.10.3 வேளாண் விரிவாக்க அமைப்பினை வலுப்படுத்துதல்

தமிழக அரசு தொழில்நுட்ப அறிவுசார் இடைவெளியைக் குறைக்க வேளாண் துறையில் இயங்கிவரும் வேளாண் விரிவாக்க அமைப்பு முறையை சீரமைத்தும் பலப்படுத்தியும் "விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்டத்தின்", கீழ் வேளாண் களப்பணியாளர்களுக்கான மேம்படுத்தப்பட்ட நிரந்தர பயணத்திட்ட அமைப்பினை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு விவசாயிகள், விவசாயக் குழுக்கள் மற்றும் விளைபொருள் குழுக்களோடு ஒவ்வொரு களப்பணியாளரும் நேரிடையாக தொடர்பு கொள்ளமுடிகிறது. இதன்படி 385 வட்டாரங்களிலுள்ள 12,620 கிராம பஞ்சாயத்துகளை 1,918 உதவி வேளாண்மை அலுவலர்கள், 385 வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் 770 உதவி தொழில்நுட்ப மேலாளர்களுடன் ஒருங்கிணைந்து களப்பணியில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலரும் தனக்கு ஒதுக்கப்பட்ட 8 பகுதிகளிலும் 15 நாட்களுக்கு ஒரு முறை சென்று பயிற்சி அளிப்பதை, வட்டார வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர்கள் உடன் ஆய்வு செய்வர். வேளாண்மை உதவி இயக்குநர்கள், வாரத்திற்கு 3 பகுதிகளையும் வேளாண்மை துணை



2017 ஜூலை 5]

இயக்குநர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் வாரத்திற்கு 2 பகுதிகளையும் ஆய்வு செய்வர்.

### 1.10.4 பயிர் விளைச்சல் போட்டிகள்

நவீன விஞ்ஞான சாகுபடி தொழில்நுட்பங்களே, பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கவல்லவை. இடுபொருள் பயன்பாட்டு திறனை அதிகரிக்கவல்ல புதிய தொழில்நுட்பங்கள் இப்போதைய தேவையாதலால், பண்ணை உற்பத்தி திறனை அதிகரிக்கும் பகுதிக்கேற்ற புதிய சாகுபடி முறைகளைக் கடைபிடிக்க, அனைத்து விவசாயிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட மற்றும் மாநில அளவில் இறவையில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, நிலக்கடலை, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களிலும் மானாவாரியில் நிலக்கடலைப் பயிரிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் மாநில அளவிலான 9 போட்டிகளும் மாவட்ட அளவிலான 88 போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு நுழைவுக் கட்டணம் ரூ.100/-ம், பிற பயிர்களுக்கு ரூ.50/-ம்; மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு ரூ.50/-ம் பிற பயிர்களுக்கு ரூ.25/-ம் வசூலிக்கப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக பயிர் மகசூல் பெறும் விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 1.12: மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுத் தொகை**

**(ரூபாயில்)**

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல், நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு | 25,000 | 15,000 | 15,000 | 10,000 |
| இதர பயிர்கள் | 15,000 | 10,000 | 10,000 | 5,000 |

[2017 ஜுலை 5

இதுதவிர, மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூ.5.0 இலட்சம் பரிசுத் தொகையும், ரூ.3,500/- மதிப்புள்ள பதக்கமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குடியரசு தின விழாவில் வழங்கப்படுகிறது.

### 1.10.5 வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம் (National Mission on Agricultural Extension and Technology (NMAET))

வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண் இயந்திரமயமாக்குத்தலுக்கான துணை இயக்கம், பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் என நான்கு துணை இயக்கங்களை உள்ளடக்கிய வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம், விரிவான நேரடி விரிவாக்க தொடர்பு மற்றும் கலந்துரையாடல் முறைகள்மூலம் தகவல் பரிமாற்றத்தை திறம்பட மேற்கொள்ளுதல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், நவீன மற்றும் உகந்த தொழில்நுட்பங்களை பரவலாக்குதல், திறன் மேம்பாடு மற்றும் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்க நிறுவன அமைப்பினை வலுப்படுத்துதல், தரமான விதைகள் கிடைக்கச் செய்தல், பயிர்பாதுகாப்பு மேற்கொள்ளுதல் மற்றும் விவசாயிகளை ஆர்வலர் குழுக்களாக ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பை ஏற்படுத்துதல் ஆகிய செயல்பாடுகள்மூலம், சிறந்த தொழில்நுட்பங்களும் மேம்படுத்தப்பட்ட வேளாண் சாகுபடி முறைகளும் விவசாயிகளை சென்றடைய ஏதுவாக வேளாண் விரிவாக்கத்தை மறுசீரமைத்து வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

### 1.11 ஆய்வகங்கள்

வேளாண்மை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் நிலையான வளர்ச்சி அடைய, பயிர் சாகுபடிக்குகந்த திறன்மிகு இரசாயன உரங்கள் / பயிர் பாதுகாப்பு மருந்துகளை கிடைக்கச் செய்வதும் விவசாயிகள் அவற்றை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதும் மிகவும் முக்கியமாகும். எனவே, பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் தரத்தை உறுதி செய்யும் நோக்கத்தோடு அத்தியாவசியப் பொருள் சட்டம்



2017 ஜுலை 5]

1955-ன்கீழ் இயற்றப்பட்ட உரக்கட்டுப்பாட்டு ஆணை, 1985 மற்றும் பூச்சிக்கொல்லி சட்டம் 1968 ஆகியவற்றுக்கு உட்பட்டு, அவற்றில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களால் சேகரிக்கப்படும் உரமாதிரிகளை ஆய்வு செய்ய, மாநிலத்தில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. உர தரக்கட்டுப்பாட்டை வலுப்படுத்த, படிப்படியாக ஆய்வகங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைத்ததோடு, நவீன பரிசோதனைக் கருவிகளும் நிறுவப்பட்டன.

2016-17 ஆம் ஆண்டில், 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டு, 17,347 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் 793 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், 19,600 உர மாதிரிகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இயங்கி வரும் 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 1.13 : உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2. | விழுப்புரம் | விழுப்புரம் |
| 3. | சேலம் | சேலம் |
| 4. | தருமபுரி | தருமபுரி |
| 5. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 6. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 7. | தஞ்சாவூர் | கும்பகோணம் |
| 8. | திருவாரூர் | திருவாரூர் |
| 9. | மதுரை | மதுரை |
| 10. | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 11. | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 12. | தூத்துக்குடி | கோவில்பட்டி |
| 13. | கன்னியாகுமரி | நாகர்கோவில் |
| 14. | நீலகிரி | ஊட்டி |

[2017 ஜூலை 5

அங்கக பண்ணையத்தில் விவசாயிகளுக்குள்ள ஈடுபாட்டை நிலைநிறுத்தவும், உரக் கட்டுப்பாட்டு ஆணை, 1985-ல், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அங்கக உரங்களான மண்புழு உரம், மக்கிய நகரக்கழிவு உரம் மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்குகளை ஆய்வு செய்ய, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு புதிய அங்கக உர ஆய்வகங்களை தமிழக அரசு அமைத்துள்ளது. இதன்மூலம் ஆண்டிற்கு 1,440 அங்கக உர மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய இயலும்.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், மண் ஆய்வு அடிப்படையில் உரங்களை பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதோடு ஆய்வகப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து, ஆய்வு உபகரணங்களின் நம்பகத்தன்மையையும் ஆய்வு முடிவுகளின் துல்லியத்தையும் உறுதி செய்வதற்கும் உதவுகிறது. இக்கட்டுப்பாட்டு ஆய்வகம் 2016-17 ஆம் ஆண்டில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் இயங்கி வரும் 31 மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள்மூலம் பண்ணை மற்றும் பயிருக்குகந்த ஊட்டச்சத்து மேலாண்மையை ஊக்குவித்து, ஊட்டச்சத்து பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆய்வுக் கூடங்கள்மூலம் ஆண்டுதோறும் 11.46 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்களை ஆய்வு செய்ய, அனைத்து மண் ஆய்வுக் கூடங்களுக்கும் அணுக்கதிர் ஈர்ப்பு ஒளி அலைக்கற்றைமானிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் இயங்கி வரும் மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களின் விவரம் பின்வருமாறு:



2017 ஜூலை 5]

**அட்டவணை 1.14: மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள்**

| வ. எண் | மாவட்டம் | மண் ஆய்வு கூடங்கள் | | நடமாடும் மண் ஆய்வு கூடங்கள் | |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | | |
| 2. | திருவள்ளூர் | 2 | திருவள்ளூர் | 1 | திருவள்ளூர் |
| 3. | கடலூர் | 3 | கடலூர் | | |
| 4. | விழுப்புரம் | 4 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் |
| 5. | வேலூர் | 5 | மேலாலத்தூர் | | |
| 6. | திருவண்ணாமலை | 6 | திருவண்ணாமலை | 3 | திருவண்ணாமலை |
| 7. | சேலம் | 7 | சேலம் | | |
| 8. | நாமக்கல் | 8 | நாமக்கல் | 4 | திருச்செங்கோடு |
| 9. | தருமபுரி | 9 | தருமபுரி | | |
| 10. | கிருஷ்ணகிரி | 10 | கிருஷ்ணகிரி | 5 | கிருஷ்ணகிரி |
| 11. | கோயம்புத்தூர் | 11 | கோயம்புத்தூர் | | |
| 12. | திருப்பூர் | 12 | திருப்பூர் | 6 | திருப்பூர் |
| 13. | ஈரோடு | 13 | ஈரோடு | 7 | ஈரோடு |
| 14. | திருச்சிராப்பள்ளி | 14 | திருச்சிராப்பள்ளி | | |
| 15. | பெரம்பலூர் | 15 | பெரம்பலூர் | 8 | பெரம்பலூர் |
| 16. | அரியலூர் | 16 | அரியலூர் | | |
| 17. | கரூர் | 17 | கரூர் | 9 | கரூர் |
| 18. | புதுக்கோட்டை | 18 | குடுமியான்மலை | | |
| 19. | தஞ்சாவூர் | 19 | ஆடுதுறை | | |
| 20. | நாகப்பட்டினம் | 20 | நாகப்பட்டினம் | 10 | நாகப்பட்டினம் |
| 21. | திருவாரூர் | 21 | திருவாரூர் | 11 | திருவாரூர் |
| 22. | மதுரை | 22 | மதுரை | 12 | மதுரை |

[2017 ஜூலை 5

| வ. எண் | மாவட்டம் | மண் ஆய்வு கூடங்கள் | | நடமாடும் மண் ஆய்வு கூடங்கள் | |
|---|---|---|---|---|---|
| 23. | தேனி | 23 | தேனி | | |
| 24. | திண்டுக்கல் | 24 | திண்டுக்கல் | | |
| 25. | இராமநாதபுரம் | 25 | பரமக்குடி | 13 | பரமக்குடி |
| 26. | சிவகங்கை | 26 | சிவகங்கை | | |
| 27. | விருதுநகர் | 27 | விருதுநகர் | 14 | அருப்புக்கோட்டை |
| 28. | திருநெல்வேலி | 28 | திருநெல்வேலி | | |
| 29. | தூத்துக்குடி | 29 | கோவில்பட்டி | 15 | கோவில்பட்டி |
| 30. | கன்னியாகுமரி | 30 | நாகர்கோவில் | 16 | நாகர்கோவில் |
| 31. | நீலகிரி | 31 | ஊட்டி | | |

விவசாயிகள் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை உறுதி செய்ய, அறிவிக்கை செய்யப்பட்ட 15 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் செயல்படுகின்றன. பூச்சிக்கொல்லி சட்டம், 1968 மற்றும் பூச்சிக்கொல்லி விதிகள், 1971 ஆகியவற்றுக்கு உட்பட்டு, 147 பூச்சிக்கொல்லி தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் 13,321 தனியார் விநியோக மையங்களிலிருந்து தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மாதிரிகளின் தரத்தை, இந்த ஆய்வகங்கள் ஆய்வு செய்கின்றன.

2016-17 ஆம் ஆண்டில், 21,850 பூச்சி மருந்து மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டு, 21,433 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், 168 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில், 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இயங்கி வரும் 2 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களுக்கு, ஆய்வு மற்றும் அளவீட்டு ஆய்வகங்களுக்கான அங்கீகாரம் வழங்கும் தேசிய நிறுவனத்தின் (NABL) தர நிர்ணயச் சான்றினை பெற, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.



2017 ஜூலை 5]

**அட்டவணை 1.15: மாநிலத்தில் இயங்கி வரும் பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2. | கடலூர் | கடலூர் |
| 3. | வேலூர் | வேலூர் |
| 4. | சேலம் | சேலம் |
| 5. | தருமபுரி | தருமபுரி |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 7. | ஈரோடு | ஈரோடு |
| 8. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 9. | தஞ்சாவூர் | ஆடுதுறை |
| 10. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 11. | மதுரை | மதுரை |
| 12. | தேனி | வைகை அணை |
| 13. | சிவகங்கை | சிவகங்கை |
| 14. | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 15. | தூத்துக்குடி | கோவில்பட்டி |

## 1.12 பணியாளர்கள் விவரம்

பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், நாள் முழுவதும் விவசாயிகளுக்கு விரிவாக்க மற்றும் தகவல் சேவை வழங்கவும், வேளாண் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் 4,835 தொழில்நுட்ப பணியாளர்கள் (வேளாண்மை ஆணையர் அலுவலகம்) மற்றும் 8,275 இதர பணியாளர்களை (சகோதர துறைகள் உட்பட) ஆக மொத்தம் 13,110 பணியாளர்களைக் கொண்டு வேளாண் துறை இயங்கி வருகிறது.

[2017 ஜூலை 5

## அட்டவணை 1.16 தொழில்நுட்ப நிருவாகம் (வேளாண்மை இயக்குநர் அலுவலகம்)

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 5 |
| வேளாண்மை இணை இயக்குநர் | 31 |
| வேளாண்மை துணை இயக்குநர் | 125 |
| உதவி வேளாண்மை இயக்குநர் | 420 |
| வேளாண்மை அலுவலர் | 1,088 |
| துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| தொழில்நுட்ப அலுவலர் மொத்தம் | 2,006 |
| உதவி விதை அலுவலர் | 509 |
| உதவி வேளாண்மை அலுவலர் | 2,320 |
| களப் பணியாளர்கள் மொத்தம் | 2,829 |
| மொத்த தொழில்நுட்ப பணியாளர்கள் | 4,835 |

## அட்டவணை 1.17: தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள் நிருவாகம் (சகோதர துறைகள் உட்பட)

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| துணை இயக்குநர் (நிருவாகம்) | 4 |
| ஆட்சி அலுவலர் | 44 |
| கண்காணிப்பாளர் | 515 |
| உதவியாளர் | 1,521 |
| இளநிலை உதவியாளர் | 914 |
| தட்டச்சர் | 689 |
| கிடங்கு மேலாளர் (தரம்-1) | 143 |
| கிடங்கு மேலாளர் (தரம்-2) | 281 |
| கிடங்கு மேலாளர் (தரம்-3) | 589 |



2017 ஜூலை 5]

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்-1) | 6 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்-2) | 57 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்-3) | 146 |
| ஓட்டுநர் | 560 |
| ஆய்வக உதவியாளர் | 135 |
| பதிவறை எழுத்தர் | 205 |
| அலுவலக உதவியாளர் / காவலர் | 2,466 |
| மொத்த தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள் | 8,275 |

### 1.13 வேளாண் உட்கட்டமைப்புகள்

வேளாண்மையில் உள்ள சவால்களை எதிர்கொள்ள, அரசு விரிவாக்க சேவை முறைகளில் பல்வேறு மாற்றங்களை அவ்வப்போது ஏற்படுத்தியது. விரிவாக்க சேவையின் திறன் மேம்பாட்டிற்கும் நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்குவதற்கும் மட்டுமே முக்கியத்துவம் அளித்த வேளாண் விரிவாக்க முறை, தற்போது ஆய்வாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களை தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்துவதிலும் பங்களிப்பு விரிவாக்க அணுகுமுறைகள்மூலம் இவர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதிலும் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

பல்வேறு சமூக-பொருளாதார சூழலில் பயிர் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யவும், பயிர் சாகுபடி திட்டங்களில் விவசாயிகளின் பங்களிப்பினை ஊக்குவிக்கவும், மண் ஆய்வுகூடங்கள், உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை சேமிப்புக் கிடங்குகள், அரசு விதைப் பண்ணைகள், உயிர் உர உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள், அங்கக உர பரிசோதனை ஆய்வகங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள், நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம், உழவர் மையங்கள், உழவர் பயிற்சி நிலையங்கள், நீர் மேலாண்மை

[2017 ஜூலை 5

பயிற்சி நிலையம், மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் போன்ற உட்கட்டமைப்புகளை துறை ஏற்படுத்தியுள்ளது. விரிவாக்க சேவை மையங்களாக மட்டுமன்றி வேளாண் தகவல் மையங்களாகவும் செயல்படும் இம்மையங்கள், புதிய தொழில்நுட்பங்களை கிராம அளவில் பரவலாக்கம் செய்வதிலும், வேளாண் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும், முக்கிய இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதிலும், பயிர் உற்பத்தித்திறன் மற்றும் இடுபொருள் பயன்பாட்டுத்திறனை உயர்த்துவதிலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் வருமானத்தை அதிகரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### 1.13.1 வேளாண் இடுபொருட்களுக்கான உற்பத்தி மையங்கள்

“தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை” என்ற வலிமையான விதை அமைப்பு, உற்பத்தியை அதிகரிக்க புதிய இரகங்களின் விதை உற்பத்தியை பெருக்குதல், பாரம்பரியமிக்க இரக விதைகளையும் பாதுகாத்து அதிகளவில் உற்பத்தி செய்தல், சிறு நிலவுடைமைகளுக்கும் ஏற்ற நீடித்த நிலையான விதை உற்பத்தி முறையை உருவாக்குதல், விதை உற்பத்தி, சுத்திகரிப்பு மற்றும் சேமிப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், விதைகள் சம்பந்தமான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் தரமான விதை / நடவுப் பொருட்களை உரிய நேரத்தில் மாநிலம் முழுவதும் ஒரே விலையில் கிடைப்பதை உறுதி செய்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

“தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை”-யின்கீழ் 41 அரசு விதைப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விதைப்பண்ணைகள் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க, உயர்விளைச்சல் இரக விதை / நடவுப் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்து உரிய நேரத்தில் போதுமான அளவில் கிடைப்பதை உறுதி செய்வதோடு செயல்விளக்கங்கள்மூலம் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்யும் மாதிரி பண்ணைகளாகவும் செயல்பட்டு வருகின்றன.



2017 ஜூலை 5]

2017-18 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.30 கோடி செலவில் அரசு விதைப்பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றுப்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.18: விதை உற்பத்தி மையங்கள்**

**அட்டவணை 1.18(அ): மாநில அரசு விதைப்பண்ணைகள்**

| வ. எண் | மாவட்டம் | அரசு விதைப்பண்ணை | மொத்த பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | பஞ்சுபேட்டை | 58.76 |
| 2. | திருவள்ளூர் | கொளந்தலூர் | 50.72 |
| 3. | கடலூர் | மிராலூர் | 46.98 |
| 4. | | வண்டுராயன்பட்டு | 50.99 |
| 5. | விழுப்புரம் | காகுப்பம் | 31.60 |
| 6. | | இருவேல்பட்டு | 50.72 |
| 7. | | வடக்கனேந்தல் | 47.06 |
| 8. | | வானூர் | 60.36 |
| 9. | திருவண்ணாமலை | அத்தியேந்தல் | 14.11 |
| 10. | | வாழவச்சனூர் | 36.00 |
| 11. | சேலம் | டேனிஷ்பேட் | 96.40 |
| 12. | | மேட்டூர் | 57.90 |
| 13. | ஈரோடு | பவானி | 73.61 |
| 14. | | சத்தியமங்கலம் | 41.89 |
| 15. | தருமபுரி | பாப்பாரப்பட்டி | 14.80 |
| 16. | திருப்பூர் | பொங்கலூர் | 39.05 |
| 17. | | பாப்பான்குளம் | 26.88 |
| 18. | புதுக்கோட்டை | அண்ணாபண்ணை | 601.95 |
| 19. | திருச்சி | புதூர்பாளையம் | 75.97 |
| 20. | | நெய்குப்பைப்புதூர் | 38.57 |

| வ. எண் | மாவட்டம் | அரசு விதைப்பண்ணை | மொத்த பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 21. | கரூர் | இனுங்கூர் | 205.44 |
| 22. | தஞ்சாவூர் | சாக்கோட்டை | 72.18 |
| 23. | நாகப்பட்டினம் | நாகமங்கலம் | 63.91 |
| 24. | | திருக்கடையூர் | 45.74 |
| 25. | திருவாரூர் | கீரந்தி | 55.70 |
| 26. | | காஞ்சிகுடிகாடு | 53.02 |
| 27. | | தேவாம்பாள்பட்டினம் | 92.72 |
| 28. | | நெடும்பலம் | 63.73 |
| 29. | | மூங்கில்குடி | 47.63 |
| 30. | மதுரை | விநாயகபுரம் | 45.52 |
| 31. | தேனி | கீழக்கூடலூர் | 47.86 |
| 32. | விருதுநகர் | தேவதானம் | 52.07 |
| 33. | திருநெல்வேலி | கரையிருப்பு | 83.59 |
| 34. | கன்னியாகுமரி | திருப்பதிசாரம் | 37.20 |
| மொத்தம் | | | 2,480.63 |

**அட்டவணை 1.18(ஆ): மாநில எண்ணெய்வித்து விதைப் பண்ணைகள்**

| வ. எண் | மாவட்டம் | அரசு விதைப் பண்ணை விவரம் | மொத்த பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 35. | காஞ்சிபுரம் | முசரவாக்கம் | 154.95 |
| 36. | கிருஷ்ணகிரி | அகசிபள்ளி | 16.69 |
| 37. | புதுக்கோட்டை | வெள்ளாளவிடுதி | 657.35 |
| 38. | வேலூர் | நவ்லாக் | 66.16 |
| 39. | ஈரோடு | பவானிசாகர் | 28.39 |
| 40. | கடலூர் | நெய்வேலி (டான்காப்) | 301.01 |
| மொத்தம் | | | 1,224.55 |





**அட்டவணை 1.18(இ): மாநில பயறு வகை விதைப் பெருக்கு பண்ணை**

| வ. எண் | மாவட்டம் | அரசு விதைப் பண்ணை விவரம் | மொத்த பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 41 | புதுக்கோட்டை | வம்பன் | 475.00 |
| மொத்த பரப்பளவு (41 மா.வி.ப) | | | 4,180.18 |

அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகள், ஆண்டுக்கு 30,000 மெ.டன் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 16 பெரிய, 37 நடுத்தர மற்றும் 63 சிறிய நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன.

**அட்டவணை 1.19: விதை சுத்திகரிப்பு நிலையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 1. | காஞ்சிபுரம் | 1 | 1 | 4 | 6 |
| 2. | திருவள்ளூர் | 1 | 1 | 3 | 5 |
| 3. | கடலூர் | - | - | 3 | 3 |
| 4. | விழுப்புரம் | 2 | 3 | 4 | 9 |
| 5. | வேலூர் | - | 1 | 3 | 4 |
| 6. | திருவண்ணாமலை | 2 | 1 | 5 | 8 |
| 7. | சேலம் | 1 | 1 | 1 | 3 |
| 8. | நாமக்கல் | - | 1 | 2 | 3 |
| 9. | தருமபுரி | - | 1 | 2 | 3 |
| 10. | கிருஷ்ணகிரி | - | 2 | 1 | 3 |
| 11. | கோயம்புத்தூர் | - | 1 | 1 | 2 |
| 12. | திருப்பூர் | - | 1 | 2 | 3 |
| 13. | ஈரோடு | 1 | 1 | 1 | 3 |
| 14. | திருச்சிராப்பள்ளி | - | 2 | 3 | 5 |
| 15. | பெரம்பலூர் | - | - | 1 | 1 |

[2017 ஜூலை 5

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 16. | அரியலூர் | - | 2 | 1 | 3 |
| 17. | கரூர் | 1 | 1 | - | 2 |
| 18. | புதுக்கோட்டை | 1 | 1 | 1 | 3 |
| 19. | தஞ்சாவூர் | 2 | 4 | 1 | 7 |
| 20. | நாகப்பட்டினம் | - | 2 | 5 | 7 |
| 21. | திருவாரூர் | 1 | 2 | 3 | 6 |
| 22. | மதுரை | 1 | 1 | 1 | 3 |
| 23. | தேனி | - | - | 2 | 2 |
| 24. | திண்டுக்கல் | 1 | - | - | 1 |
| 25. | இராமநாதபுரம் | - | 2 | 1 | 3 |
| 26. | சிவகங்கை | - | 1 | 2 | 3 |
| 27. | விருதுநகர் | - | 1 | 4 | 5 |
| 28. | திருநெல்வேலி | - | 1 | 4 | 5 |
| 29. | தூத்துக்குடி | 1 | 1 | 1 | 3 |
| 30. | கன்னியாகுமரி | - | 1 | 1 | 2 |
| மொத்தம் | | 16 | 37 | 63 | 116 |

மேலும், தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக, 23 அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளும் 16 தென்னை ஒட்டு மையங்களும் இயங்கி வருகின்றன.

**அட்டவணை 1.20: அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் தென்னை ஒட்டு மையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | தென்னை ஒட்டு மையங்கள் | |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 1 | பிச்சிவாக்கம் | | |
| 2. | திருவள்ளூர் | 2 | மாதவரம் | 1 | மாதவரம் |
| 3. | கடலூர் | 3 | நெய்வேலி | | |
| 4. | விழுப்புரம் | | | 2 | மரக்காணம் |
| 5. | வேலூர் | 4 | நவ்லாக் | 3 | நவ்லாக் |



2017 ஜூலை 5]

| வ. எண் | மாவட்டம் | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | தென்னை ஒட்டு மையங்கள் | |
|---|---|---|---|---|---|
| 6. | திருவண்ணாமலை | 5 | வாழவச்சனூர் | | |
| 7. | சேலம் | 6 | டேனிஷ் பேட்டை | 4 | சுக்கம்பட்டி |
| 8. | கிருஷ்ணகிரி | 7 | பி.ஜி.புதூர் | 5 | காவேரிபட்டினம் |
| 9. | கோயம்பத்தூர் | 8 | ஆழியார் நகர் | 6 | எஸ்.ஜி.பாளையம் |
| 10. | ஈரோடு | 9 | பவானிசாகர் | 7 | அய்யம்பாளையம் |
| 11. | திருச்சி | 10 | திருவரங்கம் | 8 | திருவரங்கம் |
| 12. | புதுக்கோட்டை | 11 | வெள்ளாளவிடுதி | | |
| 13. | தஞ்சாவூர் | 12 | பட்டுக்கோட்டை | 9 | பட்டுக்கோட்டை |
| 14. | நாகப்பட்டினம் | 13 | மல்லியம் | | |
| 15. | தேனி | 14 | வைகை அணை | 10 | போடிநாயக்கனூர் |
| 16. | இராமநாதபுரம் | 15 | உச்சிப்புளி | 11 | உச்சிப்புளி |
| | | 16 | தேவிபட்டினம் | | |
| 17. | சிவகங்கை | 17 | சதுர்வேதிமங்கலம் | 12 | லாடநேந்தல் |
| 18. | விருதுநகர் | 18 | தேவதானம் | 13 | தேவதானம் |
| 19. | திருநெல்வேலி | 19 | செங்கோட்டை | 14 | வடகரை |
| 20 | வடகரை | | | | |
| 20. | தூத்துக்குடி | 21 | கிள்ளிகுளம் | 15 | உடன்குடி |
| 21. | கன்னியாகுமரி | 22 | புத்தளம் | 16 | அகஸ்தீஸ்வரம் |
| 22. | திருவாரூர் | 23 | வடுவூர் | | |

பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் விளைபொருட்களின் தரத்தை அதிகரிக்கவல்ல நுண்ணூட்ட உரங்களை உரிய நேரத்தில் வழங்குவதையும் அரசு உறுதி செய்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டுதோறும் 14 வகையான அறிவிக்கை செய்யப்பட்ட நுண்ணூட்டச்சத்துக் கலவைகள் உற்பத்தி செய்யும் 2,400 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட அரசு நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம் இயங்கி வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில், 2,357 மெ.டன் நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு, அம்மா சேவை மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில், 2,400 மெ.டன் நுண்ணூட்டக்கலவை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2017 ஜூலை 5

அளவுக்கு அதிகமாக இரசாயன உரங்களை பயன்படுத்துவதால், மண்ணில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைவை ஈடுசெய்ய, அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற மூன்று வகையான உயிர் உரங்கள், துறையின் 22 உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலம் அரசு உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகிறது. ஆண்டுக்கு 3,000 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட இம்மையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் திட உயிர் உரங்கள், 200 கிராம் உயிர் உர பொட்டலங்களாக விநியோகிக்கப்படுகின்றன. மேலும், நீண்ட நிலைத்திறன் (12 முதல் 24 மாதங்கள் வரை) கொண்ட திரவ உயிர் உரங்கள் ஆண்டுக்கு 6 இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட 12 திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், 2,996 மெ.டன் திட உயிர் உரங்களும் 2.71 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்களும் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன.

2017-18 ஆம் ஆண்டில், 3,000 மெ.டன் திட உயிர் உரங்களும் 6 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்களும் தயாரித்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திட மற்றும் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் மையங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 1.21: உயிர் உர மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | உயிர் உர உற்பத்தி மையங்கள் | | திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் | |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 1 | செங்கல் பட்டு | | |
| 2. | கடலூர் | 2 | கடலூர் | 1 | கடலூர் |
| 3. | திருவண்ணாமலை | 3 | போளூர் | | |
| 4. | சேலம் | 4 | சேலம் | 2 | சேலம் |
| 5. | தருமபுரி | 5 | பாலக்கோடு | | |
| 6. | திருப்பூர் | 6 | அவினாசி | | |
| 7. | ஈரோடு | 7 | பவானி | | |
| 8. | திருச்சிராப்பள்ளி | 8 | திருச்சிராப்பள்ளி | | |
| 9. | புதுக்கோட்டை | 9 | குடுமியான்மலை | 3 | குடுமியான்மலை |
| 10. | தஞ்சாவூர் | 10 | சாக்கோட்டை | 4 | சாக்கோட்டை |
| 11. | திருவாரூர் | 11 | நீடாமங்கலம் | | |
| 12. | தேனி | 12 | உத்தம பாளையம் | | |
| 13. | இராமநாதபுரம் | 13 | இராமநாதபுரம் | 5 | இராமநாதபுரம் |
| 14. | திருநெல்வேலி | 14 | தென்காசி | | |
| 15. | தூத்துக்குடி | 15 | தூத்துக்குடி | | |
| 16. | திருவள்ளூர் | | | 6 | புழல் |
| 17. | விழுப்புரம் | | | 7 | முகையூர் |
| 18. | வேலூர் | | | 8 | குடியாத்தம் |
| 19. | அரியலூர் | | | 9 | ஜெயங்கொண்டம் |
| 20. | மதுரை | | | 10 | திருமங்கலம் |
| 21. | திண்டுக்கல் | | | 11 | பழனி |
| 22. | சிவகங்கை | | | 12 | மானாமதுரை |



2017 ஜூலை 5]

நன்மை செய்யும் உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கிடையே உள்ள தொடர்பு பயிரின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். எனவே, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் மூலம் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் அங்ககப்பயிர் நல மேலாண்மையை வலுப்படுத்த அரசு தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது. உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்ய 10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2017 ஜூலை 5

## அட்டவணை 1.22: உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள்

| வ. எண் | மாவட்டம் | உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம்/ ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் | ஒட்டுண்ணி உற்பத்தி மையம் | |
|---|---|---|---|---|
| | | | கரும்பு | தென்னை |
| 1. | காஞ்சிபுரம் | பஞ்சுப்பேட்டை (ஒ.ப.பா மையம்) | | செங்கல்பட்டு |
| 2. | திருவள்ளூர் | | | புட்லூர் |
| 3. | கடலூர் | | விருத்தாசலம் | கடலூர் |
| 4. | விழுப்புரம் | விழுப்புரம் | விழுப்புரம் | |
| 5. | வேலூர் | | | மேலாளத்தூர் வாணியம்பாடி நாட்ராம்பள்ளி (திருப்பத்தூர்) |
| 6. | சேலம் | சீலநாயக்கன்பட்டி | | சுக்கம்பட்டி |
| 7. | நாமக்கல் | நாமக்கல் | மோகனூர் | பரமத்திவேலூர் |
| 8. | தருமபுரி | பாப்பாரப்பட்டி | பாப்பாரப்பட்டி | தருமபுரி |
| 9. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | | ஆழியார்நகர் |
| 10. | திருப்பூர் | | உடுமலைப் பேட்டை | |
| 11. | ஈரோடு | பவானி | கோபி | கோபி |
| 12. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | | திருச்சிராப்பள்ளி |
| 13. | தஞ்சாவூர் | காட்டுத்தோட்டம் | தஞ்சாவூர் | காட்டுத்தோட்டம் |
| 14. | மதுரை | விநாயகபுரம் விநாயகபுரம்(ஒ.ப.பா மையம்) | | மேலூர் |
| 15. | இராமநாதபுரம் | | | உச்சிப்புளி |
| 16. | சிவகங்கை | | | எஸ்.வி.மங்கலம் |
| 17. | விருதுநகர் | | | தேவதானம் |
| 18. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | | செங்கோட்டை |
| 19. | தூத்துக்குடி | | | உடன்குடி |
| 20. | கன்னியாகுமரி | | | பூதப்பாண்டி |



2017 ஜூலை 5]

வேளாண் விரிவாக்க சேவை மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 1.23: உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்

| உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மையங்கள் (எண்கள்) | கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் மற்றும் நோய்கள் |
|---|---|---|
| டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி) | 19 | கரும்பு இடைக்கணு புழு |
| பெத்திலிட், பிரக்கோனிட் (புழு ஒட்டுண்ணிகள்), யூலோபிட் (கூட்டுப்புழு ஒட்டுண்ணி) | 12 | தென்னை கருந்தலைப் புழு |
| பச்சை நிற மஸ்கார்டின் பூஞ்சாணம் (மெட்டாரைசியம்) | 2 | தென்னை காண்டாமிருக வண்டு |
| என்.பி.வி. (நியூக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ்) | 12 | நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு, புரோடீனியா மற்றும் பருத்தி காய்ப்புழு |
| உயிரியல் பூஞ்சாணக் கொல்லிகள் -சூடோமோனாஸ், ட்ரைகோடெர்மா விரிடி | 12 | பருத்தி, பயறுவகைகள் மற்றும் நெற்பயிரில் ஏற்படும் நோய்கள் |

[2017 ஜூலை 5

### 1.13.2 வேளாண் தகவல் பரிமாற்ற மையங்கள்

வேளாண்மையில் நிலையான ஒட்டுமொத்த வளர்ச்சியை துரிதமாக அடைய தமிழக அரசு, உயர்தர தகவல் பரவலாக்க மையங்களை நிறுவியுள்ளது. திட்டமிடுதல், தொழில்நுட்பங்களை தெரிவு செய்தல், கொள்கை அளவில் மாற்றம் ஏற்படுத்துதல், நவீன தொழில்நுட்பங்கள் குறித்த தகவல் பரிமாற்றம் செய்தல், விவசாயிகளை இலாபகரமான விளைபொருள் விற்பனை சந்தைகளுடன் இணைத்தல், உற்பத்தியாளர் / நுகர்வோர் குழுக்கள் அமைத்தல் மற்றும் உற்பத்தியாளர்களை பரவலான சேவை இணையங்களுடன் இணைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதோடு முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள், பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவற்றை இருப்பு வைத்து விநியோகிக்கவும், விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து ஆலோசனைகளை வழங்கவும் ஒருங்கிணைப்பு மையங்களாக 880 அம்மா சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவற்றுள் 146 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 1.24: அம்மா சேவை மையங்கள்**

| மாவட்டம் | வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் | துணை வேளாண்மை விரிவாக்க மையம் | மொத்தம் |
|---|---|---|---|
| காஞ்சிபுரம் | 13 | 16 | 29 |
| திருவள்ளூர் | 14 | 21 | 35 |
| கடலூர் | 13 | 17 | 30 |
| விழுப்புரம் | 21 | 27 | 48 |
| வேலூர் | 20 | 23 | 43 |
| திருவண்ணாமலை | 17 | 24 | 41 |
| சேலம் | 20 | 11 | 31 |
| நாமக்கல் | 15 | 17 | 32 |
| தருமபுரி | 8 | 8 | 16 |



2017 ஜூலை 5]

| மாவட்டம் | வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் | துணை வேளாண்மை விரிவாக்க மையம் | மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 10 | 7 | 17 |
| கோயம்புத்தூர் | 12 | 14 | 26 |
| திருப்பூர் | 13 | 13 | 26 |
| ஈரோடு | 14 | 21 | 35 |
| திருச்சி | 14 | 10 | 24 |
| பெரம்பலூர் | 4 | 3 | 7 |
| அரியலூர் | 6 | 3 | 9 |
| கரூர் | 8 | 4 | 12 |
| புதுக்கோட்டை | 13 | 20 | 33 |
| தஞ்சாவூர் | 14 | 47 | 61 |
| நாகப்பட்டினம் | 11 | 33 | 44 |
| திருவாரூர் | 10 | 32 | 42 |
| மதுரை | 13 | 19 | 32 |
| தேனி | 8 | 13 | 21 |
| திண்டுக்கல் | 13 | 15 | 28 |
| இராமநாதபுரம் | 11 | 6 | 17 |
| சிவகங்கை | 12 | 9 | 21 |
| விருதுநகர் | 11 | 5 | 16 |
| திருநெல்வேலி | 19 | 31 | 50 |
| தூத்துக்குடி | 12 | 16 | 28 |
| கன்னியாகுமரி | 10 | 11 | 21 |
| நீலகிரி | 4 | 1 | 5 |
| மொத்தம் | 383497880 | | |

[2017 ஜூலை 5

### 1.14 வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பம்

வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த உறுதி பூண்டுள்ள அரசு, வேளாண்மையை தொழில்மயமாகவும் பண்ணை செயல்பாடுகளை வணிக ரீதியாகவும் செயல்படுத்துவதோடு விவசாயிகள் குறித்த நேரத்தில் உரிய முடிவுகள் எடுக்க தகவல் தொழில்நுட்ப கருவிகளை உருவாக்கியுள்ளது.

### 1.14.1 தேசிய மின் ஆளுமை திட்டம்-வேளாண்மை [National e-governance Plan-Agriculture (NeGP-A)]

மின்னணு வேளாண்மையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. துறையால் வகுக்கப்பட்ட சிறப்பான கொள்கைகள், ஒரு முன்மாதிரியான வேளாண்மை மேலாண்மை மற்றும் தகவல் முறை உருவாக்க வழிவகுத்தது. இத்தகவல் தொழில்நுட்பமுறையில், தமிழ்நாட்டிலுள்ள 68 இலட்சம் விவசாயிகளின் அடிப்படைத் தகவல்களை சேகரித்தல், உணவு தானிய உற்பத்தி, களப்பணியாளர்களின் குழு சார்ந்த நிரந்தரப் பயணத் திட்டம், திட்ட முன்னேற்றம், உழவர் சந்தை, குளிர்பதன கிட்டங்கி மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் செயல்பாடுகளை கண்காணித்தல், அரசு மற்றும் தனியார் துறைகளில் விதை மற்றும் உரம் இருப்பு விவரங்களை நிகழ் நேரத்தில் விவசாயிகள் அறிந்து கொள்ளச் செய்தல், விதை உற்பத்தி மற்றும் சான்றளிப்பு முறைகளை தானியங்கு மயமாக்குதல், இணைய வழி பட்டியலிடுதல், நுண்ணீர்ப் பாசன தகவல் மேலாண்மை முறைமூலம் விவசாயிகள் தாமாகவே பயன்பெற பதிவு செய்தல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் செயல்பாடுகளை தானியங்குமயமாக்குதல் போன்றவற்றுக்காக பல்வேறு மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசால் உருவாக்கப்பட்ட 'கிசான் சுவிதா' என்ற கைபேசி செயலி தமிழாக்கம் செய்யப்பட்டு, வானிலை முன்னறிவிப்பு; விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் பண்ணை இயந்திரங்களுக்கான விற்பனை கிளைகள்; சந்தை நிலை; பயிர் பாதுகாப்பு; வேளாண் ஆலோசனைகள் மற்றும் உழவர் தொடர்பு மையம் குறித்தான அனைத்து தகவல்களையும் விவசாயிகள் உடனடியாக பெறும் அளவிற்கு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.



2017 ஜூலை 5]

2016-17 ஆம் ஆண்டில், 60:40 என்ற மத்திய-மாநில அரசுகளின் நிதி பங்களிப்பு விகிதத்தில், ரூ.2.47 கோடி செலவில், மாநில திட்ட கண்காணிப்பு மையம் ஏற்படுத்தியதோடு, வட்டார, மாவட்ட மற்றும் மாநில தலைமையிடங்களிலும் பயிற்சி மையங்களிலும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

தடையில்லா தகவல் பரிமாற்றத்தின்மூலம் பெறப்பட்ட விவரங்களை தொகுக்கவும், ஆவணப்படுத்தவும், கணினி மென்பொருட்களை உருவாக்கவும், கணினி உபகரணங்களை இயக்கவும், இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, 1979 ஆம் ஆண்டில், வேளாண்மைத் துறையிலிருந்து தனித்து உருவாக்கப்பட்டு, 27-11-2015 முதல் தனி பணி விதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

தோட்டக்கலையானது நாட்டின் பொருளாதாரத்தின் ஒருங்கிணைந்த மற்றும் முக்கிய அங்கமாக விளங்குகிறது. நாட்டின் மொத்த வேளாண் உற்பத்தியில், தோட்டக்கலை பயிர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. உயர் ஏற்றுமதி மதிப்பு, குறைந்த பரப்பில் அதிக உற்பத்தி மற்றும் வருவாய், பண்ணை நிலங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல், தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல், ஊரக தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் மகளிருக்கு மலர் சாகுபடி, விதை உற்பத்தி, காளான் உற்பத்தி மற்றும் நாற்றங்கால் தயாரித்தல் போன்ற வேலைவாய்ப்பினை வழங்குவதன்மூலம் மகளிர் மேம்பாட்டினை உறுதி செய்தல் ஆகியவற்றினால் தோட்டக்கலையின் முக்கியத்துவம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் தோட்டக்கலை முக்கிய பங்காற்றுகிறது.

தேசிய அளவில், தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவில் 6 சதவீதத்துடன், நாட்டின் தோட்டக்கலை உற்பத்தியில் 7

சதவீத பங்களிப்புடன், தமிழ்நாடு முன்னோடி தோட்டக்கலை மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகையின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 2 இலட்சத்து 95 ஆயிரம் எக்டர் பரப்பளவில் பழப்பயிர்களும், 3 இலட்சத்து 14 ஆயிரம் எக்டர் பரப்பளவில் காய்கறி பயிர்களும் பயிர் செய்யப்படுகின்றன.

## 2.1 தேசிய அளவில் தோட்டக்கலைப் பயிர்களில் தமிழகத்தின் நிலை

தமிழக அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் காரணமாக தமிழகம் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனில் தேசிய அளவில் முன்னிலையில் உள்ளது.

வாழை (1.18 இலட்சம் எக்டர்), மரவள்ளி (1.21 இலட்சம் எக்டர்), கோகோ (24,000 எக்டர்) மற்றும் மலர்கள் (55,000 எக்டர்) சாகுபடி பரப்பளவில் முதலிடம் வகிக்கிறது. மேலும், வாழை (56.50 இலட்சம் மெ.டன்), மரவள்ளி (49.76 இலட்சம் மெ.டன்), மலைத்தோட்டப்பயிர்கள் (48.42 இலட்சம் மெ.டன்) மற்றும் உதிரிப் பூக்கள் (3.44 இலட்சம் மெ.டன்) உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளது. உற்பத்தித்திறனில் பப்பாளி (198.70 மெ.டன்/எக்டர்), மாதுளை (32.7 மெ.டன்/எக்டர்), சப்போட்டா (32.80 மெ.டன்/எக்டர்), காய்கறிகள் (30.00 மெ.டன்/எக்டர்) மற்றும் மரவள்ளி (41.30 மெ.டன்/எக்டர்) ஆகிய பயிர்களில் நாட்டின் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

நறுமணப்பயிர்கள் (1.62 இலட்சம் மெ.டன்) உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழகம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

திராட்சை (3,000 எக்டர்), மலைப்பயிர்கள் (6.35 இலட்சம் எக்டர்) மற்றும் மிளகு (4,000 எக்டர்) ஆகிய பயிர்களின் சாகுபடி பரப்பளவில் தமிழகம் தேசிய அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது.





**அட்டவணை - 2.1: தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பளவு, உற்பத்தி, உற்பத்தித் திறன் (2016-17 மற்றும் 2017-18)**

(பரப்பு: இலட்சம் எக்டர், உற்பத்தி: இலட்சம் மெட்ரிக் டன், உற்பத்தித் திறன்: மெட்ரிக் டன் / எக்டர்)

| வ எண் | பயிர் | 2016-17 (மதிப்பீடு) | | | 2017-18 (திட்டமிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1. | பழங்கள் | 2.95 | 60.08 | 20.37 | 3.13 | 64.07 | 20.47 |
| 2. | காய்கறிகள் | 3.14 | 88.83 | 28.28 | 3.37 | 96.43 | 28.61 |
| 3. | நறுமணப் பயிர்கள் | 1.15 | 8.23 | 7.15 | 1.22 | 8.77 | 7.19 |
| 4. | மலைப் பயிர்கள் | 7.15 | 13.00 | 1.82 | 7.57 | 13.87 | 1.83 |
| 5. | மூலிகை, வாசனை திரவியப் பயிர்கள் | 0.11 | 1.39 | 12.64 | 0.11 | 1.41 | 12.81 |
| 6. | மலர்கள் | 0.26 | 3.41 | 13.12 | 0.27 | 3.67 | 13.59 |
| | மொத்தம் | 14.76 | 174.94 | 11.85 | 15.67 | 188.22 | 12.01 |

“வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக பெருக்குவதே தமிழக அரசின் முக்கிய கொள்கையாகும்.” தோட்டக்கலைப் பயிர்களில் பாரம்பரிய இரகங்கள் சாகுபடியை ஊக்குவித்தல், உயர் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை பின்பற்றுதல், தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன்மூலம் தோட்டக்கலையை இலாபகரமான தொழிலாக உயர்த்துதல், பண்ணை இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறுவடை பின்செய் நேர்த்தி ஆகியவை அரசின் கொள்கைகளை அடைவதற்கு வழிவகுக்கின்றன.

தோட்டக்கலைப் பயிர் பரப்பு விரிவாக்கத்திற்கு வீரிய ரக விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகளைப் பயன்படுத்துதல், உயர் தொழில்நுட்ப சாகுபடி, அடர் நடவு சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சூழலில் அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப்

[2017 ஜூலை 5

பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல், நுண்ணீர் பாசன உபயோகம், தேனீ வளர்ப்பின்மூலம் மகரந்த சேர்க்கையை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரித்தல், ஒருங்கிணைந்த உரம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பண்ணை இயந்திரமயமாக்கம் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறுவடை பின்செய் நேர்த்தி ஆகியவை தோட்டக்கலைத் துறையின் உத்திகளாகும்.

## 2.2 தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் நிலை

தேசிய அளவில், தோட்டக்கலை பயிர்களை அதிகளவு உற்பத்தி செய்யும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவை தற்போதுள்ள 34 இலட்சம் ஏக்கர் என்ற அளவிலிருந்து, 2017-18 ஆம் ஆண்டில் 39 இலட்சம் ஏக்கராக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.1 காய்கறிகள்

தமிழகத்தில் வருடத்திற்கு சராசரியாக 77.72 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அகில இந்திய அளவில் உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு அடுத்த இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. மரவள்ளி சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. மாநிலத்தில் தக்காளி, கத்தரி, வெண்டை, மரவள்ளி, வெங்காயம், முருங்கை, தர்பூசணி, கீரைவகைகள், மலைக்காய்கறிகள் மற்றும் பூசணி வகைக் காய்கறிகள் அதிகளவில் பயிர் செய்யப்படுகின்றன. நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், காய்கறிகள் பரப்பளவினை தற்போதைய நிலையான 3.14 இலட்சம் எக்டரிலிருந்து 3.37 இலட்சம் எக்டராக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடி செலவினத்திற்கு மானியம் அளிப்பதன்மூலம் வீரிய ஒட்டுரக காய்கறிகள் சாகுபடி ஊக்குவிக்கப்படவுள்ளது. பாரம்பரியவகை காய்கறிகளை பாதுகாத்தல் மற்றும் வெங்காய வளர்ச்சித் திட்டத்தின்மூலம் வெங்காய சாகுபடி ஆகியவற்றிற்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும். அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், வீரிய ஒட்டுரக காய்கறி நாற்றுகளை குழித்தட்டுகளில் வளர்த்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதன்மூலம் காய்கறிகள் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்.



2017 ஜூலை 5]

**அட்டவணை 2.2: காய்கறி பயிர்களை அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மரவள்ளி | 87,924 | நாமக்கல், சேலம், விழுப்புரம், தருமபுரி மற்றும் ஈரோடு |
| 2. | வெங்காயம் | 28,105 | பெரம்பலூர், திருச்சி, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் நாமக்கல் |
| 3. | தக்காளி | 23,954 | கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி, தேனி மற்றும் கோயம்புத்தூர். |
| 4. | முருங்கை | 12,491 | தேனி, திண்டுக்கல், அரியலூர், தூத்துக்குடி மற்றும் திருப்பூர் |
| 5. | கத்தரி | 11,016 | சேலம், கிருஷ்ணகிரி, வேலூர், திண்டுக்கல் மற்றும் தருமபுரி |
| 6. | வெண்டை | 8,925 | சேலம், வேலூர், திண்டுக்கல், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை |
| 7. | தர்பூசணி | 5,623 | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, ஈரோடு மற்றும் அரியலூர். |
| 8. | உருளை கிழங்கு | 4,737 | நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு |
| 9. | கேரட் | 3,592 | நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தேனி |
| 10. | பாகற்காய் | 1,877 | கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், கடலூர், கிருஷ்ணகிரி, திருவாரூர், தூத்துக்குடி மற்றும் தேனி |

[2017 ஜூலை 5

### 2.2.2 பழப்பயிர்கள்

பழங்கள் உற்பத்தியில் உத்திரபிரேதசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களுக்கு அடுத்து மூன்றாமிடத்தில் தமிழகம் உள்ளது. தேசிய அளவில், வாழை சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தியில் முதலிடத்திலும், திராட்சை உற்பத்தியில் மூன்றாமிடத்திலும் மற்றும் சப்போட்டா உற்பத்தியில் நான்காமிடத்திலும் உள்ளது. நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், பயிர் வாரியான பரப்பு விரிவாக்க திட்டக்கூறுகளான அடர்நடவு சாகுபடி, முக்கனிகள் மேம்பாட்டுத் திட்டம், மலை வாழை மேம்பாடு மற்றும் தேர்வு செய்யப்பட்ட பழங்களின் பரப்பு விரிவாக்கத் திட்டம் முதலியவைமூலம் பழப்பயிர்களின் சாகுபடி பரப்பளவு தற்போதுள்ள 2.95 இலட்சம் எக்டரில் இருந்து 3.13 இலட்சம் எக்டர் வரை அதிகரிக்கப்படும்.

**அட்டவணை 2.3: பழங்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மா | 1,40,367 | கிருஷ்ணகிரி, திண்டுக்கல், வேலூர், திருவள்ளூர், தேனி, தருமபுரி, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் |
| 2. | வாழை | 91,410 | ஈரோடு, தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சி, கன்னியாகுமரி மற்றும் தேனி |
| 3. | எலுமிச்சை | 8,556 | திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, தூத்துக்குடி மற்றும் தேனி |
| 4. | கொய்யா | 8,216 | திண்டுக்கல், மதுரை, விருதுநகர், வேலூர் மற்றும் கடலூர் |
| 5. | நெல்லி | 7,665 | திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் |



2017 ஜூலை 5]

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6. | சப்போட்டா | 6,113 | திண்டுக்கல், வேலூர், விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி |
| 7. | பலா | 2,896 | கடலூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், நாமக்கல் மற்றும் நீலகிரி |
| 8. | திராட்சை | 2,244 | கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் தேனி |
| 9. | பப்பாளி | 1,114 | ஈரோடு, வேலூர், திருப்பூர், தேனி மற்றும் கோயம்புத்தூர் |
| 10. | மாதுளை | 412 | திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் திருநெல்வேலி |

### 2.2.3 மலர்கள்

இந்தியாவிலேயே உதிரி மலர்கள் உற்பத்தியில் முதன்மை உற்பத்தியாளராக தமிழகம் விளங்குகிறது. மலர்களின் சாகுபடி பரப்பளவில் தற்போதைய பரப்பளவான 26,000 எக்டரில் இருந்து, 27,234 எக்டர் வரை அதிகரிக்க உதிரி மலர்கள், கிழங்குவகை மலர்கள் மற்றும் கொய் மலர்கள் சாகுபடிக்கு மானியம் வழங்கப்படும். தரமான, இனத்தூய்மையான நடவுப் பொருட்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**அட்டவணை 2.4: மலர்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மல்லிகை | 10,838 | மதுரை, ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி |
| 2. | சாமந்தி | 2,256 | சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் |

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 3. | சம்பங்கி | 2,166 | திருவண்ணாமலை, ஈரோடு, மதுரை, தருமபுரி மற்றும் திருவள்ளூர் |
| 4. | ரோஜா | 1,809 | கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் மதுரை |
| 5. | கனகாம்பரம் | 492 | தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திண்டுக்கல் மற்றும் கடலூர் |

### 2.2.4 சுவைதாளிதப் பயிர்கள்

தமிழ்நாட்டில் மிளகாய், பூண்டு, இஞ்சி, ஏலக்காய், மிளகு, கிராம்பு, பட்டை, கருவேப்பிலை, கொத்தமல்லி, மஞ்சள், புளி, ஜாதிக்காய் மற்றும் சர்வசுகந்தி ஆகிய அனைத்து வகையான சுவைதாளிதப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. நாட்டின் மொத்த சுவைதாளிதப் பயிர்களின் உற்பத்தியில் 9.4 சதவீத பங்களிப்புடன் நான்காவதாக அதிகளவு உற்பத்தி செய்யும் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

விதை சுவைதாளிதப் பயிர்கள், வேர்த்தண்டு சுவைதாளிதப் பயிர்கள் மற்றும் பல்லாண்டு சுவைதாளிதப் பயிர்கள் ஆகியவை சாகுபடி செய்ய மானியம் வழங்குவதன்மூலம் சுவைதாளிதப் பயிர்கள் சாகுபடி பரப்பளவு, தற்போதுள்ள 1.15 இலட்சம் எக்டர் பரப்பளவிலிருந்து, 1.22 இலட்சம் எக்டர் பரப்பளவாக அதிகரிக்கப்படும்.

**அட்டவணை 2.5: சுவைதாளிதப் பயிர்களை அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்களின் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மிளகாய் | 44,606 | இராமநாதபுரம்,தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் |
| 2. | மஞ்சள் | 26,074 | ஈரோடு, சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் விழுப்புரம் |
| 3. | கொத்தமல்லி | 9,231 | தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், கிருஷ்ணகிரி, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி |
| 4. | மிளகு | 3,997 | திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி, சேலம் மற்றும் கன்னியாகுமரி |
| 5. | கருவேப்பிலை | 2,221 | கோயம்புத்தூர், தூத்துக்குடி, சேலம், திருப்பூர் மற்றும் ஈரோடு |





### 2.2.5 மலைப்பயிர்கள்

மலைப்பயிர்களின் சாகுபடி பரப்பளவு தற்போதுள்ள 7.15 இலட்சம் எக்டரிலிருந்து 7.58 இலட்சம் எக்டராக அதிகரிக்கப்படும். நாட்டின் முந்திரி உற்பத்தியில் தமிழகம் மூன்றாமிடத்தில் உள்ளது. மேலும், அதிகளவு தென்னிந்திய தேயிலை உற்பத்தி தமிழ்நாட்டில் செய்யப்படுகிறது.

முந்திரியில் பரப்பு விரிவாக்கம்/பழைய தோட்டங்களை புதுப்பித்தல் ஆகியன ஊக்குவிக்கப்படும். நாட்டிலேயே முதன்முறையாக 2016-17 ஆம் ஆண்டு முதல் தேயிலை தோட்டங்களுக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் தேயிலை விவசாயிகளின் நலனுக்காக மலைப்பயிர்களுக்கான வருவாய் காப்பீட்டுத் திட்டம் முன்னோடியாக நீலகிரி மாவட்டம் குன்னூரில் செயல்படுத்தப்படவுள்ளது.

**அட்டவணை 2.6: மலைப்பயிர்களை அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்கள் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | முந்திரி | 89,021 | அரியலூர், கடலூர், புதுக்கோட்டை, விழுப்புரம், தேனி, திருநெல்வேலி மற்றும் சிவகங்கை |

[2017 ஜூலை 5

| வ. எண் | பயிர்கள் விவரம் | பரப்பு (எக்டர்) | அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 2. | தேயிலை | 69,679 | நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் |
| 3. | காபி | 31,536 | திண்டுக்கல், நீலகிரி, சேலம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் |
| 4. | பாக்கு | 6,732 | சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், நீலகிரி, ஈரோடு, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி |
| 5. | வெற்றிலை | 1,826 | நாமக்கல், தஞ்சாவூர், கரூர், சேலம், கடலூர் மற்றும் திருச்சி |

**2.3 தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**2.3.1 பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் "துளி நீர் - அதிக பயிர்" என்னும் உட்பிரிவில் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம் (Micro Irrigation scheme under per Drop More Crop component of Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY))**

நுண்ணீர் பாசனம் நீர் பயன்பாட்டுத்திறனை 40 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடிய மேம்படுத்தப்பட்ட நீர் சேமிப்பு மற்றும் மேலாண்மை தொழில்நுட்ப முறையாகும். பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முக்கிய காரணியாக நீர்ப்பாசனம் விளங்குகிறது. தமிழகத்தில் 3 சதவீத நீர் ஆதாரம் மட்டுமே உள்ளதால் பாசன நீரை சிக்கனமாக மற்றும் திறம்பட பயன்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசியம் உள்ளது. நீர்ப்பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பதுடன் உரங்களை பாசன நீர்வழியாக செடியின் வேர் பகுதியில் நேரடியாக இடுவதால், உரம் வீணாகாமல் உரபயன்பாட்டுத் திறனும் அதிகரிக்கிறது. இந்நீர்ப்பாசன முறையினால் களைகளின் வளர்ச்சி குறைவதுடன் பண்ணை தொழிலாளர்கள் தேவையும் குறைகிறது. நுண்ணீர்ப் பாசனத்தின்மூலம் குறிப்பிட்ட அளவு நீரைக் கொண்டு



2017 ஜூலை 5]

பயிர் சாகுபடி பரப்பு அதிகரிப்பதால் உற்பத்தி இருமடங்காக உயர்வதுடன் விவசாயிகளின் வருமானம் மும்மடங்காகிறது.

தமிழகத்தில் நுண்ணீர் பாசனத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதுடன், நாட்டிலேயே தமிழ்நாடு மட்டுமே சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. மத்திய மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற விகித பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2011-12 முதல் 2015-16 வரை), ரூ.873.02 கோடி செலவில், 3,46,685 ஏக்கர் பரப்பளவில், 1,03,342 சிறு/குறு விவசாயிகளும், 41,934 இதர விவசாயிகளும், ஆக மொத்தம் 1,45,276 விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மை பொறியியல் துறையின் மூலம், உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், 2011-12 முதல் 2015-16 வரை, ரூ.110.86 கோடி செலவில், 86,422 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்பாசனம் அமைக்கப்பட்டு, 33,285 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**அட்டவணை 2.7: 2011-12 முதல் 2015-16 வரை நுண்ணீர் பாசனத் திட்ட சாதனை விவரம்**

| வ. எண் | வருடம் | மொத்தம் | | பயனாளிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | | பொருள் (எக்டர்) | நிதி (ரூ. கோடியில்) | சிறு / குறு விவசாயிகள் | இதர விவசாயிகள் | மொத்தம் |
| 1. | 2011-12 | 27,550 | 87.44 | 13,997 | 10,559 | 24,556 |
| 2. | 2012-13 | 26,538 | 135.34 | 23,316 | 12,036 | 35,352 |
| 3. | 2013-14 | 39,780 | 288.25 | 32,634 | 10,553 | 43,187 |
| 4. | 2014-15 | 12,518 | 119.76 | 8,557 | 2,155 | 10,712 |
| 5. | 2015-16 | 32,288 | 242.23 | 24,838 | 6,631 | 31,469 |
| | மொத்தம் | 1,38,674 | 873.02 | 1,03,342 | 41,934 | 1,45,276 |

[2017 ஜூலை 5

இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டு, 1,73,650 ஏக்கர் பரப்பளவில், ரூ.368.98 கோடி நிதியில், 1,08,673 விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டு வருகிறது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், ரூ.803.93 கோடி நிதியில், 3,40,050 ஏக்கர் பரப்பளவில் வேளாண்மை பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை-2.8: நுண்ணீர்ப்பாசனத் திட்டத்தின் 2017-18 ஆம் ஆண்டு செயல்திட்ட விவரம்**

| வ. எண் | பயிர் விவரம் | பொருள் (பரப்பு ஏக்கரில்) | நிதி (ரூ. கோடியில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | மொத்தம் |
| 1. | தோட்டக்கலை பயிர்கள் | 1,62,575 | 135.37 | 259.45 | 394.82 |
| 2. | வேளாண் பயிர்கள் | 1,77,475 | 135.38 | 259.48 | 394.86 |
| | நிருவாக நிதி | 14.25 | 0 | 14.25 | |
| | | 3,40,050 | 285.00 | 518.93 | 803.93 |

## 2.3.2.தேசிய தோட்டக்கலை இயக்கம் [National Horticulture Mission (NHM)]

தமிழகத்தில், தோட்டக்கலையில் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2005-06 ஆம் ஆண்டு முதல் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலை பயிர் சாகுபடியை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதன் மூலம் குறைந்த பரப்பளவில் அதிக வருமானத்தை பெறச் செய்வதே தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். உயர் சாகுபடி தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் மூலம் காய்கறிகள், பழப்பயிர்கள், சுவைதாளிதப்பயிர்கள், மலர்கள் மற்றும் தோட்டப்பயிர்கள் ஆகிய அதிக இலாபம் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.



2017 ஜூலை 5]

தமிழ்நாட்டில் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, உதகமண்டலம், திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2015-16 ஆம் ஆண்டிலிருந்து மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 விகித நிதி பங்களிப்புடன், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணைத் திட்டமாக தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, ரூ.359.23 கோடி செலவினத்தில் 1.48 இலட்சம் எக்டர் பரப்பளவில் புதிய பரப்பு விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், 20,000 எக்டர் பரப்பளவில் பழைய தோட்டக்கலை புதுப்பித்தல் / கிளை மேலாண்மை, 4 காளான் உற்பத்திக் கூடங்கள், 7 நீர் ஆதாரங்களை உருவாக்குதல், 6,000 எக்டர் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி, 1,000 எக்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு மேலாண்மை, 3,000 எக்டர் பரப்பளவில் அங்கக பண்ணையம் மற்றும் 25,756 தேனீ வளர்ப்பு உபகரணங்கள்மூலம் மகரந்த சேர்க்கையை ஊக்குவித்தல் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த அறுவடை பின்செய் மேலாண்மை மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம், சந்தை தொடர் மேலாண்மை அமைப்பிற்குள் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளை ஈடுபடுத்தி அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைப்பதற்காக, 219 சிப்பம் கட்டும் அறைகள், 292 குறைந்த மதிப்பீட்டிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள், 2 குளிர்பதன சேமிப்பு கிடங்குகள் மற்றும் ஒருங்கிணைந்த குளிர் தொடர் அலகுகள் ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், குறிப்பிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு உற்பத்தி முதல் விற்பனை வரையிலான உயர் தொழில்நுட்ப சாகுபடி உத்திகள் மற்றும் உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ப மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றிற்கான சிறப்புத் திட்டங்கள் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

கடந்த 2016-17 ஆம் ஆண்டில், ரூ.78.55 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், ரூ.91.72 கோடி நிதியில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தினை செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### மகத்துவ மையங்களை உருவாக்குதல் (Centres of Excellence)

உயர் தொழில்நுட்பங்களை செயல்விளக்கப்படுத்துவதன்மூலம் அதிக உற்பத்தித்திறனை எட்டுவதற்காக, மகத்துவ மையங்கள் அமைக்கப்படுகின்றன. தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ், இரண்டு மகத்துவ மையங்கள் இஸ்ரேல் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் கொய்மலர்களுக்கான மகத்துவ மையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் காய்கறி பயிர்களுக்கான மகத்துவ மையமும் முறையே ரூ.8.80 கோடி மற்றும் ரூ.10.18 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு, கொய்மலர் மற்றும் காய்கறி உற்பத்தி நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி மற்றும் செயல்விளக்கம் அளிக்க அமைக்கப்பட்டுள்ளன.

மலைக் காய்கறிகளுக்கான மகத்துவ மையம், நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம் மற்றும் வெப்பமண்டல பழங்களுக்கான மகத்துவ மையம், திருச்சி மாவட்டத்திலும் என இரண்டு மகத்துவ மையங்கள் ரூ.11.00 கோடி நிதியில் அமைக்கப்படவுள்ளன.

### 2.3.3 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் [National Agricultural Development Programme (NADP)]

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டமானது, 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசு பங்களிப்பு திட்டமாகும். 2011-12 முதல் 2015-16 வரை ரூ.231.48 கோடி நிதி செலவில், 10,994 எக்டர் துல்லிய பண்ணையம், 30,879 எக்டர் தோட்டக்கலைப்பயிர்களில் புதிய பரப்பு விரிவாக்கம், 1,160 எக்டர் பந்தல் சாகுபடி, 29 எக்டர் பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி, 700 எக்டர் வாழைத்தார் உறை, 88 எண்கள் மஞ்சள் அவிக்கும் இயந்திரம், 8,688 மரவள்ளி கரணை வெட்டும் கருவி உள்ளிட்ட பயிர் சார்ந்த பண்ணைக் கருவிகள், அரசு தோட்டக்கலை





பண்ணைகள் நவீனமயமாக்கல் மற்றும் புதிய அரசு தோட்டக்கலை பண்ணைகள் உருவாக்குதல் ஆகியவை செயல்படுத்தப்பட்டன.

கடந்த 2016-17 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தித்திறன் பெருக்குத் திட்டம், வெங்காய உற்பத்தி அதிகரிப்புத் திட்டம், பழங்கள் மற்றும் காய்கறிகளில் சூழல் அடிப்படையிலான பூச்சி மேலாண்மைத் திட்டம், தேனீ வளர்ப்புமூலம் உற்பத்தியை அதிகரித்தல், மாடித் தோட்டத்தை ஊக்குவிப்பதற்கான இயக்கம், விவசாயிகளின் தோட்டங்களில் நிழல்வலைக் குடில்களில் குழித்தட்டு முறையில் மஞ்சள் நாற்றுகள் உற்பத்தி செயல்விளக்கம், தமிழகத்தில் நான்கு மாவட்டங்களில் புதிய அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளை அமைத்தல் உள்ளிட்ட திட்டங்கள், திட்டக் கூறுகளை பொறுத்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், ரூ.36.13 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டன.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், புதிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.4. பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம் (Perimetro Vegetable Cluster Development Programme)

பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டமானது, உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே உள்ள விலை இடைவெளியினைக் குறைக்கவும், பெரு நகரங்களில் வசிப்போருக்குத் தேவையான சத்தான, தரமான காய்கறிகளை கிராமங்களிலிருந்து வழங்கவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு, அவர்கள் விளைவித்த காய்கறிக்கு அதிக விலையும், நுகர்வோருக்கு குறைந்த விலையிலும் கிடைக்கப்பெறுகிறது. காய்கறிகளை விவசாயிகளிடமிருந்து நகரங்களுக்கு எடுத்து செல்லும் சந்தை ஒருங்கிணைப்பாளராக விவசாய குழுக்கள் / விவசாய கூட்டமைப்புகள் / கூட்டுறவு சங்கங்கள் / சுய உதவிக் குழுக்கள் / வேலை இல்லா பட்டதாரிகள் / சுய தொழில் முனைவோர் ஆகியோர் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

காய்கறிகள் சாகுபடி, பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி, அறுவடை பின்செய் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல் ஆகிய இனங்கள் இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம், 28 மாவட்டங்களில் தொகுப்பு அணுகுமுறையில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கிழக்கு கடலோர மாவட்டங்கள் ஆகிய 6 தொகுப்புகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.9: தொகுப்பு வாரியாக நிதி ஒதுக்கீடு விவரம்**

| வ. எண் | பகுதி | மாவட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை. | 17.00 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர். | 17.00 |
| 3. | திருச்சி | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் | 12.00 |
| 4. | மதுரை | மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் | 2.55 |
| 5. | சேலம் | சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் | 2.45 |
| 6. | கிழக்கு கடலோர மாவட்டங்கள் | கடலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி | 5.02 |
| | | மொத்தம் | 56.02 |

இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில், அனைத்து தொகுப்புகளிலும், விளைவித்த காய்கறிகளை சந்தைப்படுத்த, அறுவடை பின்செய் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு இனங்களை பிரதானமாகக் கொண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.





### 2.3.5 நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் [National Mission for Sustainable Agriculture (NMSA)]

நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம், அந்தந்தப் பகுதிகளின் சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை கடைபிடித்து வேளாண்மையை நீடித்த நிலையான மற்றும் இலாபகரமான தொழிலாக மாற்றும் உன்னதக் குறிக்கோளை கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மானாவாரி பகுதி மேம்பாடு மற்றும் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய உப திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.3.5.1 மானாவாரி பகுதி மேம்பாடு [Rainfed Area Development (RAD)]

மானாவாரி பகுதி மேம்பாடு ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளான பல அடுக்கு சாகுபடி, பயிர் சுழற்சி, ஊடுபயிர், கலப்பு பயிர் போன்ற சாகுபடி முறைகளை கடைப்பிடிப்பதுடன் இதர செயல்பாடுகளான தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு, வேளாண் காடுகள், தேனீ வளர்ப்பு, மரமல்லாத வனப்பொருட்களைப் பெறுதல் ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து செய்வதன்மூலம் விவசாயிகள் அதிக மற்றும் நிலையான வருமானம் பெறுவதுடன், வறட்சி, வெள்ளம் மற்றும் இதர பேரிடர்களிலிருந்து பாதுகாக்கவும் வழி வகுக்கிறது.

மானாவாரி பகுதி மேம்பாடு, நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் 60:40 என்ற விகிதத்தில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

கடந்த 2014-15 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, ரூ.16.60 கோடி நிதியில், 5560 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், 159 எண்கள் மண்புழுஉர அலகு, 575 எண்கள் மண்புழு படுக்கை மற்றும் 44,872 ச.மீ. பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி ஆகியவை இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2016-17 ஆம் ஆண்டு, தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி மற்றும் மண்புழு உர உற்பத்தி ஆகிய திட்டக்கூறுகள், அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை,

நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி, தூத்துக்குடி, வேலூர் , விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 22 மாவட்டங்களில், ரூ.11.17 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு 2017-18 ஆம் நிதியாண்டில், ரூ.16.64 கோடி நிதி ஒதுக்கீட்டில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி, மண்புழு உர உற்பத்தி, அறுவடை பின்செய் சேமிப்பு கூடம், பயிற்சி மற்றும் செயல்விளக்கம் ஆகியவற்றைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.5.2 பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (Paramparagat Krishi Vikas Yojana (PKVY))

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், குழு அணுகுமுறையில், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, எளிய சான்றளிப்பு முறையான பங்கேற்பு உத்திரவாத சான்றிதழ்(Participatory Guarantee System) எனப்படும் சான்றுடன் அங்ககவிளைப்பொருட்களை உள்ளூர் சந்தைகளில் சந்தைப்படுத்தும் திட்டமாகும். இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60:40 விகித பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இது மூன்றாண்டு தொடர் திட்டமாகும்.

இத்திட்டம் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல் (கொடைக்கானல் உட்பட) ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருப்பூர், திருநெல்வேலி, திருவள்ளூர், திருச்சி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 27 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2015-16 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப்பயிர்களில், சான்றளிப்புடன் கூடிய இயற்கை வேளாண்மை சாகுபடியை 2,550 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ள தொடங்கப்பட்டது. முதலாம் ஆண்டில் (2015-16) ரூ.3.60 கோடி நிதியில், 27 மாவட்டங்களில், 51 குழுக்களில் செயல்படுத்தப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டு, ரூ.1.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் இரண்டாம் ஆண்டிற்கான திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.





மூன்றாம் ஆண்டான 2017-18-ல், ரூ.1.47 கோடி நிதியில், இத்திட்டத்தின்கீழ் நச்சுப்பொருட்கள் பகுப்பாய்வு, பயிர் சாகுபடி, நிலத்தினை இயற்கை வேளாண்மைக்கு மாற்றுதல், தழைச்சத்தினை மண்ணில் நிலைப்படுத்தக்கூடிய பயிர்களை வளர்த்தல், இயற்கை விளைபொருட்களை சிப்பமிடுதல், பெயரிடுதல் மற்றும் வர்த்தக குறியீடு மற்றும் வேளாண் இயந்திரங்கள் வாடகை செலவினம் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கப்படும். மேலும், ரூ.1.27 கோடி நிதியில், 18 புதிய குழுக்கள் அமைக்கப்பட்டு, 900 ஏக்கர் பரப்பளவில் இயற்கை வேளாண்மை மற்றும் பங்கேற்பு சான்றிதழ் முறை ஊக்குவிக்கப்படும்.

### 2.3.6 தேசிய ஆயுஷ் இயக்கம் - மருத்துவப் பயிர்கள் (National AYUSH MIssion-Medicinal Plants (NAM-MP))

மருத்துவப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் வழியாக 60:40 என்ற பங்களிப்பு விகிதத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், மருந்துகூர்க்கன், கண்வலிக்கிழங்கு, நெல்லி, திப்பிலி, அவுரி, நித்தியக்கல்யாணி, துளசி, வேம்பு, மணத்தக்காளி, சோற்றுக்கற்றாழை மற்றும் வசம்பு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்ய, சாகுபடி செலவினத்தில் 30% மற்றும் 50% நிதியுதவி வழங்கப்படுகிறது. விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், தூத்துக்குடி, விருதுநகர், வேலூர், திருப்பூர், கடலூர், திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், அரியலூர், இராமநாதபுரம், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவப்பயிர்கள் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டது.

இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டில், ரூ.2.53 கோடி நிதியில், மருந்துக்கூர்க்கன், கண்வலிக்கிழங்கு மற்றும் நெல்லி ஆகிய மருத்துவப்பயிர்கள் சாகுபடி, 960 எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், ரூ.2.86 கோடி ஒதுக்கீட்டில், 921 எக்டர் பரப்பளவில், மருந்துகூர்க்கன், கண்வலிக்கிழங்கு, திப்பிலி, முருகல் மரம் மற்றும் மணத்தக்காளி ஆகிய மருத்துவப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.3.7 ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் (Integrated Horticulture Development Scheme (IHDS))

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்க 1992-93 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் வீரிய ரக காய்கறி விதைகள் மற்றும் தரமான நடவுச்செடிகள், மொத்த சாகுபடி செலவினத்தில், 40 சதவீதம் மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களான கரூர், காஞ்சிபுரம், நாமக்கல், நாகப்பட்டினம், திருவாரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2011-12 முதல் 2015-16 வரை, ரூ.24.99 கோடி நிதி செலவினத்தில், 96,146 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப்பயிர்கள் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2016-17 ஆம் ஆண்டில், ரூ.4.11 கோடி நிதியில், 6,090 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப்பயிர்களின் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், ரூ.4.11 கோடி நிதியில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 2.3.8 தமிழ்நாடு பாசன வேளாண்மையை நவீனமயமாக்குதல் திட்டம் (தோட்டக்கலை) (TN-IAMP)

தமிழ்நாடு பாசன வேளாண்மையை நவீனமயமாக்குதல் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஓர் பல்நோக்குத் திட்டமாகும். தேர்வுசெய்யப்பட்டுள்ள உபநதி படுகைகளில், உயர் சாகுபடி மற்றும் நீர்சேமிப்பு தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதன்மூலம் தோட்டக்கலைப்பயிர்களில் குறிப்பாக காய்கறிகளுக்கு மாற்றுப்பயிர்சாகுபடியை தீவிரப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நீர்வள நிலவளத் திட்டம் - பகுதி 1-இல், தோட்டக்கலை இனத்தின்கீழ், 2007-08 முதல் 2014-15 வரையிலான காலத்தில், 61 உபநதி படுகைகளில் ரூ.77.47 கோடி நிதியுதவியுடன், 49,580 எக்டர்





பரப்பளவில் உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. மீதமுள்ள 66 உபநதிபடுகைகளில், 2017-18 முதல் 2022-23 வரையிலான அடுத்த ஆறு ஆண்டு காலத்தில் நீர்வள நிலவள திட்டம் பகுதி-2 செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாட்டில், 2017-18 முதல் 2022-23 காலத்தில், ரூ.210 கோடி நிதி ஒதுக்கீட்டில், 45,025 எக்டர் பரப்பளவில் பழப்பயிர்கள், நுண்ணீர் பாசனத்துடன் வீரிய ஒட்டுரக காய்கறிகள், நறுமணப்பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி, 66 உபநதி படுகைகளில் 30 மாவட்டங்களில் உலக வங்கியின் ஒப்புதலுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக 18 உபநதி படுகைகளில் 22 மாவட்டங்களில் 5,748 எக்டர் பரப்பளவில் ரூ.17.91 கோடி நிதியுதவியுடன் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்கள் செயல் விளக்கத்திடல்கள், நஞ்சற்ற காய்கறி உற்பத்தி, நுண்ணீர்பாசனம் ஊக்குவித்தல், பாதுகாக்கப்பட்ட சூழல்சாகுபடி மற்றும் நிலப்போர்வை தொழில்நுட்பங்கள் திட்டமிடப்பட்டு, ஒப்புதலுக்கு பிறகு செயல்படுத்தப்படும்.

### 2.4 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் (State Horticulture Farms)

இனத்தூய்மையான மற்றும் தரமான நடவு செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப்பண்ணைகளின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் 56 அரசு தோட்டக்கலை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நவீன தொழில்நுட்பங்கள், பண்ணை இயந்திர மயமாக்கல், நவீன பாசன முறைகள் போன்ற தோட்டக்கலை சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு செயல் விளக்கப்படுத்தும் மையங்களாக செயல்பட்டு வருகின்றன. புதிய முன்முயற்சியாக, உயர் விளைச்சல்/ வீரிய ஒட்டுரக காய்கறிகள் மற்றும் மலர்களின் நாற்றுக்கள், விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய குழி தட்டுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**அட்டவணை 2.10 : அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | இடம் | நிறுவப் பட்ட ஆண்டு | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.00 |
| 2. | | கண்ணம்பாளையம் | 2001 | 11.20 |
| 3. | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.53 |
| 4. | | விருதாச்சலம் | 1975 | 10.43 |
| 5. | தருமபுரி | போலயம்பள்ளி | 2013 | 2.73 |
| 6. | திண்டுக்கல் | சந்தையூர் | 2013 | 15.20 |
| 7. | | கொடைக்கானல் | 1961 | 3.25 |
| 8. | | தாண்டிக்குடி | 1985 | 5.45 |
| 9. | | ரெட்டியார்சத்திரம் | 1994 | 5.33 |
| 10. | | சிறுமலை | 1980 | 200.04 |
| 11. | காஞ்சிபுரம் | ஆத்தூர் | 1961 | 12.24 |
| 12. | | விச்சந்தாங்கல் | 1982 | 23.25 |
| 13. | | மேல்கதிர்பூர் | 1982 | 42.63 |
| 14. | | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.60 |
| 15. | | பிச்சிவாக்கம் | 1982 | 34.00 |
| 16. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 12.64 |
| 17. | | பேச்சிப்பாறை | 1967 | 6.00 |
| 18. | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 23.96 |
| 19. | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.51 |
| 20. | | ஜீனூர் | 1980 | 121.96 |
| 21. | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.76 |
| 22. | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.60 |
| 23. | | படசோலை | 1989 | 22.67 |
| 24. | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.68 |
| 25. | | வல்லத்திராக் கோட்டை | 1977 | 521.20 |





| வ. எண் | மாவட்டம் | இடம் | நிறுவப் பட்ட ஆண்டு | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 26. | | நாட்டுமங்கலம் | 1985 | 53.02 |
| 27. | சேலம் | ஏற்காடு | 1975 | 6.04 |
| 28. | | G.O. கருமந்துறை | 1981 | 419.77 |
| 29. | | கருமந்துறை (Gene Bank) | 2014 | 4.00 |
| 30. | | மணியார்குன்றம் | 1982 | 100.00 |
| 31. | | கருமந்துறை | 1981 | 39.35 |
| 32. | | முள்ளுவாடி | 1985 | 48.40 |
| 33. | | சிறுமலை | 1987 | 8.00 |
| 34. | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.19 |
| 35. | | நேமம் | 1979 | 38.77 |
| 36. | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.90 |
| 37. | | மருங்குளம் | 1966 | 10.70 |
| 38. | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.25 |
| 39. | | கல்லார் | 1900 | 8.92 |
| 40. | | FPU குன்னூர் | 1965 | 4.05 |
| 41. | | PS குன்னூர் | 1948 | 10.46 |
| 42. | | தொட்டபெட்டா | 1969 | 4.08 |
| 43. | | தும்மனட்டி | 1956 | 9.80 |
| 44. | | நஞ்சநாடு | 1917 | 64.00 |
| 45. | | தேவாலா | 1978 | 80.00 |
| 46. | | கோல்கிரைன் | 1989 | 20.40 |
| 47. | தேனி | பெரியகுளம் | 1950 | 9.32 |
| 48. | திருவள்ளூர் | மாதவரம் | 1980 | 4.38 |
| 49. | திருச்சி | தொரக்குடி | 2013 | 4.05 |
| 50. | வேலூர் | தகரக்குப்பம் | 1985 | 34.40 |
| 51. | | கூடப்பட்டு | 1961 | 10.08 |

[2017 ஜூலை 5

| வ. எண் | மாவட்டம் | இடம் | நிறுவப் பட்ட ஆண்டு | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 52. | | நவ்லாக் | 1981 | 84.42 |
| 53. | விருதுநகர் | பூவானி | 1967 | 9.46 |
| 54. | | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1982 | 46.27 |
| 55. | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.77 |
| 56. | திருவண்ணாமலை | தொம்பரெட்டி | 2014 | 3.05 |
| | மொத்தம் | | 2538.16 | |

மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை வாரியம், தரமான நடவுப்பொருள் உற்பத்தி செய்வதற்காக 35 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு தர அங்கீகாரம் வழங்கியுள்ளது. மாநிலத்தின் விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தரமான நடவுப்பொருட்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதை ஊக்குவிக்க, ரூ.22.07 கோடி நிதியில், அரசு தோட்டக்கலைப்பண்ணைகள் தரம் உயர்த்தப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2016-17 ஆம் ஆண்டு, ரூ.5.83 கோடி நிதி ஒதுக்கீட்டில், காஞ்சிபுரம் மாவட்டம்-மேல்கதிர்பூர், கடலூர் மாவட்டம்-விருத்தாச்சலம், திண்டுக்கல் மாவட்டம்-சந்தையூர், நாமக்கல் மாவட்டம்-படசோலை, திருச்சி மாவட்டம்- முதலைப்பட்டி மற்றும் வேலூர் மாவட்டம்-நவ்லாக் ஆகிய 6 அரசு தோட்டக்கலை பண்ணைகள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. 2016-17 ஆம் நிதியாண்டில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில், 6.36 கோடி எண்கள் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டில், 8.25 கோடி எண்கள் நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டு, நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி (NABARD-RIDF) நிதியுதவியுடன், 10 மாவட்டங்களில்



2017 ஜூலை 5]

உள்ள 19 அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில், ரூ.20.76 கோடி நிதியில் காய்கறி விதை உற்பத்திக்கான கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.

**அட்டவணை 2.11 : அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

| வ. எண் | அரசு தோட்டக்கலைப் பண்ணை விவரம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | மாபெரும் பழ பண்ணை, கருமந்துறை | சேலம் |
| 2. | கருமந்துறை | சேலம் |
| 3. | நாட்டுமங்கலம் | புதுக்கோட்டை |
| 4. | படசோலை | நாமக்கல் |
| 5. | செம்மேடு | நாமக்கல் |
| 6. | மருங்குளம் | தஞ்சாவூர் |
| 7. | பெரியகுளம் | தேனி |
| 8. | மேலொட்டிவாக்கம் | காஞ்சிபுரம் |
| 9. | பிச்சிவாக்கம் | காஞ்சிபுரம் |
| 10. | ஆத்தூர் | காஞ்சிபுரம் |
| 11. | கூடப்பட்டு | வேலூர் |
| 12. | நவ்லாக் | வேலூர் |
| 13. | போலயம்பள்ளி | தருமபுரி |
| 14. | திம்மாபுரம் | கிருஷ்ணகிரி |
| 15. | ஜீனூர் | கிருஷ்ணகிரி |
| 16. | தும்மனட்டி | நீலகிரி |
| 17. | நஞ்சநாடு | நீலகிரி |
| 18. | கோல்கிரைன் | நீலகிரி |
| 19. | காட்டேரி | நீலகிரி |

[2017 ஜூலை 5

## 2.5 பூங்காக்கள்

தோட்டக்கலைத் துறை, மாநிலத்தின் 6 மாவட்டங்களில் 13 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்கின்றன. மேலும் இவை தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றது.

**அட்டவணை 2.12 : பூங்காக்கள் மற்றும் தோட்டங்களின் விவரம்**

| வ. எண் | பூங்காக்கள் மற்றும் தோட்டங்களின் பெயர்கள் | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 1. | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | நீலகிரி | 55.00 |
| 2. | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | | 36.00 |
| 3. | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | | 30.35 |
| 4. | காட்டேரி பூங்கா (அ.தோ. பண்ணை, காட்டேரி) | | 47.4 |
| 5. | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா வண்ணத்துப்பூச்சி பூங்கா, தேவாலா | | 10.50 |
| 6. | பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | திண்டுக்கல் | 31.3 |
| 7. | அண்ணா பூங்கா மற்றும் ஏரிபூங்கா, ஏற்காடு | சேலம் | 11.25 |
| 8. | ரோஜா தோட்டம், அரசு தோட்டக்கலை பண்ணை, ஏற்காடு | | 15.40 |
| 9. | ஐந்திணை மரபணு பூங்கா, ஏற்காடு | | 25.00 |
| 10. | அரசு தாவரவியல் பூங்கா, ஏற்காடு | | 40.475 |
| 11. | செம்மொழி பூங்கா | சென்னை | 7.93 |
| 12. | சுற்றுசூழல் பூங்கா, குற்றாலம் | திருநெல்வேலி | 37.23 |
| 13. | ஐந்திணை மரபணு பூங்கா, அச்சடிபிரம்பு | இராமநாதபுரம் | 10.00 |



2017 ஜூலை 5]

### 2.5.1 முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

1. சென்னை மாதவரத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், தோட்டக்கலை மேலாண்மை நிலையத்தில் பயிலும் மாணவர்களின் பயிற்சிக்காக 20.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.5.73 கோடி செலவினத்தில் ஒரு அலங்காரம் மற்றும் செயல்விளக்க பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

2. சுற்றுலா பயணிகளை அதிக எண்ணிக்கையில் ஈர்க்க, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு தோட்டக்கலை பண்ணையில், 11 ஏக்கர் பரப்பளவில், ரூ.3.80 கோடி செலவினத்தில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் சாகுபடி செயல் விளக்க மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 15 ஏக்கர் பரப்பளவில், ரூ.4.00 கோடி செலவினத்தில் பார்வையாளர்களை கூடுதலாக கவர சுற்றுசூழல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

4. தரமான நடவு செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு உரிய காலத்திற்குள் வழங்க, இராமநாதபுரம் மாவட்டம், ஓரியூரில் ரூ.118.18 இலட்சத்தில் புதிய அரசு தோட்டக்கலை பண்ணை அமைக்க திட்டமிட்டு, முதற்கட்டமாக ரூ.60.18 இலட்சம் நிதியில்,

[2017 ஜூலை 5

நிலம் மேம்படுத்துதல் மற்றும் நீர் ஆதாரங்களை உருவாக்குதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. உதகையில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவை உலக தரம் வாய்ந்த வசதிகளுடன் ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகளை கவர்ந்திட ஏதுவாக கண்ணாடி கூடம், பெரணி கூடம், மலர் மாடங்கள் மற்றும் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூ.5.50 கோடி நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.6 மலர் மற்றும் பழக் கண்காட்சிகள்

வசந்த காலம் மற்றும் கோடைகாலப் பருவங்களில் பூங்காக்களில் பல்வேறு கண்காட்சிகள் நடைபெறுகின்றன. உதகமண்டலம், ஏற்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் மலர் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மலர் அலங்காரங்கள், இந்திய மற்றும் ஜப்பானிய மலர் அலங்காரங்கள், காய்கறிகளால் ஆன உருவகங்கள், மலர் பூக்கோலங்கள் மற்றும் போன்சாய் ஆகியவை இக்கண்காட்சியின் முக்கிய கண்கவர் அம்சமாக விளங்குகின்றன.

உதகை ரோஜா தோட்டத்தில் நடத்தப்படும் ரோஜா மலர் கண்காட்சி இத்துறையினால் நடத்தப்படும் முக்கிய நிகழ்ச்சியாகும். இக்கண்காட்சியில் பிரபலமான மற்றும் சுவாரசியமான (வசீகரிக்கும்) உருவ அமைப்புகளை பல்வேறு வண்ண ரோஜா மலர்கள் கொண்டு அமைக்கப்படுகின்றன. குன்னூர் (உதகமண்டலம்), சிம்ஸ் பார்க்கில் பழக்கண்காட்சி, கிருஷ்ணகிரி மாம்பழக் கண்காட்சி, கோத்தகிரி (உதகமண்டலம்) காய்கறிகள் கண்காட்சி மற்றும் கூடலூர் (உதகமண்டலம்) நறுமணப் பயிர்கள் கண்காட்சி ஆகியவை சுற்றுலா பயணிகளிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ளன. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் சுற்றுச் சூழல் பூங்காவில் சாரல் விழா நடத்தப்படுகின்றது.

## 2.7 தோட்டக்கலை பயிற்சி மையங்கள் (Horticulture Training Centres)

தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள், திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி மற்றும் நீலகிரி மாவட்டம் உதகையில் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையங்கள்



2017 ஜூலை 5]

மூலமாக விவசாயிகளுக்கு, தோட்டக்கலை பயிர்களில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2016-17ஆம் ஆண்டில், ரூ.7.50 இலட்சம் செலவில், 3,000 விவசாயிகளுக்கு, தோட்டக்கலைப் பயிர்களில் உயர்சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

நடப்பு 2017-18ஆம் ஆண்டில், ரூ.7.50 இலட்சம் நிதியில், 3,000 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான பயிற்சி தவிர, இரண்டாண்டு கால தோட்டக்கலை பட்டயப் படிப்பு, தோட்டக்கலைப் பயிற்சி மையம், மாதவரத்தில் ஆண்டுதோறும் 40 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 2.8 தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு "சிறப்பு நோக்க அமைப்பாக" 2004 ஆம் வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் (தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கம்), பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் துளி நீர்-அதிக பயிர் என்னும் உட்பிரிவில் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய ஆயுஷ் இயக்கம் - மருத்துவப் பயிர்கள், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் தமிழ்நாடு நீர்வள நில வளத்திட்டம் ஆகிய முக்கிய திட்டங்கள் டான்ஹோடா மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை திட்டங்களுக்கான தரமான இடுபொருட்கள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் கொள்முதல் செய்து, விநியோகம் செய்ய சிறப்பு நோக்க அமைப்பாகவும் டான்ஹோடா செயல்படுகிறது. டான்ஹோடாவின் ஆளுமைக் குழு இந்த சிறப்பு நோக்க அமைப்பிற்கு அதிகாரக் குழுவாக செயல்படுகிறது. நீரில் கரையும் உரங்கள் மற்றும் விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உரிய தருணத்தில் வழங்க ரூபாய் ஐம்பது கோடி சுழல் நிதியாக பயன்படுத்தப்படுகிறது.

[2017 ஜூலை 5

## 2.9 பணியாளர்கள் விவரம்

தோட்டக்கலை தொழில்நுட்பங்களையும், அரசின் திட்டங்களையும் விவசாயிகளுக்கு வழங்கவும், துறை செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், தோட்டக்கலைத் துறையின்கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை 2.13: ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்**

| வ. எண் | பதவி விவரம் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | தொழில்நுட்ப அலுவலர்கள் | 2,610 |
| 2. | இதர அலுவலர்கள் | 1,223 |
| | மொத்தம் | 3,833 |
| | | |

**அட்டவணை 2.14: அலுவலர்கள் விவரம்**

| வ. எண் | அலுவலர்கள் விவரம் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் தோட்டக்கலை இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 39 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 398 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 404 |
| 6 . | தோட்டக்கலை துணை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,633 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |



2017 ஜூலை 5]

| வ. எண் | அலுவலர்கள் விவரம் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர அனைத்து பதவிகள்) | 1,223 |
| | மொத்தம் | 3,833 |

## 3. வேளாண்மைப் பொறியியல்

### 3.1 முன்னுரை

வேளாண்மைப் பொறியியல் துறை வேளாண்மையில் எழும் பிரச்சனைகளுக்கு பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தீர்வு காண்கிறது. “உணவு உற்பத்தியை பெருக்குவோம்” என்ற திட்டத்தின்கீழ், 1946 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வேளாண்மைப் பொறியியல் பிரிவு ஒன்று உதயமானது. நிலையான வேளாண் உற்பத்திக்கு சிறப்பாக திட்டமிடுதலும், சீரிய முயற்சியும் தேவைப்பட்டதால் வேளாண்மைப் பொறியியல் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது இன்றியமையாதது என்பதன் அடிப்படையில், 1981 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையிலிருந்து வேளாண்மைப் பொறியியல் பிரிவு பிரிக்கப்பட்டு, புதிய வேளாண்மைப் பொறியியல் துறை உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 3.2 வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகள்

அ) வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

ஆ) மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

இ) நீர் மேலாண்மை

ஈ) வேளாண்மையில் பசுமை ஆற்றல் பயன்பாடு

உ) உள்கட்டமைப்பு மேம்பாடு

## 3.3 வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

பயிர் சாகுபடி செய்யும் பரப்பினை அதிகரிப்பதற்கும், நிலம் தயார் செய்தல் முதல் அறுவடை வரை மற்றும் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி போன்ற பண்ணைப் பணிகளில் ஏற்படும் கால விரயத்தை தவிர்ப்பதற்கும், விவசாய பணியாளர்களின் செயல்திறனை அதிகரிப்பதற்கும், சிரமமான மற்றும் கடினமான பண்ணைப் பணிகளிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கும் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் உதவி புரிகிறது.

### 3.3.1 நில மேம்பாட்டிற்கான இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கும் திட்டம்

நிலத்தினை சமன் செய்யவும், உழவுப் பணிகளை மேற்கொள்ளவும், நெல் நாற்று நடவு செய்யவும் மற்றும் அறுவடை செய்யவும் வேளாண்மைப் பொறியியல் துறையிலுள்ள 81 புல்டோசர்கள், 132 டிராக்டர்கள், 63 லேசர் சமன் செய்யும் கருவிகள், 7 நெல்நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள் மற்றும் 48 நெல் அறுவடை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன. புல்டோசர் மற்றும் டிராக்டர்கள் வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில் மீட்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள டிராக்டர்களில் பொருத்தி விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கிடும் பொருட்டு 2016-17 ஆம் ஆண்டில் 26 சுழற்கலப்பைகள், 12 வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரங்கள் மற்றும் 10 வரப்பு அமைக்கும் கருவிகள் ரூ.85.83 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

நிலமேம்பாடு, நிலம் தயார் செய்தல் ஆகிய பணிகளை குறைந்த வாடகை அடிப்படையில் வேளாண்மைப் பொறியியல் துறை தொடர்ந்து செயல்படுத்திடுவதற்கு ஏதுவாக தேவையான வேளாண் கருவிகளுடன் கூடிய 50 எண்கள் அதிக குதிரைத் திறனுடைய டிராக்டர்கள் நபார்டு நிதி உதவியுடன் 2017-18 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மாவட்ட வாரியான நிலமேம்பாட்டிற்கான இயந்திரங்களின் விவரம் அட்டவணை 3.1.-ல் கொடுக்கப்பட்டுள்ளது.





**அட்டவணை 3.1: மாவட்ட வாரியான நிலமேம்பாட்டிற்கான இயந்திரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | புல்டோசர் | டிராக்டர் | நெல் அறுவடை இயந்திரம் | நெல் நாற்று நடும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 5 | 6 | 4 | |
| 2. | திருவள்ளூர் | 4 | 4 | | |
| 3. | கடலூர் | 5 | 10 | | 1 |
| 4. | விழுப்புரம் | 3 | 5 | | |
| 5. | வேலூர் | 2 | 5 | | |
| 6. | திருவண்ணாமலை | 2 | 2 | | |
| 7. | தருமபுரி | 3 | 3 | | |
| 8. | கிருஷ்ணகிரி | 3 | 3 | | |
| 9. | சேலம் | 2 | 4 | | |
| 10. | நாமக்கல் | 4 | 6 | | |
| 11. | கோயம்புத்தூர் | 3 | 3 | | |
| 12. | ஈரோடு | 2 | 5 | | |
| 13. | திருப்பூர் | 5 | 3 | | |
| 14. | திருச்சி | 4 | 6 | | 1 |
| 15. | அரியலூர் | 2 | 3 | | |
| 16. | பெரம்பலூர் | 1 | 2 | | |
| 17. | கரூர் | 2 | 2 | | |
| 18. | புதுக்கோட்டை | 2 | 2 | | |
| 19. | திருவாரூர் | 2 | 10 | 10 | 2 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 8 | 10 | 1 |
| 21. | நாகப்பட்டினம் | | 10 | 9 | 2 |
| 22. | திண்டுக்கல் | 5 | 3 | | |
| 23. | மதுரை | 3 | 5 | 5 | |
| 24. | தேனி | 2 | 2 | | |
| 25. | சிவகங்கை | 2 | 3 | | |
| 26. | இராமநாதபுரம் | 1 | 2 | | |

[2017 ஜூலை 5

| வ. எண் | மாவட்டம் | புல்டோசர் | டிராக்டர் | நெல் அறுவடை இயந்திரம் | நெல் நாற்று நடும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|
| 27. | விருதுநகர் | 2 | 3 | | |
| 28. | தூத்துக்குடி | 3 | 3 | | |
| 29. | திருநெல்வேலி | 3 | 8 | 10 | |
| 30. | நீலகிரி | 1 | 1 | | |
| | மொத்தம் | 81 | 132 | 48 | 7 |

### 3.3.2 சிறுபாசனத்திற்கான கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கும் திட்டம்

நிலத்தடி நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வதற்காக திறந்தவெளி மற்றும் ஆழ்துளைக்குழாய் கிணறு அமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்வதற்காக 9 நிலநீர் ஆய்வுக்கருவிகள், நிலத்தடி நீரின் தன்மை மற்றும் அளவுகளை பரிசோதிப்பதற்காக 2 மின்னியல் ஆய்வுக்கருவிகள், படுகைப் பகுதிகள் மற்றும் படிவுப் பாறை பகுதிகளில் குழாய் கிணறுகள் அமைப்பதற்காக 24 சுழல்விசை துளைக்கருவிகள், 7 பெர்குஷன் துளைக் கருவிகள், 22 சிறு விசைத்துளைக் கருவிகள் மற்றும் 42 கைத்துளைக் கருவிகள், பக்கவாட்டில் துளையிட்டு கிணறுகளை புதுப்பிப்பதற்காக 7 நீள் துளைக்கருவிகள், கடின பாறைகளைக் கொண்ட பகுதிகளில் துளையிட்டு வெடி வைத்து தகர்ப்பதற்காக 29 பாறை தகர்க்கும் கருவிகள் ஆகியவை குறைந்த வாடகை அடிப்படையில் தேவைப்படும் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசனத்திற்காக குழாய் கிணறுகள் அமைக்கும் பணிகளை குறைந்த வாடகை அடிப்படையில் வேளாண்மைப் பொறியியல் துறை தொடர்ந்து செயல்படுத்திடுவதற்கு ஏதுவாக ரூ.14.50 கோடி செலவில், 10 எண்கள் சுழல் விசைத் துளைக் கருவிகளை நபார்டு நிதி உதவியுடன் 2017-18 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சிறுபாசனத் திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2017 ஜூலை 5]

மாவட்ட வாரியான சிறுபாசனத்திற்கான கருவிகளின் விவரம் அட்டவணை 3.2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2 : மாவட்ட வாரியான சிறுபாசன திட்டக் கருவிகள்**

| வ. எண் | மாவட்டம் | சுழல் விசைத் துளைக் கருவி | பெர்குசன் துளைக் கருவி | சிறுவிசை துளைக் கருவி | இதர கருவிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | | 1 | | 5 |
| 2. | திருவள்ளூர் | | 5 | | 7 |
| 3. | கடலூர் | 9 | | | 15 |
| 4. | விழுப்புரம் | | 1 | | 9 |
| 5. | வேலூர் | | | | 4 |
| 6. | திருவண்ணாமலை | | | | 1 |
| 7. | தருமபுரி | | | | 4 |
| 8. | சேலம் | | | | 10 |
| 9. | நாமக்கல் | | | | 4 |
| 10. | ஈரோடு | | | | 2 |
| 11. | திருப்பூர் | | | | 1 |
| 12. | திருச்சி | | | | 3 |
| 13. | அரியலூர் | | | | 2 |
| 14. | பெரம்பலூர் | | | | 1 |
| 15. | கரூர் | | | | 1 |
| 16. | புதுக்கோட்டை | 2 | | | |
| 17. | திருவாரூர் | 6 | | 2 | |
| 18. | தஞ்சாவூர் | 7 | | 19 | 2 |
| 19. | நாகப்பட்டினம் | | | 1 | 6 |
| 20. | மதுரை | | | | 1 |
| 21. | சிவகங்கை | | | | 2 |
| 22. | இராமநாதபுரம் | | | | 2 |

[2017 ஜூலை 5

| வ. எண் | மாவட்டம் | சுழல் விசைத் துளைக் கருவி | பெர்குசன் துளைக் கருவி | சிறுவிசை துளைக் கருவி | இதர கருவிகள் |
|---|---|---|---|---|---|
| 23. | விருதுநகர் | | | | 4 |
| 24. | தூத்துக்குடி | | | | 1 |
| 25. | திருநெல்வேலி | | | | 2 |
| | மொத்தம் | 24 | 7 | 22 | 89 |

### 3.3.3 பல்வேறு திட்டங்கள்மூலம் வேளாண்மையில் இயந்திர மயமாக்கலை அதிகரித்தல்

வேளாண்மையில் ஏற்படும் ஆட்கள் பற்றாக்குறை, விவசாயத்திற்கு வேலையாட்கள் கிடைக்கப்பெறாமை ஆகிய பிரச்சினைகளிலிருந்து விவசாயிகள் விடுபடுவதற்கும், குறித்த காலத்தே பண்ணைப் பணிகளை மேற்கொள்ளவும் விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை பயன்படுத்துவது அவசியமாகிறது. வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு மானிய உதவி தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (National Agriculture Development Programme-NADP) மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கம் (Sub Mission on Agircultural Mechanization- SMAM) மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் செய்யப்பட்ட பல்வேறு தயாரிப்புகள் மற்றும் மாடல்களைக் கொண்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சிறு, குறு, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்திலும் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் ஒப்புதல் மற்றும் அங்கீகாரமானது, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப் பனைக்கான தேசிய இயக்கம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை



2017 ஜூலை 5]

வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கும் பொருந்தும்.

#### 3.3.3.1 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (National Agriculture Development Programme-NADP)

பவர்டில்லர், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், சிறப்பு தானியங்கி இயந்திரங்களான கதிரறுக்கும் இயந்திரம், குழி எடுக்கும் இயந்திரம், டிராக்டர் மற்றும் பவர்டில்லரால் இயங்கக் கூடிய கருவிகள், தோட்டக்கலை மற்றும் நன்செய் நிலங்களுக்கேற்ற விசையால் களையெடுக்கும் கருவிகள், புதர் அகற்றும் கருவி, பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, மனித சக்தியால் இயக்கக்கூடிய நெல் விதைப்புக் கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, வறண்ட நிலங்களில் களையெடுக்கும் கருவி, கையால் இயக்கக்கூடிய கைத்தெளிப்பான்கள் போன்ற 3,516 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வாங்கிட 2016-17 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.12.65 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2017-18 ஆம் ஆண்டில், பல்வேறு தயாரிப்புகள் மற்றும் மாடல்களைக் கொண்ட 1,200 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வாங்கிட ரூ.8 கோடி மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 3.3.3.2 வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கம் (Sub Mission on Agricultural Mechanization-SMAM)

வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்க திட்டத்தின்கீழ் 2016-17 ஆம் ஆண்டில், 2,832 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வாங்கிட மொத்தம் ரூ.22.51 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 2017-18 ஆம் ஆண்டில், 1,820 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு ரூ.15.50 கோடி மானியத்தில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 3.3.3.3 அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களை வழங்குதல்

அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்திட ஏராளமான வாய்ப்புகள்

உள்ளன. சிறிய கருவி மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விளைபொருட்களை மதிப்புக்கூட்டி பயன்பெறலாம்.

அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களை 2017-18 ஆம் ஆண்டில், தனிப்பட்ட விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், விவசாய உபயோகிப்பாளர் குழுக்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோருக்கு மானியத்தில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.3.4 வேளாண்மை இயந்திரமயமாக்கலை தனியார்மயம்மூலம் ஊக்குவித்தல்

வேளாண் சாகுபடியில் குறித்த காலத்தே பண்ணைப் பணிகளை பயிர்களின் ஒவ்வொரு வளர்ச்சிக் காலங்களிலும் மேற்கொள்வதற்கும், இடுபொருட்கள் செலவினை குறைத்து விவசாயிகளின் நிகர இலாபத்தினை உயர்த்துவதற்கும், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் மையங்கள் (Custom Hiring Centre-CHC) முக்கிய பங்காற்றி வருகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகள் உயர்ந்த விலையுள்ள அதிக குதிரைத்திறனுடைய டிராக்டர்கள், நாற்று நடும் கருவிகள், கதிரடிக்கும் கருவிகள், வைக்கோல் கட்டும் இயந்திரங்கள் முதலானவற்றை பெரும் முதலீடு செய்து வாங்கிட இயலாமலும், அவ்வாறு வாங்கினாலும் அவற்றை பராமரிக்க இயலாத நிலையிலும் உள்ளனர். எனவே, வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் மையங்களை ஏற்படுத்தி, குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது.

#### 3.3.4.1 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

வேளாண் இயந்திரங்கள் மற்றும் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்க ரூ.25 இலட்சம் மதிப்புடைய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குவதற்கு 40 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் மானியத்துடனும், மீதமுள்ள 60 சதவீதம் அதாவது ரூ.15 இலட்சம் விவசாயிகளின் பங்களிப்புத் தொகையுடனும் மத்திய அரசின் “வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கம்” நெறிமுறைகளின்படி ஏற்படுத்தப்படுகிறது.





2016-17 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ், 175 வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களும் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 245 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களும், மொத்தம் ரூ.41.92 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

2017-18 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 85 வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களும் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 250 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களும் மொத்தம் ரூ.33.50 கோடி மானிய உதவியுடன் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 3.3.4.2 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

தற்பொழுது கரும்பு சாகுபடியில் விவசாயிகளின் நிகர வருமானத்தினை அதிகரிப்பது பெரும் சவாலாக உள்ளது. மேலும், கரும்பு உற்பத்தியில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்து செலவினை சிக்கனப்படுத்துவதும் அவசியமாகிறது.

கரும்பு சாகுபடிக்கேற்ற இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்களை அமைப்பதற்கு ரூ.150 இலட்சம் மதிப்பிலான இயந்திரங்களை வாங்குவதற்கு, 40 சதவீத மானிய அடிப்படையில், ரூ.60 இலட்சம் வரை மானிய உதவியுடன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தனியார் சர்க்கரை ஆலை, தொழில் முனைவோர்மூலம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து தேவைப்படும் விவசாயிகளுக்கு இயந்திரங்களையும், கருவிகளையும் குறைந்த வாடகைக்கு வழங்கும். 2015-16 ஆம் ஆண்டு மற்றும் 2016-17 ஆம் ஆண்டுகளில், மொத்தம் ரூ.2.77 கோடி மானியத்தில் காஞ்சிபுரம், விழுப்புரம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 5 தொழில் முனைவோர் மூலமாக செயல்படும் கரும்பு சாகுபடிக்கேற்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2017 ஜூலை 5

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2017-18 ஆம் ஆண்டில் 5 எண்கள் கரும்பு சாகுபடிக்கேற்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் மொத்தம் ரூ.3 கோடி மானியத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.3.4.3 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

புன்செய் பயிர்களான பருப்பு வகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆகியவை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதில் முக்கிய பங்காற்றுகின்றன. பண்ணை சக்தியின் அளவு தேவைப்படும் அளவான ஒரு எக்டருக்கு 4 கிலோவாட் என்பதற்கு பதிலாக ஒரு எக்டருக்கு 0.28 முதல் 3.24 கிலோவாட் என்ற அளவில், பண்ணை சக்தி குறைவாக உள்ள இராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், திருவாரூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், கடலூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை, நாமக்கல், வேலூர், தருமபுரி, விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கிராம அளவிலான பண்ணை இயந்திர மையங்களை புன்செய் நிலப் பயிர்களுக்கு ஏற்றவகையில் ஏற்படுத்திட ஊக்குவிக்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2017-18 ஆம் ஆண்டில் கிராம அளவிலான 200 பண்ணை இயந்திர மையங்கள் ரூ.16 கோடி மானிய உதவியுடன் தலா ரூ.10 இலட்சம் வரையிலான திட்ட மதிப்புடைய பண்ணை இயந்திர மையங்களுக்கு 80 சதவீத மானிய அடிப்படையில் விவசாயக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அல்லது இதுபோன்ற அமைப்புகளின்மூலம் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டில் “நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்” (Mission on Sustainable Dry land Agriculture-MSDA) என்ற திட்டத்துடன் இணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.4 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் நிலையான அடிப்படையில் உற்பத்தி திறனை மேம்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்கிறது. மானாவாரி நிலங்கள், சாகுபடிக்கு உகந்த தரிசு நிலங்கள் மற்றும் நடப்பு தரிசு



2017 ஜூலை 5]

நிலங்களில் மட்டுமே மொத்த மானாவாரி விவசாயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாகின்றன. மேற்கண்ட நிலங்களே ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதியாகவும் உள்ளது. அவ்வாறான நிலங்களில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதன்மூலம் மண்ணின் ஈரப்பதத்தினை அதிகரித்து, மண்ணின் அரிமானத்தை தடுத்து, நிலங்களின் தரம் குறையாமல் மேம்படுத்தி, நிலத்தின் வளத்தினை பாதுகாக்க முடியும். மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு முறையானது தற்போதைய தட்பவெப்ப மாற்றச் சூழலில் முக்கிய பங்கு வகிப்பது மட்டுமல்லாமல், வறட்சியினை எதிர்கொள்ளும் திறனையும் அதிகரிக்கிறது.

### 3.4.1 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Special Area Development Programme -SADP)

மலைப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்துவதற்காகவும் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள வனப் பகுதிகளின் அருகே உள்ள கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளின் தேவையை முன்னிட்டும், தமிழக அரசு “சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, ரூ.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் பிற துறைகளுடன் இணைந்து செயல்படுத்த அறிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மையின்மூலம் சுற்றுச்சூழலை பாதுகாத்தல், புதுப்பித்து மேம்படுத்துதல் மூலமும் வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்து நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மண் மற்றும் நீர்வள பாதுகாப்புப் பணிகள் தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களில், பழங்குடியினருக்கு 90 சதவீதம் மானியமும் 10 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பும், ஆதிதிராவிடருக்கு 80 சதவீதம் மானியமும் 20 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பும், இதர வகுப்பினருக்கு 50 சதவீதம் மானியமும் 50 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், சமுதாய பணிகள் 100 சதவீத அரசு செலவினத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ஓடைத் தடுப்புகள், கசிவுநீர்க்குட்டைகள், வண்டல் சேகரிப்பு கட்டுமானங்கள், கம்பிவலைத் தடுப்பணைகள், நிலச்சரிவு

பாதுகாப்புப் பணிகள் போன்ற மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.17.77 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.12.08 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2017-18 ஆம் ஆண்டில் ரூ.7.91 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.4.2 நதி பள்ளத்தாக்குத் திட்டம் (River Valley Project-RVP)

தமிழ்நாட்டில் மத்திய அரசு நிதியுதவி திட்டமான நதி பள்ளத்தாக்குத் திட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2013-14 ஆம் ஆண்டு முதல் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளான சமஉயர வரப்புகள், நில மேம்பாட்டு பணிகள், ஓடை பராமரிப்புப் பணிகள், வண்டல் சேகரிப்பு கட்டுமானங்கள், நீர் சேகரிப்பு கட்டுமானங்கள், பண்ணை உற்பத்தித் திறனுக்கான பணிகள், வாழ்வாதார அமைப்பு பணிகள் மற்றும் மரம் நடுதல் போன்ற மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 சதவீதம் அரசின் நிதி உதவியுடனும், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் பணிகள் 50 சதவீத மானியத்திலும், 50 சதவீதம் விவசாயிகள் பங்களிப்போடும் செயல்படுத்தப்படுகின்றன.

இதுவரை 21,764 எக்டர் பரப்பில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள் 2,022 கட்டுமானப் பணிகள், மொத்தம் ரூ.28.40 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. மேற்கூறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், 2017-18 ஆம் ஆண்டில், 8 நுண்ணிய நீர்வடிப்பகுதிகளில், 208 எண்கள் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டுமானப்பணிகள் ரூ.4.50 கோடி செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.4.3 அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (Dam Rehabilitation and Improvement Project-DRI)

உலக வங்கி நிதி உதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தமிழ்நாடு





மின்சார வாரியம்மூலம் தேர்வு செய்யப்பட்ட அணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளின் நீர்பிடிப்புப்பகுதிகளில் பலதுறைப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறைகளான மண்வளப்பாதுகாப்பு மற்றும் நீர்வடிப்பகுதி மேலாண்மை நடைமுறைகளை செயல்படுத்துவதன்மூலம் பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல்மண் படிவதை தடுக்கும் பணிகள், மண்வளப் பாதுகாப்பு பணிகள் வேளாண்மை பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மொத்தம் ரூ.15.41 கோடி செலவில் மூன்றாண்டுகளில் (2015-16 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை) செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டில் 17,369 மீட்டர் நீளத்தில் மண் பாதுகாப்பு மற்றும் ஓடை பராமரிப்பு பணிகள், 418 எண்கள் மண்வளப் பாதுகாப்பு கட்டமைப்புகள் ரூ.7.19 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2017-18 ஆம் ஆண்டில் 1,763 மீட்டர் நீளத்தில் ஓடை பராமரிப்பு பணிகள் மற்றும் 192 எண்கள் வண்டல்மண் தடுப்பு கட்டமைப்புகள், மொத்தம் ரூ.5.20 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 3.4.4 மானாவாரி நில மேம்பாடு திட்டத்தின்கீழ் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்

நீடித்த நிலையான தேசிய வேளாண்மைக்கான இயக்கம் (National Mission for Sustainable Agriculture-NMSA) மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மானாவாரி நிலங்களில், நீடித்த நிலையான வேளாண்மைக்காக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்படுகிறது.

நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்மூலம் 2016-17 ஆம் ஆண்டில் வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 15 மாவட்டங்களில் 65 தடுப்பணைகள் ரூ.2.85 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

[2017 ஜூலை 5

இரண்டாவது தவணையாக, 87 நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் ரூ.4.03 கோடி செலவில் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், தருமபுரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, ஈரோடு, நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், திருப்பூர், திருச்சி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 16 மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2017-18 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் நீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.4.5 இராமநாதபுரம் மாவட்டத்தில் பண்ணைக் குட்டைகளை ஆழப்படுத்துதல்

பண்ணைக் குட்டைகள் மழைநீர் சேகரிப்புக்கான ஒரு சிக்கனமான கட்டமைப்பாகும் என்பதால், விவசாயிகளிடத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பண்ணைக் குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மழை நீர், மானாவாரிப் பயிர்களான மிளகாய், பயறு வகைகள் மற்றும் சிறுதானியங்களின் முக்கிய பயிர் வளர்ச்சிக் காலங்களில், உயிர்ப் பாசனம் அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பண்ணைக் குட்டைகள் அரை மீட்டர் ஆழம் வரை ஏற்படுத்தப்பட்டு, பின்னர் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் இரண்டு மீட்டர் வரை ஆழப்படுத்தப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 1,352 பண்ணைக் குட்டைகள் ரூ.6.66 கோடி செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 2017-18 ஆம் ஆண்டில் 800 பண்ணைக் குட்டைகள் ரூ.4.19 கோடி செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.4.6 பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் நீர் சேகரிப்பு கட்டுமான அமைப்புகளை உருவாக்குதல்

மத்திய அரசு பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், ஒரு குடையின்கீழ் வேளாண்மை மற்றும் பாசனத் திட்டங்களை செயல்படுத்திட, 2015-16 ஆம் ஆண்டில் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் 60:40 என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து பயிர் நிலங்களுக்கும் நீர்ப்பாசனம் கிடைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மானாவாரி நிலங்கள் கணிக்க முடியாத பருவமழையினை மட்டுமே நம்பியுள்ளன. எனவே, பாதுகாப்பு முறை மற்றும் வறட்சியை தாங்கக்கூடிய செயல்முறை என்ற அடிப்படையில்



2017 ஜூலை 5]

அதிக நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. கடந்த 2016-17 ஆம் ஆண்டில் ரூ.11.25 கோடி செலவில் 389 நீர் சேகரிப்பு கட்டுமான அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 3.4.7 மானாவாரி நில சாகுபடி - பணிகள் மேற்கொள்ளுதல் (Mission on Sustainable Dry land Agriculture-MSDA)

தமிழ்நாட்டில் மொத்த விளைநிலப் பரப்பளவில் 44 சதவீதமாகவும், உணவு தானிய உற்பத்தியில் 40 சதவீதமாகவும் பங்களிப்பினை வழங்கக்கூடிய மானாவாரி நிலங்களில் விவசாயத்தினை நிலை நிறுத்தி விவசாயப் பெருமக்களுக்கு உறுதுணையாக இருந்திட ஏதுவாக தமிழக அரசின் 2016-17 ஆம் ஆண்டின் நிதி அறிக்கையில் சிறுதானியப் பயிர்கள், பருப்பு வகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மானாவாரி நிலங்களில் அதிகரிக்கவும் மற்றும் நீர்சேகரிப்பு கட்டமைப்புகளை மேற்கொள்ளவும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 2017-18 ஆம் ஆண்டில் சகோதரத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு பணிகளில், வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத மண்ணின் ஈரப்பதத்தினை பாதுகாப்பதற்காக டிராக்டரால் இயங்கும் கொத்துக்கலப்பைமூலம் உழவுப் பணியினை ஒரு எக்டருக்கு ரூ.1,250/- என்ற அலகுத் தொகை அடிப்படையில், முழு மானியத்தில் மொத்தமுள்ள 200 தொகுப்புகளில் ஒரு தொகுப்பிற்கு 1000 எக்டர் என்ற அடிப்படையில், மொத்தமாக 2 இலட்சம் எக்டர் பரப்பளவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து ரூ.12.50 கோடி மற்றும் மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.12.50 கோடி என்ற அளவில் ஆக மொத்தம் ரூ.25 கோடி மானிய உதவியுடன் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.4.8 வளம் குன்றிய நிலங்களை சீர்திருத்துதல்

தமிழகத்தில் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தியமையால் நிலப்பரப்பில் களர், உவர் மற்றும் அமிலத்தன்மை கொண்ட வளம் குன்றிய மண் காணப்படுகிறது. விஞ்ஞான ரீதியான மேலாண்மை பணிகளை அதிக அளவில் செயல்படுத்துவதன்மூலம் இந்த நிலப்பரப்பின் உற்பத்தி திறனுக்கு ஏற்ப சாகுபடியை அதிக அளவில் செய்ய இயலும். எனவே,

[2017 ஜூலை 5

வளம் குன்றிய நிலப்பரப்பில் அதன் உற்பத்தி திறனை மீட்கும் பொருட்டு, மத்திய அரசின் பங்களிப்புடன் வளம் குன்றிய நிலங்களை சீர்திருத்துதல் என்ற திட்டத்தினை ஒரு முன்னோடி திட்டமாக தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் துணைத் திட்டமாக 2016-17 ஆம் ஆண்டில் செயல்படுத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் களர் மற்றும் உவர் நிலங்களில் மண்ணின் வளம் மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் நோக்குடன் குறிப்பிட்ட இடங்களுக்கு பொருத்தமான பணிகள் 1,100 எக்டர் பரப்பில் ரூ.6.67 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017-18 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், விழுப்புரம், இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் களர் மற்றும் உவர் நிலத்தினை சீர்திருத்தம் செய்ய இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.5 நீர் மேலாண்மை

தமிழ்நாடு குறைந்த அளவு நீர்வளமும், பருவ மழையும் உள்ள மாநிலமாகும். 80 சதவீதத்திற்கும் அதிகமான நீர் வளம் பாசனத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. நீர்ப்பாசன வேளாண்மை, கால்வாய்ப் பாசனம், ஏரிப் பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம் மூலமாக நடைபெறுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையானது கால்வாய், ஏரி மற்றும் கிணற்றுப் பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

### 3.5.1 நுண்ணீர்ப் பாசன உத்திகள்

தமிழகத்தில் பண்ணையளவில் நீர் ஆதாரத்தை அதிகரிக்கவும், நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்தவும், நுண்ணீர்ப் பாசன திட்டமானது பிரதம மந்திரி வேளாண் திட்டத்தில், “துளி நீரில் அதிக பயிர்”, என்ற பிரிவின்கீழ் அரசு தோட்டக்கலை மேம்பாட்டு முகமைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைமூலம் 2016-17 ஆம் ஆண்டில், நிறுவப்பட்ட நுண்ணீர்ப் பாசனப் பணிகளின் அளவீடுகளை சரிபார்க்கும் பணி வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 69,459 எக்டர் நிலப்பரப்பிற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2017 ஜூலை 5]

நுண்ணீர்ப் பாசன திட்டத்தினை மேற்கொள்ள 2017-18 ஆம் ஆண்டில், தொழில்நுட்ப ரீதியான பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. வடிவமைப்பு, ஒப்புதல் வழங்குதல், விலைப்புள்ளி சரிபார்த்தல், பயனாளிகளின் நிலத்தை முன் ஆய்வு செய்தல், அளவீடு எடுத்தல், அளவீடுகளை சரிபார்த்தல், அளவீடுகளை மேலாய்வு செய்தல் ஆகிய பணிகள் தொழில்நுட்ப ரீதியான பணிகளில் அடங்கும்.

### 3.5.2 நபார்டு நிதி உதவியுடன் சித்தாறு உப வடிநில பகுதிகளில் நீர்ப்பாசன கட்டமைப்புகளை புனரமைத்தல்

சித்தாறு உபவடி நிலப் பகுதிகளில் 40 சதவீதத்திற்கும் மேலாக மழையை மட்டுமே சார்ந்திருக்கும் புன்செய் நிலங்கள் உள்ளன. இவ்வுபவடிநிலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் வறண்ட மற்றும் பின்தங்கிய வட்டாரங்கள் உள்ளன. எனவே, மழைநீர் சேகரித்தல், கிணற்றுப் பாசனத்திற்கு உதவ நிலத்தடிநீர் செறிவூட்டுதல் மற்றும் அனைத்து நீர்ப்பாசன ஆதாரங்களின் மேலாண்மைக்குத் தேவையான பாசன உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின், மொத்த மதிப்பீடு ரூ.22.65 கோடியில், நபார்டு வங்கியின் நிதி உதவி ரூ.21.52 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.1.13 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2017-18 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 2017-18 ஆம் ஆண்டில் ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் தேவையான மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு திட்டப் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5.3 உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மையை நவீனமயமாக்குதல் திட்டம் (TNIAMP)

கால்வாய்ப் பாசனப் பகுதிகளில் வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மையை நவீனமயமாக்குதல் திட்டம் 2017-18 ஆம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டுகளுக்கு பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட

[2017 ஜூலை 5

உள்ளது. இத்திட்டத்தின்கீழ், 66 உபவடிநிலப் பகுதிகளில் முக்கிய பயிர் வளர்ச்சிக் காலங்களில் கூடுதல் பாசனத்திற்கு பண்ணைக் குட்டைகளை அமைக்கும் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் மேற்கொள்வதற்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2017-18 ஆம் ஆண்டில், ரூ.3 கோடி செலவில் 500 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**3.5.4 கால்வாய் மற்றும் ஏரி பாசனப் பகுதிகளில், பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் திட்டம்**

கால்வாய் மற்றும் ஏரி பாசனப் பகுதிகளில் வாய்க்கால்களில் நீர் வீணாவதை குறைக்கவும், தலைமடை முதல் கடைமடை விவசாயிகள் வரை சுழற்சி முறை நீர்ப்பாசன முறையை பயன்படுத்தி ஒரே சீராக நீரை பங்கிட்டுக் கொள்ளவும், மத்திய, மாநில அரசுகளின் சமஅளவு நிதிப்பங்களிப்புடன் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-81 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2015-16 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரியின் வேளாண்மைப் பாசனத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் என்ற துணைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பாசனப் திட்டங்களில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளான காரை வாய்க்கால்கள் அமைத்தல், நுண்ணீர்ப் பாசனத்திற்குரிய கட்டமைப்புகள் அமைத்தல், நீர்ப்பிரிவு தொட்டிகள் அமைத்து அடைப்பான் பொருத்துதல் மற்றும் வண்டிப் பாதைகள் அமைத்தல் போன்ற பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. சுழற்சிமுறை நீர்ப்பாசனத்தை நடைமுறைப்படுத்தவும், தொடர் பராமரிப்பை மேற்கொள்ளவும், பாசன நீரை பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு ஒரு முறை செயல்பாட்டு மானியம் வழங்கப்படுகிறது.

இதுவரை 36 பாசனப் பகுதிகளில் 9,41,004 எக்டர் பரப்பளவில் 2,014 பாசன நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அதற்கு ஒரு முறை செயல்பாட்டு மானியமாக ரூ.44.38 கோடி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வைப்பு தொகையாக வைக்கப்பட்டு



2017 ஜூலை 5]

அதன்மூலம் பாசன வாய்க்கால்கள் மற்றும் கட்டமைப்புகளின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2016-17 ஆம் ஆண்டில், 13,229 எக்டர் பரப்பில் ரூ.43.82 கோடி நிதியில் பண்ணை மேம்பாட்டு பணிகள் ஈரோடு மாவட்டத்தில் காளிங்கராயன் அணைக்கட்டு திட்டம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் மணிமுக்தா நதித் திட்டம், கடலூர் மாவட்டத்தில் பிலான்துறை அணைக்கட்டு திட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் எல்லீஸ் அணைக்கட்டுத் திட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு அணைக்கட்டு திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் களிங்கலார் நிசாபா நதித் திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் குதிரையார் நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 2017-18 ஆம் ஆண்டில் மத்திய அரசின் புதிய திட்டமான, "பாசனப் பகுதிகளில் உள்ள நீர்ப்பாசன இடைவெளிகளை இணைப்பதற்குரிய ஊக்குவிக்கும் திட்டம்" மூலம் மேற்கூறப்பட்ட 8 பாசனத் திட்டங்களில் மீதமுள்ள 19,066 எக்டர் பரப்பில் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.6 வேளாண்மையில் பசுமை ஆற்றல் பயன்பாடு (Green Energy Initiatives in Agriculture)**

தற்போது நிலவி வரும் பருவ நிலை மாற்றத்தினால் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ள புதிய முயற்சியாக பசுமை ஆற்றல் பயன்பாட்டினை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் உற்பத்தியாகும் மொத்த மின் சக்தியில் ஏறத்தாழ 20 சதவீதம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. மின் சக்தியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், வேளாண்மையில் சூரிய சக்தியின் பயன்பாட்டினை ஊக்குவிப்பது ஒரு சிறந்த தீர்வாகும். சூரிய சக்தியானது இயற்கையில் அதிக அளவில் கிடைக்கக் கூடிய ஒரு பசுமை சக்தியாகும். சூரிய வெப்ப சக்தியானது தமிழ் நாட்டில் அதிக அளவில் கிடைப்பதால் அதனை மின் சக்தியாக மாற்றி வேளாண் பணிகளுக்குப் பயன்படுத்துவது சிறந்த வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த சூரிய சக்தியை விவசாயிகள் வேளாண் பணிகளுக்கு பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் சூரியகூடார உலர்த்திகள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

### 3.6.1 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டு அமைப்புகளை வழங்கும் திட்டம்

சூரிய சக்தியின் பயன்பாட்டினை விவசாயத்திற்கு பிரபலப்படுத்தும் பொருட்டு 2013-14 ஆம் ஆண்டில் 500 எண்கள் நிலையான சூரிய தகடுகள் பொருத்தப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் 80 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு நிறுவும் திட்டம் ஒப்பளிக்கப்பட்டது. மேலும் சூரிய சத்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை பெருமளவில் ஊக்குவிக்கும் பொருட்டு 2013-14 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2,000 எண்கள் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் 80 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டங்களின்கீழ், 5 குதிரைத்திறன் கொண்ட 2,293 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் ரூ.80.77 கோடி மானியத்தில் விவசாயிகளுக்கு நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு நிறுவப்பட்டுள்ள சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகள் சிறப்பாக பயன்படுத்தி வருவதால் 5,730 எக்டர் விவசாயப் பரப்பு பயனடைந்துள்ளது. இதுவரை நிறுவப்பட்டுள்ள சூரியசக்தி பம்பு செட்டுகள் மொத்தம் 11 மெகாவாட் திறனுள்ளவை. அதன்மூலம் ஆண்டொன்றுக்கு 1.44 கோடி அலகுகள் மின் சக்தி சேமிக்கப்படும்.

விவசாயிகளின் தேவையினை கருத்தில் கொண்டு 2016-17 ஆம் ஆண்டில், 10 குதிரைத் திறன் வரை கொண்ட 500 எண்கள் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் 80 விழுக்காடு மானியத்தில் ரூ.21.90 கோடி செலவில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 2016-17 ஆம் ஆண்டில் 203 எண்கள் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் நிறுவப்பட்டு ரூ.6.06 கோடி அரசு மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பம்பு செட்டுகள் 2017-18 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.





இத்திட்டத்தின் பயன்களால் இத்திட்டத்திற்கான தேவையும் வரவேற்பும், அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு 2017-18 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.6.2 சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டம் (Provision of Solar Driers)

கடந்த 2016-17 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 132 சூரிய கூடார உலர்த்திகள் நிறுவப்பட்டு, ரூ.2.79 கோடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருச்சி, தஞ்சாவூர், விருதுநகர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விவசாயிகள், சூரிய கூடார உலர்த்திகள் அமைத்ததன்மூலம் வாழை, அன்னாசி, மாம்பழம் உள்ளிட்ட உலர் பழங்கள், கொப்பரை தேங்காய், வற்றல் மிளகாய், உலர் முருங்கை இலை, உலர் கறிவேப்பிலை ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட விளைபொருள்களை தயாரித்து விற்பனை செய்து அதிக இலாபம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 3.7 உள்கட்டமைப்பு மேம்பாடு

வேளாண்மைப் பொறியியல் துறையானது தமிழ்நாடு வேளாண்மை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து பண்ணை மேம்பாட்டுப் பணிகள், உள்கட்டமைப்பு பணிகள் உட்பட அனைத்து கட்டுமான பணிகளை தொழில்நுட்பத்தில் வழிநடத்தும் துறையாகவும், திட்டத்தினை செயல்படுத்தும் துறையாகவும் உள்ளது.

### 3.7.1 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம்

வேளாண்மைத் துறைகளை உள்ளடக்கிய அனைத்து சகோதரத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கப் பணிகள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இடுபொருட்கள் மற்றும் விவசாயிகள் நலன் சார்ந்த இதர திட்டங்கள் அனைத்தும் வட்டார அளவில் விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும்

[2017 ஜூலை 5

பொருட்டும், துறை சார்ந்த அனைத்து அலுவலர்களையும் விவசாய பெருமக்கள் ஒரே இடத்தில் தொடர்பு கொள்ளும் பொருட்டும் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டடப்பட்டு வருகின்றன.

வேளாண்மை துறைக்காக, 50 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களை நபார்டு உட்கட்டமைப்பு 20-வது நிதி உதவியுடனும், 46 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் நிதி உதவியுடனும் வேளாண்மைப் பொறியியல் துறையால் கட்டடப்பட்டு வருகின்றன.

### 3.7.2 மண் பரிசோதனை ஆய்வகம், உரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையம்

வேளாண்மைத் துறைக்காக 7 திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் புனரமைப்பு பணிகள், 7 இடங்களில் மண்பரிசோதனை ஆய்வகம் மற்றும் உரக் கட்டுபாட்டு ஆய்வகம் அமைக்கும் பணிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் கட்டடப்பட்டு வருகிறது.

மேலும், 2017-18 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ், 6 திரவ உயிர் உர உற்பத்தி மையங்களுக்கு சேமிப்பு கிடங்குகள் வேளாண்மைத் துறைக்காக கட்டப்பட உள்ளன.

### 3.7.3 வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைக்கான பண்ணை உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்

வேளாண்மைப் பொறியியல் துறை 41 மாநில விதைப் பண்ணைகள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளை வேளாண்மைத் துறைக்காக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள தோட்டக்கலைத் துறையின் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் 17 பணிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மற்றும் நபார்டு உட்கட்டமைப்பு 22-வது நிதி உதவியின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2017-18 ஆம் நிதியாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) பண்ணை வருவாய் கணக்கு மற்றும் நபார்டு



2017 ஜூலை 5]

வங்கி திட்டத்தின்மூலம் தோட்டக்கலைத்துறையின்கீழ் வரும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் (State Hortculture Farm) 59 பணிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், இத்துறையின்மூலம் தோட்டக்கலைத் துறைக்காக 10 எண்கள் மாவட்ட தோட்டக்கலைத் தகவல் மற்றும் பயிற்சி மையங்கள், 5 எண்கள் மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையக் கட்டடங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

### 3.7.4 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையம்

விவசாயத்தில் வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்களான மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மை கட்டமைப்புகள், வேளாண்மை இயந்திரமயமாக்குதல், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி மற்றும் தொழில்நுட்ப மேலாண்மை மற்றும் சூரிய சக்தியின் பயன்பாடு போன்றவற்றினை விவசாயிகளிடையே பிரபலமடைய செய்யும் வகையிலும், விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்களை அறிமுகப்படுத்தவும், செயல் விளக்கம் செய்வதற்கும், வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகளை காட்சிப்படுத்தவும், பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்த விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுத்து வேளாண் உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் அமைப்பது அத்தியாவசியமானதாகும்.

2017-18 ஆம் நிதியாண்டில், 30 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள், மையம் ஒன்றிற்கு ரூ.75 இலட்சம் வீதம் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மொத்தம் ரூ.22.50 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

### 3.8 நிருவாக அமைப்பு (Establishment)

தலைமையிடத்தில் ஒரு தலைமைப் பொறியாளர்-பொது, ஒரு தலைமைப் பொறியாளர்-நதிப்பள்ளத்தாக்கு திட்டம், மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இரண்டு செயற் பொறியாளர்கள் உள்ளனர்.

[2017 ஜூலை 5

மண்டல அளவில் 11 கண்காணிப்புப் பொறியாளர்கள், மாவட்ட அளவில் 31 செயற் பொறியாளர்கள், சிறப்பு திட்டங்களுக்காக 5 செயற் பொறியாளர்கள், வருவாய் கோட்ட அளவிலும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கும் 125 உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் 3836 இதர பணியாளர்கள் இத்துறையில் உள்ளனர்.

மண்டல அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை தொழில்நுட்பத்துடன் நிருவகிக்கும் பொறுப்பு, கண்காணிப்புப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாவட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், அந்தந்த மாவட்ட செயற் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், வருவாய் கோட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை செயல்படுத்துவது உதவி செயற் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

**அட்டவணை 3.3: பணியாளர்களின் விவரம்**

| பதவியின் பெயர் | எண்கள் |
|---|---|
| தலைமைப் பொறியாளர் | 2 |
| கண்காணிப்புப் பொறியாளர் | 14 |
| செயற் பொறியாளர் | 38 |
| உதவி செயற் பொறியாளர் | 125 |
| இதர பணியாளர்கள் | 3,836 |
| மொத்தம் | 4,015 |

## 4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

### 4.1 முன்னுரை

தமிழக அரசு ஏழை மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய அரசின் நலத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கக் கல்வி, வேளாண்மை வணிக மேம்பாடு,



2017 ஜூலை 5]

வேளாண்மை கொள்கை ஆதரவு மற்றும் திறந்த வெளி மற்றும் தொலைதூரக் கல்வி மூலமாக இளைஞர்களின், வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வேளாண் வணிகம் குறித்த வேளாண்மை செயல்திறனை மேம்படுத்துவது ஆகிய ஆறு பெரும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன்மூலம், உணவு உற்பத்தியில் ஏற்படுகின்ற சவால்களை எதிர் கொண்டு விவசாயத் தொழிலை ஒரு இலாபகரமான தொழிலாக மாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

### 4.2 உட்கட்டுமானப் பணிகள்

கோயம்புத்தூரில், தேசிய தரக்கட்டுப்பாடு அளவீட்டு ஆய்வகம், விரிவுரை அரங்கம், பூச்சிகள் அருங்காட்சியகம், முதுநிலை விரிவுரை அரங்கம் மற்றும் ஆய்வகம், வளம் குன்றா அங்கக வேளாண்மை ஆய்வுக்கூடம் மற்றும் பல்நோக்கு ஊடக ஆய்வகம் ஆகிய உட்கட்டுமானப் பணிகள் ரூபாய் 10.81 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணாக்கர் தங்கும் விடுதி, நூலகம், நவீன சமையல்அறை மற்றும் உணவுக்கூடம், ரைசோட்ரான் ஆய்வகக்கூடம், திசு வளர்ப்பு கூடம், மூலக்கூறு இனப்பெருக்க மகத்துவ மையம் மற்றும் நவீன மரபியல் ஆய்வுக்கூடங்கள், நிருவாகக் கட்டடங்கள், பண்ணை அலுவலகங்கள், பயிலகம், தேர்வு மையங்களுக்காகவும், எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மொத்தம், ரூபாய் 206.75 கோடிக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.3 வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது 13 இளமறிவியல், 33 மூதறிவியல் மற்றும் 26 முனைவர் பட்டப் படிப்புகள், 27 பகுதி நேர ஆராய்ச்சி சார்ந்த முனைவர் பட்டப் படிப்புகள் மற்றும் நான்கு ஒருங்கிணைந்த முனைவர் பட்டப் படிப்புகள் ஆகியவற்றை தனது 14 கல்லூரிகள்மூலம் வழங்கி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் மூன்று உறுப்புப் பட்டயப்படிப்பு நிறுவனங்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப்படிப்பினை வழங்கி வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், பட்டயப்படிப்பில் 584 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி

[2017 ஜூலை 5

பெற்றுள்ளனர். புதிதாக 503 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இளநிலைப் பட்டப்படிப்பில் 1453 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதிதாக 2879 (உறுப்புக் கல்லூரிகளில் 1366 மற்றும் சார்புக் கல்லூரிகளில் 1513) மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். முதுநிலைப் பட்டப் படிப்பில் 494 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதிதாக 464 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். முனைவர் பட்டப் படிப்பில் 108 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதிதாக 178 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இளநிலை பட்டப்படிப்பிற்கான பெறப்பட்ட விண்ணப்பங்கள் 2011-12 ஆம் ஆண்டில் 9,652 இல் இருந்து 2017-18 ஆம் ஆண்டில் 49,039 ஆக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக அனுமதிக்கப்பட்ட சேர்க்கை எண்ணிக்கை 1,365 இல் இருந்து 3,080 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1 : மாவட்டம் வாரியாக உறுப்புக் கல்லூரிகள்**

| வ. எண் | மாவட்டம் | கல்லூரியின் பெயர் |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் |
| 2. | | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் |
| 3. | | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் |
| 4. | | வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் |
| 5. | மதுரை | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை |
| 6. | | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை |



2017 ஜூலை 5]

| வ. எண் | மாவட்டம் | கல்லூரியின் பெயர் |
|---|---|---|
| 7. | திருச்சிராப்பள்ளி | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் குட்டப்பட்டு |
| 8. | | மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் குட்டப்பட்டு |
| 9. | | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் |
| 10. | தஞ்சாவூர் | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை |
| 11. | புதுக்கோட்டை | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை |
| 12. | திருவண்ணாமலை | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் |
| 13. | தேனி | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் |
| 14. | தூத்துக்குடி | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் |

### 4.3.1 திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி பாடத்திட்டங்கள்

திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி முறையில் 24 சான்றிதழ் பாடங்களையும் மூன்று முதுநிலை பட்டப்படிப்பும் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு ஒரு இளநிலை பண்ணை தொழில் நுட்பம் (Bachelor of Farm Technology) மற்றும் புதிதாக துவங்கப்பட்ட முதுநிலை பண்ணை தொழில்நுட்பம் (Master of Farm Technology) பட்டப் படிப்பும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆறு முதுநிலை

[2017 ஜூலை 5

பட்டயப்படிப்பும், இடுபொருள் விற்பனையாளர்களுக்கான பட்டயப்படிப்பும் வேளாண்மையில் பல்லூடகங்கள் குறித்தப் பட்டயப்படிப்புமாக இரண்டு புதிய பட்டயப்படிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.3.2 மாணவர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தனது மாணவர் நல இயக்ககம் வாயிலாக வேலைவாய்ப்பு ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. இவ்வியக்ககத்தின் மூலமாக, 2016-17 ஆம் ஆண்டு 193 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவை; வேளாண் தொழில் நிறுவனங்கள் (61), விதை நிறுவனங்கள் (2), உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் (9), அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் (30), மலைத் தோட்டப்பயிர்கள் நிறுவனம் (1), வங்கிகள் (81) மற்றும் இதர நிறுவனங்கள் (9) ஆகும். பட்டதாரிகளின் மென்திறனை மேம்படுத்த அதி நவீன கருத்துப் பரிமாற்ற ஆய்வகத்தையும் இவ்வியக்ககம் கொண்டுள்ளது. மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள் மற்றும் மென்திறன் பயிற்சிப் பட்டறைகள் போன்றவை வேலைவாய்ப்பிற்காக நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.4 தரவரிசை நிலை மற்றும் விருதுகள்

### 4.4.1 கல்வி நிறுவனங்களில் தரவரிசை நிலை

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ளதாகவும், கல்வி நிறுவனங்களின் தர வரிசையில் 2016-17 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் 17-வது இடத்திலும் இருப்பதாக மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கூட்டமைப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

க்யூஎஸ்-பிரிக்ஸ் உலகளாவிய தரவரிசை பட்டியலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்க நாடுகளில் (BRICS) உள்ள கல்வி நிறுவனங்களிடையே 130-140-வது நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளது.



2017 ஜூலை 5]

மேலும், 2016 ஆம் ஆண்டு கேரியர் 360 நிறுவனம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ளதாக தெரிவித்துள்ளது.

### 4.4.2 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட விருதுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016-17 ஆம் ஆண்டு பின்வரும் ஆறு விருதுகளைப் பெற்றுள்ளது. அவை; 2016-17 ஆம் ஆண்டில் காவிரி டெல்டா பகுதியில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த அர்ப்பணித்தமைக்காக, தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு தெற்காசிய தானிய அமைப்புகளின் முனைப்பு வழங்கிய தனிச்சிறப்பு பாராட்டு விருது; சிறந்த வட்டார அளவில் வானிலை முன்னறிவிப்பிற்காக கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வானிலை ஆராய்ச்சி மையத்திற்கு வழங்கப்பட்ட இந்தியாவின் சிறந்த 100 திட்டங்கள் வரிசையில், ஸ்கோச் தரவரிசைப்பட்டியல் தகுதிச் சான்று; சிறந்த வேளாண் காடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மதிப்புச் சங்கிலித் திட்டத்திற்காக மேட்டுப்பாளையம் வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்பட்ட ஸ்கோச் தரவரிசைப்பட்டியல் தகுதிச் சான்று ஆகியனவாகும். சிறுதானியங்கள் பதனிடும் தொழில்நுட்பத்தினை பிரபலப்படுத்தியதற்காக தேசிய அளவிலான 2016 ஆம் ஆண்டின் மகேந்திரா சம்ருதி விருது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்திற்கு வழங்கப்பட்டது. அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் சிறந்த களைமேலாண்மை மையத்திற்கான 2016-17 ஆம் ஆண்டிற்கான விருதினை களைமேலாண்மை மையம், உழவியல் துறைக்கு ஜபல்பூரில் உள்ள களை ஆராய்ச்சி இயக்குநரகத்தால் வழங்கப்பட்டது. மேலும், அகில இந்திய அளவில் 2015-16 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சிறந்த எண்ணெய் வித்துப் பயிர்கள் முன்னிலை செயல் விளக்கங்களுக்கான விருதினை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வேளாண்மை விரிவாக்கத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கடலூர் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வழங்கியது.

[2017 ஜூலை 5

## 4.5 வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 14 கல்லூரிகள் அந்தந்த பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பல்கலைக்கழகம் இதுவரை 819 புதிய பயிர் இரகங்கள், 165 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மற்றும் 1,527 பயிர் மேலாண்மைத் தொழில்நுட்பங்களை வெளியிட்டுள்ளது.

### 4.5.1 புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016-17 ஆம் ஆண்டு 12 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது.

**அட்டவணை 4.2 : புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள்**

| வ. எண் | பயிர் இரகம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| 1. | நெல் கோ 52 | 130 - 135 நாட்களில் முதிர்ச்சி அடையும். குலைநோய் மற்றும் இலையுறை கருகல் நோய்களுக்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. பிந்திய சம்பா/தாளடி பருவங்களில் பயிரிட ஏற்றது. |
| 2. | குதிரைவாலி எம்டியு 1 | 95 - 100 நாட்களில் முதிர்வடையும். இறவையில் எக்டருக்கு 2200 - 2500 கிலோவும் மானாவாரியில் 1500-1700 கிலோவும் தானிய மகசூல் தரவல்லது. |
| 3. | துவரை கோ 8 | 170 - 180 நாட்களில் முதிவர்டையும். மலட்டுத் தேமல் நச்சுயிரி நோய் மற்றும் வேரழுகல் நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மையுடையது. |
| 4. | உளுந்து ஏடீடி 6 | 65 - 70 நாட்களில் முதிர்வடையும். எக்டருக்கு 741 கிலோ தானிய மகசூல் தரவல்லது. மஞ்சள் தேமல் நச்சுயிரி நோய், இலைச்சுருள் நச்சுயிரி நோய் மற்றும் சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. |



2017 ஜூலை 5]

| வ. எண் | பயிர் இரகம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| 5. | உளுந்து கேகேஎம் 1 | 65-70 நாட்களில் முதிர்வடையும். எக்டருக்கு 607 கிலோ தானிய மகசூல் தரவல்லது. மஞ்சள் தேமல் நச்சுயிரி நோய், காய்துளைப்பானுக்கு மற்றும் வேர்முடிச்சு நூற்புழுவிற்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. |
| 6. | எள் விஆர்ஐ 3 | வெள்ளை நிற விதைகளை கொண்ட எள் இரகமாகும். இது 75-80 நாட்களில் முதிர்வடையும். விதை மகசூல் எக்டருக்கு கோடையில் 1055 கிலோ தரவல்லது. |
| 7. | ஆமணக்கு ஒய்ஆர்சிஎச் 2 | சராசரியாக எக்டருக்கு 2089 கிலோ ஆமணக்கு விதை தரவல்லது. வாடல் நோய்க்கு எதிர்ப்புத் திறனும் காவடிப்புழு, காய்ப்புழு, தத்துப்பூச்சி மற்றும் புரடினியாப்புழு போன்ற பூச்சி தாக்குதலுக்கு தாங்கி வளரும் தன்மை கொண்டது. |
| 8. | பருத்தி கே 12 | உயர் நடுத்தர இழை நீளத்துடன் அதிக பருத்தி மகசூல் தரவல்லது. சராசரியாக எக்டருக்கு 1193 கிலோ பருத்தி மகசூல் தரவல்லது. தத்துப்பூச்சிக்கு எதிர்ப்புத் திறனும் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொண்டது. |
| 9. | கரும்பு கோக(க) 25 | கரும்பு மகசூல் எக்டருக்கு 153.65 டன் தரவல்லது. செவ்வழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புதிறன் கொண்டு, வறட்சியை தாங்கி வளரக்கூடியது. |

| வ. எண் | பயிர் இரகம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| 10. | புடலை கோ எச் 1 | சராசரியாக செடிக்கு 27.5 கிலோ மகசூல் தரவல்லது. அடிச்சாம்பல் நோய், சாம்பல் நோய் மற்றும் ஆந்திரக்நோஸ் நோய் போன்ற நோய்களின் தாக்கம் குறைவாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. |
| 11. | சுரைக்காய் பிஎல்ஆர் 1 | 130 - 135 நாட்களில் முதிர்வடையும். எக்டருக்கு சராசரியாக 32.4 டன் சத்து மிக்க காய்கள் மகசூல் தரவல்லது. |
| 12. | பிரஞ்சு பீன்ஸ் ஊட்டி 3 | 70 - 90 நாட்களில் முதிர்வடையும். காய் மகசூல் எக்டருக்கு 39.81 டன்கள் ஆகும். |

**4.5.2 புதிதாக வெளியிடப்பட்ட பண்ணை இயந்திரம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016-17 ஆம் ஆண்டு ஒரு பண்ணை இயந்திரம் வெளியிட்டுள்ளது.

**அட்டவணை 4.3: புதிதாக வெளியிடப்பட்ட பண்ணை இயந்திரம்**

| வ. எண் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|
| 1. | நெல்லிக்காய் விதை நீக்கும் இயந்திரம் மணிக்கு 100 கிலோ காய்களில் உள்ள விதைகளை நீக்கும். காய்களில் உள்ள விதையை நீக்க ஒரு கிலோவிற்கு ரூபாய் 3 செலவாகும். இவ்வியந்திரத்தின் விலை ரூபாய் 60,000 ஆகும். |

**4.5.3 புதிதாக வெளியிடப்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்கள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016-17 ஆம் ஆண்டு நான்கு புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்களை வெளியிட்டுள்ளது.





**அட்டவணை 4.4: புதிதாக வெளியிடப்பட்ட மேலாண்மைத் தொழில் நுட்பங்கள்**

| வ. எண் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|
| 1. | ஒருங்கிணைந்த சூரிய கூடார மற்றும் உயிர் எரிபொருள் உலர்த்தி இதில் ஒருமுறைக்கு இரண்டு டன் கொப்பரை அல்லது மஞ்சள் உலர்த்தலாம். |
| 2. | மாம்பழத்தின் வைப்புத்திறனை நீட்டிக்க அறுவடைக்கு முன் தெளிக்கக்கூடிய புத்துணர்ச்சி தெளிப்புக் கலவை அறுவடைக்கு முன் 30 மற்றும் 15 நாட்களில் 2 சத புத்துணர்ச்சி தெளிப்புக் கலவையை தெளிப்பதன்மூலம் மாம்பழங்களின் வைப்புத்திறன் இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கும் அதிகமாக நீட்டிக்க இயலும். |
| 3. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆற்றல் மென்பொருள் 2016 ஆற்றலின் அடிப்படையில் வேளாண்மைத் தொழில்நுட்பங்களின் முடிவுகளை மேற்கொள்ள உதவும். |
| 4. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வானிலை மென்பொருள் 2016 வானிலை சார்ந்த நீண்ட கால தகவல்களை சேமித்து வைக்கவும் ஆய்வு செய்யவும் உதவும். வானிலை சார்ந்த இம் மென்பொருள் சாமானியர்கள் கூட பயன்படுத்த ஏதுவாக உள்ளது. |

**4.5.4 ஆராய்ச்சித் திட்டங்கள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு நிதி வழங்குவோரிடமிருந்து பெறப்படும் நிதியினை சீரிய நோக்குடன் ஆராய்ச்சித் திட்டங்களில் பயன்படுத்தி வருகின்றது.

**4.5.4.1 தமிழ்நாடு புதுமை நிதித் திட்டங்கள் (2016-17)**

1. இயற்கை சாயம் தரவல்ல அனட்டோ மரத்தினை பிரபலப்படுத்துதல், அறுவடைக்குப் பின் பதனிடுதல் மற்றும் தொழிற்சாலை உபயோகம் குறித்த திட்டம் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 2.24 கோடி)

[2017 ஜூலை 5

2. சிறுதானியங்கள் உற்பத்தி பெருக்கம் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 1.878 கோடி)

3. பணிச்சூழலை மேம்படுத்துவதன் வாயிலாக பண்ணையில் பணிபுரியும் மகளிரின் வேலைப் பளுவை மட்டுப்படுத்துதல் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 1.77 கோடி)

4. தமிழ்நாட்டின் செம்மண் பாங்கான பகுதிகளுக்கு ஏற்ற மாதிரி ஒருங்கிணைந்த அங்கக மேய்ச்சல் நிலக் காடுகளை சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 3.95 கோடி)

#### 4.5.4.2 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (2016-17)

1. கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரில் மா ஆராய்ச்சி மையம் நிறுவ (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 2 கோடி)

2. மூன்றாம் தலைமுறை இளைஞர்களுக்கு தொன்மை வாய்ந்த வேளாண் தொழில்நுட்பங்களை பல் நோக்கு பண்ணையத்தின்மூலம் காட்சிப் படுத்துதல் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 7 கோடி)

3. திருச்சிராப்பள்ளி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உழவர் விடுதி அமைத்தல் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 2.57 கோடி)

4. கொல்லிமலை பகுதியில் அங்கக முறைப்படி கருமிளகு உற்பத்தி செய்தல் (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 21.389 இலட்சம்)

5. டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம். (ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூபாய் 53.50 இலட்சம்).

### 4.6 வேளாண் விரிவாக்கக் கல்வி

#### 4.6.1 வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (KVK) செயல்படுகின்றன.



2017 ஜூலை 5]

மொத்தம், 117 பண்ணை வழி ஆய்வுகள் 285 எக்டரில் 498 விவசாயிகள் பயனடையும் வகையிலும், புதியதாக வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் 363 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் 793 இடங்களிலும் 2,237 விவசாயிகள் பயனடையும் வகையிலும் செயல்படுத்தப்பட்டன. மேலும், 481 வளாக மற்றும் புற வளாக பயிற்சிகள் 16,667 உழவர்களுக்கும் 30 தொழில்நுட்பப் பயிற்சிகள் 2,867 உழவர்களுக்கும் 2016-17 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டன.

**அட்டவணை 4.5 : வேளாண்மை அறிவியல் நிலையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | கடலூர் | விருத்தாச்சலம் |
| 2. | தருமபுரி | பாப்பாரப்பட்டி |
| 3. | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை |
| 4. | மதுரை | மதுரை |
| 5. | நாகப்பட்டினம் | சிக்கல் |
| 6. | புதுக்கோட்டை | வம்பன் |
| 7. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 8. | சேலம் | சந்தியூர் |
| 9. | திருவள்ளூர் | திரூர் |
| 10. | திருவாரூர் | நீடாமங்கலம் |
| 11. | திருச்சிராப்பள்ளி | சிறுகமணி |
| 12. | வேலூர் | விரிஞ்சிபுரம் |
| 13. | விழுப்புரம் | திண்டிவனம் |
| 14. | விருதுநகர் | அருப்புக்கோட்டை |

#### 4.6.2 கல்வி ஊடக மையம்

கல்வி ஊடக மையத்தின்மூலம் 2016-17 ஆம் ஆண்டில், 125 காணொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன, 278 காணொலிப் படங்கள் உழவர்களுக்கு காண்பிக்கப்பட்டன, 317 காணொலிப் பாடங்கள் விற்கப்பட்டன.

[2017 ஜூலை 5

**4.6.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் ஒன்பது இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஏறத்தாழ 40 இலட்சம் பார்வையாளர்கள் இத்தளத்தினை பயன்படுத்தி உள்ளனர்.

**4.6.4 வேளாண்மையில் ஆன்ட்ராய்டு செயலிகளின் பயன்பாடு**

நெல், கரும்பு, கேழ்வரகு, தென்னை, வாழை மற்றும் கால்நடை தொழில் சார்ந்த பசு மற்றும் எருமை, ஆடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 12 வகையான ஆன்ட்ராய்டு செயலி கூகுள் அங்காடியிலும் (Google play Store) எம்கவ் (mgov) செயலி அங்காடியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**4.6.5 தமிழ்நாட்டில் இ-வேளாண்மை திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துதல்**

தமிழ்நாட்டில் இ-வேளாண்மை திட்டம் 13 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மைத் துறையும் இணைந்து பண்ணைப் பயிர் மேலாண்மை குறித்த கைபேசிமூலம் செயல்படும் ஆன்ட்ராய்டு செயலி உருவாக்கப்பட்டு 100 வட்டாரங்களில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இதன் உபயோகம் குறித்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மொத்தம், 2,939 தொழில்நுட்ப அறிவுரைகள் பரவலாக்கப்பட்டன.

**4.6.6 வேளாண் தொழில்நுட்ப தகவல் மையம்**

ஒற்றை சாளர முறையில் உழவர்களுக்கு இடுபொருட்களையும், தொழில்நுட்பங்களையும் வழங்கி வருகின்றது. இம்மையம் விதைகள், நடவுப்பொருட்கள், உயிர் உரங்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் தொழில்நுட்ப புத்தகங்களை உழவர்கள் பயன்பாட்டிற்கு விற்பனை செய்து வருகின்றது. வேளாண் தொழில்நுட்ப தகவல் மையம் 2016-17 ஆம் ஆண்டில் பல்வேறு இடுபொருட்களான பயிர் வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் பயிர் விதைகள் மூலமாக ரூபாய் 3.18 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.



2017 ஜூலை 5]

**4.6.7 உழவர் உறுதுணை மையம்**

வேளாண்மைத் தொழில்நுட்பங்களை விஞ்ஞானிகளிடம் இருந்து முதன்மைத் தகவல்களாக உழவர்களுக்கு வழங்கி வருகின்றது. சராசரியாக மாதத்திற்கு 230 உழவர்கள் மண் மற்றும் நீர் ஆய்விற்காகவும் பண்ணை சார்ந்த ஆலோசனைகளைப் பெறவும் இம்மையத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**4.6.8 உழவரின் வளரும் வேளாண்மை இதழ்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 1975 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்படும் தமிழ் மாத இதழ். இவ்விதழ் 12,865 சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது.

**4.6.9 உழவர் பெருவிழா / கருத்துக் காட்சிகள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் நடத்திய உலக மண்வள நாளில் 2,173 உழவர்கள் பங்கேற்றனர்.

மேலும், 667 மண்வள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்குகள், செயல்விளக்கங்கள், கண்காட்சி மற்றும் காணொளி காட்சிகள் நடத்தப்பட்டன.

கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் நடந்த செயல் விளக்கங்கள் மற்றும் வேளாண்மை கருத்துக்காட்சி - 2016 இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கலந்துகொண்டது. இதை விவசாயிகள் உட்பட 25,000-க்கும் மேற்பட்டோர் பார்த்துப் பயனடைந்தனர்.

மாநில அளவிலான உழவர் தினவிழா 8-1-2016 அன்று கோயம்புத்தூர், பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது. இதில் 5,000 உழவர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டனர்.

குறுவை (காரிப்) மற்றும் சம்பா-தாளடி (ரபி) முன் பருவ பயிற்சிகள் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்களில் நடத்தப்பட்டன. இதில் 7,900 விவசாயிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

[2017 ஜுலை 5

**4.6.10 விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)** மூலம் விவசாயிகள் 1551 அல்லது 1800 - 180 - 1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. 2016-17 ஆம் ஆண்டில் மொத்தம் 23,000 தொலைபேசி அழைப்புகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### 4.7 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், சென்னை

சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் உழவர்கள், இளைஞர்கள் மற்றும் நகர்ப்புற ஆண், பெண் இருபாலாரும் பயன்பெறும் வண்ணம், பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. 2016 - 2017 ஆம் ஆண்டு 65 பயிற்சிகள் 31 பல்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்டு 2,231 நபர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிகள் மாடித் தோட்டம், வீட்டு காற்கறி தோட்டம் அமைத்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், உள்ளரங்க தாவரங்களைப் பராமரித்தல், காளான் உற்பத்தி, மண்புழு உரம் தயாரித்தல், அங்கக பண்ணையம், மசாலா பொருட்கள் தயாரித்தல், அடுமனைப் பொருட்கள் போன்ற தலைப்புகளில் நடத்தப்பட்டுள்ளன.

### 4.8 தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 2016-17 ஆம் ஆண்டு, 175 முக்கியமான பயிர் இரகங்களில், 1,719 குவிண்டால் வல்லுநர் விதைகள், 1,352 குவிண்டால் ஆதார விதைகள், 3,241 குவிண்டால் சான்றிதழ் / உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது. மேலும், 28.93 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது. மேலும், தமிழகத்தில் 11 இடங்களில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி விதை விற்பனை இயந்திரங்கள்மூலம், காய்கறி மற்றும் மலர் பயிர் விதைகள் ஏழு இலட்சம் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2017-18 ஆம் ஆண்டு, 1,880 குவிண்டால் வல்லுநர் விதைகள், 6,467 குவிண்டால் ஆதார விதைகள், 25,750 குவிண்டால் சான்றிதழ் / உண்மை நிலை விதைகளும் 29.61 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2017 ஜுலை 5]

### 4.9 வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையம்

வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையம், தானியங்கி வானிலை நிலையங்களில் இருந்து பெறப்படும் புள்ளிவிவரங்களை தொகுத்து ஆய்வு செய்து வட்டார அளவில் மத்திய கால வானிலை முன்னறிவிப்புகள் வானிலை சார்ந்த பண்ணையம் செய்வதற்காக வெளியிடுகின்றது. வேளாண்மை சார்ந்த ஆலோசனைகள் தொகுக்கப்பட்டு வாரம் இருமுறை அறிவிப்புகளாக வெளியிடப்படுகின்றன.

2016-17 ஆம் ஆண்டில் மொத்தம் 102 தகவல் குறிப்புகள் ஒவ்வொன்றும் நான்கு பரிந்துரைகளுடன் ஆறு தலைப்புகளான வேளாண்மைப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள், கால்நடைகள், கோழி மற்றும் இதர பறவைகள் மற்றும் காலநிலை குறித்த தகவல்கள் தயாரிக்கப்பட்டு 102 குறுந்தகவல்களாக ஒரு முறைக்கு 8.68 இலட்சம் உழவர்களுக்கு (ஆக மொத்தம் 8.85 கோடி தகவல் பரிமாற்றங்கள்) அனுப்பப்பட்டுள்ளன.

### 4.10 விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் வாயிலாக வேளாண் பொருட்களின் உள்ளூர் சந்தை விலைகளை விதைப்பிற்கு முன்பும் அறுவடைக்கு முன்பும் ஆக இரண்டு முறை முன்னறிவிப்பு செய்கின்றது. இத்தகவல்கள் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுகின்றன. இம்மையம், 24 பயிர்கள் மற்றும் பொருட்களான மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, கம்பு, உளுந்து, கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தேங்காய், கொப்பரைத் தேங்காய், பருத்தி, உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், சிறிய வெங்காயம், மஞ்சள், கொத்தமல்லி, மிளகாய் வற்றல், வாழைப்பழம் (நேந்திரன் மற்றும் பூவன்) ஆகியவற்றிற்கு விலை முன்னறிவிப்பு செய்கின்றது.

2016-17 ஆம் ஆண்டு பயிர்களைப் பொறுத்து 23 ஆலோசனைகள் விதைப்பதற்கு முன்பும் 39 ஆலோசனைகள் அறுவடைக்கு முன்பும் சராசரியாக நான்கு இலட்சம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. விதைப்பதற்கு முன்விலை முன்னறிவிப்பானது 90 விழுக்காடு மற்றும் அறுவடைக்கு முன்

[2017 ஜூலை 5

முன்னறிவிப்பானது 94 விழுக்காடு துல்லியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

### 4.11 வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், பல்கலைக்கழகம் உருவாக்கிய தொழில்நுட்பங்களை வணிகப்படுத்தி வேளாண்மை சார்ந்த புதிய நிறுவனங்களைப் பேணிக் காத்து வருகிறது. நூறு நிறுவனங்களுக்கும் மேலாக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் பதிவு செய்துள்ளன. மேலும், 25 தொழில்நுட்பங்கள் வணிகப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்மூலம், பின்வரும் தொழில்நுட்பங்கள்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தென்னை டானிக், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பஞ்சகாவ்யா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மா நுண்ணுயிரிகள்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பூச்சி விரட்டி மற்றும் கம்பு மாவில் உடனடியாக உணவு தயாரிக்கும் கலவை ஆகியன வணிகப்படுத்தப்பட்டன. 2016-17 ஆம் ஆண்டு மக்காச்சோள வீரியஒட்டு கோ எச் (ம) 8 விதை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் கரும்புச் சாற்றினை பாட்டிலில் அடைக்கும் தொழில்நுட்பம் ஆகியவை வணிகப்படுத்தப்பட்டன.

### 4.12 அறிவுசார் சொத்துரிமைக் காப்புரிமை (Intellectual Property Rights)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இதுவரை ஏழு காப்புரிமைகளைப்(Patent) பெறவும், மேலும் 59 கண்டுபிடிப்புகளை பதிவு செய்யவும் உதவியுள்ளது. பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை பாதுகாப்பு சட்டத்தில் நடைமுறையில் உள்ள 64 இரகங்களுக்கு காப்புரிமை பெற பதிந்துள்ளது.

### 4.13 பேராசிரியர் பணியிடங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் 14 கல்லூரிகள், 39 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஆசிரியர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒப்பளிக்கப்பட்ட 1,396 இடங்களில், இயக்குநர்/ முதன்மையர் (46), பேராசிரியர்கள் (423), இணைப் பேராசிரியர்கள் (74) மற்றும் துணைப் பேராசிரியர்கள் (635)



2017 ஜூலை 5]

பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 218 காலி இடங்களை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் தொடர்ந்து ஆய்வு செய்து புதிய கண்டுபிடிப்புகளை அளித்து வருகின்றது.

## 5. சர்க்கரை

சர்க்கரை உற்பத்திக்கு இன்றியமையாத கரும்புப்பயிர், தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு 3.17 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு, சராசரியாக 336 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு இந்திய அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் நான்காம் இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மற்றும் 25 தனியார் சர்க்கரை ஆலைகள் ஆக மொத்தம் 43 சர்க்கரை ஆலைகளால் கரும்பு அரவை செய்யப்படுகிறது.

கரும்பு விளைச்சலையும் விளைச்சல் திறனையும் அதிகரித்து கரும்பு விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்ய, நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டம்,நுண்ணீர்ப் பாசனம் மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகிய தொழில்நுட்ப உத்திகள் அரசு மானியத்துடன் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்தொழில்நுட்ப உத்திகள் இடுபொருட்களான விதை, உரம் மற்றும் பாசனநீர் ஆகியவற்றினைத் தேவையான அளவு பயன்படுத்தவும், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையைச் சீர்செய்யவும் உதவுகின்றன.

கரும்புப்பயிருக்கு அதிக நீர் தேவைப்படுவதாலும், கரும்பு சாகுபடி பரப்பும் குறைந்து வருவதாலும், கரும்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் பரப்பளவு குறைவினால் ஏற்படும் உற்பத்தி இழப்பினை ஈடுகட்டவும் 2017-18 ஆம் ஆண்டில் 35,000 ஏக்கர் பரப்பளவிற்கு கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசன முறையை ஏற்படுத்தவும், 40,000 ஏக்கர் பரப்பளவில் நீடித்த நவீன சாகுபடித் திட்டத்தை விரிவுபடுத்திடவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டத்தின்கீழ் ரூ.30 கோடி மானிய உதவியில் 1,600 நிழல் வலைக் கூடங்கள் அமைக்கவும், 24 கோடி கரும்பு பருசீவல் நாற்றுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம்,

வேளாண்மைத் துறையுடன் இணைந்து சர்க்கரைத் துறையால் சர்க்கரை ஆலைகள்மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் மாவட்டம் வாரியாக கரும்பு சாகுபடி பரப்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் மற்றும் நுண்ணீர்ப்பாசனம் ஆகியன நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:





| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | சொட்டு நீர்ப்பாசனம் உள்ளடக்கிய நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் நடைமுறைப் படுத்த திட்டமிடப் பட்டுள்ள பரப்பு (ஏக்கரில்) | நுண்ணீர்ப் பாசனத் திட்டம் நடை முறைப்படுத்த திட்டமிடப் பட்டுள்ள பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | 988 | 513 |
| 2. | கோயம்புத்தூர் | 350 | 125 |
| 3. | கடலூர் | 4488 | 1763 |
| 4. | தருமபுரி | 2738 | 3513 |
| 5. | திண்டுக்கல் | 138 | 375 |
| 6. | ஈரோடு | 1388 | 6738 |
| 7. | காஞ்சிபுரம் | 1000 | -- |
| 8. | கரூர் | 750 | -- |
| 9. | கிருஷ்ணகிரி | 613 | 625 |
| 10. | மதுரை | 363 | 638 |
| 11. | நாகப்பட்டினம் | 50 | -- |
| 12. | நாமக்கல் | 1038 | 713 |
| 13. | பெரம்பலூர் | 975 | 275 |
| 14. | புதுக்கோட்டை | 663 | 463 |
| 15. | சேலம் | 1650 | 375 |
| 16. | சிவகங்கை | 913 | -- |
| 17. | தஞ்சாவூர் | 963 | 538 |
| 18. | தேனி | 613 | 888 |
| 19. | திருநெல்வேலி | 625 | -- |
| 20. | திருப்பூர் | 163 | 513 |
| 21. | திருவள்ளூர் | 775 | 100 |
| 22. | திருவண்ணாமலை | 5463 | 3288 |
| 23. | திருவாரூர் | 50 | -- |
| 24. | திருச்சிராப்பள்ளி | 1625 | -- |
| 25. | தூத்துக்குடி | 250 | -- |
| 26. | வேலூர் | 1913 | 838 |
| 27. | விழுப்புரம் | 9150 | 12725 |
| 28. | விருதுநகர் | 313 | -- |
| | மொத்தம் | 40,000 | 35,000 |

[2017 ஜூலை 5

கரும்பு விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றம் கருதி தமிழக அரசு ஒவ்வொரு சர்க்கரைப் பருவத்திற்கும் கரும்பிற்கு மத்திய அரசு அறிவிக்கும் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவித்து வருகிறது. 2016-17 சர்க்கரைப் பருவத்திற்கு 9.5 விழுக்காடு சராசரி சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2300/- எனவும், ஊக்கத் தொகையாக ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.24.20 எனவும் மத்திய அரசு அறிவித்தது மற்றும் தமிழக அரசு மாநில அரசு பரிந்துரை விலையாக கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2850/- என அறிவித்துள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திடும் வகையில் கரும்பு விலையை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்காக விவசாயிகள், சர்க்கரை ஆலை பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவை மாநில அரசு அமைத்துள்ளது.

## 6. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றளிப்பு

மகசூலை நிர்ணயிப்பதில் முக்கிய காரணியாகவும், தரமான மற்றும் சீரான உற்பத்திக்கு வழி வகுத்து இறுதியாக சந்தை மதிப்பினை அதிகரிப்பதிலும் விதை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆகையால் வேளாண் பெருமக்களின் வருமானம் தரமான சான்று விதைகளை தேர்வு செய்வதைப் பொறுத்து அமைகிறது. எனவே வேளாண் பெருமக்கள் விதை ஆதாரம் மற்றும் இரகம் தேர்வு செய்வதில் அதிகபட்ச கவனம் எடுத்து செயல்பட வேண்டும்.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றளிப்புத் துறை, மாநிலத்தில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்குவதனை உறுதி செய்ய கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில், இந்திய குறைந்தபட்ச விதை தரங்களில் (IMSCS) வழங்கப்பட்டுள்ள தரங்களுக்கேற்ப சான்றளிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.



2017 ஜூலை 5]

- விதை தரக்கட்டுப்பாட்டு திட்டத்தில், தற்பொழுது நடைமுறையில் உள்ள விதைச் சட்டங்களை அமல்படுத்தி விதை தரங்களை கண்காணித்து தரமான விதை விநியோகத்தினை முறைப்படுத்துதல்.
- விதை பரிசோதனைத் திட்டத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் விதைகளை பரிசோதனை செய்து விதை தரங்களை உறுதி செய்தல்.
- விதைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு விதைச் சட்டங்கள் மற்றும் சான்று விதை உற்பத்தி குறித்த பயிற்சி வழங்குதல்.
- தேசிய அங்கக வேளாண் உற்பத்தித் தரங்களின்படி அங்ககச் சான்றளிப்புத் திட்டத்தை செயல்படுத்துதல்.

### 6.1 விதைச்சான்றளிப்பு

விதைச் சான்றளிப்புப் பிரிவு விதைச்சான்று முகமையின் பணிகளை விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி செயல்படுத்தி வருகிறது. விதைச்சான்றளிப்பில் இந்திய குறைந்தபட்ச விதைச்சான்றுத் தரங்களின்படி (IMSCS) விதைகளின் தரமான முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் விதை நலம் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு, தரமான சான்று விதைகள் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

சமீப ஆண்டுகளில், சான்று செய்யப்பட்ட மொத்த விதை அளவில் சான்று பெற்ற நெல் விதைகளின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து 85-90 சதவீதம் என்ற அளவில் உள்ளது. சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் காய்கறிப் பயிர்களில் சான்று விதைகளின் உற்பத்தி, தேவைக்கேற்றவாறு அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. பயறு வகைகள், எண்ணெய்வித்து மற்றும் காய்கறிகள் ஆகிய பயிர்களில் சான்று விதை உற்பத்தி அதிகரிப்பதனை கருத்தில் கொண்டு, தனியார் விதை நிறுவனங்களின் பங்களிப்பை அதிகரித்திட இத்துறை தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. வயல்மட்ட விதைகளை சுத்திகரித்து, தரத்தினை மேம்படுத்த தமிழகத்தில் 846 அங்கீகரிக்கப்பட்ட விதை சுத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகிறது.

[2017 ஜூலை 5

மேலும் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்ககத்தில் விதைச்சான்று பிரிவினை மேம்படுத்த தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.1.55 கோடி மதிப்பில் கருத்தரங்கு கூடம் கட்டுதல் / கூட்ட அரங்கத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை செய்வதற்காக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.1 : விதை சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு 2016-17**

| வ. எண் | தலைமையிடம் | பரப்பு (ஹெக்டரில்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 1,093 |
| 2. | திருவள்ளூர் | 899 |
| 3. | கடலூர் | 2,124 |
| 4. | விழுப்புரம் | 3,276 |
| 5. | வேலூர் | 1,616 |
| 6. | திருவண்ணாமலை | 1,185 |
| 7. | சேலம் | 1,398 |
| 8. | நாமக்கல் | 519 |
| 9. | தருமபுரி | 944 |
| 10. | கிருஷ்ணகிரி | 912 |
| 11. | கோயம்புத்தூர் | 898 |
| 12. | திருப்பூர் | 1,113 |
| 13. | ஈரோடு | 1,150 |
| 14. | திருச்சி | 1,721 |
| 15. | பெரம்பலூர் | 292 |
| 16. | அரியலூர் | 344 |
| 17. | கரூர் | 447 |
| 18. | புதுக்கோட்டை | 1,154 |
| 19. | தஞ்சாவூர் | 8,158 |
| 20. | நாகப்பட்டினம் | 2,547 |
| 21. | திருவாரூர் | 6,596 |
| 22. | மதுரை | 1,886 |
| 23. | தேனி | 457 |
| 24. | திண்டுக்கல் | 1,152 |
| 25. | ராமநாதபுரம் | 604 |
| 26. | சிவகங்கை | 502 |
| 27. | விருதுநகர் | 1,311 |
| 28. | திருநெல்வேலி | 2,022 |
| 29. | தூத்துக்குடி | 953 |
| 30. | கன்னியாகுமரி | 131 |
| 31. | நீலகிரி | 0 |
| | மொத்தம் | 47,404 |



2017 ஜூலை 5]

கடந்த 2016-17 ஆம் வருடத்தில் 47,404 ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு பயிர்களில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு 1,01,709 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் 57,000 ஹெக்டர் விதைப்பண்ணைகள் பதிவு செய்திடவும் 1,10,000 மெ.டன் விதைகளுக்கு சான்றளிப்பு வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.2 விதை தரக்கட்டுப்பாடு

தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைக்கச் செய்வதனை உறுதி செய்வதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனை விதைச் சான்று துறையின் விதை தரக்கட்டுப்பாட்டு பிரிவு, விதை விநியோக முறையினை பல்வேறு விதைச் சட்டங்களான விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 ஆகியவற்றை அமல்படுத்துவதன்மூலம் கண்காணித்து வருகிறது.

[2017 ஜூலை 5

விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983-ன்படி மாநிலத்தில் உள்ள விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமம் வழங்கப்படுகிறது. தற்பொழுது, மாநிலத்தில் 9,493 உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைச்சட்டங்களை பின்பற்றுதல் மற்றும் தரமான விதைகள் விற்பனை செய்தல் ஆகியவை கண்காணிக்கப்படுகிறது. எந்தவொரு விதை சட்ட மீறல்கள் அல்லது தரக்குறைவான விதைகளை விற்பனை செய்தல் ஆகிய நிகழ்வுகளில் உரிய சட்ட நடவடிக்கை / துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாநிலத்தில் செயல்பாட்டில் உள்ள உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

**அட்டவணை 6.2 : உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்கள் விவரம் (எண்களில்)**

| விவரம் | அரசு | அரசு சார்பு | தனியார் | மொத்தம் |
|---|---|---|---|---|
| உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்கள் | 1,417 | 1,333 | 6,743 | 9,493 |

2016-17 ஆம் வருடத்தில் 9,493 விதை விற்பனை மையங்களில் 68,685 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 68,062 விதை மாதிரிகள் ஆய்வுக்கு எடுக்கப்பட்டன. ஆய்வுகளின் போது, விதை விதிகளை மீறிய செயல்களுக்காக 920 விதைக்குவியல்கள் அடங்கிய, ரூபாய் 6.46 கோடி மதிப்புள்ள 819 மெட்ரிக் டன் விதைகள், தரக்குறைவு என கண்டறியப்பட்டு வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் 69,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 69,000 விதை மாதிரிகள் எடுத்து தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்குவது உறுதி செய்யப்படும்.

## 6.3 விதைப் பரிசோதனை

விதைச் சான்றளிப்பு மற்றும் விதைதரக் கட்டுப்பாடு ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் இத்துறையின் அறிவிக்கை



2017 ஜூலை 5]

செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களிலிருந்து வழங்கப்படும் விதைப் பரிசோதனை முடிவுகளை சார்ந்துள்ளது. விதை பரிசோதனை நிலையங்களில், முளைப்புத்திறன் மற்றும் பிற இரக கலப்பு உள்ளிட்ட விதைதர காரணிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. விதைக்குவியல்களின் இனத்தூய்மையானது, பயிர்வளர்ப்பு பரிசோதனை பண்ணை, கண்ணாடி ஆய்வகம் மற்றும் டி.என்.ஏ.பிங்கர் பிரிண்ட் ஆய்வகம் ஆகியவற்றில் பரிசோதனை செய்யப்படுகிறது. மாநிலத்தில், தற்போது 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**அட்டவணை 6.3: அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்கள்**

| வ. எண் | விதை பரிசோதனை மையங்கள் | ஆளுகை எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2. | திருவள்ளூர் | திருவள்ளூர் மற்றும் சென்னை |
| 3. | கடலூர் | கடலூர் |
| 4. | விழுப்புரம் | விழுப்புரம் |
| 5. | வேலூர் | வேலூர் |
| 6. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 7. | சேலம் | சேலம் |
| 8. | நாமக்கல் | நாமக்கல் |
| 9. | தருமபுரி | தருமபுரி |
| 10. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 11. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தின் சில பகுதிகள் |
| 12. | ஒப்பீட்டு ஆய்வகம் & பி.டி. ஆய்வகம், கோயம்புத்தூர் | மாநிலம் முழுவதும் |

[2017 ஜுலை 5

| வ. எண் | விதை பரிசோதனை மையங்கள் | ஆளுகை எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 13. | கண்ணாடி ஆய்வகம், கோயம்புத்தூர் | மாநிலம் முழுவதும் |
| 14. | பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை, கோயம்புத்தூர் | மாநிலம் முழுவதும் |
| 15. | டி.என்.ஏ. பிங்கர் பிரிண்ட் ஆய்வகம், கோயம்புத்தூர் | மாநிலம் முழுவதும் |
| 16. | ஈரோடு | ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தின் சில பகுதிகள் |
| 17. | திருச்சி | திருச்சி |
| 18. | பெரம்பலூர் | பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| 19. | கரூர் | கரூர் |
| 20. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 21. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 22. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 23. | திருவாரூர் | திருவாரூர் |
| 24. | மதுரை | மதுரை |
| 25. | தேனி | தேனி |
| 26. | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 27. | ராமநாதபுரம் | ராமநாதபுரம் |
| 28. | சிவகங்கை | சிவகங்கை |
| 29. | விருதுநகர் | விருதுநகர் |
| 30. | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 31. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 32. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 33. | நீலகிரி | நீலகிரி |



2017 ஜுலை 5]

விதைச்சான்றளிப்பு பிரிவிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள், விதை ஆய்வு பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வு மாதிரிகள், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களிடமிருந்து பெறப்படும் சேவை விதை மாதிரிகளும் அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட விதைக் குவியலின் இனத்தூய்மையை உறுதி செய்திட பயிர் வளர்ப்பு பரிசோதனை வழி வகை செய்கிறது. விதைச்சான்றளிப்பில், இனத்தூய்மையினை உறுதிப்படுத்தப்பட வேண்டிய விதை மாதிரிகளுக்கும், விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளுக்கும் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இனத்தூய்மை பரிசோதனைப் பண்ணையானது, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககத்தின் கட்டுப்பாட்டில், கோயம்புத்தூர், கண்ணம்பாளையத்தில் செயல்பட்டு வருகின்றது.

விதை பரிசோதனை பிரிவின்கீழ் 2016-17 ஆம் ஆண்டில் 88,348 விதை மாதிரிகள் தரப்பரிசோதனைக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில், 92,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.3.1 விதை பரிசோதனை நிலையங்களை மேம்படுத்துதல்

2017-18 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களின் ஆய்வக தரங்கள் மேம்படுத்தப்படும்.

### 6.3.2 விதை பரிசோதனையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு மற்றும் தனித்துவமான செயல்பாடுகள்

### அ. டி.என்.ஏ. மரபணு ஆய்வகம் நிறுவுதல்

தொடர்ந்து வளர்ச்சி கண்டு வரும் விதை தொழிலில் அதிகரித்து வரும் தேவைக்கேற்ப விதை பரிசோதனை பணிகளை விரைந்து மேற்கொள்ள ஆய்வகங்கள் மேம்படுத்தப்படுவதுடன் நவீனமயமாக்கப்பட வேண்டும். இந்த நிலையை கருத்தில் கொண்டு விதை தரங்களை உறுதிப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட அரசின் சீரிய முயற்சியால் 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் டி.என்.ஏ.மரபணு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

[2017 ஜூலை 5

இது பொதுத் துறை நிறுவனங்களிலேயே தேசிய அளவில் நிறுவப்பட்ட முதல் ஆய்வகமாகும். டி.என்.ஏ. மரபணு ஆய்வகத்தில் தற்சமயம், நெல் பயிரில் பெரும்பான்மையாக பயிரிடக்கூடிய இரகங்களில் 15 அறிவிக்கை செய்யப்பட்ட இரகங்களுக்கு இனத்தூய்மையை உறுதி செய்யும் செயல் திறன் பெற்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### ஆ. விதைப் பரிசோதனையை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்லுதல்

விதை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு விதைப் பரிசோதனையை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டியது அவசியமாகிறது. இத்துறை இதனை சவாலாக எடுத்துக் கொண்டு ஏற்கெனவே அறிவிக்கை செய்யப்பட்ட கோயம்புத்தூரிலுள்ள விதைப் பரிசோதனை நிலையத்தினை பன்னாட்டு விதை குழுமத்தின் தரத்திற்கு மேம்படுத்தியுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின், ஸூரிச் (Zurich) என்ற இடத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பன்னாட்டு விதை பரிசோதனை குழுமத்தின் (ISTA-International Seed Testing Association) அங்கீகாரத்தினை பெற்ற, ஒரே அரசு சார்ந்த விதை பரிசோதனை நிலையமாக கோவை விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின், வேளாண் அமைச்சகத்தால், இந்திய நாட்டின் மிகச் சிறந்த விதைப் பரிசோதனை நிலையத்திற்கான விருது 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், ஹைதராபாத்தில் நடைபெற்ற எட்டாவது தேசிய விதை கழக கூட்டத்தில் கோவை விதைப் பரிசோதனை நிலையத்திற்கு வழங்கப்பட்டது. இப்பரிசோதனை நிலையம் அனைத்து உலக நாடுகளில் இருந்து பெறப்படும் விதை மாதிரிகளையும் பரிசோதனை செய்திடும் வசதிகள் மற்றும் திறன் கொண்டதாகும். சர்வதேச விதை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு, பன்னாட்டு விதைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற பரிசோதனை நிலையத்தின் சான்று பெறுவது அத்தியாவசியமாகிறது.

கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை நிலையமானது, ஏற்றுமதிக்கு தகுதியான விதைக் குவியல்களுக்கு, "ஆரஞ்சு நிற சர்வதேச சான்றிதழ்" மற்றும் "நீல நிற சர்வதேச சான்றிதழ்" வழங்குவதற்கு அரசாணை பெற்றுள்ளது.



2017 ஜூலை 5]

### 6.4 பயிற்சி

இத்துறையின் பயிற்சி பிரிவின்மூலம் விதை உற்பத்தி, விதைச்சான்று மற்றும் விதைச்சட்ட அமலாக்கத்தில் உள்ள நவீன உத்திகள் குறித்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை சாகுபடியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 49,080 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டிலும் பயிற்சி தொடர்ந்து வழங்கப்படும்.

### 6.5 அங்ககச்சான்றளிப்பு

அங்ககச்சான்றளிப்பு என்பது குறிப்பிட்ட உற்பத்தி அல்லது பதப்படுத்தும் முறையில் தரத்தை நிர்ணயம் செய்யும் வழிமுறைகள் ஏற்படுத்தியும், உறுதியாக்கம் செய்தும் அதன்மூலம் அங்ககச்சான்றளிப்புத் துறை எழுத்து பூர்வமாக சான்று வழங்கும் நடைமுறையாகும். அங்கக வேளாண்மையின் முக்கிய நோக்கமானது ஒன்றையொன்று சார்ந்து செயல்படும் மண்வாழ் உயிரினங்கள், செடிகள், விலங்குகள், மக்களின் ஆரோக்கியம் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துவதாகும்.

தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின்படி ஆய்வுகள் மேற்கொண்டு சான்று வழங்க தமிழகத்தில் அங்ககச்சான்றளிப்புத் துறை துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறை மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின்கீழ் இயங்கி வரும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்தின் (APEDA) மதிப்பேற்றல் (Accreditation) 2007 ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

தமிழக அரசின் நிலையான தொடர் முயற்சி மற்றும் வெற்றிகரமான செயல்திறனால் மதிப்பேற்றல் அங்கீகாரம் தொடர்ந்து பெறப்பட்டு 2018 ஆம் ஆண்டு வரை அங்கீகாரத்திற்கு நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது. நமது நாட்டில் செயல்பாட்டில் உள்ள 28 அங்ககச்சான்று நிறுவனங்களுள், தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறை (TNOCD), மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவம் பெற்றுள்ளது. மேலும் இத்துறையில் மேற்கொள்ளப்படும் அங்ககச்சான்றளிப்பு ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தரங்களுக்கு இணையானதாகும். தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில்

பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு தேசிய அங்கக உற்பத்தி தரங்கள் மற்றும் தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்புத் துறையின் தரங்கள் குறித்த பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

2016-17 ஆம்ஆண்டில் அங்ககச்சான்றளிப்புத் துறையின்கீழ் 30,910 ஏக்கர் பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.4 : அங்கக சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு விவரங்கள் 2016-17**

| வ. எண் | அங்கக சான்று ஆய்வாளர் தலைமையிடம் | ஆளுகை எல்லை (மாவட்டங்கள்) | பதிவு செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி | 7,879 |
| 2. | திருச்சி | திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் | 4,792 |
| 3. | மதுரை | மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், தூத்தூக்குடி மற்றும் கன்னியாகுமரி | 5,189 |
| 4. | வேலூர் | வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் | 13,050 |
| | மொத்தம் | | 30,910 |





2017-18 ஆம் ஆண்டில் இத்துறையின்மூலம் 31,000 ஏக்கர் பரப்பினை அங்ககச்சான்றளிப்பு பதிவின்கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.6 பணிக் குழு

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையானது விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர் தலைமையில் கோயம்புத்தூரை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிறது. விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு விதைச்சான்று இணை இயக்குநர், ஒரு விதை ஆய்வு இணை இயக்குநர், ஒரு தரமேலாளர், 15 விதை ஆய்வு துணை இயக்குநர்கள், 37 உதவி இயக்குநர்கள், 150 விதைச்சான்று அலுவலர்கள்,70 விதை ஆய்வாளர்கள், 63 வேளாண்மை அலுவலர்கள் (விதை பரிசோதனை) மற்றும் 6 அங்ககச்சான்று ஆய்வாளர்கள் தொழில் நுட்ப அலுவலர்களாக இத்துறையில் பணியாற்றுகின்றனர். மேலும் இத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உறுதுணையாக 500 அமைச்சு பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

தமிழகம் வேளாண்மையை முதன்மை தொழிலாக கொண்டுள்ள மாநிலங்களில் ஒன்றாக விளங்குவதுடன், உணவு தானியம், காய்கறி, பழங்கள் மற்றும் இதர வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும், உற்பத்தி வளங்கள் தரும் பலன்களை அதிகப்படுத்தி, சந்தை நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, நீடித்த, நிலையான வேளாண்மையை ஊக்குவித்திடவும், முறையான சந்தை அமைப்பு அவசியமாகும். பண்ணை இடுபொருட்களின் விநியோகம் மற்றும் தேவையை மதிப்பிடுதல், திறன் வாய்ந்த உழவு நடைமுறைகள், அறுவடைக்குப்பின் பண்ணையிலிருந்து விளை பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும், நுகர்வோருக்கும் கொண்டு செல்லுதல், விலை நிர்ணயம், விற்பனை, கொள்முதல் மற்றும் கையாளுதல் தொடர்பான அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைத்தல் ஆகிய அனைத்து செயல்பாடுகளையும் கொண்டதே வேளாண் விற்பனையாகும். வள ஆதாரங்களை பகிர்ந்தளித்திடவும்,

[2017 ஜூலை 5

செல்வங்களை உருவாக்கிடவும், விவசாய பங்கேற்பாளர்களிடையே வருமானத்தை சமமாக பகிர்ந்தளித்திடவும், சந்தைகளுக்கு நிலைத்தன்மையை வழங்கிடவும் திறன் வாய்ந்த வேளாண் சந்தை அமைப்பு உதவுகிறது.

விளைபொருட்களை மதிப்புக்கூட்டவும், சிப்பமிடவும், சில்லரை வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்திடுவதற்கும் வேளாண் வணிக வாய்ப்புகள் பெருகியுள்ளன. நவீன தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை உத்திகள் அதிகரித்துள்ளபோதும் மொத்த விளைபொருள் உற்பத்தியில் 4.6 சதவீதம் மட்டுமே பதப்படுத்தப்படுகிறது. மேலும், உரிய குளிர்பதன தொடரமைப்பு மற்றும் பதப்படுத்தும் வசதியின்மையால் காய்கறி மற்றும் பழங்களில் 35 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது. தேவையான சந்தை உட்கட்டமைப்புகள், வளர்ச்சி சார்ந்த வணிக சூழல் மற்றும் வேளாண் வணிகத்திற்கு உகந்த கொள்கைகள் நீடித்த, நிலையான வேளாண்மைக்கு வழிவகுப்பதுடன் நகர்ப்புற-கிராமப்புற பாகுபாட்டை களைந்திடுவதிலும் உதவி புரிகின்றன.

இதனை கருத்தில் கொண்டு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும், அவர்களது சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்திடவும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. துறையில் மேற்கொள்ளப்படும் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

### முக்கிய செயல்பாடுகள்

1. விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல்.

2. விளைபொருள் குழுக்கள் அமைத்து, சந்தை ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

3. விளைபொருட்களை சந்தைப்படுத்திடவும், அறுவடை பின்செய் மேலாண்மை மேற்கொள்ளவும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

4. விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பினை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், உழவர் சந்தை, சிறப்பு வணிக வளாகங்கள் போன்ற உட்கட்டமைப்புகள்மூலம் உருவாக்குதல்.



2017 ஜூலை 5]

5. சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக்கிடங்குகள், பழுக்கவைக்கும் கூடங்கள் மற்றும் உலர்கள வசதிகள் மூலம் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைத்து, விளைபொருட்களின் சேமிப்புக் காலத்தை அதிகப்படுத்துதல்.

6. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டவும், பதப்படுத்தவும் தனியார் மற்றும் பொதுத் துறை பங்கேற்புடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல்.

7. பயிர் சார்ந்த ஆலோசனைகள் மற்றும் சந்தை விலை விவரங்களை பதிவு செய்த விவசாயிகளுக்கு வழங்குதல்.

8. அக்மார்க் ஆய்வகங்கள்மூலம் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்தல்.

9. அறுவடை பின்செய் மேலாண்மை, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், தரம்பிரித்தல் போன்ற தொழில்நுட்ப உத்திகளை விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள்மூலம் வழங்குதல்.

## 7.1 வேளாண் விற்பனை செயல்பாடுகள்

### 7.1.1 விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

வேளாண் விளைபொருட்களின் பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துவதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியில் அறிவிக்கையிடப்பட்ட வேளாண் விளைபொருட்களின் வணிகத்தினை மேற்கொள்ள விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987, விதிகள் 1991 மூலம் விற்பனையை முறைப்படுத்திட 23 விற்பனைக் குழுக்களின்கீழ் 278 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்த விவசாயிகளுக்கும், வணிகர்களுக்கும் ஒரு பொதுவான அமைப்பாக செயல்படுகின்றன. விவசாயிகளால் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மறைமுக ஏலமுறைமூலம் விற்பனை செய்யப்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சேமிப்புக் கிடங்கு,

பரிவர்த்தனைக்கூடம், பொருளீட்டுக்கடன் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வழங்கப்படும் சேவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. கொள்முதல் செய்யும் விளைபொருட்களின் மதிப்பில் ஒரு விழுக்காடு மட்டும் வியாபாரிகளிடமிருந்து சந்தைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதுதவிர, வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்து உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 31.74 இலட்சம் மெ.டன் விளைபொருட்கள் விவசாயிகளால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம் ரூ.119 கோடி சந்தைக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்து விற்பனைக் குழுக்களால் வசூலிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் 33.33 இலட்சம் மெ.டன் வரத்து மற்றும் ரூ.148.77 கோடி சந்தைக் கட்டணம் அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.1 : மாவட்டம் மற்றும் விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்**

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழு | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 7 |
| 2. | திருவள்ளூர் | | 8 |
| 3. | கடலூர் | கடலூர் | 10 |
| 4. | விழுப்புரம் | விழுப்புரம் | 17 |
| 5. | வேலூர் | வேலூர் | 12 |
| 6. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 16 |
| 7. | சேலம் | சேலம் | 14 |
| 8. | நாமக்கல் | | 6 |
| 9. | தருமபுரி | தருமபுரி | 8 |
| 10. | கிருஷ்ணகிரி | | 8 |
| 11. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 10 |
| 12. | திருப்பூர் | திருப்பூர் | 15 |
| 13. | ஈரோடு | ஈரோடு | 18 |
| 14. | திருச்சிராப்பள்ளி | திருச்சி | 10 |
| 15. | கரூர் | | 4 |
| 16. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 17. | அரியலூர் | | 4 |
| 18. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 10 |
| 19. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 13 |
| 20. | திருவாரூர் | திருவாரூர் | 8 |
| 21. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 8 |
| 22. | மதுரை | மதுரை | 6 |
| 23. | தேனி | தேனி | 7 |
| 24. | திண்டுக்கல் | திண்டுக்கல் | 8 |
| 25. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 6 |
| 26. | விருதுநகர் | | 7 |
| 27. | சிவகங்கை | | 7 |
| 28. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 11 |
| 29. | தூத்துக்குடி | | 9 |
| 30. | நீலகிரி | நீலகிரி | 4 |
| 31. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 6 |
| மொத்தம் | | | 278 |

[2017 ஜூலை 5

### அட்டவணை 7.2: ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் (எண்ணிக்கையில்)



2017 ஜூலை 5]

| வ. எண் | விற்பனைக் குழு | சொந்த இடம் | கிடங்கு | பரிவர்த்தனைக்கூடம் | உலர்களம் | குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் | வணிக வளாகம் | குளிர்பதன கிடங்கு | ஊரக வணிக மையம் | எடையிட்டு மூட்டை தைக்கும் கருவி | வணிகர் கடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 8 | 9 | 8 | 16 | - | - | - | - | - | - |
| 2. | வேலூர் | 8 | 24 | 15 | 11 | - | - | 3 | 1 | - | - |
| 3. | திருவண்ணாமலை | 14 | 35 | 26 | 12 | - | - | 7 | - | 1 | 10 |
| 4. | கடலூர் | 7 | 12 | 19 | 15 | - | - | 2 | 1 | - | 10 |
| 5. | விழுப்புரம் | 14 | 28 | 46 | 18 | - | - | 4 | 1 | 2 | - |
| 6. | சேலம் | 13 | 19 | 12 | 16 | - | - | 9 | 1 | - | - |
| 7. | தருமபுரி | 8 | 16 | 8 | 20 | 2 | - | 7 | 1 | - | 10 |
| 8. | கோயம்புத்தூர் | 10 | 29 | 17 | 30 | 1 | - | 7 | 1 | 3 | 10 |
| 9. | ஈரோடு | 15 | 34 | 49 | 34 | - | - | 7 | 1 | - | 10 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 10 | 13 | 26 | 20 | 2 | - | 1 | - | - | - |
| 11. | தஞ்சாவூர் | 7 | 23 | 10 | 5 | - | 1 | 1 | - | 1 | - |
| 12. | புதுக்கோட்டை | 2 | 3 | 2 | 4 | - | - | 2 | - | - | - |
| 13. | மதுரை | 5 | 8 | 4 | 7 | - | 1 | 1 | - | - | - |
| 14. | இராமநாதபுரம் | 14 | 22 | 6 | 21 | - | - | 6 | 1 | - | 25 |
| 15. | திருநெல்வேலி | 17 | 28 | 17 | 15 | 1 | - | 12 | 1 | - | 10 |
| 16. | கன்னியாகுமரி | 5 | 11 | 4 | 4 | - | 2 | 1 | - | - | - |
| 17. | தேனி | 5 | 12 | 4 | 7 | 2 | - | 2 | - | - | - |
| 18. | திண்டுக்கல் | 6 | 9 | 6 | 8 | - | - | 7 | 1 | 1 | - |
| 19. | திருவாரூர் | 7 | 12 | 4 | 8 | - | - | - | - | - | - |
| 20. | நாகப்பட்டினம் | 5 | 11 | 3 | 5 | - | - | - | - | - | - |
| 21. | நீலகிரி | - | - | - | - | - | 1 | - | - | - | - |
| 22. | திருப்பூர் | 13 | 59 | 26 | 45 | 1 | - | 4 | - | - | - |
| 23. | பெரம்பலூர் | 4 | 8 | 14 | 8 | - | - | - | - | - | - |
| | மொத்தம் | 197 | 425 | 326 | 329 | 8 | 5 | 82 | 10 | 8 | 85 |

விவசாயிகளின் உடனடி பணத்தேவைக்கும், உபரி உற்பத்திக்காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளை பாதுகாத்திடவும் பொருளீட்டுக்கடன் வசதி அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 3,054 விவசாயிகளுக்கு ரூ.48.22 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வணிகர்கள் தங்கள் குறுகியகால தேவைகளுக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளைபொருட்களை இருப்பு வைத்து ஒரு இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெறலாம். 2016-17 ஆம் ஆண்டு 518 வணிகர்களுக்கு ரூ.4.98 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.53.06 கோடியும் வியாபாரிகளுக்கு ரூ.5.50 கோடியும் பொருளீட்டுக் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்யப்படும் விளைபொருட்களின் தினசரி விலை மற்றும் வரத்து விவரங்களை விவசாயிகள் அறிந்து பயனடையும் வகையில் "சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் இணைப்பு" திட்டத்தின்கீழ் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டு (www.agmarknet.gov.in என்ற இணைய தளத்தில் விவரம் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

[2017 ஜூலை 5

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தரம் பிரித்தல், பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் போன்ற வசதியினை ஏற்படுத்திட 2016-17 ஆம் ஆண்டில் இத்துறையின்மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.8.62 கோடி மதிப்பீட்டில் மஞ்சள் விளைபொருளுக்கு அறுவடை பின்செய் நேர்த்தி கருவிகள், மிளகாய் தரம்பிரிப்பு சாதனங்கள், முந்திரி பதப்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் பருத்திக்கான தரப் பரிசோதனை கருவிகள், தானிய சேமிப்பு கலன்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் பொதுவான ஒரு மின்னணு தளத்தை உருவாக்கி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை ஒருங்கிணைத்திட 2016 ஆம் ஆண்டு மத்திய அரசு "மின்னணு தேசிய வேளாண்மை சந்தை" (e-NAM) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் விவசாயிகளுக்கு விளைபொருட்களை விற்பனை செய்திட அதிக வாய்ப்பு ஏற்படுத்திடவும், வியாபாரிகள் தேசிய அளவில் பரிவர்த்தனை மேற்கொள்ளவும், மதிப்புக்கூட்டுவோர், ஏற்றுமதி மற்றும் கொள்முதல் செய்வோர் உள்ளூர் சந்தைகளில் நேரிடையாக பங்கேற்கவும் வழிவகுக்கிறது.

மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்திட ஏதுவாக மின்னணு வர்த்தகம், ஒருமுனை வரி விதிப்பு மற்றும் மாநில அளவிலான ஒற்றை உரிமம் ஆகியவற்றை உள்ளடக்கி தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை முறைப்படுத்துதல் சட்டம் 1987-ல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக, 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மத்திய அரசின் வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு (Agriculture Technology Infastructure Fund) நிதியின்கீழ் மின்னணு தேசிய வேளாண்மை சந்தையில் ஒருங்கிணைக்கப்பட உள்ளது.

### 7.1.2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் மின்னணு வர்த்தகம்

2017-18 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்தபடி, விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து பரிசோதனை அடிப்படையில் 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் 10 வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் மின்னணு வர்த்தகம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான ஆய்வு நாப்கான்ஸ் (NABCONS) நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2017 ஜூலை 5]

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு வர்த்தகத்தை அறிமுகப்படுத்துவதன்மூலம் வெளிப்படையான விற்பனை, விரைவான பரிவர்த்தனை, வணிகர்கள் எளிதாக சந்தைகளை அணுக வசதி, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை, நடைமுறைச் செலவினம் குறையவும், விற்பனை செயல்திறன் மேம்படவும் வழிவகை ஏற்படும்.

மின்னணு வர்த்தகம் வேலூர் மற்றும் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,491 விவசாயிகள் மற்றும் 685 வியாபாரிகள் கலந்துகொண்டு ரூ.10.07 கோடி மதிப்புள்ள 1,599 மெ.டன் மஞ்சள் விளைபொருள் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 7.1.3 ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியில் (RIDF) ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

நபார்டு வங்கிமூலம் செயல்படுத்தப்படும் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) திட்டத்தின் நோக்கம், மாநில அரசு மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்டு வரும் ஊரக உட்கட்டமைப்புகளுக்கு கடனுதவி அளிப்பதே ஆகும்.

கடந்த 5 ஆண்டுகளில், இத்துறையின்மூலம் ரூ.22.26 கோடி மதிப்பில் 70 குளிர்பதனக் கிடங்குகள், ரூ.127.60 கோடி மதிப்பில் 88 சேமிப்புக்கிடங்குகள், ரூ.1.30 கோடி மதிப்பில் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாழைக்கென சிறப்பு வணிக வளாகம், ரூ.3.60 கோடி மதிப்பில் காய்கறி மற்றும் பழங்களுக்கென கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சேகரிப்பு மையங்கள், ரூ.1.18 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை மற்றும்

[2017 ஜுலை 5

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சேகரிப்புமூலம் ஒருங்கிணைந்த விளைபொருள் மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, இந்நிதியின்மூலம் ரூ.65 கோடி மதிப்பில் காய்கறி, பழங்கள் மற்றும் பூக்களுக்கு திருச்சி மாவட்டம் கள்ளிக்குடியில் மத்திய வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

### 7.1.4 கிடங்கு உட்கட்டமைப்பு நிதியில் (WIF) ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

2014-15 ஆம் ஆண்டு முதல் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி (WIF) மூலம் சேமிப்புக் கிடங்குகள், சேமிப்புக் கலன், குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் இதர குளிர்பதன தொடர் உட்கட்டமைப்புகளுக்கு நபார்டு வங்கி நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 35 சேமிப்புக் கிடங்குகள், 49 பரிவர்த்தனைக்கூடங்கள், ஒரு வணிக வளாகம், இரண்டு குளிர்பதனக்கிடங்குகள், மூன்று அலுவலக கட்டடங்கள், நான்கு எடை மேடைகள், ஐந்து ரப்பர் உருளைகள் மற்றும் ஒரு பதப்படுத்தும் மையம் என மொத்தம் 100 சந்தை உட்கட்டமைப்புகள் ரூ.83.35 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

### 7.1.5 மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைத்தல்

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை திறம்பட செயல்படுத்திட புதிய உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் உட்கட்டமைப்பு தேவையினை கண்டறிவது அவசியமாகும். இதற்கென மாவட்ட ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் மற்றும் வணிகர்களைக் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. விற்பனைக் குழுவின்கீழ் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கான உட்கட்டமைப்பு தேவையினை இக்குழுக்கள் கண்டறிந்து பரிந்துரை செய்து தலைமையிடத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பும். இவை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சங்கங்களின் நீண்ட கால கோரிக்கையாகும்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தினை திறம்பட செயல்படுத்திடவும், கண்காணிக்கவும், உரிய வழிமுறைகளை பரிந்துரை செய்திடவும் மாநில அளவிலான குழு அமைக்கப்பட்டு வருகிறது.



2017 ஜுலை 5]

### 7.2 வேளாண் வணிக செயல்பாடுகள்

விளைபொருள் உற்பத்தி, பதப்படுத்துதல், விற்பனை, வர்த்தகம் மற்றும் விநியோகம் தொடர்பான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு செயல்பாடுகளை உள்ளடக்கியதே வேளாண் வணிகமாகும். வேளாண் விற்பனை செயல்பாடுகளை ஊக்குவிக்கவும், வேளாண் விற்பனை சார்ந்த தகவல்களை களப்பணியாளர்கள்மூலம் விவசாயிகளுக்கு கொண்டு செல்லவும் 29 வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மாவட்ட அளவில் பணிபுரிகின்றனர். மாநிலத்தில் வேளாண் வணிகத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் இத்துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.2.1 பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான விநியோக தொடர் மேலாண்மை (Supply Chain Management)

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தவிர்த்து, விவசாயிகளை பெருஞ் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், உற்பத்தி உபரியினை மதிப்புக்கூட்டும் பொருளாக மாற்றவும், தரமான பழங்கள் மற்றும் காய்கறிகளை நுகர்வோருக்கு தடையின்றி வழங்கி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் ரூ.398.75 கோடி மதிப்பில் இத்துறையின்மூலம் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர அழுகும் பொருட்களுக்காக விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான விநியோகத் தொடர் மேம்படுவதுடன் விவசாயிகளின் வருமானமும் உயரும். இத்திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.காய்கறி மற்றும் பழங்களுக்கான அறுவடை பின்செய் மேலாண்மை, சேமிப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். விவசாயிகளின் காய் கனிகளை சேகரிப்பு மையங்களில் ஒன்றுசேர்த்தல், முதன்மை பதப்படுத்தும் மையங்களில் பதப்படுத்துதல், சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து மற்றும் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தி ஒருங்கிணைந்த குளிர்பதன தொடர் மேலாண்மை மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் முக்கிய

நோக்கமாகும். மேலும், விளைபொருட்களுக்கு அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைத்து, தரம் உயர்த்தி, மாற்று சந்தைக்கு வழிவகுப்பதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டு ஆரம்ப கட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.2.2 உழவர் சந்தைகள்

இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலையும், நுகர்வோர்க்கு உரிய விலையில் பசுமையான காய்கறிகள் மற்றும் பழங்கள் கிடைத்திட உறுதி செய்வதே உழவர் சந்தைகளின் முக்கிய குறிக்கோள் ஆகும். தற்பொழுது தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில், சராசரியாக நாளொன்றுக்கு ரூ.6.79 கோடி மதிப்பிலான 2,410 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் 9,015 விவசாயிகளால் விற்கப்பட்டு, 4.02 இலட்சம் நுகர்வோர் பயனடைந்துள்ளனர். உழவர் சந்தைகளின் தினசரி காய்கறிகள் மற்றும் பழங்களின் வரத்து, மதிப்பு, பயன்பெறும் விவசாயிகள் மற்றும் தோராயமான நுகர்வோர்கள் எண்ணிக்கை ஆகியவை புதிய செயலியில் கைபேசிமூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு மாநில அளவில் கண்காணிக்கப்படுகிறது.

**அட்டவணை 7.3: மாவட்ட வாரியாக உழவர் சந்தை விவரம்**

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 14 |
| 2. | திருவள்ளூர் | 5 |
| 3. | வேலூர் | 9 |
| 4. | திருவண்ணாமலை | 8 |
| 5. | கடலூர் | 5 |
| 6. | விழுப்புரம் | 6 |
| 7. | சேலம் | 11 |
| 8. | நாமக்கல் | 6 |
| 9. | தருமபுரி | 5 |
| 10. | கிருஷ்ணகிரி | 5 |
| 11. | கோயம்புத்தூர் | 9 |
| 12. | நீலகிரி | 4 |
| 13. | ஈரோடு | 5 |
| 14. | திருச்சிராப்பள்ளி | 7 |
| 15. | பெரம்பலூர் | 2 |
| 16. | கரூர் | 5 |
| 17. | தஞ்சாவூர் | 5 |
| 18. | நாகப்பட்டினம் | 3 |
| 19. | திருவாரூர் | 7 |
| 20. | புதுக்கோட்டை | 6 |
| 21. | மதுரை | 7 |
| 22. | திண்டுக்கல் | 5 |
| 23. | தேனி | 7 |
| 24. | சிவகங்கை | 4 |
| 25. | இராமநாதபுரம் | 3 |
| 26. | விருதுநகர் | 8 |
| 27. | திருநெல்வேலி | 6 |
| 28. | தூத்துக்குடி | 2 |
| 29. | கன்னியாகுமரி | 2 |
| 30. | அரியலூர் | 2 |
| 31. | திருப்பூர் | 5 |
| | மொத்தம் | 179 |

[2017 ஜூலை 5

### 7.2.3 சிறப்பு வணிக வளாகங்கள்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்மூலம் குளிர்பதன கிடங்கு, சேமிப்புக் கிடங்கு, தரம் பிரித்து வகைப்படுத்தும் கூடம், உலர்களம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் விளைபொருட்களுக்கென சிறப்பு வணிக வளாகங்கள் ரூ.64.07 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மாவட்டங்களில் நெல், மஞ்சள், தென்னை, இளநீர், மலைக்காய்கறிகள், தக்காளி, வெங்காயம், மா, திராட்சை, வாழை மற்றும் இதர காய்கறிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.4 : சிறப்பு வணிக வளாகங்கள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | இடம் | விளைபொருள் |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | பெதப்பம்பட்டி, திப்பம்பட்டி | தேங்காய், இளநீர் |
| 2. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | தேங்காய் |
| 3. | மதுரை | மாட்டுத்தாவணி | நெல் |
| 4. | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | காய்கறிகள் |
| 5. | ஈரோடு | கருமாண்டிசெல்லி பாளையம் | மஞ்சள் |
| 6. | கோயம்புத்தூர் | காரமடை, பொங்கலூர், | மலைக்காய்கறிகள், வெங்காயம் |
| 7. | கிருஷ்ணகிரி | பாலக்கோடு | மாம்பழம் |
| 8. | தருமபுரி | தருமபுரி | தக்காளி |
| 9. | தேனி | கம்பம், ஓடைப்பட்டி | திராட்சை, வாழை |
| 10. | பெரம்பலூர் | செட்டிக்குளம் | வெங்காயம் |
| 11. | திருச்சி | திருச்செந்துறை, துறையூர் | வாழை, பழங்கள் மற்றும் காய்கறிகள் |
| 12. | திருநெல்வேலி | கடையநல்லூர் | எலுமிச்சை |
| 13. | ஈரோடு | கோபிசெட்டிப் பாளையம் | பழங்கள் மற்றும் காய்கறிகள் |
| 14. | தேனி | சின்னமனூர் | வாழை |
| 15. | நாமக்கல் | மோகனூர் | வாழை |
| 16. | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் | |
| 17. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | |
| 18. | தஞ்சாவூர் | திருவையாறு | |



2017 ஜூலை 5]

### 7.2.4 விற்பனை முனையங்கள் (Terminal Market Complex)

விற்பனை முனையங்களின் நோக்கமானது விவசாயிகளை சந்தைகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் விளைபொருட்களின் விற்பனைக்கு நவீன தொழில்நுட்பத்துடன் தொழில் ரீதியாக நிர்வகிக்கப்படும் மாற்றுச்சந்தைக்கான கட்டமைப்புகளை வழங்குவதே ஆகும். விற்பனை முனையங்கள் அச்சு மற்றும் ஆரம் அமைப்பில் செயல்படும்.

தனியார் முதலீட்டினை ஊக்குவித்து, தனியார் நிறுவனத்தால் கட்டப்பட்டு, சொந்தமாக இயக்கப்படும் வகையில் தமிழகத்தின் முக்கியப் பகுதிகளில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர விளைபொருட்களுக்காக தனியார் மற்றும் பொதுத் துறை பங்கேற்புடன் மூன்று விற்பனை முனைய வளாகங்கள் அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை பகுதிக்கான விற்பனை முனையம் அமைக்க, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்கா, நாவலூர் கிராமத்தில் 35 ஏக்கர் பரப்பளவில் திருவாளர் யூ.ஆர்.சி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட திருவாளர் உழவர் களஞ்சியம் லிமிடெட் என்ற சிறப்பு நோக்க அமைப்பின்மூலம் ரூ.135 கோடி திட்ட மதிப்பீட்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் ரூ.48 கோடி மானிய உதவியுடன் விற்பனை முனையம் உருவாக்கப்படவுள்ளது.

மதுரை பகுதிக்கான விற்பனை முனையம் ரூ.120.06 கோடி திட்ட மதிப்பில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் ரூ.46.25 கோடி மானிய உதவியுடன் அமைக்க மதுரை மாவட்டம், மேலூர் தாலுக்கா, மூக்கம்பட்டி மற்றும் திருவாதவூர் கிராமங்களில்

50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருவாளர் ஆர்.ஆர்.இண்டஸ்டிரீஸ் லிமிடெட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட திருவாளர் பூமி அக்ரி மார்க்கெட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற சிறப்பு நோக்க அமைப்பின்மூலம் விற்பனை முனையம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இயக்குதல் மற்றும் மேலாண்மை வளர்ச்சி ஒப்பந்த வரைவு கையெழுத்திடப்பட்ட பின்பு இவ்விற்பனை முனையங்களில் அறுவடைபின்செய் மேலாண்மை உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

### 7.2.5 தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மூலதன முதலீட்டு உதவித்தொகை வழங்கியும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஏற்படுத்தியும் வேளாண் வணிக செயல்பாடுகளை ஊக்குவித்து விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்திட தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு செயல்பட்டு வருகிறது.

#### 7.2.5.1 மூலதன முதலீட்டுத் தொகை

தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வண்ணம் மென்கடனாக மூலதன முதலீட்டு உதவித்தொகை, மத்திய அரசின் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 78 வேளாண் வணிகத் திட்டங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டு உதவித்தொகையாக ரூ.25.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

#### 7.2.5.2 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள்மூலம் உற்பத்தியினை அதிகரித்து, இடுபொருள் மற்றும் இதர சேவைகள் கிடைக்கச் செய்து நியாயமான மற்றும் இலாபகரமான விற்பனைக்கு வழிவகுத்திட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்மூலம் ரூ.17.87 கோடி மதிப்பீட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் 42 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பயறு வகைகள், தானியம், வாழை, எண்ணெய்வித்துக்கள், நிலக்கடலை, மிளகாய், கொய்யா, மா, மக்காச்சோளம், சிறு தானியம், தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற விளைபொருட்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன.





2016-17 ஆம் ஆண்டில், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின்கீழ் பருப்பு அரவைக்கான சிறிய ஆலை தொடங்க ரூ.54 இலட்சம் மதிப்பீட்டிலும், நிறுவனத்தின் வர்த்தக அடையாளத்துடன் கூடிய விற்பனைக்கான உதவிகளை செய்திட ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கொள்முதல் நிலையங்கள் அமைத்திட ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.154 இலட்சம் மதிப்பீட்டில் 10 பயறு வகை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர, 2016-17 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6 சிறு தானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை மேம்படுத்திட ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூ.16 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.96 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் சிறு தானிய சுத்திகரிப்பு இயந்திரம், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சிறு தானியங்களை சிப்பமிட்டு சந்தைப்படுத்தும் வசதி, ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் நிலையம் அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.2.6 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

தமிழகத்தில் நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் 61 உபவடி நிலப்பகுதிகளில் 5,012 நீர்நிலை மற்றும் 6.70 இலட்சம் எக்டரில் ரூ.53.78 கோடி மதிப்பிலான பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் உட்கட்டமைப்புகள், விளைபொருட்களுக்கான குழுக்கள் அமைத்தல் மற்றும் சந்தை தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 6,577 விளைபொருள் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1.73 இலட்சம் விவசாயிகள் 6-12 சதவீதம் கூடுதல் வருமானம் பெற்று பயனடைந்ததுடன், அறுவடை பின்சார் இழப்புகளும் குறைக்கப்பட்டுள்ளது.

[2017 ஜூலை 5

இத்திட்டத்தின்கீழ் வேளாண் வணிக மையங்கள், உலர்களங்கள், சேமிப்பு மையங்கள், உலர்களத்துடன் கூடிய சேமிப்பு மையம், சிப்பம் கட்டும் அறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதத்தை குறைத்து விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்தும் விதமான கருவிகள் விளைபொருள் குழுக்களுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2017-18 முதல் 2022-23 வரை ஆறு ஆண்டு காலத்திற்கு 66 உபவடி நிலப்பகுதிகளில் ரூ.125 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-2 செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. 2017-18 ஆம் நிதியாண்டில் ரூ.24.46 கோடி மதிப்பீட்டில் 18 உபவடி நிலப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 7.2.7 மின்னணு பயிற்றுவிக்கும் மையம்

அறுவடைபின்செய் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான ஒருங்கிணைந்த தகவல்களையும், சமீபத்திய வேளாண் வணிக நுட்பங்களை பரப்புவதற்கான கருத்துக் காட்சிகள், காணொலி சாதனங்கள், தொடுதிரை மற்றும் குறும்படங்கள் போன்ற வசதிகளையும் ஏற்படுத்த மின்னணு பயிற்றுவிக்கும் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் ரூ.7 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டமாக 2017-18 ஆம் ஆண்டில் 9 மையங்கள் ரூ.7.34 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ளது.

### 7.2.8 அக்மார்க் தரம் பிரிப்பு

அக்மார்க் என்பது இந்திய அரசால் வேளாண் பொருட்களுக்கு வழங்கப்படும் ஒரு தரச்சான்றாகும். வேளாண் விளைபொருட்கள் (தரம் பிரித்தலும் குறியிடுதலும்) சட்டத்தினை 1937 (1986-ல் திருத்தியமைக்கப்பட்டது) அடிப்படையாகக் கொண்டு, மத்திய அரசு விற்பனை மற்றும் ஆய்வு இயக்குநரகத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 213 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 30 அக்மார்க் ஆய்வகங்களும் சென்னையில் ஒரு முதன்மை ஆய்வகமும் செயல்பட்டு வருகின்றன.



2017 ஜூலை 5]

2016-17 ஆம் நிதியாண்டில் 21.53 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் அக்மார்க் ஆய்வகங்கள்மூலம் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. 2017-18 ஆம் ஆண்டில் 22.32 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் அக்மார்க் ஆய்வகங்கள்மூலம் தரம் பிரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2017-18 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1.19 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்குவதன்மூலம் அக்மார்க் ஆய்வகங்களை வலுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.2.9 வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம்

சந்தைத் தகவல் பரிமாற்றத்திற்கென வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் திருச்சியில் ரூ.43 இலட்சம் செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலமாக, பயிர் ஆலோசனை மற்றும் சந்தை விலை நிலவரங்கள் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் மற்றும் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மக்காச்சோளம், மஞ்சள், வெங்காயம், தக்காளி, தேங்காய், வாழை, சூரியகாந்தி, மிளகாய், உளுந்து, மரவள்ளி, சோளம், கேரட், பீட்ரூட் ஆகிய பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு 22.50 இலட்சம் விவசாயிகளுக்கும், துறைப் பணியாளர்களுக்கும் குறுஞ்செய்தியாக வழங்கப்பட்டுள்ளது.

### 7.2.10 உணவு பதப்படுத்தும் தொழில்முனைப்பு மற்றும் பயிற்சி மையம்

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு மற்றும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் பகுதியில் உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மற்றும் பயிற்சி மையங்கள் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மாநில அரசு நிதியின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோருக்கு பயிற்சி வழங்கிட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மதிப்புக்கூட்டுதல் தொடர்பான பயிற்சியினை மே 2017 முதல் வழங்கி வருகிறது.

### 7.2.11 மனித வள மேம்பாடு

தமிழகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக செயல்பாடுகளை ஊக்குவித்து, வேளாண் தொழில்நுட்பம் மற்றும் சந்தை சார்ந்த தகவல்களை களப்பணியாளர்கள்மூலம்

விவசாயிகளுக்கு கொண்டு சென்று அவர்களது சமூக-பொருளாதார நிலையை உயர்த்திட 1,310 துறை அலுவலர்களும், 1,631 விற்பனைக் குழு அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை 7.5: துறை அலுவலர்கள் விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப் பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | வேளாண்மை இணை இயக்குநர் | 3 |
| 2. | வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) | 29 |
| 3. | வேளாண்மை அலுவலர் | 172 |
| 4. | வேளாண்மை துணை அலுவலர் | 52 |
| 5. | வேளாண்மை உதவி அலுவலர் | 635 |
| 6. | ஆட்சி அலுவலர் | 1 |
| 7. | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 8. | இதர தொழில்நுட்பம் அல்லாத அலுவலர் | 417 |
| மொத்தம் | | 1310 |

**அட்டவணை 7.6: விற்பனைக் குழு அலுவலர்கள் விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப் பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | செயலாளர் | 21 |
| 2. | கண்காணிப்பாளர் | 196 |
| 3. | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 4. | மேற்பார்வையாளர் | 345 |
| 5. | இதர தொழிநுட்பம் அல்லாத அலுவலர் | 1060 |
| மொத்தம் | | 1631 |





## 7.3 தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அரசாணை எண்.2852, வேளாண்மைத் துறை, நாள் 24-10-1970-ன்படி 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படியும், அரசாணை எண். 299, வேளாண்மைத் (வே.வி.1) துறை, நாள் 13-6-1995-ன் படியும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சட்டப்படி அமைந்த வாரியமாக திருத்தி அமைக்கப்பட்டது. இவ்வாரியமானது அரசால் நியமிக்கப்பட்ட தலைவரின்கீழ் 29 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

### 7.3.1 நிதி ஆதாரம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு விற்பனைக் குழுக்களிலிருந்து பெறப்படும் மொத்த வருவாயில், 15 விழுக்காடு பங்குத் தொகையாக செலுத்தப்படுகிறது. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, வாரிய சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, சந்தை மேம்பாட்டு வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படுகின்றது. மீதமுள்ள 50 விழுக்காடு தொகை நிர்வாக செலவினங்களுக்காக செலவிடப்படுகின்றது.

### 7.3.2 தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயல்பாடுகள்

#### 7.3.2.1 விவசாயிகளுக்கான அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் சேமிப்பு தொழில்நுட்ப பயிற்சி

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் விளம்பரம் மற்றும் பிரச்சார பிரிவுகளின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியின் வாயிலாக அறுவடைப் பின்செய் நேர்த்தி, விஞ்ஞான முறைப்படி சேமிப்பு, மதிப்புக் கூட்டுதலின் முக்கியத்துவம், சந்தை நுண்ணறிவு மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

*2016-17 ஆம் ஆண்டில், ரூ.7.05 இலட்சம் செலவில் 164 பயிற்சிகள் அளிக்கப்பட்டு 3,280 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

### 7.3.2.2 பணியாளர்களுக்கான அறிவுத்திறன் பயிற்சி

சேலத்தில் உள்ள தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பணியாளர்களின் திறன் மேம்பாட்டு தேவைகளை நிறைவு செய்து வருகிறது. இப்பயிற்சி மையத்தின் வாயிலாக 2016-17 ஆம் ஆண்டில் 25 பயிற்சிகள் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 7.3.2.3 கட்டுமானப் பணிகள்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவின் மூலமாக விற்பனை உட்கட்டமைப்புகளான கிடங்குகள், ஏலக்கொட்டகைகள், குளிர்பதன கிடங்குகள், வணிக வளாகங்கள் மற்றும் உலர் களங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி மற்றும் விற்பனைக்குழு நிதியின்கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொறியியல் பிரிவின் மூலமாக 2016-17 ஆம் ஆண்டில் ரூ.133.39 கோடி செலவில் 65 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## இணைப்பு

**அட்டவணை.7.7: மாவட்ட வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்**

| வ எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் (7 எண்கள்) | காஞ்சிபுரம், மதுராந்தகம், உத்திரமேரூர். திருக்கழுக்குன்றம், சுங்குவார்சத்திரம். அச்சிறுப்பாக்கம், செங்கல்பட்டு |
| 2. | திருவள்ளூர் (8 எண்கள்) | திருத்தணி, திருவள்ளூர், செங்குன்றம், பொன்னேரி, பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி, நசரத்பேட்டை |





| வ எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் |
|---|---|---|
| 3. | திருவண்ணாமலை (16 எண்கள்) | திருவண்ணாமலை, ஆரணி, வந்தவாசி, சேத்துப்பட்டு, செய்யாறு, போளூர், செங்கம், புதுப்பாளையம், வானாபுரம், வேட்டவலம், தெள்ளார், மங்கலமாமண்டூர், தேசூர், பெரணமல்லூர். தூசி, கீழ்பென்னாத்தூர் |
| 4. | நாமக்கல் (6 எண்கள்) | நாமக்கல்,இராசிபுரம்,திருச்செங்கோடு, வேலூர், நாமகிரிப்பேட்டை, சோளக்காடு |
| 5. | வேலூர் (12 எண்கள்) | வேலூர், திருப்பத்தூர், ஆற்காடு, அரக்கோணம், வாணியம்பாடி, காவேரிப்பாக்கம், குடியாத்தம், கலவை, அம்மூர், காட்பாடி, ஆம்பூர், திமிரி |
| 6. | கடலூர் (10 எண்கள்) | விருத்தாச்சலம், கடலூர், பண்ருட்டி, திட்டக்குடி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, சேத்தியாதோப்பு, ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி |
| 7. | விழுப்புரம் (17 எண்கள்) | திண்டிவனம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, தியாகதுர்க்கம், சங்கராபுரம், திருவெண்ணெய் நல்லூர், மணலூர்பேட்டை, அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, அனந்தபுரம், வளத்தி, மூங்கில்துறைப்பட்டு |
| 8. | தருமபுரி (8 எண்கள்) | தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, கம்பைநல்லூர், தேன்கனிக் கோட்டை, பாப்பாரப்பட்டி |

[2017 ஜூலை 5

| வ எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் |
|---|---|---|
| 9. | கிருஷ்ணகிரி (8 எண்கள்) | கிருஷ்ணகிரி, ஓசூர், கெலமங்கலம், போச்சம்பள்ளி, காவேரிப்பட்டினம், ஊத்தங்கரை, பர்கூர், இராயக்கோட்டை |
| 10. | சேலம் (14 எண்கள்) | சேலம், ஆத்தூர், சங்ககிரி, கொங்கனாபுரம், கொளத்தூர், மேச்சேரி, வாழப்பாடி, தம்மம்பட்டி, தலைவாசல், ஓமலூர், காடையம்பட்டி, கெங்கவல்லி, கருமந்துறை, எடப்பாடி |
| 11. | கோயம்புத்தூர் (10 எண்கள்) | அன்னூர், காரமடை, கோயம்புத்தூர், சூலூர், ஆனைமலை, பொள்ளாச்சி, மலையடிப்பாளையம், நெகமம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், |
| 12. | ஈரோடு (18 எண்கள்) | ஈரோடு, அவல்பூந்துறை, கொடுமுடி, சிவகிரி, சித்தோடு, பவானி, பூதப்பாடி, அந்தியூர், மயிலம்பாடி, கவுந்தப்பாடி, கோபிச்செட்டிபாளையம், நம்பியூர், வெள்ளக்கோவில், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, தாளவாடி, பெருந்துறை, எழுமாத்தூர் |
| 13. | திருப்பூர் (15 எண்கள்) | குன்னத்தூர், காங்கேயம், வெள்ளாங்கோயில், தாராபுரம், மூலனூர், அலங்கியம், முத்தூர், திருப்பூர், அவிநாசி, சேவூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, பொங்கலூர் |
| 14. | கரூர் (4 எண்கள்) | குளித்தலை, கரூர், இரும்பூதிப்பட்டி, சின்னதாராபுரம், |
| 15. | திருச்சிராப் பள்ளி (10 எண்கள்) | மணப்பாறை, துறையூர், லால்குடி, திருச்சிராப்பள்ளி, தொட்டியம், மண்ணச்சநல்லூர், துவரங்குறிச்சி, புள்ளம்பாடி, தாத்தையங்கார் பேட்டை, காட்டுப்புத்தூர் |



2017 ஜூலை 5]

| வ எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் |
|---|---|---|
| 16. | அரியலூர் (4 எண்கள்) | அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மேலணிக்குழி |
| 17. | பெரம்பலூர் (1 எண்கள்) | பெரம்பலூர் |
| 18. | தஞ்சாவூர் (13 எண்கள்) | அதிராமபட்டினம், அம்மாப்பேட்டை, பூதலூர், கும்பகோணம், மதுக்கூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பாபநாசம், பேராவூரணி, தஞ்சாவூர், வல்லம், திருப்பனந்தாள், பாப்பாநாடு |
| 19. | இராமநாதபுரம் (6 எண்கள்) | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, திருவாடானை, இராசசிங்கமங்கலம், முதுகுளத்தூர் |
| 20. | கன்னியாகுமரி (6 எண்கள்) | ஈத்தாமொழி, வடசேரி, களியக்காவிளை, திங்கள்சந்தை, குலசேகரம், தொடுவட்டி |
| 21. | மதுரை (6 எண்கள்) | திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர், மதுரை, டி.கல்லுப்பட்டி, வாடிப்பட்டி |
| 22. | புதுக்கோட்டை (10 எண்கள்) | ஆலங்குடி, அறந்தாங்கி, புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, ஆவுடையார்கோவில், கீரனூர், கீரமங்கலம், பொன்னமராவதி, இலுப்பூர், கறம்பக்குடி |
| 23. | விருதுநகர் (7 எண்கள்) | விருதுநகர், இராஜபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, வெம்பக்கோட்டை |
| 24. | சிவகங்கை (7 எண்கள்) | சிவகங்கை, திருப்புவனம், மானாமதுரை, சிங்கம்புணரி, காரைக்குடி, இளையான்குடி, தேவகோட்டை |
| 25. | தூத்துக்குடி (9 எண்கள்) | கோவில்பட்டி, தூத்துக்குடி, புதூர், கடம்பூர், கழுகுமலை, ஸ்ரீவைகுண்டம், விளாத்திகுளம், எட்டையபுரம், சாத்தான்குளம் |

[2017 ஜூலை 5

| வ எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் |
|---|---|---|
| 26. | திருநெல்வேலி (11 எண்கள்) | சங்கரன்கோவில், தென்காசி, அம்பாசமுத்திரம், வள்ளியூர், திருநெல்வேலி, கடையநல்லூர், திசையன்விளை, பாவூர்சத்திரம், திருவேங்கடம், சிவகிரி, ஆலங்குளம் |
| 27. | நாகப்பட்டினம் (8 எண்கள்) | கீவளூர், குத்தாலம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், செம்பனார்கோவில், சீர்காழி, வேதாரண்யம், திருப்பூண்டி |
| 28. | நீலகிரி (4 எண்கள்) | உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், கூடலூர் |
| 29. | தேனி (7 எண்கள்) | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், சின்னமனூர், ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், பெரியகுளம் |
| 30. | திண்டுக்கல் (8 எண்கள்) | திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நத்தம், வத்தலக்குண்டு, கோபால்பட்டி, வடமதுரை, வேடசந்தூர் |
| 31. | திருவாரூர் (8 எண்கள்) | வலங்கைமான், கொரடாச்சேரி, மன்னார்குடி, பூந்தோட்டம், வடுவூர், குடவாசல், திருவாரூர், திருத்துறைப்பூண்டி |

**அட்டவணை 7.8: மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள்**

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் (14 எண்கள்) | காஞ்சிபுரம், பல்லாவரம், செங்கல்பட்டு, மேடவாக்கம், நங்கநல்லூர், மதுராந்தகம், கீழ்க்கட்டளை,ஜமீன்ராயப்பேட்டை, கூடுவாஞ்சேரி, படப்பை, சுங்குவார்சத்திரம், குன்றத்தூர், திருக்கழுக்குன்றம், கண்ணகி நகர் |



2017 ஜூலை 5]

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 2. | திருவள்ளூர் (6 எண்கள்) | திருத்தணி, திருவள்ளூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, நாரவாரிகுப்பம், பேரம்பாக்கம் |
| 3. | வேலூர் (9 எண்கள்) | வேலூர், காட்பாடி, வாணியம்பாடி, குடியாத்தம், காகிதப்பட்டறை, இராணிப்பேட்டை, ஆற்காடு, திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி |
| 4. | திருவண்ணாமலை (8 எண்கள்) | திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யாறு, செங்கம், வந்தவாசி, கீழ்பென்னாத்தூர், தாமரைநகர் |
| 5. | கடலூர் (5 எண்கள்) | கடலூர், சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, வடலூர் |
| 6. | விழுப்புரம் (6 எண்கள்) | திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, செஞ்சி, சங்கராபுரம் |
| 7. | சேலம் (11 எண்கள்) | சூரமங்கலம், அம்மாப்பேட்டை, ஆத்தூர், தாதகாப்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, அஸ்தம்பட்டி, இளம்பிள்ளை, தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், எடப்பாடி |
| 8. | நாமக்கல் (6 எண்கள்) | நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர் |
| 9. | தருமபுரி (5 எண்கள்) | தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர், ஏ. ஜெட்டிஹள்ளி |
| 10. | கிருஷ்ணகிரி (5 எண்கள்) | ஓசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை, ஆவலப்பள்ளி |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 11. | கோயம்புத்தூர் (9 எண்கள்) | ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், குறிச்சி, சூலூர், வடவள்ளி, சுந்தராபுரம், பல்லடம் |
| 12. | நீலகிரி (4 எண்கள்) | உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் |
| 13. | ஈரோடு (5 எண்கள்) | சம்பத்நகர்,கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பெரியார் நகர், பெருந்துறை |
| 14. | திருச்சிராப்பள்ளி (7 எண்கள்) | அண்ணாநகர், கே.கே.நகர், துறையூர், மணப்பாறை, முசிறி, துவாக்குடி, லால்குடி |
| 15. | பெரம்பலூர் (2 எண்கள்) | பெரம்பலூர், வேப்பந்தட்டை |
| 16. | கரூர் (5 எண்கள்) | கரூர், குளித்தலை, வேலாயுதம் பாளையம், பள்ளப்பட்டி, வெங்கமேடு |
| 17. | தஞ்சாவூர் (5 எண்கள்) | தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை,திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம் |
| 18. | நாகப்பட்டினம் (3 எண்கள்) | மயிலாடுதுறை, நாகப்பட்டினம், சீர்காழி |
| 19. | திருவாரூர் (7 எண்கள்) | திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி-1, திருவாரூர், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, மன்னார்குடி-2, வலங்கைமான் |
| 20. | புதுக்கோட்டை (6 எண்கள்) | புதுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, விராலிமலை |





| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தைகள் |
|---|---|---|
| 21. | மதுரை (7 எண்கள்) | அண்ணாநகர், சொக்கிகுளம், பழங்காநத்தம், உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர், ஆனையூர் |
| 22. | திண்டுக்கல் (5 எண்கள்) | திண்டுக்கல், பழனி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல், வத்தலகுண்டு |
| 23. | தேனி (7 எண்கள்) | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேவாரம், ஆண்டிபட்டி, சின்னமனூர் |
| 24. | சிவகங்கை (4 எண்கள்) | சிவகங்கை, தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர் |
| 25. | இராமநாதபுரம் (3 எண்கள்) | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி |
| 26. | விருதுநகர் (8 எண்கள்) | அருப்புக்கோட்டை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், காரியாப்பட்டி, தளவாய்புரம் |
| 27. | திருநெல்வேலி (6 எண்கள்) | சங்கரன்கோவில், பாளையங்கோட்டை, தென்காசி, கண்டியப்பேரி, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம் |
| 28. | தூத்துக்குடி (2 எண்கள்) | தூத்துக்குடி, கோவில்பட்டி |
| 29. | கன்னியாகுமரி (2 எண்கள்) | வடசேரி, மைலாடி |
| 30. | அரியலூர் (2 எண்கள்) | அரியலூர், ஜெயங்கொண்டம் |
| 31. | திருப்பூர் (5 எண்கள்) | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), தாராபுரம், காங்கேயம் |

**அட்டவணை. 7.9: மாவட்ட வாரியாக அக்மார்க் ஆய்வகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | அக்மார்க் ஆய்வக இருப்பிடம் | |
|---|---|---|---|
| 1. | சென்னை | முதன்மை ஆய்வகம் | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரகம் |
| 2. | காஞ்சிபுரம் | சென்னை (வடக்கு) | |
| | | சென்னை (தெற்கு) | |
| 3. | வேலூர் | வேலூர் | |
| 4. | கடலூர் | பண்ருட்டி | |
| 5. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | |
| 6. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1 | |
| | | திருச்சிராப்பள்ளி-2 | |
| 7. | கரூர் | கரூர் | |
| 8. | மதுரை | மதுரை (வடக்கு) | |
| | | மதுரை (தெற்கு) | |
| 9. | தேனி | தேனி | |
| 10. | திண்டுக்கல் | திண்டுக்கல் | |
| 11. | விருதுநகர் | விருதுநகர் | |
| 12. | திருநெல்வேலி | திருநெல்வேலி | |
| | | தென்காசி | |
| 13. | தூத்துக்குடி | தூத்துக்குடி | |
| 14. | கன்னியாகுமரி | நாகர்கோவில் | |
| | | மார்த்தாண்டம் | |



| வ. எண் | மாவட்டம் | அக்மார்க் ஆய்வக இருப்பிடம் |
|---|---|---|
| 15. | சேலம் | சேலம் |
| 16. | தருமபுரி | தருமபுரி |
| 17. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 18. | ஈரோடு | பெருந்துறை |
| | | ஈரோடு-1 |
| | | ஈரோடு-2 |
| | | சித்தோடு |
| 19. | திருப்பூர் | திருப்பூர் |
| | | பல்லடம் |
| | | காங்கேயம்-1 |
| | | காங்கேயம்-2 |
| | | வெள்ளக்கோவில் |

## 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

### 8.1 முன்னுரை

நீர்ஆதாரங்களைப் பாதுகாத்து, நீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்து விவசாய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை கடந்த 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

கீழ்க்கண்ட இரண்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன:

1. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாடு - மற்றும் இதர உள்ளீடுகள். (துளிநீர் அதிக பயிர்)
2. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (நபார்டு நிதி உதவியுடன்)

[2017 ஜூலை 5

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதியை வழிப்படுத்திக் கொண்டு செல்வதற்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்படுகிறது:-

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

2. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA)

3. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)

**8.2 பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)**

மத்திய அரசு 2015-16 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி விவசாய பாசனத்திட்டம் என்ற புதிய ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

பிரதம மந்திரி விவசாய பாசன திட்டத்தின் நோக்கங்கள்

(அ) புதிய நீராதார அமைப்பு, தூர்ந்த நீர்நிலைகள் பழுது பார்த்தல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல், நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைத்தல், துணை மற்றும் சிறிய நிலத்தடி நீர் அமைப்புகள் ஏற்படுத்துதல், கிராமங்களில் உள்ள நீர் நிலைகளின் தன்மையை மேம்படுத்துதல்.

(ஆ) நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் உறுதியான மற்றும் பாதுகாப்பான பாசன கட்டுமான அமைப்பு ஏற்படுத்துதல்.

(இ) மழை நீர் சேகரிப்பு மற்றும் வடிகால் தடுப்பு அமைப்புகள் அமைத்து விவசாயிகள் கிணறு மற்றும் குழாய்க்கிணறுமூலம் செறிவூட்டப்பட்ட நிலத்தடி நீரை உபயோகிக்க வழிவகை செய்தல்.

**8.2.1 பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாடு (முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் )**

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம், பிரதம மந்திரி விவசாய பாசனத்திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாடு என பெயர் மாற்றப்பட்டு ஏற்கெனவே உள்ள பாசன மேம்பாட்டு திட்டங்களோடு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2017 ஜூலை 5]

இத்திட்டம், 24 மாவட்ட நீர்வடிப்பகுதி முகமைகள் மூலம் 26 மாவட்டங்களில் உள்ள 2,770 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் முறையே 90:10 என்ற விகித அளவில் 2014-15 முடிய பகிர்ந்து கொள்ளப்பட்டது. இத்திட்டமானது 2015-16 ஆம் ஆண்டு முதல், மத்திய மற்றும் மாநில அரசுகளால் முறையே 60:40 என்ற விகித அளவில் திருத்தி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| நிலமேம்பாடு (இயற்கைவள மேம்பாடு) | நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி அமைத்தல் |
| நீர்வளமேம்பாடு (இயற்கைவள மேம்பாடு) | புதிய குளங்கள் / ஊருணிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல் |
| பொதுக் கட்டமைப்பு மேம்பாடு (இயற்கைவள மேம்பாடு) | தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய் அமைத்தல், ஊருணி தூர் வாருதல், ஏரி மற்றும் குளம் தூர்வாருதல் |
| பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள் | பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத தொழில்கள் துவங்க அதிகபட்சமாக ரூ.24000/- விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. |
| தாவர நடவுப்பணி | பழமரக் கன்றுகள் நடுதல், சமூக வேளாண் காடுகள் அமைத்தல், தீவனப்பயிர் மேம்பாடு, பயிர் செயல் விளக்கம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் |

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| சுய உதவிக் குழு மற்றும் நிலமற்ற விவசாயி களுக்கான வாழ்வாதாரப் பணிகள் | நீர்வடிப்பகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.24000/-மும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் பயனாளிகள் குழுக்களுக்கு மானியமும் வழங்கப்படுகிறது. |

2016-17 ஆம் ஆண்டில் ரூ.103.93 கோடி நிதி மத்திய மற்றும் மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலகங்களுக்கு திட்டம் செயல்படுத்த கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டுள்ளது:

(ரூ. கோடியில்)

| வ. எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 4.37 |
| 2. | கடலூர் | 1.78 |
| 3. | தருமபுரி | 3.39 |
| 4. | திண்டுக்கல் | 3.56 |
| 5. | ஈரோடு & திருப்பூர் | 3.09 |
| 6. | காஞ்சிபுரம் | 4.30 |
| 7. | கரூர் | 2.61 |
| 8. | கிருஷ்ணகிரி | 6.62 |
| 9. | மதுரை | 3.91 |
| 10. | நாமக்கல் | 2.60 |
| 11. | பெரம்பலூர் & அரியலூர் | 10.67 |
| 12. | புதுக்கோட்டை | 2.83 |
| 13. | இராமநாதபுரம் | 2.00 |
| 14. | சேலம் | 6.00 |
| 15. | சிவகங்கை | 6.80 |
| 16. | தேனி | 2.23 |





| வ. எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 17. | தூத்துக்குடி | 6.78 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 4.19 |
| 19. | திருநெல்வேலி | 3.39 |
| 20. | திருவள்ளூர் | 3.26 |
| 21. | திருவண்ணாமலை | 6.82 |
| 22. | வேலூர் | 2.22 |
| 23. | விழுப்புரம் | 4.23 |
| 24. | விருதுநகர் | 6.27 |
| | மொத்தம் | 103.93 |

மேற்கண்ட ரூ.103.93 கோடிக்கான செயல்படுத்தப்பட்ட பணிகளின் தொகுப்பு பத்தி 8.2.2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் 2017-18 ஆம் ஆண்டிலும் உத்தேசமாக ரூ.137.916 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 8.2.2 பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - இதர உள்ளீடுகள் (துளி நீர் அதிக பயிர்)

இத்திட்டத்தின் நோக்கமானது, புதிய நீர்ப்பாசன உத்திகள் மற்றும் நீர் சேமிப்பு தொடர்பான தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் நிலத்தடி நீர் படிவங்கள் செறிவூட்டுதலை ஊக்குவித்து, நீடித்த நீர் சேகரிப்பு அமைப்புக்களை உருவாக்கி கூடுதல் நீர் ஆதாரங்களை பெருக்கி சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதே ஆகும்.

2016-17 ஆம் ஆண்டில் ரூ.55.82 கோடி நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள் (ரூ.37.82 கோடி), ஊரக வளர்ச்சித் துறை (ரூ.6.75 கோடி) மற்றும் வேளாண்மை பொறியியல் துறை (ரூ.11.25 கோடி)களின்மூலம் இத்திட்டம் செயல்படுத்த கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டுள்ளது:-

[2017 ஜூலை 5

(ரூ.கோடியில்)

| வரிசை எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 1.62 |
| 2. | கடலூர் | 1.50 |
| 3. | தருமபுரி | 1.84 |
| 4. | திண்டுக்கல் | 2.65 |
| 5. | ஈரோடு | 1.00 |
| 6. | திருப்பூர் | 0.62 |
| 7. | காஞ்சிபுரம் | 3.13 |
| 8. | கரூர் | 1.35 |
| 9. | கிருஷ்ணகிரி | 2.27 |
| 10. | மதுரை | 1.62 |
| 11. | நாமக்கல் | 1.11 |
| 12. | நாகப்பட்டினம் | 0.20 |
| 13. | நீலகிரி | 0.06 |
| 14. | அரியலூர் | 0.25 |
| 15. | பெரம்பலூர் | 2.88 |
| 16. | புதுக்கோட்டை | 2.12 |
| 17. | இராமநாதபுரம் | 2.48 |
| 18. | சேலம் | 2.50 |
| 19. | சிவகங்கை | 2.52 |
| 20. | திருவாரூர் | 0.15 |
| 21. | தஞ்சாவூர் | 0.65 |
| 22. | தேனி | 1.18 |
| 23. | தூத்துக்குடி | 3.10 |
| 24. | திருச்சி | 2.54 |
| 25. | திருநெல்வேலி | 1.70 |



2017 ஜூலை 5]

| வரிசை எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 26. | திருவள்ளூர் | 2.03 |
| 27. | திருவண்ணாமலை | 3.42 |
| 28. | வேலூர் | 3.03 |
| 29. | விழுப்புரம் | 2.55 |
| 30. | விருதுநகர் | 3.75 |
| | மொத்தம் | 55.82 |

மேற்கண்ட தொகை ரூ.55.82 கோடி மற்றும் ரூ.103.93 கோடி ஆக மொத்தம் ரூ.159.75 கோடிக்கான மாவட்ட வாரியான மொத்தப் பணிகள் பின்வருமாறு:

**இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளின் சாதனை விவரங்கள் (எண்களில்) 2016-17**

| வரிசை எண் | மாவட்டம் | பண்ணை குட்டை கள் | தடுப் பணை கள் | இதர பணிகள் (*) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 26 | 13 | 145 | 184 |
| 2. | கடலூர் | 3 | 0 | 46 | 49 |
| 3. | தருமபுரி | 22 | 107 | 143 | 272 |
| 4. | திண்டுக்கல் | 34 | 63 | 195 | 292 |
| 5. | ஈரோடு | 9 | 26 | 68 | 103 |
| 6. | திருப்பூர் | 0 | 10 | 0 | 10 |
| 7. | காஞ்சிபுரம் | 20 | 136 | 476 | 632 |
| 8. | கரூர் | 17 | 8 | 52 | 77 |
| 9. | கிருஷ்ணகிரி | 68 | 122 | 381 | 571 |
| 10. | மதுரை | 9 | 75 | 130 | 214 |
| 11. | நாமக்கல் | 26 | 42 | 189 | 257 |
| 12. | நாகப்பட்டினம் | 4 | 0 | 0 | 4 |
| 13. | நீலகிரி | 0 | 0 | 5 | 5 |
| 14. | அரியலூர் | 2 | 5 | 352 | 743 |

| வரிசை எண் | மாவட்டம் | பண்ணை குட்டை கள் | தடுப் பணை கள் | இதர பணிகள் (*) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 15. | பெரம்பலூர் | 0 | 384 | 0 | 384 |
| 16. | புதுக்கோட்டை | 5 | 5 | 61 | 71 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 0 | 134 | 136 |
| 18. | சேலம் | 2 | 127 | 253 | 382 |
| 19. | சிவகங்கை | 88 | 0 | 221 | 309 |
| 20. | திருவாரூர் | 15 | 0 | 0 | 15 |
| 21. | தஞ்சாவூர் | 14 | 0 | 0 | 14 |
| 22. | தேனி | 1 | 7 | 5 | 13 |
| 23. | தூத்துக்குடி | 105 | 104 | 211 | 420 |
| 24. | திருச்சி | 16 | 221 | 323 | 560 |
| 25. | திருநெல்வேலி | 35 | 118 | 4 | 157 |
| 26. | திருவள்ளூர் | 1 | 42 | 41 | 84 |
| 27. | திருவண்ணாமலை | 22 | 112 | 272 | 406 |
| 28. | வேலூர் | 20 | 233 | 82 | 335 |
| 29. | விழுப்புரம் | 24 | 77 | 152 | 253 |
| 30. | விருதுநகர் | 30 | 69 | 154 | 253 |
| | மொத்தம் | 620 | 3006 | 4090 | 6821 |

* கசிவு நீர்க்குட்டை, புதிய ஊருணி, மேம்படுத்தப்பட்ட ஊருணி, தூர்ந்து போன கிணறுகள் சீரமைத்தல்.

**விவசாய இடுபொருள்கள் மற்றும் வாழ்வாதாரப் பணிகளின் சாதனை விவரங்கள் (எண்களில்) 2016-17**

| வ எண் | மாவட்டம் | தெளிப் பான்கள் | விவசாய உப கரணங் கள் | ஆடு / மாடு கள் | இதர பணி கள் (•) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 48 | 38 | 34 | 100 | 220 |
| 2. | கடலூர் | 119 | 130 | 0 | 60 | 309 |
| 3. | தருமபுரி | 20 | 16 | 37 | 1 | 74 |
| 4. | திண்டுக்கல் | 37 | 20 | 0 | 0 | 57 |
| 5. | ஈரோடு | 32 | 22 | 14 | 11 | 79 |
| 6. | திருப்பூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7. | காஞ்சிபுரம் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 8. | கரூர் | 15 | 31 | 0 | 0 | 46 |
| 9. | கிருஷ்ணகிரி | 0 | 16 | 206 | 0 | 222 |
| 10. | மதுரை | 0 | 17 | 0 | 6 | 23 |
| 11. | நாமக்கல் | 0 | 35 | 0 | 0 | 35 |
| 12. | நாகப்பட்டினம் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 13. | நீலகிரி | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14. | அரியலூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15. | பெரம்பலூர் | 69 | 106 | 0 | 1 | 176 |
| 16. | புதுக்கோட்டை | 21 | 98 | 0 | 0 | 119 |
| 17. | இராமநாதபுரம் | 61 | 123 | 24 | 0 | 208 |
| 18. | சேலம் | 21 | 11 | 0 | 0 | 32 |
| 19. | சிவகங்கை | 51 | 50 | 67 | 0 | 168 |
| 20. | திருவாரூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 21. | தஞ்சாவூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 22. | தேனி | 42 | 49 | 0 | 0 | 91 |
| 23. | தூத்துக்குடி | 12 | 9 | 0 | 0 | 21 |
| 24. | திருச்சி | 62 | 39 | 0 | 0 | 101 |
| 25. | திருநெல்வேலி | 29 | 96 | 13 | 0 | 138 |
| 26. | திருவள்ளூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 27. | திருவண்ணாமலை | 48 | 38 | 34 | 100 | 220 |
| 28. | வேலூர் | 119 | 130 | 0 | 60 | 309 |
| 29 | விழுப்புரம் | 20 | 16 | 37 | 1 | 74 |
| 30. | விருதுநகர் | 37 | 20 | 0 | 0 | 57 |
| | மொத்தம் | 639 | 906 | 395 | 179 | 2119 |

(•) தையல் இயந்திரங்கள், தார்ப்பாலின்கள், சிறு கடைகள், மண் புழு உரக்கூடம்.

[2017 ஜூலை 5

இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் 2017-18 ஆம் ஆண்டிலும் உத்தேசமாக ரூ.83.333 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

## 8.3 நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம்

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2004 ஆம் ஆண்டு முதல் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நீர்வடிப்பகுதி திட்டங்கள் பிரதம மந்திரியின் விவசாய பாசன திட்டத்தில் செயல்படுத்துவது போன்றே இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன (மாவட்ட நீர்வடிப் பகுதிகள் தவிர்த்து).

இத்திட்டமானது நபார்டு வங்கி மூலமும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமும் 168 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டது. இதில் 63 நீர்வடிப்பகுதிகளில் அனைத்து பணிகளும் தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையால் முடிக்கப்பட்டு நபார்டு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 105 நீர்வடிப்பகுதிகளில், 64 நீர்வடிப்பகுதிகளில் நபார்டு வங்கி மூலமும், 41 நீர்வடிப்பகுதிகளில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமும் முழு செயலாக்கத்தின் (Full Implementation Phase)கீழ் 50% நிதி ஒப்பளிப்பு மாநில அரசு மூலமும் மீதமுள்ள 50% நபார்டு வங்கி மூலமும் வழங்கப்படுகிறது.

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| செயல்பரப்பு பணிகள் | வயல் வரப்பு, சமவெளி வரப்பு தடுப்புகள், நீர்சேகரிப்பு குழிகள், தோண்டப்பட்ட கிணறு, செறிவூட்டும் குழி, பண்ணைக் குட்டை, கசிவுநீர் குட்டை, அமிழ்வுநீர் குட்டை, வேளாண் காடுகள், பழமரக் கன்றுகள், கால்நடை வளர்ப்பு, புல்வெளி வளர்த்தல் ஆகிய பணிகள். |



2017 ஜூலை 5]

| செயல்பாடு | மேற்கொள்ளப்படும் பணிகள் |
|---|---|
| வடிகால் அமைப்பு பணிகள் | கல்தடுப்பு அமைப்புகள், நீர்சேகரிப்பு அமைப்புகள் சீரமைத்தல், பண்ணைக் குட்டைகள், குளங்கள் தூர்வாருதல், வாய்கால்கள் சரிசெய்தல் ஆகிய பணிகள். |
| சுய உதவிக் குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப் பணிகள் | சுய உதவிக் குழுக்கள், நிலமற்றவர்கள் மற்றும் மகளிர்க்கு வருமானத்தை ஏற்படுத்தி தரும் பணிகள் |
| பயிற்சி | நீர்வடிப்பகுதி பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு ஊரக பங்கேற்பு முறையின் அடிப்படையில் தேவைக்கேற்ப நீர்வடிப்பகுதி திட்டமிடுவது குறித்து பயிற்சி. |

2016-17 ஆம் ஆண்டில் ரூ.6.35 கோடி நிதி மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலகங்களுக்கு கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டு இத்திட்டம் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் நபார்டு வங்கியின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

(ரூ.கோடியில்)

| வரிசை எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 1. | தருமபுரி | 0.230 |
| 2. | திண்டுக்கல் | 0.728 |
| 3. | காஞ்சிபுரம் | 0.706 |
| 4. | கரூர் | 0.138 |
| 5. | கிருஷ்ணகிரி | 0.481 |
| 6. | மதுரை | 0.546 |
| 7. | நாமக்கல் | 0.218 |

| வரிசை எண் | மாவட்டம் | ஒதுக்கீடு (2016-17) |
|---|---|---|
| 8. | புதுக்கோட்டை | 0.337 |
| 9. | இராமநாதபுரம் | 1.161 |
| 10. | தேனி | 0.549 |
| 11. | தூத்துக்குடி | 0.612 |
| 12. | திருநெல்வேலி | 0.155 |
| 13. | விருதுநகர் | 0.496 |
| | மொத்தம் | 6.357 |

இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில் மாநில அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 8.4. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை - இணைப்பு முகமை

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதியை வழிமுறைப்படுத்தி கொண்டு செல்வதற்கான இணைப்பு முகமையாக செயல்படுகிறது:

(ரூ.கோடியில்)

| வ. எண் | திட்டம் | கடந்த ஆண்டு ஒதுக்கீடு 2016-17 | உத்தேச ஒதுக்கீடு 2017-18 |
|---|---|---|---|
| 1. | தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP) | 338.11 | 370.15 |
| 2. | நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) | 66.75 | 87.58 |
| 3. | பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY) | 159.75 | 221.25 |





### 8.5 பணியமைப்பு

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பணிகளை செயல்படுத்த தொடங்கப்பட்டது. இம்முகமை, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை அரசு செயலர் அவர்களை தலைவராகவும், வேளாண்மை இயக்குநர் அவர்களை துணைத் தலைவர் / மேலாண்மை இயக்குநராகவும் கொண்டு செயல்படுகிறது. மேலும், அன்றாட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை பணிகளை மேற்கொள்ள இந்திய ஆட்சிப்பணி நிலையில், செயல் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்முகமையில் பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர்கள் பல்வேறு துறைகளிலிருந்து அயற்பணி அடிப்படையிலும் / தனியார் நிறுவனம் / ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்:

**தலைமையிடம்:**

| வ. எண் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் | 1 |
| 2. | இணை இயக்குநர் (சமூகவியலாளர்) | 1 |
| 3. | வேளாண்மை துணை இயக்குநர் | 1 |
| 4. | வேளாண்மை உதவி இயக்குநர் | 1 |
| 5. | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 6. | மேலாளர் (நிர்வாகம்) | 1 |
| 7. | வேளாண்மை அலுவலர் | 2 |
| 8. | கணக்கு அலுவலர் | 1 |
| 9. | உதவியாளர்கள் | 9 |
| 10. | இதர அலுவலர்கள் | 26 |
| | மொத்தம் | 44 |
| | | |

[2017 ஜூலை 5

**மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை:**

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, 23 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் வேளாண்மை இணை இயக்குநரை திட்ட அலுவலராகவும் நியமித்து செயல்பட்டு வருகிறது.

இம்முகமையில் பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர்கள் பல்வேறு துறைகளிலிருந்து அயற்பணி அடிப்படையிலும் / தனியார் நிறுவனம் / ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்:

| வ. எண் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வேளாண்மை துணை இயக்குநர் / நடவு வல்லுநர் | 23 |
| 2. | மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பொறியாளர் (உ.பொ. / உ.செ.பொ.) | 23 |
| 3. | வேளாண்மை உதவி இயக்குநர் / விரிவாக்க அலுவலர் | 23 |
| 4. | கணக்கு அலுவலர் | 23 |
| 5. | உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் | 46 |
| 6. | நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக் குழு உறுப்பினர் | 470 |
| | மொத்தம் | 608 |

**9. கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை**

**2017-2018-செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 7,047,39,46 | 437,09,65 | 130,50,00 | 7,614,99,11 |
| மொத்த தொகை சாட்டியது | 4 | ... | ... | 4 |



2017 ஜூலை 5]

**நிகரச் செலவு**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| கணக்குத் தலைப்பு | | 2015-16 | 2016-17 | 2016-17 | 2017-18 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 2,25,70 | 2,52,00 | 2,52,00 | 2,54,20 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 5,021,93,97 | 5,555,94,03 | 5,446,02,82 | 6,081,30,97 |
| 2402 | மண்வள, நீர் வளப் பாதுகாப்பு | 92,63,51 | 95,23,77 | 110,25,21 | 98,52,37 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் (ம) கல்வியும் | 377,20,32 | 415,54,72 | 451,01,86 | 475,79,32 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 133,87,09 | 144,83,42 | 149,22,52 | 174,55,91 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 188,25,15 | 189,50,00 | 184,74,12 | 185,91,50 |
| 2551 | மலைப் பகுதிகள் | 78,64 | 93,15 | 86,82 | 91,95 |
| 2702 | சிறுபாசனம் | 8,32,34 | 10,04,78 | 8,72,58 | 9,42,30 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 3,93,24 | 3,50,34 | 3,58,20 | 34 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 10,97,88 | 76,50 | 3,91,86 | 52 |
| 2852 | தொழில்கள் | 48 | ... | ... | ... |
| 3451 | தலைமைச் செயலகம் - பொருளாதாரப் பணிகள் | 9,50,10 | 10,23,55 | 9,54,99 | 10,15,72 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 115,53,50 | 95,50,03 | 130,12,73 | 139,05,05 |

| கணக்குத் தலைப்பு | | 2015-16 கணக்குகள் | 2016-17 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2016-17 திருத்த மதிப்பீடு | 2017-18 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 16,14,23 | 22,94,89 | 18,95,39 | 28,22,13 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 72,96,29 | 167,15,13 | 152,39,63 | 269,82,39 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | ... | 6,50,01 | ... | ... |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | 13,10,49 | 64,45,62 | 64,28,18 | 8 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 145,84,12 | 150,00,00 | 150,00,00 | 130,00,00 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 5,00 | 50,00 | 50,00 | 50,00 |

## கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை 2017-2018
## வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| துறைத் தலைவர் | | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 10,15,72 | ... | 50,00 | 10,65,72 |
| 2. | 05 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 2 | ... | ... | 2 |
| | | | அனுமதித்தது | 5,414,18,43 | 1,38,05,03 | 130,00,00 | 5,682,23,46 |





| துறைத் தலைவர் | | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 118,41,03 | 269,82,39 | ... | 388,23,42 |
| 4. | 05 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 48,83,71 | 1,00,00 | ... | 49,83,71 |
| 5. | 05 05 | தோட்டக் கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | | அனுமதித்தது | 685,64,66 | 2 | ... | 685,64,68 |
| 6. | 05 06 | வேளாண் மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1 | ... | ... | 1 |
| | | | அனுமதித்தது | 293,03,12 | 28,22,21 | ... | 321,25,33 |
| 7. | 05 07 | வேளாண் பொறியியல் பணிகள் | சாட்டியது | 49,08 | ... | ... | 49,08 |
| 8. | 05 08 | தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகம், கோயம் புத்தூர் | அனுமதித்தது | 475,85,60 | ... | ... | 475,85,60 |
| 9. | 05 09 | அங்கக சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 78,11 | ... | ... | 78,11 |
| | | மொத்தம் | சாட்டியது | 4 | ... | ... | 4 |
| | | | அனுமதித்தது | 7,047,39,46 | 437,09,65 | 130,50,00 | 7,614,99,11 |

## முடிவுரை

அசாத்தியமான ஆளுமை, தனித்துவமான விரைவு இயக்கத்தன்மை மற்றும் சிறப்பான செயல்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தமிழக அரசு, தொலைநோக்கு பார்வையுடன் நடைமுறைக்கேற்ற, புத்தம் புது அம்சங்கள்

[*2017 ஜூலை 5*

பொருந்திய கொள்கையளவிலான சீர்திருத்தங்களால், முதன்மைப் பிரிவுக்கு புத்துயிரூட்டியுள்ளது. வேளாண் உற்பத்தியை உயர்த்துதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுதல் போன்ற அரசின் உயரிய நோக்கங்களால், இம்மாநிலம் வேளாண்மையில் தீவிர மாற்றமடைந்து, சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய அளவில் பல விருதுகளையும், பட்டங்களையும் தொடர்ந்து பெற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கும் முன்னோக்கு கொள்கையுடன் செயல்படும் தமிழக அரசு, பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும், பல்வகை விளைபொருள் உற்பத்தி முறைக்காகவும், இலாபகரமான விலை ஈட்டுவதற்காகவும் பல்வேறு வேளாண் பிரிவு சார்ந்த உத்திகளையும், விவசாயிகளுக்கு உகந்த கொள்கைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. பண்ணையளவில் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியைக் குறைத்தல், சாகுபடி செலவினத்தைக் குறைக்க பயிர் சார்ந்த உயரிய தொழில்நுட்பங்களை பரவலாக்கி மேற்கொள்ளச் செய்தல், விதைகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் உரங்கள் ஆகிய பண்ணை இடுபொருட்களின் தரத்தை உறுதி செய்தல், பாசன நீரை சேமிக்க துல்லியமான பாசன நீர் மேலாண்மை, பயிர் சாகுபடி செய்யாத காலங்களில் வேளாண் மற்றும் இதர பிரிவுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பண்ணை இயந்திரமயமாக்குதலை தீவிரப்படுத்துதல், ஊரக பகுதிகளில் பொருளாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல், அறுவடை பின்செய் நேர்த்தி, பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல், வேளாண் சந்தைகளை நவீனமயமாக்கி ஒருங்கிணைத்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் இதர வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளை ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகளுக்காக அரசு எடுத்த தீவிர முயற்சிகளால் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைத்ததோடு, பண்ணை வருவாயையும் அதிகரித்து, உபரி வருமானத்தை மீண்டும் பண்ணைகளில் முதலீடு செய்ய வழிவகுத்தது. பேரிடர் மேலாண்மைக்காக தமிழக அரசு, பயிர் காப்பீட்டுத் திட்டங்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி உற்பத்தி இழப்பை ஈடுசெய்வதோடு, முறையான சந்தை அணுகுமுறைகள்மூலம் விலை சரிவால் ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்து வருகிறது.



*2017 ஜூலை 5*]

விவசாயிகளின் நலனில் அதீத அக்கறை கொண்ட தமிழக அரசு, உற்பத்தி மற்றும் விளைபொருள் பதப்படுத்தும் சேவைகள் மட்டுமல்லாது நம்பகமான, நிலையான, உத்தரவாத சந்தை மாதிரிகளை ஏற்படுத்தி தொலைநோக்கு கொள்கையை மெய்ப்பிப்பதற்காக விரிவான இலக்கு மற்றும் சிறப்பான திட்டங்களை வரையறுத்துள்ளது. மொத்த சாகுபடி பரப்பளவையும் இறவை சாகுபடி பரப்பளவையும் அதிகரித்தல், தரமான இடுபொருள் உற்பத்தி மற்றும் விநியோகம்மூலம் ஆதார பயன்பாட்டுத் திறனை மிகுதியாக்குதல், வேளாண் தொழிலாளர் தேவையைக் குறைக்கவும், வேளாண்மையை வணிகரீதியாக்கவும் வேளாண் இயந்திரமாக்குதலில் சிறப்பு கவனம் செலுத்துதல், சூரிய ஒளி, உயிரி எரிபொருள் போன்ற மாற்று ஆற்றல் ஆதாரங்கள் பயன்பாட்டை விரிவுபடுத்துதல், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைக் குறைக்க சேமிப்பு/ குளிர்பதன சேமிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதலுக்கான வலுவான உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல், பண்ணையளவில் இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்தல், நிலையான சந்தையை உருவாக்குதல், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், சிறுநிலவுடைமை விவசாயக் குழுக்களை சந்தைகளோடு இணைக்கவும் “சேகரிப்பாளர் மாதிரி” மற்றும் “மதிப்புக் கூட்டுதலுக்கான முழுமையான ஒருங்கிணைப்பு அணுகுமுறையை” ஊக்குவித்தல், பருவநிலைக்கேற்ற விவசாய முறைகளையும் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தையும் மேற்கொள்ளுதல், ஒருங்கிணைந்த பண்ணையம், கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற வாழ்வாதாரத்திற்கான மாற்று உத்திகளை பிரபலப்படுத்துதல் மற்றும் விரிவான தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த செய்தி மற்றும் வேளாண் அறிவு மேலாண்மை போன்றவை வருங்கால வேளாண்மை மேம்பாட்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள உத்திகளாகும்.

தமிழக அரசு, சிறந்த உத்திகள், உன்னத திட்டங்கள், போதிய வள ஆதாரங்கள் மற்றும் திறன்மிகு நிர்வாகத்தை உள்ளடக்கிய உயர் நவீன வேளாண்மையை தீவிரமாக மேற்கொண்டு, மாநிலத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்யவும், உயர் பண்ணை வருவாய் ஈட்டவும், ஊரக வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், கிராமங்களிலிருந்து விவசாயிகள் இடம்பெயர்வதை தவிர்க்கவும், ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

————